# பூவே மயங்காதே



த்துலட்சுமி ராகவ

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| லின் பெயர் | : பூவே மயங்காதே |
| சிரியர் | : முத்துலட்சுமி ராகவன் |
| மை | : ஆசிரியருக்கு |
| ழி | : தமிழ் |
| ல் பதிப்பு | : ஆகஸ்ட், 2010 |
| | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| ன் அளவு | : 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : 11 புள்ளி |
| தப் பக்கங்கள் | : 252 |
| ண்டிங் | : சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : புவனேஸ்வரி பதிப்பகம்<br>பு.எண்: 32, ப.எண்: 107,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.90.00**

| | |
|---|---|
| ரி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| ட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# பூவே மயங்காதே

# பூவே மயங்காதே



1

மணி ஐந்தடிக்கும் சப்தம் கேட்டதும் அந்த நீண்ட ஹாலில் இருந்த ஊழியர்கள் அவர்களின் முன்னாலிருந்த கம்ப்யூட்டரை அணைத்து விட்டு இருக்கையை விட்டு எழுந்து ஒருவர் பின் ஒருவராக வெளியேற ஆரம்பித்தார்கள். வானதி தன் முன்னாலிருந்த கம்ப்யூட்டர் திரையைப் பார்த்துக் கொண்டே கீ போர்டில் விரல்களால் டை பண்ணிக் கொண்டிருந்தாள்.

"போகலாமா வானதி.." என்ற குரல் கேட்டு நிமி தாள். கிரிஜா நின்றிருந்தாள். ஹால் ஏறக்குறைய கா யாக இருந்தது.

'எப்படித்தான் இவர்களால் சரியாக ஐந்து ம செல்லாம் அலுவலகத்தை விட்டு வெளியேற கின்றதோ..' என்று நினைத்தபடி.

"இன்னும் கொஞ்சம் வேலை பாக்கியிருக்கே கிரிஜா..." என்றாள்.

"நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் வா..."

"இல்லை கிரிஜா... இன்றைய வேலையை இன்றே முடித்து விட வேண்டும். வேலையை பெண்டிங் வைப்பது எனக்குப் பிடிக்காது.. ஜஸ்ட் பிப்டீன் மினிட்ஸ் வொர்க் முடிந்து விடும்.. நீ போ.. நான் வருகிறேன்..."

"உன்னை விட்டு விட்டு எப்போதடி நான் தனியாகப் போயிருக்கிறேன். சீக்கிரமாய் முடி போகலாம்.." என்றபடி கிரிஜா அங்கேயிருந்த சேரில் அமர்ந்து கொண்டாள்.

தோழி காத்துக் கொண்டிருக்கும் பதட்டத்தில் வேகமாய் வேலையை முடித்த வானதி... கம்ப்யூட்டரை அணைத்துவிட்டு கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டாள்.

"பதினைந்து நிமிஷம் ஆகும் என்று சொன்னாய்.. சீக்கிரமாய் முடிந்து விட்டதே.." என்று கூறியபடி எழுந்தாள் கிரிஜா.

"நீதான் கிரியா ஊக்கிபோல என் பக்கத்திலிருந்து வேலையை முடுக்கி விடுகிறாயே. நீ கொடுத்த ஊக்கத்தில் வேலையை முடித்து விட்டேன்."

"ஸோ.. நான் பக்கத்தில் இருந்தால் உன் எனர்ஜி லெவல் கூடுகிறது?"

"யெஸ்..."

சிரித்தபடி இருவரும் ஆபிஸை விட்டு வெளியே வந்தார்கள்.

"கஸ்டம்ஸ் ஆபீஸில் வேலை பார்ப்பதுதான் எவ்வளவு கஷ்டமாய் இருக்கு... ஒரு நாளாவது சீக்கிரம் வேலை முடியுதா?" சலித்துக் கொண்டாள் கிரிஜா.



"நீ டாண்ணு ஐந்தடித்ததும் கிளம்பி விடுவாயே... அப்புறம் ஏன் வேலையைப் பற்றிச் சலிப்பாய் பேசுகிறாய்?" என்று கேட்டபடி கிரிஜாவுடன் மாடிப்படிகளில் இறங்க ஆரம்பித்தாள் வானதி.

"எனக்கு வேலை முடிந்தால் போதுமா? உனக்கு முடிய வேண்டாமா?"

"நல்லாயிருக்குடி உன் நியாயம்.." சிரித்தபடி இரு சக்கர வாகனங்கள் என்ற அடையாள அட்டை கட்டப்பட்டிருந்த பகுதியில் தனது கைனடிக் ஹோண்டாவை கண்டுபிடித்து ஏறிக் கொண்டாள் வானதி.

"எங்கேடி.. என் ஸ்கூட்டியைக் காணோம்.." என்று கிரிஜா தேட...

"அதைப் பிடித்துக் கொண்டுதானே மற்ற வண்டி களைத் தேடுகிறாய்.." என்று வானதி சிரித்தாள்.

"ஆமாம். வானதி.. இந்த டி.வி. விளம்பரத்தில் தன யில் கண்ணாடியை செருகிக் கொண்டு கண்ணாடி தேடும் பெண் போல இல்லை தேடிக் கொண் கிறேன்."

"தெரிந்தால் சரி.. அது என்னவோ கிரிஜா.. சீரியல்களைப் பார்ப்பதைவிட... சீரியல்களுக்கு இ வரும் விளம்பரங்களைப் பார்க்க மிகவும் பிடிக்கு ஒரு கிரியேட்டிவிடி மைண்ட் தெரியுமா. ரியலி ஐ யேட் தெம்."

கிரிஜாவும் வானதியும் வண்டிகளை கொண்டு நெடுஞ்சாலையின் போக்குவர தார்கள். சிக்னலுக்கு வண்டியை நிறுத்தியே நின்ற வாகனங்களின் எண்ணிக்கையைப் ப

''பாண்டிச்சேரியில் நான்கு வழிச் சாலை போட்டு நிமிடத்துக்கு ஒரு முறை சிக்னலில் நிறுத்தி அனுப்பி னாலும் டிராபிக் அதிகம்தான். இங்கே வண்டி ஓட்டுபவர்கள் எங்கேயும் ஓட்டுவார்கள்'' என்று கிரிஜாவிடம் கூறினாள்.

''பாண்டிச்சேரியில் இருப்பதால் நாம் பாண்டிச்சேரியில் டிராபிக் அதிகம் என்கிறோம்.. சென்னையில் இருப்பவர்கள் சென்னையில் டிராபிக் அதிகம் என்பார்கள். மற்ற ஊர்களில் கேட்டாலும் இதே கதையைத்தான் சொல்வார்கள். உண்மையில் இப்போது டூ வீலர்.. போர் வீலர்களை உபயோகப்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதுதான் விஷயம்'' பதில் கூறிய கிரிஜா.. சிக்னல் கிடைத்ததும் வண்டியைக் கிளப்பினாள்.

இந்திராகாந்தி சிலையைத் தாண்டி கடற்கரையை நோக்கிச் சென்றவர்கள். கடலோரமாய் வரிசையாய் ட்டப்பட்டிருந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளை நோக்கிச் சென்றார்கள்.

'லோட்டஸ் அவென்யூ' என்ற பெயர் பலகையை அடுத்து பிரம்மாண்டமாய் நின்றன அந்த அடுக்குமாடிக் ட்டிடங்கள். எல்லாம் இப்போதுதான் புதிதாகக் ட்டப்பட்டவை. அதிக விலையில் உயர்ந்த வேலையில் ருப்பவர்களால் வாங்கப்பட்டவை. ஒவ்வொரு பிளாட் ம் நீண்ட ஹால்.. டைனிங் ஹால்.. பூஜையறை.. சமைய றை போன்ற பொது அறைகளுடன் அட்டாச்சுடு பாத் முடன் கூடிய நான்கு பெரிய படுக்கையறைகளைக் காண்டவை. வானதியின் தந்தை கருணாகரன் ஒரு வெட்னரி டாக்டர். சமீபத்தில்தான் இந்த லோட்டஸ் வென்யூவில் ஒரு பிளாட்டை விலைக்கு வாங்கினார்.

அவருடைய பழைய சொந்த வீடு நெல்லிக்குப்பத்தில் இருந்தது. புதிதாய் ஒரு சொத்து வாங்கிப் போடும் உத்தேசத்துடன் அந்தப் பிளாட்டை வாங்கியவர். கடலோரம் இருந்த அந்த பிளாட்டின் அழகில் கவரப்பட்டவராய் நெல்லிக்குப்பம் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு.. அடுக்கு மாடிக் குடியிருப்பில் குடியேறி விட்டார். வானதியுடன் பணிபுரியும் கிரிஜாவிற்கு திருமணம் முடிந்திருந்தது. சொந்தமாய் பர்னிச்சர் மார்ட் வைத்திருக்கும் தந்தைக்கு ஒரே மகள் என்பதால் கிரிஜாவின் தந்தை இந்த அடுக்கு மாடிக் குடியிருப்பில் ஒரு பிளாட்டை மகளுக்கு திருமணச் சீராக வாங்கிக் கொடுத்திருந்தார். கிரிஜாவின் கணவன் கூட்டுக் குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் மகளை தனிக்குடித்தனம் வைக்க இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் கிரிஜாவின் தந்தை என்றும் கூறலாம். மொத்தத்தில் திருமணம் முடிந்து ஒரு வருடம் ஆவதற்குள் கிரிஜா அந்த பிளாட்டில் குடி வந்து விட்டாள்.

வானதியின் பிளாட்டிற்கு அடுத்ததாகவே கிரிஜாவின் பிளாட்டும் அமைந்து விட்டதால் இருவரும் சேர்ந்தே அலுவலகம் போய் வருவார்கள்.

''நேற்று என்னடி உன் வீட்டில் ஒரே சத்தமாய் இருந்தது..'' என்று கிரிஜா வினவினாள்.

''ச்ச்.. அண்ணிக்கும்.. அம்மாவிற்கும் ஒத்துக் கொள்ளவில்லை கிரிஜா. அண்ணன் அண்ணியை சத்தம் போட்டார்.''

''அப்படியா... நேற்று மாலையில்தான் சத்தம் கேட் டது. நேற்று இரவு அவர்கள் இருவரும் மொட்ட மாடியில் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்ததை நா

...வேண்டியவை... காய்ந்த துணிகளை எடுத்துக் கொண்டு வரப் போயிருந்தேன். பேச்சுச் சத்தமும் சிரிப்புச் சத்தமும் கேட்டது. நம் அபார்ட்மெண்டில் குடியிருக்கும் வீடுகளில் உள்ள இளசுகளில் ஏதோ லவ்ஸ் விடுகிறது என்று நினைத்துக் கொண்டு விட்டே போய் பார்த்தால் உன் அண்ணனும்... அண்ணியும்..."

"இருக்காது கிரிஜா... அண்ணன் அண்ணியுடன் இரண்டு நாட்களாக பேசவில்லையே."

"போடி முட்டாள்.. உங்க அண்ணன் நைட்டில் எங்கே தூங்கினார்?"

"அவருடைய பெட் ரூமில்தான்..."

"உன் அண்ணி?"

"அடி வாங்கப் போகிறாய் கிரிஜா. அண்ணி அண்ணனுடைய ரூமில்தானே தூங்குவாங்க."

[illegible]



"என் ஹஸ்பெண்ட் வீட்டுக்கு ஒரே மகன்... எங்களுக்குத் தான் இந்த சொத்துக்களில் முழு உரிமை உண்டு. நாங்கள் ஏன் வீட்டை விட்டு வெளியே போக வேண்டும் என்று கேட்கிறாங்க..."

"அப்படிப் போடு... ம்ம்.. உன் அண்ணி.. சரியான ஆள் தான்... சொத்தையும் அனுபவிக்கணும். மாமியாருடனும் ஒத்துப் போகக் கூடாது."

"ஆக்சுவலா... நெல்லிக்குப்பம் வீட்டிலேயே தனிக்குடித்தனமாய் இருந்து கொள் என்று அப்பா அண்ணனிடம் சொன்னார்.. அண்ணி முடியாது என்று சொல்லி விட்டாங்க."

"அது சரி... வீட்டு வாடகை குறைந்தால் போதுமா? வீட்டுச் செலவை யார் பார்க்கிறது? ஒரு மாதத்திற்கு வீட்டிற்கு பால்.. மளிகை சாமான் காய்கறி.. பேப்பர் பில்.. போட்டு லோகக்கு என்று வாங்கிப் பார்த்தால்தானே தெரியும். குடும்பம் நடத்துவது எவ்வளவு கஷ்டமென்று. உன் அண்ணி புத்திசாலி. மாமனாரின் வருமானத்தில் வீட்டுச் செலவுகள் நடந்துவிடும். உன் அண்ணனின் வருமானத்தை முழுசா முழுங்காமல் சேமிக்கலாம்."

"இது எல்லாம் சிறுசுகள் கிரிஜா. அண்ணன் ஏன் அம்... ன் முன்னால் அண்ணி மேல் கோபமாய் இரு... போல் நடிக்க வேண்டும்? இயல்பாய் இருக்கலாமே..."

"இந்த உலகமே நாடக மேடைதான் என்று ... சொல்லவில்லை. அறிஞரே சொல்லியிருக்கிறார்... அண்ணன் இதில் ஒரு நடிகர் என்றுதான் நடி... என்று வைத்துக் கொள்ளேன்..."

"இல்லை கிரிஜா.. இதை என்னால் ஏற்றுக் கொ... முடியவில்லை. அண்ணன் அண்ணியிடம் உ...

லேயே சண்டை போட வேண்டும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அம்மாவிடம் என் வெளிப் இப்படித்தான் இருப்பாள். என்று தேங்காய் உடைத்தது போல் சொல்லி விடலாமே... அம்மாவும் அண்ணனிடம் அண்ணியைப் பற்றி அண்ணன் கண்டிப்பார் என்ற நம்பிக்கையுடன் புகார் சொல்ல மாட்டாங்களே... அதை விட்டு விட்டு அம்மாவின் முன்னால் ஏன் கண்டிப்பது போல் நடிக்க வேண்டும்? நேற்று அண்ணியை அடிக் கவே போய் விட்டார். நீயானால் வேறு எதையோ சொல்கிறாய்.. ஏன் இப்படி இருக்கிறார்கள்?''

''எல்லாம் நான் அடிப்பது போல் அடிப்பேன்.. நீ அழு வது போல் அழு என்ற கதைதான்...''

''அண்ணன் இப்படியென்றால் அக்காவின் கதையே வேறாய் இருக்கிறது. என் மாமனார் வீட்டில் கொடுமை பண்ணுகிறார்கள். என் ஹஸ்பெண்ட் நான் சரியாக சீர் கொண்டு வரவில்லையென்று என்னை அடிக்கிறார் என்று அடிக்கடி வந்து அம்மாவிடம் சொல்லி அழுவாள். எனக்கு ரத்தம் கொதித்து விட்டது. நேரே அத்தான் வேலை பார்க்கும் ஆபிஸிற்கே போய்.. என் அக்காவிற்கு என்ன குறை... அவளது அழகென்ன... படிப்பென்ன.. அறிவென்ன.. நீங்கள் எப்படி என் அக்காவை அடிக்கலாம் என்று சண்டை போட்டேன். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''அதெல்லாம் என் அக்காவாய் போடும் டிராமாவாம். அவள் கண்ணைக் கசக்கி அழுதால்... என் அம்மாவின் மனம் தாங்காது அதை அவள் அவளுக்குச் சாதகமாய் பயன்படுத்திக் கொள்கிறாளாம். 'இதோ பார்.. என்



வீட்டில் எல்லோரும் உன் அக்காவை தங்கத் தாம்பாளத் தில் வைத்துத் தாங்கிக் கொண்டிருக்கிறோம். நான் உன் அக்காவை கோபமாய் பார்த்தது கூட இல்லை. என் வீட்டாருக்கு நான் ஒரே பிள்ளை.. உங்கள் வீட்டுச் சீர் எனக்கு எதற்கு என்று கேட்கிறார். உன் அக்கா அழுத வுடன் பணத்தையும் நகையையும் உன் அம்மா தூக்கிக் கொடுத்து விடுகிறார்களே... அதை முதலில் நிறுத்தச் சொல். உன் அக்கா அதற்குப் பின்னால் பொய் சொல் லவே மாட்டாள் என்கிறார்.''

''அடக்கடவுளே.. உன் அக்கா சுயநலவாதி என்று தெரியும். இவ்வளவு பெரிய சுயநலக்காரியா? இவர்கள் இப்படிக் கறந்தால் உனக்கு என்ன மிஞ்சப் போகிறது?''

''எனக்கு என் வேலை இருக்கிறது. அது போதும். நான் பணம் கரைவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. உண்மையான பாசம் இவர்களிடம் இல்லையே... நடிக்கிறார்களே என்பதுதான் எனக்கு.''

பேசியபடியே லோட்டஸ் அவென்யூவின் தா போட்ட பாதையில் வண்டியை ஓட்டி அவர்களது பிளா வந்ததும் வண்டியை திருப்பி அண்டர் கிரௌண்டி இருந்த பார்க்கிங் ஏரியாவில் வண்டியை நிறுத்தினார் லிப்டில் ஏறி.. ஆறாவது ப்ளோர் வரவும்.. வெளிே காரிடாரில் போகும்போது வானதி.. எதிரே வந்து செ டிருந்த வாலிபனின் மேல் மோதிக் கொண்டாள்.

''ஐ ஆம் ஸாரி..'' என்றபடி அவள் நிமிர்ந்து பார்

''தெரியாமல் செய்ததற்கு எதற்கு ஸாரி கேட் தெரிந்தே தவறு செய்து விட்டு தவறே செ போல் நடித்துக் கொண்டு இருக்கிறார்களே அவ கேட்பதில்லை. நீங்கள் போய் ஸாரி கேட்கி

மாடியில் இருந்து அவன் இறங்கி வந்து கொண்டிருந்தவன் போலத் தெரிந்தான். அவனது வார்த்தைகளைக் கேட்டதும் ஆச்சரியம் அடைந்த வானதி அவனை நன்றாக நிமிர்ந்து பார்த்தாள்.

சராசரி ஆண்களை விட உயரமாக ஆறடியில் அவன் இருந்தான். மாநிற முகத்தில் மாறாத ஓர் கடுமை தெரிந்தது. அடர்ந்த மீசையுடன் தாடி வைத்திருந்தான். அவனது ஆஜானுபாகுவான தோற்றத்திலும் ஒவ்வொரு அசைவிலும் முரட்டுத்தனம் தெரிந்தது... அவனது கண்கள் சிவந்திருந்தன. முரட்டு ஜீன்ஸும்.. காட்டன் சர்ட்டும் அணிந்திருந்தான்.

'இவன் யாராக இருக்கும்..?' என்று வானதி எண்ணிடும் போதே மாடிப்படியில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்த எதிர் பிளாட்டில் குடியிருக்கும் கயல்விழி,

''அக்கா... இது என் அண்ணன்... பெயர் கபிலன்...'' என்று கூறினாள்.

''ஓ...'' அறிமுகப்படுத்தியதற்காக மரியாதைக்கு தலை அசைத்து விட்டு வானதி சென்று விட்டாள்.

அவள் உள்ளே நுழையும்போதே அவளது அண்ணன் கோபிகிருஷ்ணனின் சத்தம் கேட்டது. மனைவியை கடிந்து பேசிக் கொண்டிருந்தான் அவன்.

''இதோ பார் கோகிலா.. என் அம்மாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இந்த வீட்டில் இருப்பதாக இருந்தால் இரு.. இல்லாவிட்டால் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உங்க அப்பா வீட்டுக்கு நடையைக் கட்டு...''

கணவனின் பேச்சைக் கேட்டும் கேட்காதது போல் நடமாடிக் கொண்டிருந்த கோகிலாவின் இதழ்களில்



தெரிந்த ரகசிய சிரிப்பைக் கண்டு வானதிக்கு ஆத்திரம் வந்தது.

தாயின் தலை மறைந்ததும் மனைவியைப் பார்த்து கோபி கண் சிமிட்டுவதையும் அதற்கு கோகிலா செல்லமாய் சிணுங்குவதையும் கண்டு கோபம் தலைக்கேற தன் அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள் வானதி.

'தெரிந்தே தவறு செய்து விட்டு தவறு செய்யாதது போல் நடித்துக் கொண்டு இருக்கிறார்களே...' மனதில் அவளுடைய குரல் கேட்டது. கபிலனாமே... யார் அவன்? அவளைப் போலவே நினைப்பவன்.



2

அறைக் கதவு திறந்தது. வானதியின் அம்மா யசோதா காபிக் கோப்பையோடு உள்ளே வந்தாள். மகளின் அருகே அமர்ந்து பரிவாக அவளது நெற்றியை வருடிக் கொடுத்தாள்.

''ஏண்டாம்மா... தலை வலிக்குதா?''

பதில் சொல்லாமல் தாயின் முகத்தையே கூர்ந்து பார்த்தாள் வானதி. மங்களகரமான அழகிய முகம்... நெற்றியில் மின்னும் குங்குமம். கண்களில் வழியும் கருணை அமைதியே வடிவானவள். அதிர்ந்து பேசாதவள் முக்கியமாய் நடிப்பைக் கண்டுபிடிக்கத் தெரியாத இவளைத்தான்.. இவள் பெற்ற மூத்த மகனும்.. மக மிக எளிதாக ஏமாற்றுகிறார்கள்.

''என்னடா.. அப்படிப் பார்க்கிறாய்?'' வெள்ளை சிரித்தாள் அவளுடைய தாய்.

''ஒன்றுமில்லை... அண்ணன் ஏன் சத்தம் போட் கொண்டிருக்கிறார்?''

''எல்லாம் அவன் பெண்டாட்டி பண்ணுகிற வேலை தான்... நான் தெற்கே என்றால் அவள் வடக்கே என்கிறாள். இன்றைக்கு சாம்பார் வைத்திருந்தேன். அவளுக்கு சாம்பார் பிடிக்காதாம். காரக் குழம்புதான் பிடிக்குமாம். தனியாய் சமைத்துச் சாப்பிடுகிறாள்... அதுதான்.. கோபி வந்ததும் சொன்னேன். ஒரு பிடி பிடித்து விட்டான். மூச்சு பேச்சில்லாமல் அடங்கி விட்டாள்'' பெருமையாகக் கூறினாள் யசோதா.

'ஐயோ.. அம்மா' என்றிருந்தது.

''எம்மா அவங்களுக்கு பிடித்த சமையலை அவங்களே பண்ணிக் கொள்ளட்டும் என்று விட்டு விட வேண்டியதுதானே. சமையல் பண்ணும் வேலையை அவங்களிடமே கொடுத்து விட வேண்டியதுதானே.''

''நல்லாச் சொன்னே போ. நானா மாட்டேன் என்கிறேன்... அவளுக்கு மட்டும் செய்து கொள்வதானால் மணமாய்.. குணமாய்.. செய்து கொள்கிறாள். வீட்டில் எல்லோருக்கும் செய்யச் சொன்னால் அவளது உடம்பு வணங்க மாட்டேன் என்கிறது. கண்றாவியாய் தீய்ந்து போக வைத்து சமையல் பண்ணுகிறாள். உன் அப்பா நாக்கை வளர்த்து வைத்திருக்கிறார்... நான் என்ன செய்ய? நீயே சொல்லு...''

''நான் என்ன சொல்ல முடியும்? நடப்பதை வேடிக்கை பார்க்கத்தான் முடியும். அட்லீஸ்ட் நீங்க அண்ணனிடம் குறை சொல்வதையாவது நிறுத்தினால் தேவலைம்மா...''

''எனக்கும் சொல்லக் கூடாது என்று தோன்றுகிறது. ஆனால் வாய் தவறிச் சொல்லி விடுகிறேன். உன் அண்ணனுக்கு என் மேல் பாசம் அதிகம்.. பெண்டாட்டி கூட முகம் கொடுத்துப் பேச மாட்டேன் என்கிறான். அவர்



களைப் பிரித்த பாவம் வந்து விடக் கூடாது என்பதுதான் எனக்கு... ஏற்கனவே என்ன பாவம் செய்தேனோ... உன் அக்கா வாழப் போன இடத்தில் நிம்மதியாக இல்லை. இந்தப் பாவமும் சேர்ந்தால் அது நான் பெற்ற பெண்களைத்தானே பாதிக்கும்? அதற்கு பயந்து கொண்டு நிறைய விஷயங்களை உன் அண்ணனின் காதில் போடுவதே இல்லை. இன்றைக்கு கூட உன் அண்ணிக்கு சாம்பார் பிடிக்கவில்லையென்று தெரிந்ததும் காரக் குழம்பு வைத்துத் தருகிறேன் என்றுதான் சொன்னேன். அதற்கு அவள் நீங்க செய்கிற குழம்பை மனுசங்க சாப்பிடுவாங்களா? என்று கேட்டு விட்டாள். அதனால்தான் மனம் தாங்காமல் உன் அண்ணனிடம் சொல்லி புலம்பி விட்டேன்... அவன் என்னவென்றால் பெண்டாட்டியிடம் ஆடித் தீர்த்து விட்டான்...''

'நாடகமாடித் தீர்த்து விட்டான்..' வெறுப்புடன் நினைத்துக் கொண்டாள் வானதி.

''பாவம் ஆபிஸில் இருந்து களைத்துப் போய் …
திருப்பாய்.. உனக்கு எதற்குடா வீட்டுக் கதை? எழு…
டிரெஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு டி.வி. பார்.. ரி…
ஸாக இருக்கும். உனக்கு நைட் டிபனுக்கு என்ன …
டும்? என்ன செய்யட்டும்?''

''நீங்கள் எது செய்தாலும் சரிதான்... எம்மா…
லுக்கு ஒரு ஆளை வேலைக்கு வைத்துக் கொ…
என்ன? மூன்று வேளையும் நீங்கள் மெஜ…
செய்து போட வேண்டுமா?''

''மேல் வேலைகளைச் செய்யும் ஆட்களை…
வேலை செய்ய விடாமல் விரட்டிக் கொள்…
உன் அண்ணி. இவளிடம் சமையலுக்கு…

என்ன செய்வது சொல்லு. என்னிடம் பேசியது போல உன் சமையலை மனுசங்க சாப்பிடுவாங்களா என்று சமையல் வேலை செய்கிறவளிடம் இவன் கேட்டு வைத்தால் என்ன செய்வது? வீட்டில் ரகளை வந்து விடாதா?''

சமையல் வேலை செய்கிறவர்கள் கேட்டுக் கொள்ளாத வார்த்தைகளை மாமியாரிடம் கூறுகிறாள் கோகிலா. மாமியாரை எவ்வளவு மோசமாய் அவமானப்படுத்துகிறாள். எதனால் இந்த தைரியம் அவளுக்கு வந்திருக்கிறது. எல்லாம் மாமியார் பெற்ற மகனால் அந்த தைரியம் வந்திருக்கிறது.'

யசோதா சென்று விட எழுந்து அறைக் கதவைத் தாழிட்டவள் உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். ஹாலில் யாரும் இல்லை... ரிமோட்டை எடுத்து டி.வி.யை உயிர்ப்பித்தவள்.. டி.வி.யில் ஆழ்ந்தாள்... திடீரென்று டி.வி.யில் வேறு சேனல் மாறியது. என்னவென்று திரும்பிப் பார்த்தாள். அவள் அருகில் சட்டமாய் அமர்ந்து கொண்டு ரிமோட்டை கைப்பற்றி இருந்தாள் கோகிலா. அவளது உள் நோக்கம் மிகத் தெளிவாக வானதிக்கு விளங்கியது. வானதியின் அக்கா லலிதாவிற்குத் தான் வீட்டில் முதலில் திருமணம் செய்து வைத்தார்கள். அவளது திருமணம் முடிந்து மூன்று ஆண்டுகள் கழித்து அவள் ஒரு குழந்தைக்குத் தாயும் ஆன பின்னால் தான் கோபிகிருஷ்ணனுக்கு மணம் முடித்து வைத்தார்கள். அவனை மணந்து கொண்டு அந்தக் குடும்பத்திற்கு மருமகளாய் கோகிலா காலடி எடுத்து வைத்து உள்ளே வந்த இந்த ஒரு வருடம் முழுவதும் வீட்டின் அதிகாரத்தை கைப்பற்றுவதிலேயே அவள் குறியாய் இருந்தாள்.



சில நாட்களுக்கு முன்னர் வரை வானதியும் பொறுமையாக போய்க் கொண்டுதான் இருந்தாள். என்று அவளுக்கு கோகிலாவின் நடவடிக்கை இயல்பானதல்ல என்ற சந்தேகம் தட்டுப் பட்டதோ.. அன்றிலிருந்தே அவள் கோகிலாவின் செயல்களைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்து விட்டாள். கவனித்த போதுதான் தெரிந்தது. கோகிலா கணவனின் குடுமியை தன் கைக்குள் வைத்திருந்ததை... கோபிகிருஷ்ணன் அவள் சொல்படி ஆடினான்.. போன வருடம் வரை தாய் தகப்பனுக்கு நல்ல மகனாகவும்.. தங்கைகளுக்கு நல்ல அண்ணனாகவும் இருந்தவன் திருமணம் முடிந்த ஒரே நாளில் பெண்டாட்டிதாசனாக மாறி விட்டான்.

அதில் தவறேதும் இல்லை என்றுதான் வானதி நினைத்தாள். கை பிடித்த மனைவியை காதலிப்பதும்... மோகிப்பதும் இயல்பானது தானே... ஆனால் அந்த மனைவி பெருந்தன்மையே வடிவான தாயை அவமானப்படுத் துவதையும்.. திருமண வயதில் இருக்கும் தங்கையை மனம் நோகடிப்பதையும் பார்த்துக் கொண்டு சும்மாவு இருக்காமல் அவளுக்கு ஜால்ரா வேறு போடுவதைய கண்ட பின்னால் வானதியால் பொறுமையாய் இரு முடியவில்லை.

அதிலும் சமீப காலமாய் மனைவியை கண்டிக்கி பேர்வழியென்று நடிகர் திலகமாக அவன் ம கொண்டிருப்பதை காணச் சகிக்கவில்லை வானதி

'எப்படி இருந்த அண்ணன் இப்படி மாறி விட் ம்ம்.. இதை எல்லாம் பார்க்க வேண்டிய அவசி லாமல் லலிதா தப்பித்துக் கொண்டு போய் கிரிஜா சொல்வது போல் அவள் கொடுத்து

தான்...' என்று பெருமூச்சு விட்ட வானதி கோகிலாவின் பக்கம் திரும்பி,

"ரிமோட்டைக் குடுங்க..." என்று கண்டிப்புடன் கூறினாள்.

"எனக்கு இந்த புரோக்ராம் பிடிக்காது."

"எனக்குப் பிடிக்கும்..."

"எனக்கு இதையெல்லாம் பார்த்தால் தலைவலி வரும்."

"உங்களை யார் பார்க்கச் சொன்னது?"

"ஏன்.. டி.வி.யை நீ மட்டும்தான் பார்க்க வேண்டுமா?"

"நானும் பார்க்க வேண்டும்."

"இப்போது நீ என்ன சொல்கிறாய்? எனக்குப் பிடிக்காத புரோக்ராமை போட்டு.. எனக்குத் தலைவலியை வரவைக்கப் பார்க்கிறாயா?"

"முதலில் ரிமோட்டைக் குடுங்கள்..."

"கொடுக்காவிட்டால் என்ன செய்வாய்? உன் அண்ணனிடம் சொல்லி விடுவாயா? சொல்லேன்."

"அது என் அம்மா செய்யும் வேலை... நான் அண்ணனிடம் சொல்ல மாட்டேன். என் அப்பாவிற்கு போன் போட்டுச் சொல்வேன்... இந்த வீடு என் அப்பாவின் வீடு. இந்த டி.வி. என் அப்பா வாங்கி வைத்த டி.வி. அவர் பெண்ணிற்கு நிம்மதியாய் டி.வி. பார்க்க முடியவில்லையென்பதை அவரிடம் சொன்னால்தான் நீங்கள் சரிப்படுவீர்கள்."

வானதி சொல்லி வாய் மூடுமுன் மகள் சொல்வதைக் கேட்டுக் கொண்டே கருணாகரன் வீட்டிற்குள் பிரவேசித்தார். கோபமாய் இருந்த மகளைப் பார்த்தார். அவரது புருவங்கள் மேலேறின.



"என்னம்மா?" என்று வினவினார்.

"அப்பா.. நான் இப்போதுதான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தேன். டிரெஸ் சேஞ்ச் பண்ணிக் கொண்டு டி.வி.யைப் போட்டால்... இவங்க ரிமோட்டை எடுத்துக் கொண்டு சேனலை மாற்றுகிறாங்க... கேட்டால் எனக்குப் பிடித்த புரோக்ராம் இவங்களுக்குப் பிடிக்காதாம். தலை வலி வருமாம்.. இப்படித்தான் மதியம் அம்மாவிடம் நீங்கள் வைக்கும் சாம்பாரை மனிதர்கள் சாப்பிடுவாங்களான்னு கேட்டிருக்கிறாங்க..."

"என்னது...?" கருணாகரனின் முகம் கோபமானது. மனைவியின் மேல் மாறாத அன்பு வைத்திருப்பவர் அவர். வெகுண்டு விட்டார்.

"ஏம்மா.. கோகிலா.. அப்போ என்னைப் பார்த்தால் உனக்கு மனிதனா தெரியவில்லையா?"

"ஐயோ மாமா.. நான் உங்களைப் போய் அப்பட

சொல்வேனா? நீங்கள் இந்தக் குடும்பத்திற்கு க

கண்ட தெய்வம் ஆயிற்றே..."

"அப்புறம் எப்படி அப்படி ஓர் வார்த்தையைச் செ

னாய்? உன் அத்தையை கைபிடித்த நாளிலிருந்து

வரை நான் அவளது கைச் சமையலுக்கு அடிமை...

செய்யும் குழம்பு உனக்குப் பிடிக்கவில்லையா? அ

சொல்பவள் மாமியாரை உட்கார வைத்து

சமையல் பொறுப்பை நீ எடுத்துக் கொள்வது

'என்னை சமையல்காரி ஆக்கப் பார்க்

கோகிலா பல்லைக் கடித்துக் கொண்டு பேசாம

"கோபி.. கோபி" என்று கருணாகரன் ச

வும் கோபிகிருஷ்ணன் அவசரமாய் "என்

என்றபடி ஓடி வந்தான். கணவனின் குரல் கேட்டு யசோதாவும் அந்த இடத்திற்கு விரைந்து வந்தாள்.

''இதோ பார் கோபி.. சிறகு முளைத்து விட்டால் குஞ்சுகள் தாய் பறவையை விட்டு வெளியேறி விட வேண்டும். படித்து சம்பாதித்து திருமணம் முடிக்கும் வரை தான் தாய் தகப்பனை அண்டியிருக்க வேண்டும். திருமணம் முடிந்து விட்டால்.. அது ஆணாக இருந்தாலும் சரி.. பெண்ணாக இருந்தாலும் சரி.. அவரவர் குடும்பத்தை அவரவர்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். நீ படித்து முடித்து நல்ல வேலையில் இருக்கிறாய்.. திருமணமும் ஆகி விட்டது. இந்த ஒரு வருடமாக எங்களுடன் நீங்கள் இருவரும் இருந்தது போதும்.. நாளைக்கே தனிக்குடித்தனம் போய் விடு...''

கோபிகிருஷ்ணன் திகைத்து விட்டான். சுதாரித்துக் கொண்ட கோகிலா,

''அது எப்படி மாமா.. நீங்களோ ஒற்றை மகனைப் பெற்றவர். நாங்கள் உங்களை விட்டு விட்டு தனிக்குடித் தனம் போய் விட்டால் பார்ப்பவர்கள் என்ன சொல்வார் கள்?'' என்றாள்.

''ஒன்றும் சொல்ல மாட்டார்கள். கருணாகரன் புத்தி சாலி. எல்லோரையும் எடை போட்டு.. வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருக்கிறான் என்பார்கள். ஆமாம் தெரி யாமல்தான் கேட்கிறேன். அது என்ன வாய்க்கு வாய் எனக்கு ஒற்றைப் பிள்ளை என்கிறாய். உன் புருசன் மட்டும் தான் எனக்குப் பிள்ளையா? லலிதாவும்.. வானதியும் எனக்குப் பிள்ளைகள் இல்லையா?''

''மகன் என்று இவர் ஒருவர் மட்டும் தானே மாமா.''

''எனக்கு மகன் வேறு மகள் வேறு இல்லைம்மா.. இருவருமே ஒன்றுதான். என் மூன்று பிள்ளைகளுமே



பத்து மாதம் சுமந்து பிறந்தவர்கள்தான். என் சொத்துக் களை என் காலத்திற்குப் பின்னால் மூன்று பேருக்கும் சமமாய் பிரித்துத்தான் கொடுக்கச் சொல்லி உயில் எழுதி வைத்திருக்கிறேன். புரிந்து கொள்...''

''என்னங்க.. உயில் அது இது என்று பெரிய வார்த்தை களை எல்லாம் பேச வேண்டுமா?''

''நீ சும்மாயிரு யசோதா. இந்தப் பெண் நிலைமையைப் புரிந்து குடும்பத்தில் அனுசரித்து இருந்து கொள்ளப் பழகட்டும்.''

''மாமா.. உங்கள் பெண்களுக்கு நீங்கள் நகையும்.. சீரும் செய்யவில்லையா? அந்தக் கணக்கு என்ன கணக்கு?''

''என் பெண்களின் கல்யாணச் செலவு மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தது... உன் புருசனின் கல்யாணச் செலவை நான்தானேம்மா செய்தேன்... அது எத்தனை லட்சம் வந்ததென்று கணக்குச் சொல்லவா? அதுவும் தவி இந்த ஒரு வருடமாய் நீயும் உன் புருசனும் எங்களுட தானேம்மா இருக்கிறீர்கள்... இந்த ஒரு வருடமாய் உ களுக்கு ஆன செலவை கணக்குப் போட்டுப் பாரும்ம

கோகிலாவின் முகம் மாறியது.

''ஏன் மாமா.. பெற்ற மகன் மருமகளுக்கு சா போடும் செலவைக்கூட கணக்குப் பார்ப்பீர்களா

''நீ வைக்கும் சாம்பாரை மனிதன் சாப்பிடு என்று பெற்ற தாயை பார்த்து பெண்டாட்டி கே பதை கேட்டுக் கொண்டிருக்கிற மகனைப் கணக்குப் பார்த்துத்தான் ஆக வேண்டும். வேலைக்குச் சேர்ந்த மறுமாதமே அவனுக்கு நடந்து விட்டது. அன்றிலிருந்து இன்றுவ

சம்பளத்திலிருந்து ஒரு பைசா இந்த வீட்டிற்கென்று கொடுத்திருப்பானா? அவன் எங்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவனுக்கு வேண்டியதை யாவது அவன் சம்பளத்திலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டாமா? பல் துலக்கும் பேஸ்ட்... பிரஷ்ஷிலிருந்து போட்டுக் கொள்ளும் துணிமணிகள் வரை என் தலையில் ஏறி உட்கார்ந்து கொண்டால் என்னால் எத்தனை சுமைகளைத்தான் சுமக்க முடியும்? சுமப்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது அல்லவா?''



## 3

கருணாகரன் பொறுப்பான குடும்பத்தலைவர்.. அதே சமயம் மிகவும் கண்டிப்பானவர்.. மனைவியின் மேல் அதீத பாசம் கொண்டவர். சில நாட்களாகவே யசோதாவின் முகத்தில் நிலவும் சோகத்தை அவர் கவனித்துக் கொண்டுதான் வந்தார். காரணமும் அவருக்கு ஓரளவு பிடிபட்டுத்தான் இருந்தது. சமயம் பார்த்துக் கொண்டிருந்தவர்.. இன்று வாய்ப்புக் கிடைக்கவும் தனது கோபத்தை வெளிப்படுத்தி விட்டார்.

"இது என்ன மாமா இப்படிச் சொல்கிறீர்கள்? மூன்று பிள்ளைகளும் சமம் என்று பேசுபவர்.. லலிதா என்ன சம்பாதித்து உங்களிடம் கொடுத்தாள் என்று எங்களிடம் எங்களது சம்பளத்தைக் கேட்கிறீர்கள்.. இப்போது வானதி உங்களிடம் சம்பளத்தைக் கொடுத்தாலும் திருமணத்திற்குப் பின்னாலும் கொடுப்பாளா? அவளுக்கு ஒரு நியாயம்... எங்களுக்கு ஒரு நியாயமா?''

"அதைத்தான் நானும் கேட்கிறேன் கோகிலா... கோபி உயர்ந்த வேலையில்தான் உட்காருவேன் என்று அடம்



பிடித்தான். அவனுக்கு கிடைத்த வேலைகளை ஒப்புக் கொள்ள மறுத்தான். வானதி அளவிற்கு அவன் அதிக மார்க்கும் எடுக்கவில்லை. வானதி யுனிவர்சிட்டி ரேங்க் வாங்கியவள். டிகிரி முடித்ததும் அவளுக்கு வேலை வீடு தேடி வந்தது. இந்த இரண்டு ஆண்டுகளும் அவள் சம்பளத்தை அப்படியே எங்களிடம் கொடுத்து விடுகிறாள். இந்தக் குடும்பத்துக்கே மூத்தவனான கோபி.. அவனது இரண்டாவது தங்கை வேலைக்குப் போய் ஒரு வருடம் கழித்துத்தான் வேலையில் சேர்ந்தான். அதற்கும் நான் என்ன பாடுபட வேண்டியிருந்தது.. என்பது எனக்குத்தான் தெரியும். அவன் வாங்கிய முதல் சம்பளத்தையே உன் கையில்தானே கொடுத்தான்.''

கோபிகிருஷ்ணா மனைவியைப் பார்த்து கண்களால் சமிக்ஞை செய்தான். அதற்கு 'இப்போது அடங்கிப் போ.. பேசாதே...' என்று அர்த்தம்.. அதை கருணாகரன் கவனித்து விட்டார்.

''கோபி.. உன் மனைவியைக் கூட ஒரு வகையி சேர்த்து விடலாம். அவள் மனதில் இருப்பதை வெ யில் சொல்லி விடுகிறாள். ஆனால் நாங்கள் பெ வளர்த்த பிள்ளை நீ... என் முன்னாலேயே ஜா காட்டுகிறாய்... நீ நடிக்கும் நடிப்பைக் கண்டு அம்மா ஏமாறலாம். நான் ஏமாற மாட்டேன். மு இயல்பாய் இருக்கக் கற்றுக் கொள்.''

''அப்பா இவள் எப்போதும் இப்படித்தான். நா சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாள். நா விடமே சொல்லி இருக்கிறேனே... எது நடந்த ளிடம் சொல்லுங்கள். நான் இவளை கண்ம கிறேன். வீணாய் இதையெல்லாம் அப்பாவி

கொண்டு போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனே. இன்றைக்குக் கூட இவளைக் கண்டித்து வைத்தேன் அப்பா. அம்மாவிற்கும் அது தெரியுமே. அப்புறமும் ஏன் அம்மா இந்த சின்ன விஷயத்தையெல்லாம் அப்பாவின் கவனத்திற்கு கொண்டு போகிறீர்கள்? அவரே பாவம். ஆயிரத்தெட்டு டென்ஷனோடு வீட்டுக்கு வருகிறார். அவரிடம் போய் பெண்களின் பிரச்னையை சொல்லலாமா?''

''ஏய்.. எதற்குடா உன் அம்மாவை அதட்டுகிறாய்? இத்தனை வருடங்களில் ஒரு விசயத்தைக் கூட என்னிடம் இருந்து அவள் மறைத்ததில்லை. இப்போது வீட்டில் நடக்கும் விசயங்களை எனக்குத் தெரியப்படுத்தாமல் மறைக்க உன் அம்மாவிற்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாய். எத்தனை நாளாய் இந்த வேலை நடக்கிறது..? ஏண்டி.. என்னிடமிருந்து இன்னும் எத்தனை விஷயத்தை மறைத்திருக்கிறாய்?''

''ஐயையோ... நான் வேண்டுமென்றே மறைக்கவில்லைங்க.. கோபிதான் கண்டிக்கிறானே.. என்று நினைத்து விட்டேன்.''

''அவன் உண்மையிலேயே கண்டித்திருந்தால்.. இன்றைக்கு எப்படி உன் மருமகள் உன் சமையலை குறை சொல்லுவாள்? இதையெல்லாம் முளைக்கும் போதே கிள்ளி எறிந்திருக்க வேண்டும். இப்போதும் ஒன்றும் லேட்டாகி விடவில்லை. இனி இந்த வீட்டில் எது நடந்தாலும் என் காதிற்கு வந்தாக வேண்டும். மறைத்தாய் என்று தெரிந்தால் உன் மகனைப் போல நான் நடிக்க மாட்டேன். நிஜமாகவே உன்னைத் தொலைத்து தலை முழுகி விடுவேன்.''



''இல்லைங்க... இனி எதையும் மறைக்க மாட்டேன்...''

''பெண்களின் பிரச்னையே என் காதிற்குக் கொண்டு வரக் கூடாதாம். ஏண்டா.. பெண்கள் என்றால் கடை நிலைப் பிறவிகளா? ஒரு பெண் வயிற்றில் பிறந்தும்.. ஒரு பெண் கூடப் பிறந்தும்.. ஒரு பெண் கூட வாழ்ந்தும் பெண்களின் பிரச்னையென எளிதாகப் பேசுகிறாயே.. அது தான் மிக முக்கியமான தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை. பெண்கள் நிம்மதியாக வாழ முடியாத வீடும்.. நாடும்.. உருப்படி இல்லாமல் போய் விடும் புரிந்து கொள்.''

''சரி அப்பா... வா கோகிலா.''

அவன் விட்டால் போதுமென்று மனைவியுடன் நழுவப் பார்க்க ''நில்லுடா.. இன்றைய பிரச்னைக்கு முடிவு கிட்டாமல் கெட்டிக்காரத்தனமாய் நழுவப் பார்க்கிறாயே... கோகிலா... ரிமோட்டை வானதியிடம் கொடு. கோபி.. உன் மனைவிக்கு தனியாக ஒரு டி.வி. வாங்கி உங்கள் பெட்ரூமில் வைத்துக் கொள். இனிமேல் உன் மனைவிக்கு யசோதா சமைப்பது பிடிக்கவில்லையென்றால் வெளியே ஹோட்டலில் இருந்து வாங்கி வந்து கொடு... அதை விட்டு விட்டு நான் வாங்கிப் போட்டிருக்கும் மளிகைப் பொருட்களை வைத்து அவள் நா குக்கு ருசியாக செய்து சாப்பிடக் கூடாது. அப்புற இனிமேல் மாதா மாதம் உனக்கும்.. உன் மனைவிக் ஆகும் செலவாக உன் சம்பளத்தில் மூன்றில் பங்கை நீ கொடுத்து விட வேண்டும். அதற்கு வி மில்லையென்றால் வேறு வீடு பார்த்து தனிக்குடி போய்விடு...''

''என்னது.. நாங்கள் ஏன் வாடகைக்கு வீடு பார் டும்?'' கோகிலா பொறுமினாள்.

"ஏனென்றால்.. நெல்லிக்குப்பம் வீடு.. நடேசன் நகரில் இருக்கும் வீடு.. இந்த பிளாட் எல்லாமே என் சுய சம்பாத்தியத்தில் நான் வாங்கியது... என் காலத்திற்குப் பின் உன் புருசனுக்கு சேர வேண்டிய பங்கு தானாய் வந்து சேரும்... அதுவரை உங்களது வருமானத்தில் நீங்கள் வாழப் பழகுங்கள்... இப்போது ரிமோட்டை என் மகளிடம் கொடு..."

கோகிலா வேறு வழியின்றி ரிமோட்டைக் கொடுக்க அதைக் கை நீட்டி வாங்கிய வானதியின் முகத்தில் தெரிந்த வெற்றிக் குறி அவளுக்கு வெறியைக் கிளப்பியது. கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டால் போதும். நாம் மாமியார்.. நாத்தனாரை ஆட்டிப் படைக்கலாம் என்ற கனவுடன் இருந்தவளின் கனவுக் கோட்டை தகர்ந்து விட்டது. அந்த வீட்டில் மாமியாரை மூலையில் உட்கார வைத்து விட்டு அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு.. நாத்தனாரை டம்மி ஆக்கி விடத் துடித்தவள் அடங்கிப் போனாள். எங்கே வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டிய நிலை வந்து விடுமோ என்ற பயத்துடன் அன்று இரவு கணவனுடன் ஆலோசனை செய்தாள்.

"என்னங்க செய்யலாம்?"

"என்னிடம் கேட்டால்... எனக்கு என்ன தெரியும்? உன் கழுத்தில் தாலி கட்டிய நாள் முதலாய் நான் எங்கே முடிவெடுத்திருக்கிறேன். நீ எடுக்கும் முடிவுக்குத்தானே கட்டுப்பட்டிருக்கிறேன்."

"உண்மையிலேயே நாம் நமது சம்பளப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கை உங்களுடைய அப்பாவிடம் கொடுக்க வேண்டுமா?"

"நமது சம்பளப் பணமா? நீ ஏதும் வேலை பார்த்து சம்பாதிக்கிறாயா?"



"உங்களது சம்பளம் நம் சம்பளமில்லையா?"

"ஓ... நீ அப்படி வருகிறாயா? என் அப்பா சொன்னால் சொன்னதுதான்.. அவருக்கு அம்மாவின் மேல் பாசம் அதிகம்.. நீ கொஞ்சம் அடக்கி வாசித்திருக்க வேண்டும் கோகிலா."

"ம்ம்.. மாமியாரை எல்லாம் வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும்."

"இப்படி நீ நினைத்ததால் தான் உன் மாமனார் உன்னை வைக்க வேண்டிய இடத்தில் வைத்து விட்டார்."

"நக்கலா...?" முறைத்தாள் கோகிலா.

"உண்மையைச் சொன்னேன். இப்போது என்ன செய்யலாம் என்று நீ யோசி. தனிக்குடித்தனம் போக நீ விரும்பினால் நாளைக்கே தனி வீடு பார்த்து விட்டு வருகிறேன்."

"நீங்கள் கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு இருக்கிறீர்களா?"

"ஒரு வருடமாக அப்படித்தானேடி இருக்கிறேன்."

"உங்களால்தான் காரியமே கெட்டது. கண்டிப்பது பே... கிழவி முன்னால் பாவ்லா செய்யுங்கள் என்றால் ... ஆக்டிங் பண்ணி காரியத்தையே கெடுத்து விட்டீர்...

"எதற்கெடுத்தாலும் என் மீதே பழி போடு.. என்ன என் அம்மாவை கிழவி என்கிறாய்.. நா... உனக்கும் வயதாகும்."

"அதை அப்போது பார்த்துக் கொள்ளல... சம்பளம் முழுவதையும் செலவழித்தால் கூட ... அளவிற்கு வசதியாய் இருக்க முடியாது. அத... டுப் பொறுப்பு இல்லாமல் ஹாயாக இங்கே ... இருப்பது போல் தனிக்குடித்தனத்தில் ... இருக்க முடியாது."

"நீதானே நிர்வாகம் பண்ண ஆசைப்பட்டாய்?"

"பண விஷயங்களை நிர்வாகம் பண்ண ஆசைப்பட்டேன். வீட்டை நிர்வாகம் பண்ண ஆசைப்படவில்லை... உங்கள் குடும்பச் சொத்துக்கள். குடும்ப நகைகள்... பணம் வரவு செலவு.. இவையெல்லாம் என் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.. இந்த சமைப்பது.. வேலைக்காரியை கட்டி மேய்ப்பது... வீட்டைக் கவனித்துக் கொள்வது என்பதெல்லாம் நமக்கு ஆகாது."

"கெட்டிக்காரிடி நீ..."

"அதனால்... உங்கள் அப்பா கேட்கும் பணத்தை கொஞ்சம் குறைக்கச் சொல்லி கேட்டு விட்டு... ஏதோ நம் பங்கிற்கு என்று பெயருக்குக் கொஞ்சம் கொடுக்கப் பாருங்கள்..."

"உனக்கு அப்பாவைப் பற்றி இன்னும் நன்றாகத் தெரியவில்லை."

"தெரிந்திருந்தால் அவரிடம் போய் ஏன் வாய் விட்டிருக்கப் போகிறேன். தெரியாததால்தானே வாயைக் கொடுத்து விட்டு மாட்டிக் கொண்டு விழிக்கிறேன்."

"அவர் சொன்னபடி மூன்றில் ஒரு பங்கை கொடுக்க முடியா விட்டால் நாம் வெளியேறித்தான் ஆக வேண்டும் கோகிலா."

"கொடுத்துத் தொலைப்போம். எல்லாம் இந்த வானதிக் கழுதையால் வந்தது. எவ்வளவு திமிராய் என்னைப் பார்த்துக் கொண்டே ரிமோட்டை வாங்கினாள் தெரியுமா? கொழுப்பு உடம்பெல்லாம் கொழுப்பு..."

'உன்னை விடவா?' என்று நினைத்துக் கொண்டான் கோபிகிருஷ்ணன். நினைத்ததை வாய் விட்டுச் சொல்லி



விட முடியுமா? அது தான் மனதில் ஒன்று... வெளியில் ஒன்று பேசக் கற்றுக் கொடுத்திருக்கிறாளே அவனுடைய அருமை மனைவி... இந்த ஒரு வருடத்தில் பெற்றவர்களிடமும்... உடன் பிறந்தவர்களிடமும் நடித்து.. நடித்து.. அந்த நடிப்பே வாழ்க்கையாகிப் போனவன் கற்ற வித்தையை கற்றுக் கொடுத்தவளிடமே காண்பித்தான்.

"விடு கோகிலா... உன்னிடமிருக்கும் பெருந்தன்மையை அவளிடமும் எதிர்பார்க்காதே.. நீயும் தான் என் டி.வி. சேனலை மாற்றினாய்?"

"வேண்டுமென்றே தான் அப்படிச் செய்தேன்... உங்களுடைய அப்பா சொன்னதைக் கேட்டீர்கள் இல்லை... உங்களை விட உங்கள் தங்கை புத்திசாலியாம். யுனிவர்ஸிட்டி ரேங்காம். உங்களுக்கு ஒரு வருடத்திற்கு முன்னாடியே வேலைக்குப் போய் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டாளாம். அவளுக்கு அந்த மண்டைக் கனம் நிறைய இருக்குங்க. அவளைக் கொஞ்சம் தட்டி வைக்க நினைத்தேன்."

"கடைசியில் அப்பா உன்னை தட்டி வைத்து விட்டா
சரிசரி... முறைக்காதே... இப்போது பார். நாம் தனியா
ஒரு டி.வி. வாங்கி வைத்துக் கொள்ள வேண்டியது
விட்டது. அதுவும் சரிதான். நீ ஆசைப்பட்ட சேனலை
உன் விருப்பப்படி பார்க்கலாம். உனக்கும் பிரை
கிடைக்கும்..."

"யார் டி.வி. பார்க்க வேண்டுமென்று ஆசைப்ப
யாருக்கு வேண்டும் பிரைவஸி? சும்மா அவளை
படிக்க வேண்டுமென்று சேனலை மாற்றினேன்.
உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்
அம்மாவை வம்புக்கு இழுப்பது சுகமா?

...ருமுக்குள் இருக்கும் இடம் தெரியாமல் பதுங்கிக் கொள்வது சுகமா?"

"அப்படியென்றால் தனியாக டி.வி. வாங்க வேண்டுமென்று சொல்கிறாயா? அப்பாடி... செலவு மிச்சம்..."

"நான் அப்படிச் சொன்னேனா?"

"வேறு என்ன செய்ய நினைத்திருக்கிறாய்..? உன் அப்பாவிடம் கேட்டு வாங்கித் தரச் சொல்லப் போகிறாயா? அதுவும் சரிதான்... உனக்கும் பிறந்த வீட்டிலிருந்து வாங்கிக் கொடுத்தார்கள் என்று பெருமையாய் இருக்கும்..."

"பிறந்த வீட்டில் வாங்கிப் பிழைப்பது ஒரு பிழைப்பா? என்னை என்ன... உங்கள் தங்கை லலிதா என்று நினைத்து விட்டீர்களா? இங்கே சுரண்டிப் பிழைக்கிறாளே... அது போல் எல்லாம் நான் பிழைக்க மாட்டேன். என் புருசன் சொத்தில்தான் பிழைப்பேன்..."

'அதுதானே... நீயாவது உன் வீட்டிலிருந்து ஒரு பொருளை வாங்கி விடுவதாவது...' எரிச்சலுடன் நினைத்துக் கொண்டவன்,

"இப்போது என்னதாண்டி சொல்ல வருகிறாய்? டி.வி. வாங்கலாமா? வேண்டாமா?" என்று கேட்டான்.

"உங்கள் அப்பா அப்படி ஒரு வார்த்தையைச் சொன்ன பின்னால் டி.வி. வாங்காமல் இருக்க முடியுமா? வாங்குவோம்."

"இன்னும் வேறு என்ன செய்ய வேண்டும்? தினமும் உனக்கு ஹோட்டலில் இருந்து வாங்கிக் கொண்டு வந்து போடவா?"

"அது எதுக்கு வெட்டியா? நாம் பணத்தையும் கொடுத்து விட்டு வெளியிலும் வாங்க வேண்டாம்..."



"உனக்குத்தான் எங்க அம்மா சமையல் பிடிக்காதே..."

"நீங்க வேற... அதெல்லாம் உங்க அம்மா வக்கணையா நாக்குக்கு ருசியாத்தான் சமைக்கிறாங்க. நான்தான் அதை மட்டம் தட்டலாம் என்று அப்படிச் செய்தேன்."

'எவ்வளவு தைரியம் இருந்தால் இவள் இதை நம்மிடம் சொல்லுவாள்.' மனதிற்குள்தான் இதைச் சொல்லிக் கொள்ள முடிந்தது கோபிகிருஷ்ணனால்... வெளியில் மனைவியைப் பார்த்து சகிக்க மாட்டாத ஒரு சிரிப்பை சிரித்து வைத்தான்.



## 4

வானதிக்கு ஆறுதலாக இருந்தது. ஒரு வழியில் அம்மாவைக் கோகிலா விடமிருந்து காப்பாற்றி விட்டாள். இனி லலிதாவிடமிருந்தும் யசோதாவைக் காப்பாற்ற வேண்டுமே... லலிதா பணம் நகைகளைக் கறந்து கொண்டு போவது பெரிய விஷயமில்லை... யாருக்குப் போகிறது. அக்காவிற்குத் தானே. போனால் போகிறது என்று விட்டு விடலாம். ஆனால் பணம்.. நகைகளோடு யசோதாவின் நிம்மதியையும் அல்லவா எடுத்துச் சென்று விடுகிறாள்.

"என்ம்மா முகம் ஒரு மாதிரியாய் இருக்கிறது. அழுதீர்களா?"

"இல்லைடா."

"பொய் சொல்லாதீர்கள். லலிதா வந்திருந்தாளா

"ச்ச்.. தங்கம் தங்கமாய் பெண்ணைப் பெற்று வள அவளின் அருமை தெரியாதவர்களிடம் கொ விட்டேன். என் மகள் ஒரு நாள் ஒரு பொழு

நிம்மதியாய் வாழ்ந்திருப்பாளா? பணம்.. நகையென்று பிசாசுக் கூட்டம் போல பறித்துக் கொண்டே இருக்கிறார்களே... எவ்வளவு கொடுத்தும் திருப்தி ஆக மாட்டேன் என்கிறார்களே.. ஒரு பெண் குழந்தையை வேறு பெற்று விட்டாள். இல்லாவிட்டால்... நீ வாழ்ந்தது போதும் என்று நானே அவளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவேன். என் மகளை இந்தப் பாடு படுத்துகிறார்களே...''

யசோதா பொலபொலவென்று கண்ணீர் விட்டாள்.

'ஊஹூம்.. இனிமேலும் பொறுமையாய் இருக்கக் கூடாது..' அன்று மாலை வேலை முடிந்ததும்,

''கிரிஜா.. நீ வீட்டிற்கு போ.. நான் அப்பாவைப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு கருணாகரன் நடத்திக் கொண்டு வந்த தனியார் மிருக மருத்துவமனைக்குச் சென்றாள் வானதி.

அரசு மிருக வைத்திய சாலையில் வேலை செய்த நேரம் போக.. மற்ற நேரங்களில் அவரது சொந்த மருத்துவமனையில் தான் இருப்பார் கருணாகரன். வானதியின் கைனடிக் ஹோண்டா அவரது மருத்துவமனையின் முன் நின்றபோது அவர் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். வானதியைக் கண்டதும் காரில் ஏறப் போனவர் தாமதித்தார்.

''என்ன வானதி...?''

''அப்பா நான் உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்.''

''பீச்சில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுப் போகலாமா?''

''ஓகே அப்பா... நீங்கள் காரில் போங்க... நான் ஃபாலோ



வானதியும் கருணாகரனும் கடற்கரையோரமாக இருந்த சாய்வு மர பெஞ்சில் அமர்ந்து கொண்டனர். கையிலிருந்த சுண்டலை ருசித்துச் சாப்பிட்டபடி,

''என்ன விசயம் வானதி'' என்றார் கருணாகரன்.

''அப்பா.. நம் லலிதா நீங்கள் இல்லாதபோது வீட்டுக்கு வருகிறாள்...'' என்று ஆரம்பித்து வானதி எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள்.

''இது என்னம்மா கொடுமையாக இருக்கிறது. நான் அவளுக்கு என்ன குறை வைத்தேன்? பெரிய வேலை பார்க்கும் மாப்பிள்ளை.. வசதியான குடும்பமென்று பார்த்துத்தானே கல்யாணம் பண்ணிக் கொடுத்தேன்... அவர்கள் ஒன்று கேட்ட இடத்தில் நூறு சீர்வரிசை செய்து தானே அனுப்பி வைத்தேன்... ஏன் இப்படிச் செய்கிறாள்?''

''அவள் பணம் நகையென்று வேண்டியதை வாங்கிக் கொள்ளட்டும் அப்பா. அம்மாவை நிம்மதியில்லாமல் புலம்பச் செய்வானேன். அத்தானிடம் இது பற்றிக் கேட்டால்... நாங்கள் என்ன வசதி இல்லாதவர்களா. நீங்கள் கொடுத்துத்தான் நாங்கள் பிழைக்க வேண்டுமா என்று கேட்கிறார்.''

''நியாயம்தானே வானதி. அவர் கேட்பதில் த
றென்ன இருக்கிறது. யசோதா இப்படிப் பொய் சொல்
அவளுடைய பிறந்த வீட்டில் இருந்து பறித்தால் நா
அவளை வீட்டுப் படியேறவே விட மாட்டேன். அவ
இருக்கப் போய் சிரித்துக் கொண்டே பேசி இருக்கி
இதை ஏன் யசோதா என்னிடம் சொல்லவில்லை..

''அதுதான் தாய் மனது.. அம்மா மீது தப்பி
அப்பா. என் வீட்டில் என்னைக் கொடுமை
கிறார்கள்.... பணம் கொடுத்தால்தான் எ

நிம்மதியாக இருக்க முடியும் என்று பெற்ற மகள் அழுதால் எந்தத் தாய் மனம் தாங்கும்?''

''இது எப்போதிருந்து நடக்கிறதோ தெரியவில்லையே.. யசோதா பாவம் மன நிம்மதி இல்லாமல் தவித்து இருக்கிறாளே.. வானதி.. லலிதாவும் கோபியும் நாங்கள் பெற்ற பிள்ளைகளா என்றே எனக்குச் சந்தேகம் வருகின்றது. ஒருவன் என்னடாவென்றால் வீட்டுக்குள்ளே இருந்து கொண்டே அவளை வேதனைப்பட வைக்கிறான். இன்னொருத்தி என்னவென்றால் வந்து வந்து வேதனைப் பட வைத்துவிட்டுப் போயிருக்கிறாள்...''

''விடுங்கள் அப்பா.. அம்மாவை வேதனையில் இருந்து விடுவியுங்கள் அதுதான் முக்கியம். இதை எப்படி ஹேண்டில் பண்ண வேண்டும் என்று உங்களுக்குத்தான் தெரியும்.''

அவர்கள் கிளம்பினார்கள். அந்த வாரக் கடைசியில் கருணாகரன் யசோதாவை அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பினார்.

''எங்கேங்க போகிறோம்?''

''காற்றாட வெளியே போய்விட்டு வரலாம் வாம்மா.''

மாமனார் பரிவாய் மாமியாரிடம் பேசுவதைக் கேட்ட கோகிலா,

''உங்க அப்பாவிற்கு வயது திரும்புகிறது'' என்று கணவனிடம் கிண்டலாகக் கூறினாள்.

அது காதில் விழுகாதது போல் அவன் கையிலிருந்த ஆபிஸ் பைலில் முகத்தை புதைத்துக் கொண்டான்.

கருணாகரனின் கார் மகாத்மா காந்தி சிலைக்கு முன்னாலிருந்த நேரு பூங்காவின் முன்னால் போய் நின்றது.



இறங்கி அந்தப் பூங்காவிற்குள் இருந்த பெருமாளை வணங்கி விட்டு பூங்காவிற்குள் நடந்து செயற்கை நீரூற்றின் அருகேயிருந்த மர பெஞ்சில் அமர்ந்தார்கள்.

''இங்கே ஒரு முக்கியமான ஆளை மீட் பண்ணப் போகிறோம்.''

''யாருங்க அது.''

யசோதா கேட்டு வாய் மூடு முன்னர் அவளுக்கு பின்னாலிருந்து.

''அம்மா...'' என்று லலிதா அழைக்கும் குரல் கேட்டது.

''யாரு.. லலிதாவா?'' யசோதா பதறிப் போய் திரும்பிப் பார்த்தாள்.

லலிதா கையில் தனது ஒன்றரை வயதுப் பெண் குழந்தையுடன் அவர்களுக்கு அருகில் வந்து நின்றாள்.

''என்னப்பா விஷயம்? ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டுமென்று என்னை மட்டும் தனியாய் இங்கே வரச் சொன்னதால் வந்திருக்கிறேன். ஏன் என்னை வரச் சொன்னீர்கள்?''

''எல்லாம் காரணமாகத்தான் லலிதா. அம்மா பக்கத்தில் உட்கார்.''

அருகில் அமர்ந்த மகளின் கையிலிருந்த பேத்தியை வாங்கிக் கொண்டு மகளின் முடி கோதிய யசோதையின் கண்கள் கலங்கின.

''பார்த்தாயா லலிதா.. உனக்காக உன் அம் வேதனைப் படுகிறாள். நேற்று வானதி சொல்லித்த உன் ஹஸ்பெண்டும்.. உன் மாமியாரும் உன் டார்ச்சர் பண்ணும் விஷயமே எனக்குத் தெரிய வ அதற்கு ஒரு முடிவு கட்டத்தான் உன்னை இங்கு

"சொன்னேன்..." கருணாகரன் மகளை ஆழமாய் பார்த்த படி நிதானமாய் கூறினார்.

தகப்பனாரை நிமிர்ந்து பார்க்க முடியாமல் லலிதாவின் உடல் நடுங்கியது. வேறு பக்கம் பார்வையைத் திருப்பியபடி

"என்னப்பா செய்வது? எல்லாம் என் தலை விதி..." என்றாள்.

"அப்படி எளிதாக என்னால் விட்டு விட முடியுமாம்மா. உன்னைப் பெற்றவனாச்சே.. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமா?" கருணாகரன் முகம் கடினமுறக் கூறினார்.

"என்... என்னப்பா சொல்கிறீர்கள்.." தடுமாறினாள் லலிதா.

"எதைச் செய்தால் உன் வீட்டாரின் கொடுமை மொத்தமாய் மறையுமோ அதைச் செய்து விடலாம் என்று நினைக்கிறேன். அவர்களுடைய தேவை என்னவாக இருக்குமென்று நீ நினைக்கிறாய்.." உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெறுமையான குரலில் வினவினார் கருணாகரன்.

அவருடைய குரலைக் கவனிக்காமல் உற்சாகமாய் தலை நிமிர்ந்த லலிதா, "நடேசன் நகரில் இருக்கும் வீடுதான். அவர்களுடைய நோக்கம் அப்பா. அதை என் பெயரில் எழுதிக் கொடுத்து விட்டீர்கள் என்றால் என் ஹஸ்பெண்ட் என்னை அடிக்க மாட்டார். என் மாமியார் என்னைத் துன்புறுத்த மாட்டாங்க..." என்று கூறினாள்.

"அப்படி எத்தனை முறை நான் உன்னை அடித்திருப்பேன் லலிதா?" என்ற குரலைத் தொடர்ந்து அவர்களுக்கு அருகில் இருந்த மரத்தின் மறைவில் இருந்து வெளிப்பட்டான் ராம்குமார்.. லலிதாவின் கணவன்.



லலிதாவின் முகம் பேயறைந்தது போல ஆகி விட்டது. அவளது கணவனின் வரவை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

"ஏண்டி இஞ்சி தின்ற குரங்கு போல இந்த முழி முழிக்கிறாய். நமக்கு கல்யாணம் ஆன நாளில் இருந்து இந்த வினாடி வரை உன்னைக் கை தொட்டு விளையாட்டுக்குக் கூட நான் அடித்திருப்பேனா? என் அம்மா உன்னை மருமகளாகவே நினைத்தது இல்லையே... பெற்ற மகளாகத்தானே நினைத்திருக்கிறாங்க. அவர்களைப் போய் கொடுமைக்கார மாமியார் என்று பட்டம் கட்ட உனக்கு எப்படியடி மனம் வந்தது. இது போல் இன்னும் எத்தனை பொய்கள் நீ சொல்லியிருக்கிறாய். இதைச் செய்த நீ இன்னும் என்னவெல்லாம் செய்ய மாட்டாய்? உன் தங்கை வந்து என் அக்காவை நீங்கள் எப்படி அடிக்கலாம் என்று என்னைக் கேள்வி கேட்ட பின்னால்தான் எனக்கே விவரம் தெரிந்தது... இந்த அளவுக்கு மோசமானவளாக நீ இருப்பாய் என்று நான் நினைத்துப் பார்த்தது கூட இல்லை லலிதா..."

மருமகன் பேசப் பேச உண்மை தெரிந்த யசோதா பிரமை அடைந்தாள்.

"மாப்பிள்ளை.. என் மகள் சொன்னதெல்லாம் பொய்

"ஆமாம் அத்தை. என் வீட்டில் யாரும் இ கொடுமை பண்ணவில்லை... ஏண்டி. நாங்கள் கொ பண்ணியதாகச் சொல்லி வாங்கிக் கொண்டு வந் தையும் நகைகளையும் எங்கே பதுக்கி வைத்திரு அதை மரியாதையாய் உன் அம்மாவிடம் திருப்பிக்

"வேண்டாம் மாப்பிள்ளை..." மறுத்துப் கருணாகரன்.

"நீ வேண்டுமென்றால் லலிதா எவ்வளவு வேண்டுமானாலும் கேட்டு வாங்கிக் கொள்ளட்டும். நாங்கள் செய்யக் காத்திருக்கிறோம். ஆனால் மகள் துன்பப்படுகிறாள் என்று யசோதா படும் துயரத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நீங்கள் எல்லோரும் தங்கமானவர்கள். லலிதாவை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்கிறீர்கள் என்பது யசோதாவுக்குத் தெரிய வேண்டாமா? மகள் புகுந்த வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்வது தெரிந்தால்தான் அவள் மனம் நிம்மதியாகும். அதனால்தான் உங்களைப் பார்த்துப் பேசினேன். இப்போதும் லலிதா ஆசைப்பட்டபடி நடேசன் நகர் வீட்டை அவள் பெயருக்கே எழுதித் தருகிறேன்.... எனக்கு யசோதாவின் நிம்மதி தான் முக்கியம்."

"அப்படி நீங்கள் செய்வதாக இருந்தால் உங்கள் மகளை உங்களோடு அழைத்துக் கொண்டு போய் விடுங்கள்... என்னோடு அவள் வரவேண்டாம்...."

தீர்மானமாய் கூறி விட்டான் ராம்குமார்.

"என்னை அவமானப்படுத்த நினைக்கிறீர்களா? உங்கள் மகள் என்னையும் என் குடும்பத்தையும் அவமானப்படுத்தியிருப்பது போதாதா? நீங்களும் அவளோடு சேர்ந்து கொண்டு என்னை அவமானப் படுத்துகிறீர்களா? உங்கள் வீடு எனக்கு எதற்கு? எனக்கென்ன வீடில்லையா. சொத்து சுகம் இல்லையா. கட்டிய பெண்டாட்டியையும் பெற்ற பிள்ளையையும் வசதியாக வைத்துக் காப்பாற்றும் அளவிற்கு சம்பாத்தியம் இருக்கிறது. நீங்கள் கொடுத்துத் தான் நான் பிழைக்க வேண்டும் என்பது இல்லை.''

'பார்த்தாயா..' என்பது போல் மனைவியைப் பார்த்தார் கருணாகரன்... யசோதை லலிதாவை கோபமாய் பார்த்தாள்.



"என்டி... இப்படிப்பட்ட மாப்பிள்ளையின் மேல் பழி போட எப்படியடி உனக்கு மனம் வந்தது? எங்களிடமிருக்கும் பணமும் நகைகளும் வேண்டுமென்று நீ கேட்டால் கொடுக்காமலா இருக்கப் போகிறேன்? என் வயிற்றில் பிறந்து விட்டு நீ பொய் சொல்லலாமா? வீடு எங்கே போகப் போகிறது. என்றைக்கு இருந்தாலும் அந்த வீடு உனக்குத்தான். இனியாவது புத்தியோடு பிழைக்கும் வழியைப் பார்" என்று மகளிடம் அதட்டியவள் ராம்குமாரைப் பார்த்து கை கூப்பினாள்.

"என் மகளின் தவறை மன்னித்து விடுங்கள் மாப்பிள்ளை. அதை பெரிது பண்ணாமல் விட்டு விடுங்கள். சின்னவள்தானே. ஏதோ தெரியாமல் செய்து விட்டாள். அதை மனதில் வைத்துக் கொண்டு என் மகளை வெறுத்து விடாதீர்கள்."

"ஐயோ அத்தை. நீங்கள் வயதில் பெரியவங்க. நீங்க போய் என்னைப் பார்த்துக் கும்பிடலாமா? லலிதா உங்கள் மகள் என்பதை மறந்து விடுங்கள். அவள் என் பெண்டாட்டி... என் மகளுக்கு தாய்.. அவள் தவறு செய்தா கண்டிப்பேனே ஒழிய வெறுத்து விட மாட்டேன்."

ராம்குமார் உறுதியான குரலில் கூறிவிட்டு மனைவி அழைத்துக் கொண்டு சென்று விட்டான். வெகு நே யசோதா மனம் தாளாமல் புலம்பிக் கொண்டே தாள்.

"நம் லலிதாவா இப்படி.. என்னால் நம்பமு யலைங்க."

"விடு யசோதா... அவள் குணம் தான் உனக் யுமே... ஆசை அதிகம்... அதனால் இப்படி விட்டாள்..."

''அதற்காக பெற்ற தாயை ஏமாற்றலாமா?''

''நீ ஏன் ஏமாறுகிறாய்? உன் மகன் நடித்தாலும் ஏமாறுகிறாய்.. உன் மகள் நடித்தாலும் ஏமாறுகிறாய்... இப்படி உன் மேல் வைத்துக் கொண்டு லலிதாவை ஏன் குற்றம் சொல்கிறாய்?''

கருணாகரன் கடிந்து கொண்டார். வீட்டுக்கு வந்த பின் விவரம் அறிந்த வானதி தாயை சமாதானம் செய்தாள். அன்று இரவு தூங்கிய யசோதாவின் முகத்தில் என்றுமில்லாத தெளிவு இருந்தது.



## 5

மொட்டை மாடியில் உலர்ந்து விட்டிருந்த தனது காட்டன் சேலைகளை எடுத்து மடித்துக் கொண்டிருந்தாள் வானதி. ஞாயிற்றுக் கிழமையின் மாலை நேரத்து உற்சாகம் அவளது முகத்தில் தெரிந்தது. தாமதமாய் எழுந்து... தாமதமாய் குளித்து... தாமதமாய் சாப்பிட்டு... அலுவலகத்திற்கு அரக்கப் பறக்க ஓட வேண்டி இருக்காத இந்தத் தாமதம் எப்போதுமே வானதிக்குப் பிடிக்கும். ஓய்வின் சுவையை அனுபவிக்க வேண்டுமானால் உழைக்கத் தெரிந்திருக்க வேண்டும். வானதி உழைப்பாளி. அன்றைய வேலைகளை அன்றே முடிப்பவள். வார நாட்களில் உழைப்பவள் வார இறுதியில் சோம்பலை விரும்புவாள்.

வேலைக்காரி துவைத்துக் காய வைத்திருந்த சேலைகளை மடித்து எடுத்துக் கொண்டு போய் இஸ்திரி போட்டு வைக்க வேண்டும். இந்த ஒரு வேலையை மட்டும்தான் அவள் ஞாயிறன்று உருப்படியாகச் செய்வாள். விடுமுறை தினத்தின் உல்லாசம் மனதில்



புகுந்திருக்க மொட்டை மாடியின் தனிமையில் அவள் வாய் விட்டு இனிமையாக பாடிக் கொண்டிருந்தாள்.

''சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு...
தென்றலே உனக்கெது சொந்த வீடு...
உலகம் முழுதும் பறந்து.. பறந்து...
ஊர்வலம் வந்து விளையாடு...
மரத்தில் படரும் கொடியே...
உன்னை வளர்த்தவரா இங்கு படரவிட்டார்..''

''அழகாய் பாடுகிறீங்க அக்கா...''

தன் போக்கில் பாடிக் கொண்டிருந்தவள் பாட்டை நிறுத்தி விட்டுப் பதற்றமாய் திரும்பிப் பார்த்தாள். எதிர் வீட்டிலிருக்கும் கயல்விழி நின்று கொண்டிருந்தாள். வானதி தோழமையாய் சிரித்தாள்.

''சும்மா.. எதையோ முணுமுணுத்துக்கிட்டு இருந்தேன் கயல்...''

''லீவுன்னாலே மைண்டும் பீரியாயிடுது இல்லை...?''

''ஆமாம். காலேஜெல்லாம் எப்படி போய்கிட்டிருக்கு..''

''மற்ற நாளெல்லாம் நன்றாகத்தான் போய்கிட்டிருக்கு. எக்ஸாம் வந்தால் மட்டும்தான் நொண்டியடிக்க ஆரம்பிக்குது.''

கயல்விழி சொன்னதைக் கேட்டு வானதி வாய் விட்டுச் சிரித்தாள்.

''மொட்டை மாடிக்கும் படிக்க வந்தாயா?''

''இல்லைக்கா...''

''சும்மா காற்று வாங்கலாம்னு வந்தாயா?''

''அதுவும் இல்லைக்கா...''

''துணி காயப் போட்டதை எடுக்க வந்தாயா?''

''ஹூஹூம்...''

''என்னுடன் பேச வந்தாயா?''

''இல்லைக்கா.. என் அண்ணனுடன் பேச வந்தேன்'' என்று கயல்விழி கூறவும் வானதிக்கு தூக்கி வாரிப் போட்டது.

''உன் அண்ணன் வந்து கொண்டிருக்கிறாரா?''

''ஏற்கனவே வந்து விட்டார். என்னை செல்போனில் கூப்பிட்டு விட்டார். அதனால் அவரைப் பார்க்க வந்தேன்..''

''உன் அண்ணன் இங்கே இருக்கிறாரா? எங்கே...?''

''இங்கே...'' என்று குரல் கொடுத்தபடி தண்ணீர் தொட்டியின் மறைவிலிருந்து வெளிப்பட்டான் அவன். கபிலன் என்று கயல்விழி அறிமுகப்படுத்திய அவளுடைய அண்ணன்.

'இவன் இங்கேதான் இருந்தானா? இவன் இங்கேயிருப்பது தெரியாமல் நான் பாட்டுக்கு கத்தி பாடிக் கொண்டு இருக்கிறேனே. இவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்...'

வானதி வெட்கப்பட்டுப் போனாள். அவளது முகம் சிவந்து விட்டது. அவளைப் பார்த்த அவனது விழிகளில் 'ஏதோ' இருந்தது. அந்த 'ஏதோ' என்ன என்று புரியாமல் அவள் அங்கிருந்து அவசரமாய் நகரப் போனாள்.

''ஒரு நிமிடம்...'' என்றான் கபிலன்.

வானதி நின்றாள். அவன் அவளது அருகில் வந்து மென்மையான குரலில் கூறினான்.

''மனம் விட்டுப் பாடிக் கொண்டிருந்தீர்கள்... உங்களின் அந்த தனிமையை ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்த நிலையை கலைக்க விரும்பாமல் நான் மறைந்து நின்று



கொண்டிருந்தேன். வேறு எந்தவித நோக்கமும் இல்லை. என்னைத் தவறாக நினைக்க வேண்டாம்...''

வானதி மௌனமாய் தலையை அசைத்தாள். அவன் தொடர்ந்து அவளிடம் பேசினான்.

''ஆனால் ஒன்று.. உங்களின் குரலில் இருந்த இனிமையும்.. நீங்கள் அந்தப் பாடலை உணர்ந்து பாடிய விதமும் என்னைக் கவர்ந்து விட்டது. இயல்பான எதற்குமே அழகு அதிகம். உங்கள் பாடலில் அந்த அழகு இருந்தது. இந்த அபார்ட்மெண்டிற்கு என் தங்கையைப் பார்க்க வரும் போதெல்லாம்.. இங்கே வர வேண்டியிருக்கிறதே என்ற வெறுப்புடன்தான் பார்க்க வருவேன். இன்றும் அதே வெறுப்புடன்தான் வந்தேன். உங்கள் பாடல் என் வெறுப்பை மாற்றி விட்டது. இந்த இடத்திலும் இயல்பான மனிதர்கள் இருக்கிறார்கள் என்று எனக்கு உணர்த்தியது உங்கள் பாடல்தான். நன்றி.. என் மனதை லேசாக்கியதற்கு...''

வானதி அசைவற்று நின்று விட்டாள். அவனின் குர லில் ஒலித்த உண்மை அவளது நெஞ்சைத் தொட்டது பாரம் சுமந்து கொண்டிருக்கும் மனிதனின் வேதனை அவனது குரலில் அவளால் உணர முடிந்தது. அவ மனதின் பாரம் போக்கி அவள் லேசாக்கினாளா? நினை கும் போதே.. எதிர் வீட்டில் இவனைப் பார்த்ததேயில் என்பது அவளுக்கு உறைத்தது.

''நீங்கள் கயல்விழியின் அண்ணன்தானே...''

''ஆமாம்.''

''கூடப் பிறந்த அண்ணன்தானே...''

''அவளுடன் கூடப் பிறந்தது நான் ஒருவன் தான்.''

வானதி புரியாமல் விழித்தாள். கயல்விழியின் தாய் கங்காவை இரண்டொரு முறை யசோதாவுடன் அவள் பேசிக் கொண்டிருந்த நேரங்களில் பார்த்திருக்கிறாள்.

"வானதி.. இவங்க எதிர் வீட்டு ஆண்ட்டி."

"ஹலோ ஆண்ட்டி..."

"இவங்களோட பெரிய பொண்ணு காலேஜில் படிக்குதாம். அடுத்த பையன் நைன்த் படிக்கிறானாம்."

"அப்படியா?..."

கயல்விழியின் தந்தை சொக்கநாதனை லிப்டில் பார்த்திருக்கிறாள்.

"நீதான்.. எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டை வாங்கி புதிதாய் குடி வந்திருக்கும் கருணாகரன் சாரோட கடைசி மகளாம்மா?"

"யெஸ் அங்கிள்."

கயல்விழியின் கூடப் பிறந்த ஒரே தம்பி ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறான்... அப்படியென்றால் இவன் யார்? இவனுக்கும் கயல்விழிக்கும் என்ன சம்பந்தம்? இவன் ஒருவன் மட்டுமே கயல்விழியோடு கூடப் பிறந்த ஒரே உடன் பிறப்பு என்று கயல்விழியின் முன்னாலேயே இவன் சொல்லக் காரணம் என்ன? இவன் உடன் பிறந்தவன் என்பது உண்மையானால்.. உடன் பிறந்த தங்கையை செல்போன் மூலம் வரவழைத்து மொட்டை மாடியில் வைத்து யாரோ ஒருவன் போல் சந்திக்க வேண்டிய அவசியம் என்ன? இவன் எங்கே இருக்கிறான்?

இத்தனை கேள்விகளும் வானதியின் நெஞ்சில் எழுந்த அந்த நேரத்தில் யசோதா அழைப்பதாக வேலைக்காரி வந்து கூறினாள். குழப்பத்துடன் படியிறங்கிப் போனாள் வானதி.



அவளது கேள்விகளுக்கு பதில் தெரியாமல் அவளது தலையே வெடித்து விடும் போலத் தோன்ற மறுநாள் மாலையில் கயல்விழியை தள்ளிக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றாள் அவள்.

"என் அண்ணன் சொன்னதுதான் உண்மை அக்கா.. அவன் மட்டுமே என் கூடப் பிறந்தவன்."

"அப்போது.. உன் தம்பி...?"

"அவன் என் தம்பி தான்.. ஆனால் நானும் அவனும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் இல்லை. என் அண்ணனும் நானும் மட்டுமே ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள்."

"கயல் என்ன சொல்கிறாய்... அப்போது நீ அம்மா என்று அழைக்கும் கங்கா ஆண்ட்டி யார்?"

"என் அப்பாவின் இரண்டாவது மனைவி."

கயல்விழியின் கண்கள் கலங்கின. அவளது கண்ணீர் துளிகளை வானதி பார்த்து விடாமலிருக்கும் பொருட்டு அவள் முகம் திருப்பிக் கொண்டாள். வானதியின் பார்வையில் பரிதாபம் வந்திருந்தது.

"உன் அம்மா எங்கே கயல்?"

"இறந்து விட்டார்கள்.." கயல்விழி விசும்பினாள். வானதி தாளமாட்டாமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

"எப்போதுடா..."

"எனக்கு ஆறு வயதாக இருக்கும்போது இற
விட்டார்கள். ஹார்ட் அட்டாக்காம் என் அண்ணனு
அப்போது பதினொன்று வயது நான் செகண்ட் ஸ்
படித்துக் கொண்டிருந்தேன். என் அண்ணன்

பரிட்சை எழுதியிருந்தான். அப்போதுதான் அம்மா போய் விட்டார்கள்...''

''அப்புறம்...?''

''அண்ணனுக்கு அம்மா மேல் பாசம் அதிகம். அதனால்தான் அம்மா இறந்து மறு மாதமே இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கொண்ட அப்பாவை என் அண்ணனுக்குப் பிடிக்காமல் போய் விட்டது...''

''கடவுளே...''

''அண்ணன் அப்பாவுடன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். பேப்பர் போடுவது முதல்.. ஹோட்டலில் சர்வர் வேலை பார்ப்பது வரை எல்லா வேலைகளையும் செய்து கொண்டே மேலே படித்தான். அந்த நேரத்தில்தான் அந்தோணிசாமி சாரின் மெக்கானிக்கல் செட்டில் வேலைக்குச் சேர்ந்தான். ஒரு பக்கம் படித்துக் கொண்டே.. இன்னொரு பக்கம் தொழிலைக் கற்றான். அந்தோணிசாமி சார் செட்டை விற்று விட்டு குடும்பத்துடன் கிராமத்திற்கு போய்விடத் தீர்மானித்தபோது.. இவன் சேர்த்து வைத்திருந்த சம்பளப் பணத்தைப் போட்டு... நண்பர்களிடம் கடனை வாங்கி அந்தோணிசாமி சாரின் ஷெட்டை விலைக்கு வாங்கி விட்டான்... இன்றைக்கு இந்த ஊரின் நம்பர் ஒன் மெக்கானிக்கல் செட் இவனுடையதுதான்.''

''படிப்பு...''

''மெக்கானிக்கல் என்ஜினியர்.''

''அவ்வளவு பெரிய படிப்பு படித்து விட்டு ஆட்டோமொபைல் ஷெட்டை மட்டும் நடத்த வேண்டுமா?''

''அவ்வளவு ஈஸியாக என் அண்ணனை நினைத்து விடாதீர்கள் அக்கா.. பஸ்.. லாரிகளுக்கு உதிரி பாகம்



தயாரித்துத் தரும் தொழிற்சாலை ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறான்... வொயிட் சிட்டியில் பெரிய பங்களா... கார்.. என்று வசதியாய் இருக்கிறான். என்னையும் அவனுடன் வந்துவிடச் சொல்லிக் கூப்பிடுகிறான்.''

''போக வேண்டியதுதானே...?''

''எப்படிக்கா.. என் அப்பா செய்தது சரியா.. தப்பா.. என்று தெரியாத குழந்தையாய் நான் இருந்தேன். என் அம்மா இறந்து போய் தாயில்லாத குழந்தையாய் நான் நின்றபோது 'நான்தான் உன் அம்மா..' என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் வந்தவர்கள்தான் என் சித்தி. இதுவரை நான் அவங்களை சித்தி என்று கூப்பிட்டதில்லை. அம்மா என்றுதான் கூப்பிட்டு இருக்கிறேன். அவங்களும் நான் வேறு. அவங்க பெற்ற பிள்ளை வேறு என்று நினைத்ததில்லை. இப்போது போய்.. நான் என் அண்ணனுடன் போகிறேன் என்று எப்படிச் சொல்வது?''

''உன் அண்ணன் வீட்டை விட்டு வெளியேறும் போதே உன்னையும் கூப்பிடவில்லையா...''

''கூப்பிட்டான். என் அண்ணன் என்னை விட்டு விட்டுப் போவானா? ஆனால் என் அப்பா என்னை விட மறுத்து விட்டார். அக்கம் பக்கத்தில் இருந்தவங்களும் என் அப்பாவிற்கு ஆதரவாய் பேசினாங்க.. அதனால் விட்டு விட்டுப் போய் விட்டான். அதுவும் நல்லதிற்குத் தான் அக்கா... நான் அவன் கூட இருந்திருந்தால் அவனால் இந்த அளவுக்கு முன்னேறி இருக்க முடியாது. நான் அவனுக்கு பாரமாய் இருந்திருப்பேன். என்னைக் கவனிக்க வேண்டிய கடமை இல்லாததால் அவன் இருபத்தி நான்கு மணி நேரமும் வேலை செய்து முன்னேற முடிந்தது...''

''உன்னை எப்போது வந்து பார்ப்பார்...''

"எப்போதுமே... ஞாயிற்றுக்கிழமையானால் என்னைப் பார்க்க வந்து விடுவான்.. தெருமுனையில் நின்று கொண்டு கூப்பிட்டு விடுவான். போய் பார்த்து பேசி விட்டு வருவேன். இப்போது மொட்டை மாடிக்கு வந்து பேசி விட்டுப் போகிறேன்."

வானதி வெகு நேரம் பேசாமல் இருந்தாள். ஏன் அவன் பாரம் சுமந்த மனிதன் போல் பேசினான் என்பது இப்போது அவளுக்கு புரிந்தது. அவன் மனதிலிருந்த பாரம் இப்போது அவளது மனதில் ஏறி விட்டது.

"பாவம் உன் அண்ணன்.." என்று பெருமூச்சு விட்டாள் வானதி.

"நானும் பாவம்தான் அக்கா... விவரம் புரியாத வயதில் அப்பாவின் மேல் அன்பாக இருக்க என்னால் முடிந்தது. இப்போது விவரம் புரிந்த பின்னால் அப்பா செய்தது துரோகம் என்று தோன்றுகிறது. அவருடன் பேசக் கூடப் பிடிக்கவில்லை..."

"ஏன் கயல். இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்வது தவறா?"

"இல்லை.. ஆனால் மனைவி செத்த மறு மாதமே பண்ணிக் கொள்வது தவறு. அப்புறம் அந்த மனைவியோடு வாழ்ந்த வாழ்க்கைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? உயிரோடு இருந்தால்தான் அவளுக்கு மதிப்பா? செத்து விட்டால் அவளோடு வாழ்ந்த நினைவுகளையும் அவளோடேயே புதைத்து விட வேண்டுமா?"

கயல்விழி சீற்றத்துடன் கேட்டாள்.



6

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும்? காலம் காலமாய்



மனைவி இறக்க மறு நிமிடம் புது மாப்பிள்ளையாக ஆண்கள் மாறி வருவது நடந்து கொண்டுதானே இருக்கிறது... கொஞ்சம் காலம் கடந்து மறுமணம் செய்தால் பெற்ற பிள்ளைகளின் மனம் கூட மாறி விடலாம். மாறுவதற்கு அவகாசமே கொடுக்காமல் மறுமணம் செய்து கொள்வது. மனதைக் கொல்லும் செயல் அல்லவா?

"அப்பாவிற்கும் இப்போது உள்ள என் அம்மாவிற்கும் ஏற்கனவே தொடர்பு இருந்திருக்கிறது. அம்மா இறந்தவுடன் முறைப்படி அவங்களை மனைவியாக்கி வீட்டுக்குள் கொண்டு வந்து விட்டார் அப்பா. அண்ணன் என்னை விட எட்டு வயது மூத்தவன். அவனுக்கு இந்த உண்மை தெரிந்திருக்கிறது. அதனால்தான் அவன் காறி துப்பி விட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். ஆனால் விவரம் புரியாமல் இவர்களுடனே இருந்து இவர்களது பணத்தில் சாப்பிட்டு... படித்து விட்டு.. இப்போது விவரம் புரிந்தவுடன் வீட்டை விட்டு வெளியேறவும் முடியாமல்... இந்த வீட்டிலேயே இருக்கவும் முடியாமல் தவிக்கிறேன்."

வானதி ஆறுதலாய் கயல்விழியின் தோளில் கை போட்டுக் கொண்டாள். கயல்விழி அவளது மனதி லிருந்த சுமையை பகிர்ந்து கொண்ட சொந்தத்துட வானதியின் தோள் மேல் சாய்ந்து கொண்டாள்.

"இப்போது காலேஜ் பைனல் இயர்தானே படிக்கிற இன்னும் இரண்டொரு வருடங்களில் உனக்கு கல்யா ஆகிவிடும். அப்போது இந்த வீட்டை விட்டு நீ வெ யேறித்தானே ஆக வேண்டும்?"

"அட.. ஆமாம். இதை ஏன் நான் யோசிக்கவில்

"இப்போது தெரிந்து கொண்டாய் அல்லவா? இனி நிம்மதியாய் இரு. கயல்.. நான் ஒன்று கேட்கவா? தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது."

"கேளுங்கள் அக்கா. நான் யாரிடமும் இப்படி மனம் விட்டுப் பேசியதில்லை.. என் பிரண்ட்ஸ் வட்டாரத்தில் கூட என் பெர்ஸனல் மேட்டர்களை நான் சொன்னதில்லை. உங்களிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் ஏன் என்று தெரியுமா?"

"ஏன்?"

"என் அண்ணனுக்கு உங்களைப் பிடித்திருக்கிறது... அவன் மிக மிக நேர்மையானவன். தவறைக் கண்டால் எதிர்த்து நிற்பவன்.. போலித்தனமில்லாதவன். அவனுக்குப் பிடித்த எதுவும் எனக்கும் பிடிக்கும்."

கயல்விழி சாதாரணமாகத்தான் இதைச் சொன்னாள். ஆனால் அதைக் கேட்ட வானதியின் மனதில் தென்றல் வீசியது. இதமாக உணர்ந்தவள் அவள் கேட்க நினைத்த கேள்வியைக் கேட்டாள்.

"உன் அப்பாவின் மீது வெறுப்பைக் காட்டுகிறாய். அவளுடைய இரண்டாம் மனைவியின் மேல் மட்டும் பாசத்தைக் காட்டுகிறாய். அவங்க செய்ததும் தவறுதானே. உன் அம்மா உயிருடன் இருந்தபோது இன்னொருத்தியின் கணவனை அவங்க விரும்பியிருக்கக் கூடாது தானே..!"

"அவங்களுக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம் அக்கா? எங்களுக்கு துரோகம் செய்தாங்க என்று அவங்களை எப்படி நான் குற்றம் சாட்ட முடியும்? அப்பாதானே என் அம்மாவிற்கு தாலி கட்டினார்? எனக்கும்.. என் அண்ணனுக்கும் தகப்பன் ஆனார். அம்மாவுக்கும்



எங்களுக்கும் துரோகம் நினைக்காமலிருப்பது அவருடைய கடமை தானே. இந்த விஷயத்தில் என் இரண்டாவது அம்மாவை நான் குற்றம் சொல்ல மாட்டேன். குற்றவாளி என் அப்பா மட்டும்தான்."

கயல்விழியின் முகத்தில் வெறுப்பு தெரிந்தது. வானதி மௌனமாக அமர்ந்திருந்தாள். அதன்பின்,

"கயல்.. இருட்டி விட்டது. கீழே போகலாமா?" என்று வினவினாள்.

"போகலாம் அக்கா... தேங்க்ஸ்..."

"எதற்கு கயல்?"

"என் மனதின் பாரம் குறைத்து லேசாக்கியதற்கு... என் மனதில் இருப்பதை உங்களிடம் கொட்டிய பின் ஒரு ரிலீப் எனக்குக் கிடைத்து இருக்கிறது... தௌசண்ட் டைம் தேங்க்ஸ்..."

'அண்ணனும் தங்கையும் ஒன்று போல் சொல்கிறார்களே...' வானதி உதடு கடித்துக் கொண்டாள்.

அதன் பின் கயல்விழியும் அவளும் நெருக்கமாகி விட்டார்கள். மாலைப் பொழுதுகளை மொட்டை மாடியில் கழித்தார்கள். வானதி வரச் சற்று நேரமாகி விட்டாலும் கயல்விழி அவளைத் தேடி வந்து விடுவாள்.

"ஆன்ட்டி... அக்கா இல்லையா?"

"உன் அக்கா இப்போதுதான் வந்தாள். வானதி கயல்விழி உன்னைத் தேடி வந்திருக்கிறாள் பார்..."

யசோதா கூறிய அடுத்த நொடியில் வானதி அ[illegible] அறையை விட்டு வெளியே வந்து விடுவாள்.

"ஏன் அக்கா லேட்?"

"வேலை அதிகம் கயல். காபி சாப்பிடு."

"ஏதோ தேங்க்ஸ். இப்போதுதான் சாப்பிட்டேன்..."

"பரவாயில்லை. இன்னொரு கப் சாப்பிடு... அம்மாவின் கைமணம் எப்படியிருக்குதுன்னு பாரேன்..."

கோகிலாவை ஜாடையாய் பார்த்தபடி கயல்விழியின் கையில் காபி கப்பை திணித்து விட்டுத் தானும் காபி அருந்தியபடி மாடிப்படி ஏறுவாள் வானதி. இருவரும் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டு செல்வதைப் பார்த்த கோகிலா கணவனைப் பார்த்தாள்.

'போச்சு.. எதையோ சொல்லப் போகிறாள்..' என்று அவன் நினைத்து முடிக்கும் முன்னர் கோகிலா வாய் திறந்தாள்.

"எங்க.. உங்க மண்டைக் கனம் பிடிச்ச தங்கையும் எதிர் வீட்டு அறிவுக் கொழுந்தும் பின்னிப் பிணைவது கனே.. என்ன விசயம்?"

'நீயும் அக்கம் பக்கத்தோடு பழக மாட்டாய். பழகுகிறவர்களைப் பார்த்து பொறாமையும் படுவாய்.'

"என்ன.. நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீங்கள் வாயைத் திறக்காமலே உட்கார்ந்து இருந்தால் என்ன அர்த்தம்."

'வாயைத் திறந்து உன்னுடன் பேசி விட்டாலும்..' அலுப்புடன் கண் மூடிக் கொண்டான் கோபிகிருஷ்ணன். கணவன் தூங்குகிறான் என்று அப்போதைக்கு அவனை விட்டு வைத்தாள் கோகிலா.

வானதியும்.. கயல்விழியும் பேசிக் கொண்டிருந்த போது சுறுசுறுப்புடன் ஒரு சிறுவன் மாடியேறி வந்தான். பதின்மூன்று வயது இருக்கும். தண்ணீர் தொட்டியில் இறங்கி சுத்தம் பண்ண ஆரம்பித்தான்.



அவனை சுவாரஸ்யமாய் பார்த்த வானதி,

"யார் இந்தப் பையன் கயல்?" என்று கேட்டாள்.

"தெரியவில்லையே அக்கா. அவனிடமே கேட்டு விடலாமே..."

வானதி எழுந்து தண்ணீர் தொட்டிக்கு அருகே சென்று எட்டிப் பார்த்தாள். உள்ளே சுத்தம் பண்ணிக் கொண்டிருந்த அந்தச் சிறுவன் அவளை நிமிர்ந்து பார்த்து வெகுளியாய் சிரித்தான். அவனது அந்தத் தன்மையில் கவரப்பட்டாள் வானதி.

"யாருப்பா நீ..." என்று விசாரித்தாள்.

"என் பேரு கலையரசன்க்கா.. நான் இங்கே வேலைக்கு சேர்ந்திருக்கிறேன்.." என்றான் அவன்.

"வேலைக்கு சேர்ந்திருக்கிறாயா? என்ன வேலையில் சேர்ந்திருக்கிறாய்?" வானதி வேடிக்கையாய் கயல் விழியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சிறுவனிடம் வினவினாள்.

கயல்விழியும் எழுந்து வந்து வானதியுடன் சேர்ந்து நின்று எட்டிப் பார்த்தாள். சிறுவன் வேலையை நிறுத்தி விட்டு அவர்களிடம் வந்து நின்றான்.

"இந்த கட்டிடத்தோட செக்ரட்டரி ஐயாதான் என்னை வேலைக்கு வைச்சாருக்கா.. டேங்க் கிளீன் பண்ணி விடறது.. எல்லோர் வீட்டிலயும் கடை கண்ணிக்கு போகணு மான்னு கேட்டு சாமான்... காய்கறி வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறதுன்னு நான் பள்ளிக்கூடம் போகிற துக்கு முன்னாடியும்.. போயிட்டு வந்த பின்னாலயும் இந்த வேலைகளைச் செய்தால் போதும்ன்னார்."

"பள்ளிக்கூடம் போகிறாயா? எந்த கிளாஸ்டா."

"எட்டாம்கிளாஸ்க்கா."

"உன் வீடு எங்கேடா இருக்கு?"

"இப்போதைக்கு மாடிப்படிக்கு அடியில்தான்க்கா."

"என்னடா இது... பழைய படத்தில் வரும் மாடிப்படி மாது கதையை சொல்கிறாய்? ஏன் மாடிப்படிக்கு அடியில் தங்கியிருக்கிற?"

"எனக்கு வீடு இல்லைக்கா..."

"ஏன்டா?"

"எனக்கு அம்மா அப்பா இல்லைக்கா..."

வானதி திகைத்து விட்டாள். கயல்விழியின் கண்கள் கலங்கின.

"இங்கே வாடா..." என்று சிறுவனை அழைத்தாள் அவள்.

அவன் தயங்கியபடியே கயல்விழியின் அருகில் வந்தான்.

அவன் தலை கோதி விட்டவள்,

"கொஞ்சம் இருடா" என்று சொல்லிவிட்டு கீழே விரைந்தாள். சில நிமிடங்களில் திரும்பி வந்தவளின் கையில் அவளது தம்பியின் பழைய உடைகள் இருந்தன.

"இந்தாடா.. வைத்துக்க.." என்று சிறுவனிடம் நீட்டினாள்.

"எனக்கா அக்கா" ஆச்சரியமாய் கேட்ட சிறுவன் துணிகளை வாங்கிப் பார்த்து விட்டு கண்களை அகலமாக விரித்தான்.

"இவ்வளவு உசத்தியான துணிகளை நான் பார்த்ததே



"உனக்குத்தான் வைத்துக் கொள். இனி உனக்கு எது வேண்டுமென்றாலும் என்னிடம் கேளு."

"இதை வைச்சுக்க பை வேணும்க்கா... என்னிடம் பை இல்லை!"

"பார்த்தாயா... அதை மறந்து விட்டேன்!"

மீண்டும் கீழே ஓடியவள் ஒரு லெதர் பையுடன் வந்தாள்.

"இந்தாடா... இதில் துணிகளை வைத்துக் கொள்... பொறு. நான் வைத்துத் தருகிறேன்" என்று கூறியபடி துணிகளை அதில் அடுக்கிக் கொடுத்தாள்.

வானதியால் கயல்விழியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. தாயில்லாதவள். தந்தையிடம் மனதில் சொந்தம் கொள்ளாதவள். அநாதையான சிறுவனிடம் அவள் கருணை காட்டுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

சிறுவன் டேங்கை கழுவி விட்டு மேலே ஏறி வந்தான். அழுக்காய் இருந்தான். மொட்டை மாடியிலிருந்த குழாயில் கை கால்களை சுத்தம் பண்ணிவிட்டு வந்து பையை வாங்கிக் கொண்டான்.

"தேங்ஸுக்கா..."

"இன்னும் ஏதாவது வேணுமாடா?"

சிறுவன் தயங்கினான்.

"சும்மா சொல்லுடா..." கயல்விழி ஊக்கினாள்.

"பசிக்குதுக்கா... காலையிலிருந்து சாப்பிடவில்லை

வானதியும்... கயல்விழியும் விக்கித்துப் போனா

காலையில் இருந்து சாப்பிடவில்லையா... இரு

ஆரம்பித்திருந்த அந்த நேரம் வரை அவன் பட்

இருந்தானா?

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்.'

பாரதியின் வரிகள் மனதில் ஓடின.

"இருடா" என்று கூறிவிட்டு வானதி கீழே சென்றாள். சற்று நேரத்தில் அவளும் யசோதாவும் உணவுப் பாத்திரங்களுடன் மாடிப் படியேறி வந்தனர்.

"இந்தப் பையன்தானம்மா... பெயர் கலையரசு."

"பாவம்... பசியால் களைத்துத் தெரிகிறான். உட்காருப்பா" கருணையுடன் கூறிய யசோதா தட்டை வைத்துப் பரிமாற ஆரம்பித்தார்.

கலையரசு சாப்பாட்டுத் தட்டை காலி பண்ணிய வேகத்தைக் கண்டதும் அந்தப் பெண்கள் மூவருக்கும் கண்ணில் நீர் தளும்பியது.

"எப்ப பசித்தாலும் என்கிட்ட கேளுப்பா" என்றார் யசோதா.

"சரிங்கம்மா. உங்கள் வீட்டில் ஏதாச்சும் வேலை இருக்கா. நான் வந்து செய்யவா?"

"வேண்டாம்ப்பா. வேணும்னால் கூப்பிட்டுச் சொல்கிறேன்."

மெல்ல அந்த அபார்ட்மெண்டிற்கு இன்றியமையாதவன் ஆகிப் போனான் கலையரசு.

"கலையரசு.. கீரைக்காரியிடம் இரண்டு கட்டு கீரை வாங்கிவா."

"கலையரசு. இந்தக் குப்பையைக் கொஞ்சம் கொட்டிவிட்டு வா."

"கலையரசு.. கடையில் போய் பேஸ்ட் வாங்கிக் கொண்டு வா."



நாலா பக்கமும் ஆணைகள் பிறக்க... அவன் சலிப்பு இல்லாமல் சுற்றும் பம்பரம் ஆனான். வேலை மட்டும் உரிமையாய் வாங்கும் அபார்ட்மெண்ட் வாசிகள் மற்றவற்றில் அவனுக்கு உரிமை காட்ட மறந்து போக... கயல்விழியும்... வானதியும் அவனுக்கு மூன்று வேளையும் உணவளித்தார்கள். பள்ளிப் பாடப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார்கள். எழுதுவதற்கு நோட்டும் பேனாவும் வாங்கிக் கொடுத்தார்கள்.

எல்லாமே நன்றாக நடந்து கொண்டிருந்தால் எப்படி என்று விதி சிரித்து விளையாடி வைத்தது.

ஒரு நாள் மாலை வானதி அலுவலகத்திலிருந்தும்... கயல்விழி கல்லூரியிலிருந்தும் திரும்பி வந்தபோது... கலையரசை அந்த அபார்ட்மெண்ட்வாசிகள் அடித்துக் கொண்டு இருந்தார்கள்.



## 7

வானதியும்... கயல்விழியும் பதறிப் போனார்கள். அடிப்பவர்கள் கூட்டத்தில் வானதியின் அண்ணன் கோபி கிருஷ்ணனும் இருந்தான்.

"அண்ணா.. சின்னப் பையனை இப்படியா போட்டு அடிப்பது?" கோபத்துடன் அவனது கை பற்றித் தடுத் தாள் வானதி.

"இவன் என்ன செய்தான் தெரியுமா?"

"என்ன செய்திருந்தாலும் கை நீட்டி அடிக்கலாம..." கயல்விழி கலையரசை அணைத்துக் கொண்டாள்.

"வானதி.. இந்தப் பையனுக்கு நீ அளவுக்கு மீறி கொடுக்கிறாய் என்று உன் அண்ணி சொன்ன நான் அதை காதில் போட்டுக் கொள்ளவில்ல தப்பு என்று இப்போதுதானே தெரிகிறது..."

"ஒரு சிறுவனிடம் பரிதாபம் காட்டினால் கூட ... னிக்கு பொறுக்காதா?"

"சும்மா அவனையே குற்றம் சொல்லாதே... இவன் என் பாக்கெட்டில் இருந்து ஆயிரம் ரூபாய் நோட்டை திருடி விட்டான்."

"என்னது..." வானதி ஸ்தம்பித்து விட்டாள். அவளது பார்வை கலையரசின் மீது படிந்தது. இவன் திருடினானா?

"இல்லைக்கா..." அவன் கதறினான்.

வானதி அவனது கண்களையே உற்றுப் பார்த்தாள். அதில் பொய்யில்லை.. எல்லோரும் அடித்ததில் அவனது உடைகள் கிழிந்து தொங்கின. உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது. முகமெல்லாம் வீங்கியிருந்தது. வானதியின் இதயத்தில் ரத்தம் கசிந்தது.

'எங்கேயோ.. தவறு நடந்திருக்கிறது...' அவள் மனம் கூறியது.

"கேட்பதற்கு ஆளில்லையென்றால் நீங்கள் எல்லோரும் என்ன வேண்டுமானாலும் செய்வீர்களா? இவனை அடிப்பதை நிறுத்தா விட்டால்... நான் போலீஸிற்கு போன் பண்ணுவேன்" கடுமையாகக் கூறினாள் கயல்விழி.

எல்லோரும் கலைந்தனர். மாடிப்படியின் அடியிலிருந்த அவனது பாடப் புத்தகப் பையையும்.. கயல்விழி கொடுத்திருந்த லெதர் பையையும் எடுத்து வாசலில் போட்டு விட்டு அவர்கள் போய் விட்டார்கள்.

"நீ வீட்டிற்கு வா.. உன்னைப் பேசிக் கொள்கிறேன்" விரல் நீட்டி எச்சரித்து விட்டுச் சென்று விட்டான் கோபி கிருஷ்ணன்.

அவனை அலட்சியம் செய்து விட்டு கயல்விழியைப் பார்த்து,



"அந்தப் பைகளை எடு கயல்" என்றாள் வானதி. கயல்விழி எடுத்துக் கொடுத்தவைகளை வாங்கி முன்புறம் இருந்த கொக்கியில் தொங்க விட்டவள்,

"கலையரசைக் கூப்பிட்டுக் கொண்டு வண்டியில் ஏறு" என்றாள்.

மறுநொடியில் அவள் சொன்னதைச் செய்தாள் கயல்விழி.. முதலில் டாக்டரிடம் கலையரசை அழைத்துக் கொண்டு போனார்கள்.

"மாட்டைப் போட்டு அடிப்பது போல் அடித்திருக்கிறார்களே..." பரிதாபப்பட்டார் டாக்டர்.

கலையரசின் காயங்களுக்கு மருந்த போட்டு விட்டு வலி தெரியாமல் இருக்க ஊசி போட்டு விட்டார் அவர்.. மருந்து மாத்திரைகள் எழுதிக் கொடுத்தார். மருத்துவமனையிலேயே கலையரசை உடை மாற்றச் செய்து வெளியில் அழைத்துக் கொண்டு வந்தார்கள் அவர்கள். கலையரசு அதிர்ந்து போயிருந்தான்.

"நான் திருடலைக்கா..." என்று விசும்பிக் கொண்டிருந்தான்.

"அழுகாதேடா..." என்றவாறு அவனை ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய் சாப்பிட வைத்தார்கள்.

அவன் சாப்பிட மறுத்தான்.

"ஏண்டா..." வானதி கனிவாகக் கேட்டாள்.

"நான் திருடலைக்கா.." அவன் மீண்டும் விசும்பி அழுதான்.

"நாங்க இரண்டு பேரும் நீ திருடினாய் என்று சொ னோமா? முகத்தில் தெரியும் அகத்தின் அழகு என்ப கள். உன் முகத்தில் பொய் இல்லையேடா. உண் தானே தெரிகிறது?"

''அவங்க மட்டும் ஏன் அப்படிச் சொன்னாங்க?''

''எவங்கடா?''

''உங்க அண்ணிக்கா...''

வானதிக்கு 'திக்'கென்றது. ஒரு வகையில் இதை அவள் எதிர்பார்த்துத்தான் இருந்தாள். கலையரசிக்கு உதவி செய்வதை கோகிலா அவளுடைய கணவனிடம் ஆட்சேபித்தாள். அவன் அதை தகப்பனாரின் கவனத் திற்கு கொண்டு சென்றான்.

''அப்பா.. ஊர் பேர் தெரியாத அநாதைப் பையனை வீட்டுக்குள் சேர்க்கிறாள் வானதி. அம்மாவும் இதைக் கண்டிப்பதில்லை...''

''அப்படியா... வானதி... வானதி...''

''என்னப்பா?''

''கோபி என்னவோ சொல்கிறானே...''

''அண்ணன் சொல்வதை நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்... அப்பா.. அந்தப் பையன் ஒரு அநாதை... படித்துக் கொண்டு இருக்கிறான். அவனிடம் வேலை வாங்குபவர்கள் அவனுக்கும் வயிறு இருக் கிறது... பசிக்கும் என்று நினைப்பதில்லை... பசிக்கிறது என்று வந்து நிற்பவனுக்கு ஒரு வாய் சாப்பாடு போட் டால் அது தப்பா?''

கருணாகரன் பெருமையாய் மகளின் முதுகில் தட்டிக் கொடுத்தார். ''ஐ ஆம் பிரௌட் ஆப் யூ... என்றுமே உன் னால் எனக்குப் பெருமைதான் வந்திருக்கிறது. சிறுமை வந்ததில்லை... உன்னைப் பெற்றதற்கு நான் பெருமைப் படுகிறேன் வானதி. இந்தக் காலத்தில் யாருக்கு உன்னைப் போல் இரக்கமும்.. கருணையும் இருக்கிறது?''



அவர் சொல்லியபடியே கோகிலாவை ஜாடையாகப் பார்க்க அவள் முகம் பயங்கரமாய் மாறியது. அந்த முகத்தை இன்று நினைத்துப் பார்த்தாள் வானதி. அன்று நடந்ததை கோகிலா மறக்கவே இல்லையா?

''என் அண்ணியா... என்னடா சொன்னாங்க?''

''என்னைக் கூப்பிட்டு ஆயிரம் ரூபாயைக் கொடுத்து சில்லரை மாற்றிக்கிட்டு வாடான்னாங்க... நான் நாலுபடி கூட இறங்கி இருக்க மாட்டேன். என் பின்னாடியே வந்து என்னைப் பிடித்துக்கிட்டு ஓடி வாங்க... ஓடிவாங்க.. இவன் என் புருசனின் சட்டைப் பையில் இருந்து ஆயிரம் ரூபாயைத் திருடி விட்டான்னு சத்தம் போட்டாங்க... நான் பேச வாய் திறந்தப்போ... என் வாயிலேயே அடித்தாங்க அக்கா'' அந்தச் சிறுவன் கதறினான்.

வானதி உறைந்து போய் அமர்ந்திருந்தாள். அவன் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. கயல் விழி வானதியின் தோளைத் தொட்டாள்.

''அக்கா...''

''மனிதர்களில் இவ்வளவு குரூரமானவர்களும் இருக்கிறார்களா கயல்விழி? இந்தப் பச்சை மண் என்ன குற்றம் செய்தது? என்னைப் பழி வாங்குவதாய் நினைத்து இவனை ரணப்படுத்தி விட்டார்களே. இவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? நான் மூன்று வேளை சோ போட்டதற்காக இவன் என் குடும்பத்தாரால் திருட் பட்டம் வாங்க வேண்டுமா?''

''அக்கா... வேதனைப் படாதீர்கள் அக்கா.''

வானதியின் துயரத்தைப் பார்த்துக் கலையரசு கையை நிறுத்தினான்.

"சாப்பிடுடா..." வானதி அவனது முடி கோதினாள்.

அவன் சாப்பிட்டான். ஹோட்டலை விட்டு வெளியே வந்தார்கள்.

"கயல்விழி.. இவனுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நான் நிம்மதியாகத் தூங்க முடியாது. இவனை பத்திரமான இடத்தில் சேர்க்காமல் நான் வீட்டிற்கு வர மாட்டேன்" வானதி தலையில் கை வைத்துக் கொண்டாள்.

"அக்கா... எனக்கு ஒரு வழி தோன்றுகிறது.." கயல் விழியின் முகம் பிரகாசமானது.

"சொல்லு கயல்..." வானதி அவசரமாய் வினவினாள்.

"என் அண்ணனிடம் இவனைக் கூப்பிட்டுக் கொண்டு போவோம். இவனுடைய நிலையை அவனிடம் சொல் வோம். நாம் பெண்கள்... நம்மால் முடியாதது அவனால் முடியக் கூடும்..."

வானதி யோசித்தாள். கயல்விழி சொல்லுவது தான் சரி என்று பட்டது. வேறு வழி எதுவும் தென்படாததால் கயல்விழி சொல்வதை ஏற்றுக் கொண்டவளாய்.

"ஓ...கே.. உன் அண்ணனிடமே போகலாம்... வா" என்றாள்.

கயல்விழி போனில் கபிலனிடம் பேசினாள்.

"அண்ணா.. எங்கே இருக்கிறாய்? மெக்கானிக் ஷெட் டிலா? ஒன்றுமில்லை... நான் இப்போது அங்கே வரு கிறேன். வெளியில் போய் விடாதே. ஒன்றும் இல்லை என்றேனே..." போனை அணைத்து விட்டு வானதியைப் பார்த்து,

"ஷெட்டுக்குப் போகலாம் அக்கா..." என்றாள்.



கயல்விழி வழிகாட்ட வானதியின் கைனடிக் ஹோண்டா கபிலனின் ஷெட்டிற்குள் நுழைந்தது. அங்கிருந்த காரில் ஏறி அமர்ந்து ஓட்டிப் பார்த்துக் கொண்டிருந்த கபிலனின் முகத்தில் வியப்புக் குறி.

"அண்ணே.. நம்ம தங்கச்சி வந்திருக்கு அண்ணே..." என்று சூழ்ந்து கொண்ட மெக்கானிக்குகள் வானதியைப் பார்த்ததும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டு விலகினார்கள்.

கபிலன் வானதியைப் பார்த்துக் கொண்டே அவர்கள் அருகில் வந்தான். வானதி தர்ம சங்கடத்துடன் நிலம் பார்த்தாள்.

"சபா.. அந்த சேர்களை தூக்கிட்டு வா..."

கபிலனின் ஆணையை அடுத்து அங்கு நான்கு சேர்கள் போடப்பட்டன.

"உட்காருங்க..." என்று வானதியிடம் கூறியபடி கபிலன் அமர்ந்து கொண்டான். வானதி தயங்கியவாறே அமர்ந்ததும் கயல்விழி அமர்ந்தாள். கலையரசு நின்று கொண்டிருந்தான்.

"உட்காருப்பா.. உனக்கும் சேர்த்துத்தான் சேர் போட் டிருக்கு" என்று கபிலன் கூறவும் வானதியின் மனம் ஆறுதலடைந்தது.

"என்ன விசயம்.. இந்த இருட்டும் வேளையில் என்னை தேடி வந்திருக்கீங்க...?" நிதானமாய் வினவின கபிலன்.

'எப்படிச் சொல்வது...' வானதி தவித்தாள். கய அவளுக்கு கை கொடுத்தாள்.

"அண்ணா..." என்று ஆரம்பித்து சொல்லி மு

[illegible]

"நீங்கள் ஏன் வேதனைப்படுகிறீர்கள்? நன்றாக [illegible] விடுகிறவர்கள் மத்தியில் நடுத்துண்டம் எனக்கு [illegible] போய் விடவேண்டும்... மனச்சாட்சி இல்லாதவர்கள் மத்தியில் நீங்கள் மனதில் கருணையோடு இருந்தால் அதை அவர்களால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?"

"அதற்காக என் அண்ணி இவ்வளவு கீழ்த்தரமாக இறங்கலாமா? இந்தப் பச்சை மண்ணின் மேல் இப்படிப்பட்ட பழியைப் போட அவங்களுக்கு எப்படி மனம் வந்தது?"

"மனதேயில்லாதவர்களிடம் போய் மனத்தைப் பற்றிப் பேசுகிறீர்களே. அவங்க அடித்தது கூடப் பெரிதில்லை... கையில் ரூபாயை அவங்களே கொடுத்து விட்டு இந்தச் சின்னப் பையனைப் பிடித்து ஏண்டா பணத்தை எடுத்தேன்னு கேட்டு.. அவன் உண்மையைச் சொல்ல முடியாமல் வாயில் அடித்திருக்கிறார்களே. அவனது மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும். எவ்வளவு அதிர்ச்சி அடைந்திருப்பான். அவன் மனம் வலித்திருக்காதா?"

"அதை நினைத்தால்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..."

"தாங்கிக் கொள்ள முடியாத துயரங்கள் எத்தனையையோ பார்த்தவன் நான். இந்தப் பையனை இனி நான் பார்த்துக் கொள்கிறேன். இவன் இனிமேல் என் பொறுப்பு. நீங்கள் நிம்மதியாக வீட்டிற்குக் கிளம்புங்கள். நேரமாகி விட்டது..."

"[illegible] பேசுகிறான்..."

"அதுதான் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டேனே... அவன் பயப்பட வேண்டாம்."

"அவனுக்கு இருக்க இடம் கிடையாது... அநாதை..."

"நானும் அநாதைதான்..." கபிலன் புன்னகைத்தான். வானதியின் மனதில் அவனது வார்த்தைகள் [illegible]. அவனை வேதனையுடன் பார்த்தாள்.

"இப்போது நானிருக்கும் நிலைமைக்கு வர நிறைய போராடியிருக்கிறேன்... உழைத்திருக்கிறேன். இது எல்லாவற்றோடு படிக்கவும் செய்தேன். இவனுக்கு உழைக்கவும் கற்றுக் கொடுப்பேன். படிக்கவும் வைப்பேன். சரியா..."

"அண்ணே..." என்று அருகே வந்தவனிடம் கலையரசை காண்பித்து.

"ஐயா பெயர்... கலையரசு... இனி நம்மில் ஒருவன் இவன்..." என்றான்.

"நல்லதா போச்சு... வாடா..." அவன் அன்புடன் அழைக்கவும் சிறுவன் வானதியைப் பார்த்தான்.

"போடா... பயப்படாமல் போ.. நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறேன்" வானதி தைரியம் கொடுத்தாள்.

'அடிக்கடி வருவாளா?' கபிலன் அவளது வார்த்தைகளால் புத்துணர்வு பெற்றான்.



## 8

'அவன் ஓர் பார்வை பார்த்தான் -
உயிர் காற்றை மீட்டேன்
அவன் விரல் நுனியால் தொட்டான்
விண் மீது பறந்தேன்'

கபிலனின் கல்லூரி காலத்தில் ஒரு விழாவில் மேடையேறிய அவனது சக மாணவன் ஒருவன் சொன்ன கவிதை இது.

''என்டா.. வேலை வெட்டி இல்லாமல் ஒரு பொண்ணு பார்ப்பாளா. அவள் விரல் நுனியால் தொடுவாளான்னு அலையச் சொல்கிறாயா'' கேலியாக அந்த மாணவனிடம் கபிலன் கேட்டது இன்று அவனது நினைவில் வந்தது.

''கவிதையை ரசிக்கத் தெரியாத உனக்குப் போய் யாருடா கபிலன்னு பெயர் வைத்தது. 'ஆதலினால் காதல் செய்வீர்'ன்னு பாரதியார் பாடியிருக்கிறார். 'காதலித்துப் பார்.. சொர்க்கமோ.. வேறு ஒன்றோ... அது பூமியிலேயே தெரிந்து விடும்'ன்னு வைரமுத்து எழுதி இருக்கிறார். காதலை உணராத நீ கவிதையை எப்படி உணருவாய்?''

''போடா போக்கத்தவனே... அது என்னடா.. அவளை விரல் நுனியால் தொடச் சொல்கிறாய்.. பத்து நாள் குளிக்காமலிருப்பவனைத் தொடுவது போல் அருவை பட்டுக் கொண்டு தொடுவதுதான் காதலா?''

அந்த மாணவனது அனல் பார்வைக்கு மட்டும் சக்தியிருந்திருந்தால் கபிலன் அந்த இடத்திலேயே பஸ்பமாகி இருப்பான். அதன் பின்னால் படிப்பை முடித்து விட்டுப் போகும் வரை அந்த மாணவன் கபிலனிடம் முகம் கொடுத்துப் பேசவே இல்லை.

''என்ன ஆளுடா இவன்... எதற்கெடுத்தாலும் விதண்டாவாதம் பண்ணிக் கொண்டு இருக்கிறான். அவன் கூடப் பேசினால் போதும் போதும் என்று ஆகி விடுதுடா. அதனால்தான் பேச்சைக் குறைத்து விட்டேன்.''

மற்ற மாணவர்களிடம் அவன் சொன்னது காற்று வாக்கில் கபிலனின் காதுக்கு வந்தது. அலட்சியமாய்



தோளைக் குலுக்கிச் சிரித்தவன் அதற்கு மேல் அந்தப் பேச்சிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

கல்லூரி முடிந்து கடைசி வருட மாணவர்கள் பிரியும் அந்த நாளில் அந்த மாணவனின் தோள் பற்றி கபிலன் தானாய் தழுவிக் கொண்டான்.

''கபிலா.. நட்பை மதிக்கத் தெரிந்த உனக்கு ஏன் மற்ற மனித உணர்வுகளை மதிக்கத் தெரிய மாட்டேன் என்கிறது. என்றாவது ஒரு நாள் நீ மாறுவாய்.. அந்த நாள் உனக்கு வரட்டும் என்று நான் பிரே பண்ணிக் கொள்கிறேன்.''

அந்த நண்பனின் வேண்டுதல் பலித்து விட்டதோ என்று சமீப காலமாய் ஒரு சந்தேகம் கபிலனின் மனதில் எழுந்திருந்தது.

முதன் முதலாய் வானதியைச் சந்தித்த நாள் இன்றும் அவனது மனத்திரையில் ஓடியது. தெரியாமல் மோதி விட்டு மன்னிப்புக் கேட்டவளின் பின்புறமாய் கங்கா சென்று கொண்டிருப்பதை பார்த்தவனின் விழிகள் சிவந்தன. அவளைத் தாக்கும் விதமாய் கபிலன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு வானதி ஆச்சரியத்துடன் கபிலனை நிமிர்ந்து பார்த்த அந்த நொடியில் கபிலன் கரைந்து போனான்.

'என்ன ஒரு அழகிய முகம்...!'

அதன் பின் அவன் தங்கையைப் பார்க்க அந்த அபார்ட்மெண்டிற்குச் செல்லும் போதெல்லாம் அவள் தென்படுகிறாளா என்று அவனது விழிகள் தேட ஆரம்பித்தன... தேடுதலில் தோற்றுத் திரும்பிக் கொண்டிரு… தவன் ஓர் நாள் மாலையில் அவளை எதிர்பாரா… வகையில் கண் குளிர அவளைப் பார்த்தான். காது கு… அவள் பாடுவதைக் கேட்டான்.

யாருமில்லாத தனிமையில் அவள் வாய் விட்டு பாடியபடி துணிகளை மடித்துக் கொண்டிருந்ததும் அவன் இருப்பது தெரிந்ததும் வெட்கி முகம் சிவந்ததும்... இன்று நினைத்தாலும் அவனது இதயம் இனித்தது.

'அவள் ஓர் பார்வை பார்த்தாள் - என்

உயிர் காற்றை மீட்டேன்.'

உணர்ந்துதான் எழுதியிருக்கிறான் தனது நண்பன் என்ற நினைவில் கபிலனின் இதழ்களில் புன்முறுவல் உதித்தது.

'வருவாளாமே... இந்தச் சிறுவனைப் பார்க்க வருவாளாமே...' அவன் கலையரசை அன்போடு அணைத்துக் கொண்டான்.

'இவனால்தானே அவள் என் ஷெட்டில் காலடி எடுத்து வைத்தாள்.

''சபா... இவன் உன்னோடு தங்கிக் கொள்ளட்டும். படிக்கிற பையன். ஸ்கூலுக்கு போய் வரும் நேரம் மற்ற நேரங்களில் வேலையைக் கற்றுக் கொள்ளட்டும்...''

''சரிங்கண்ணே...''

''இப்போது இவனுக்கு சாப்பாடு கொடு.''

''நாங்கள் சாப்பிடும்போது கூப்பிட்டுக் கொண்டு போகிறோம் அண்ணே.''

மிகப் பெரிய மைதானம் போல் பரந்திருந்த அந்த ஷெட்டின் கடைசியில் அழகாய் அறைகள் கட்டப்பட்டிருந்தன. தண்ணீர்... பாத்ரூம் வசதியோடு அவைகள் இருந்தன. அங்கே வேலை செய்தவர்கள் எல்லோருமே அநாதைகள்தான். இளம் வயதிலேயே கபிலனிடம் அடைக்கலமாய் வந்து விட்டவர்கள். அவர்களுக்கு



இருக்க இருப்பிடம் வேண்டுமென்று தான் ஷெட்டிலேயே அறைகளை கட்ட வைத்தான் கபிலன். சாப்பிட அருகிலிருந்த மெஸ்ஸிற்கு போய் விடுவார்கள். அவர்களுடன் சற்று நேரத்திலேயே பழகி... ஒன்றி விட்டான் கலையரசு. நிம்மதியுடன் கபிலன் தன் வீடு சென்றான்.

வானதியும்... கயல்விழியும் வீட்டிற்கு திரும்பிய போது இருவரின் பிளாட் வாசல்களிலும் கங்காவும்.. யசோதாவும் கவலையுடன் காத்திருந்தனர்.

''இதோ.. வந்து விட்டார்களே...'' யசோதா கவலை நீங்கப் பெற்றவளாய் கூறினாள்.

''கயல்.. எங்கேம்மா போனீங்க. அப்பா கோபமாய் இருக்கிறார். உங்களுக்கு எதுக்கு வேண்டாத வேலையெல்லாம்...'' கங்கா வாசலிலேயே கண்டிக்க ஆரம்பிக்க.

''அம்மா.. எது பேசுவதாக இருந்தாலும் வீட்டுக்குள் வந்து பேசுங்கள்'' என்று கூறிய கயல்விழி வீட்டிற்குள் சென்று விட்டாள்.

யசோதாவோ.. கங்காவைப் போல் வாசலில் வைத்துக் கொண்டு கேட்கவே இல்லை. ஏன் வானதி வீட்டிற்குள் வந்த பின்னாலும் அவள் எதுவும் கேட்கவில்லை.

மாறாக அவளை ஏதோ குற்றவாளியைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு ஹால் சோபாவில் அமர்ந்திருந்தான் கோபிகிருஷ்ணன்... அருகில் கருணாகரன் அமைதியான முகத்தோற்றத்துடன் அமர்ந்திருந்தான். கோகிலா அவர்களுடைய அறை வாசலில் நின்று கொண்டு இருந்தாள்.

''காபி கொண்டு வரவாடா...?'' யசோதா இதமாய் வினாள்.

''வேண்டாம்மா...''

"பார்த்தீர்களா அப்பா.. இவள் இப்படி இஷ்டம்போல் கட்டுக்கு அடங்காமல் இருப்பதற்கு அம்மா கொடுக்கும் இடம்தான் காரணம் என்று நான் உங்களிடம் சொன்னது உண்மையென்று இப்போது கண்ணெதிரே பார்த்து தெரிந்து கொண்டீர்களா? நானும் கோகிலாவும் சொன்னால்தான் நம்ப மாட்டீர்கள். இப்போது நேரே நடப்பதைப் பார்த்த பின் இவர்கள் இருவரின் லட்சணமும் புரிகின்றதா.. சாயந்திரம் இந்த அபார்ட்மெண்டில் இருப்பவர்கள் அத்தனை பேரின் முன்னாலும் என்னுடன் சண்டை போடுகிறாள்..." கோபிகிருஷ்ணன் ஆவேசமாய் கூறிக் கொண்டிருக்கும்போதே கோகிலா இடைமறித்தாள்.

"அதுவும் ஒரு திருட்டுப் பயலுக்கு பரிந்து கொண்டு கூடப் பிறந்த அண்ணனுடன் சண்டை போடுகிறாள்..."

கோகிலா வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருந்தாலாவது வானதி தன் அறைக்குள் போயிருப்பாள். அவள் வாயைத் திறந்ததும் இவள் கடுப்பாகி விட்டாள்.

"அவன்தான் திருடினான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நான்தான் என் கண்களால் பார்த்தேனே..."

"எதைப் பார்த்தீர்கள்?"

"உன் அண்ணனின் சட்டைப் பையிலிருந்து அவன் ஆயிரம் ரூபாய் நோட்டை எடுப்பதைப் பார்த்தேன்."

"அப்போது அண்ணன் எங்கே இருந்தார்?"

"பாத்ரூமில் இருந்தார்."

"அண்ணன் சட்டையை எப்போது இருந்து ஹாலில் கழட்டிப் போட ஆரம்பித்தார்?"

"எங்களுக்கென்று ரூம் இருக்கும்போது அவர் ஏன் சட்டையை ஹாலில் கழட்டிப் போட வேண்டும்? எங்கள் ரூமில்தான் கழட்டிப் போட்டிருந்தார்..."



"நீங்கள் எங்கே இருந்தீர்கள்?"

"எங்கள் ரூமில்தான் இருந்தேன்..."

"உங்கள் ரூமிலிருக்கும் அட்டாச்டு பாத்ரூமில் அண்ணன் இருந்தார். உங்கள் ரூமிற்குள் நீங்கள் இருந்தீர்கள்... அந்தச் சின்னப் பையன் உள் பக்கமாய் பூட்டியிருந்த வாசல் கதவைத் திறந்து கொண்டு வந்து... உள் பக்கமாய் பூட்டியிருந்த உங்கள் ரூம் கதவையும் திறந்து கொண்டு உங்கள் ரூமிற்குள் வந்து அண்ணனின் சட்டைப் பைக்குள் கையை விட்டு ஆயிரம் ரூபாயை உங்கள் கண் முன்னால் எடுத்திருக்கிறான்... அதைப் பார்த்த நீங்கள் அவன் ரூமிலிருந்து வெளியேறி... மாடிப்படிகளில் இறங்கும் வரை காத்திருந்து அதற்கு பின்னால் ஓடிப் போய் அவனைப் பிடித்தீர்களா?"

கோகிலா இந்தக் குறுக்கு விசாரணையை எதிர்பார்க்கவில்லையென்று அரண்டு போன அவளது முக பாவத்திலேயே தெரிந்தது. கருணாகரனின் புருவங்கள் மேலேறின.

"வானதி... நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"நான் எதையும் சொல்ல விரும்பவில்லை அப்பா.. இத்தனை நாளாய் இவர்களை சுயநலவாதிகள், நடிப்ப வர்கள் என்றுதான் நினைத்திருந்தேன்... இப்போது.. சே... எனக்கு இந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்ல அப்பா.. இவர்கள் முகத்தில் விழிக்கவே பிடிக்கவில்ல நான் ஏதாவது லேடிஸ் ஹாஸ்டலில் சேர்ந்து விடுகிறேன்

இப்போது கோபிகிருஷ்ணனே அதிர்ந்து போனா வானதி கேள்வி கேட்ட பின்னால்தான் 'அட இப்ப இருக்கிறதா.. இதை ஏன் நாம் யோசிக்கவில்லை...' நினைவுடன் இருந்தவனுக்கு தங்கை வீட்டை போய் விடுகிறேன் என்று கூறியதைக் கேட்டது தாங்கவில்லை.

"வானதி.. என்ன இது.. எதுவாக இருந்தாலும் வீட்டுக்குள் இருந்து கொண்டு போராடு. வெளியே போவது என்பதை நீ சொல்லலாமா? வயதுப் பெண் வீட்டை விட்டு வெளியேறுகிறேன் என்று சொல்வதைக் கேட்கவா.. நானும் அப்பாவும் இருக்கிறோம்?"

'ஆஹா..! என்று கோகிலா சுதாரித்துக் கொண்டாள். தன் முந்தானை முடிச்சு பலமிழந்து போவதா? தன் கணவன் அவனுடைய தங்கையின் மேல் பாசம் காட்டுவதா?

"ஆமாங்க... உங்க தங்கைக்கு ஏற்கனவே போராடத் தெரியாது. நீங்கள் வேறு சொல்லிக் கொடுங்கள். இது வீடு. போர்க்களமில்லை. வீட்டில் ஆள் யாருமில்லை. அவன் எதற்காக வந்தானோ.. உள்ளே வந்து பணத்தை எடுத்து விட்டான். நான் ஒரு நிமிசம் 'ஆ'ன்னு பிரமித்து போய் நின்று விட்டேன். அதற்குள் என்னைப் பார்த்தவன் மின்னல் வேகத்தில் ஓடி விட்டான். நானா விடுவேன்? அவன் பின்னாலேயே ஓடி... மாடிப்படிகளில் அவனைப் பிடித்து விட்டேன்."

"இதைச் சொல்ல இவ்வளவு நேரமா? அது சரி... உங்களுக்கு யோசிக்க நேரம் வேண்டாமா?... அம்மா அண்ணன் வந்ததும் யார் கதவைத் திறந்து விட்டது?"

"நான்தாண்டா..."

"கதவைத் திறந்தவங்க... கதவை மூட வேண்டாமா? இப்படித்தான் அஜாக்கிரதையாய் இருப்பீங்களா?" வானதி கொக்கி போட... சூது வாது தெரியாத யசோதா சட்டென்று பதில் சொல்லி விட்டாள்.

"என்னைக்குடா நான் வாசல் கதவைத் திறந்து வைத்திருக்கிறேன்? நெல்லிக்குப்பத்தில் தனி வீட்டில்



இருந்தபோதே வாசல் கதவைத் திறந்து வைக்க மாட்டேன். இது அபார்ட்மெண்ட். இங்கு போய் வாசல் கதவைத் திறந்து வைப்பேனா. அப்போதே மூடி உள் தாழ்ப்பாள் போட்டு விட்டுத்தான் உள்ளே போனேன்..."

"போதுமா.. அப்பா..." வானதி கருணாகரனிடம் கேட்க கோகிலா சண்டைக்கு வந்தாள்.

"இப்போது என்ன சொல்கிறாய் வானதி. நான் வேண்டுமென்றே அந்தப் பையனின் மேல் பழி போட்டேன் என்கிறாயா?"

"பின்னே இல்லையா?"

"அப்போ... அந்த ஆயிரம் ரூபாய் நோட்டு கால் முளைத்து அவன் கையில் போய் சேர்ந்ததா?"

"இல்லை... கைக்கு கை மாறும் பணம்.. உங்கள் கையிலிருந்து அவனுடைய கைக்கு மாறியது..."

"அவன் மேல் பழி போடுவதால் எனக்கு என்ன லாபம்?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன்..."

சண்டைக் கோழிகளாய் இருவரும் சிலிர்த்துக் கொண்டு நிற்கையில் கருணாகரன் ஊடே புகுந்தார்.

"வானதி இங்கே வாம்மா..."

மகளை அழைத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றார் தாழ்ந்த குரலில் அவர் வினவ... வினவ.. வானதி அனை தையும் சொல்லி விட்டு உடைந்து போய் அழுதாள்.

"அவன் சின்னப் பையன் அப்பா.. அநாதை.. நம பிடிக்கவில்லையென்றால் வெளியே துரத்தி இ லாமே.. இப்படி பழி போடுவதா? அந்தப் பைய பாவம் நம்மை சும்மா விடுமா? அவனை வாயி

அடித்திருக்கிறார்கள் அப்பா.. அவனது வாய் கிழிந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. சட்டையெல்லாம் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. என்மேல் இருக்கும் வெறுப்பைத் தீர்த்துக் கொள்ள ஒரு அநாதைப் பையனை இந்தக் கதிக்கு ஆளாக்குவதா? என் கருணையை சம்பாதித்துக் கொண்டதைத் தவிர அந்தப் பையன் வேறு என்ன தவறு செய்தான்?''

கருணாகரன் மகளின் தோளில் ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார். ஹாலை திரும்பிப் பார்த்தார். கோகிலா அங்கு இல்லை.



## 9

கயல்விழியின் வீட்டில் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது. வானதியின் அண்ணி கோகிலா தான் இதைச் செய்தாள் என்று காட்டிக் கொடுக்க கயல்விழிக்கு விருப்பமில்லை. எனவே சொக்கநாதனின் குறுக்கு விசாரணைக்கு ஏட்டிக்குப் போட்டியாக வழக்கம் போலவே அவரது முகம் பார்க்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். கங்காவோ பதட்டத்துடன் கைகளைப் பிசைந்து கொண்டு இருந்தாள். தகப்பனுக்கும் மகளுக்கும் என்றுமே ஆகாது என்பதை உணர்ந்தவள் அவள். சொக்கநாதனின் மனைவியாக அந்த வீட்டிற்குள் அடி எடுத்து வைத்த மறுகணமே கபிலன் ஆக்ரோசமாய் தந்தையுடன் சண்டை போட்டு விட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். ஆறு வயதில் அறியாத குழந்தையாய் மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்ற கயல்விழியை தன்னுடன் தூக்கிக் கொண்டு போக அவன் முனைந்த போது... அக்கம் பக்கத்தில் என்ன நினைப்பார்கள் என்ற பயத்தில் மகளை தன்னுடன் நிறுத்திக் கொண்டவர் சொக்கநாதன்.



அதே ஊர் உலகத்தின் வாய்க்கு அஞ்சியே கங்காவும் கயல்விழியை ஆதரித்து வைத்துக் கொண்டாள். கபிலனின் செய்கையை எல்லோருமே பாராட்டிப் பேசினர்.

''மகன் என்றால் இவன்தான்ய்யா மகன்.. பெற்ற தாய்க்கு துரோகம் பண்ணி விட்டான் அப்பன் என்று தெரிந்ததும் அப்பனை தலை முழுகினான் பாரு... அவன் தான்ய்யா ஆண் பிள்ளை சிங்கம்... பெத்த தாய் செத்தாலும்.. அவள் ஆத்மா சாந்தி அடைஞ்சிருக்கும்ய்யா.''

பதினான்கு வயது மகனின் தந்தை உடனடி மறுமணத்திற்கு என்ன காரணம் சொல்ல முடியும்?

''ஆறு வயசில் பெண் பிள்ளையை கையில் பிடிச்சுக்கிட்டு அல்லாடிக்கிட்டு நின்னேன். அந்தப் பெண் குழந்தைக்கு அம்மா என்று சொல்லிக் கொள்ள ஒருத்தி வேண்டாமா? ஆயிரம் தான் ஆண் வளர்த்தாலும் பெண் குழந்தையை பெண் வளர்ப்பதே வேறு...''

''அப்போ... உன் மகளுக்காகத்தான் மறு கல்யாணம் பண்ணிக் கொண்டாயாக்கும்...''

எதிரில் இருப்பவர் நக்கலாக கேட்டு விட்டு நகருவார்...

இந்தக் கேள்விகளை கேட்ட கங்கா வந்த உடனே கயல்விழியை கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தாள்.

''நான் உன் அம்மா தான் கயல்விழி.. என்னை சித்தின்னு கூப்பிட்டு பிரித்து வைத்து விடாதே.. அம்மான்னே கூப்பிடு...''

''வாம்மா.. தலை வாரிப் பூ வைத்து விடுகிறேன். உனக்காக நானே நெருக்கமாய் கட்டி வைத்திருக்கிறேன்.''

''ஏன் கண்ணு... சோர்வாய் இருக்கிற.. ஸ்கூலில் ஏது பிரச்னையா? பிரண்ட்ஸ் கூட சண்டையா? அம்மா கி... சொல்லும்மா.''

இப்படிப் பேசிப் பேசியே கயல்விழியை தன் பக்க
இழுத்துக் கொண்டாள் கங்கா... சிற்றன்னையுட
இணக்கமாகப் பேசும் கயல்விழி பெற்ற தகப்பனிட
எதிரி போல் நடந்து கொண்டதும் கங்காவிற்கு வசதி
யாகவே போனது.

"ஆனாலும் இந்தப் பெண்ணிற்கு இவ்வளவு அழுத்
கூடாதுங்க.. சாப்பிட வந்தவள்... நீங்கள் சாப்பிட்டு
கொண்டிருப்பதைப் பார்த்து விட்டுச் சாப்பிட வராமலே
ஸ்கூலுக்கு போய் விட்டாள்."

"நேற்று நீங்கள் வாங்கி வந்த கடிகாரை பிளேடால்
கிழித்து விட்டாள். இனிமேல் அவளுக்கு நீங்கள் தனி
யாக எதுவும் வாங்கி வர வேண்டாம்."

"அவளுக்கு எங்க ஸ்வீட் பாக்ஸ் வாங்கி வந்து கொடு
த்தீங்க. அப்படியே சாக்கடையில் கொட்டி விட்டாள்."

சந்தேகமே வராமல் தகப்பனிடமிருந்து மகளை
விலக்கி வைத்தாள் கங்கா. கயல்விழியை விலக்கி வைக்
கத்தான் அவள் சிரமப்பட வேண்டி இருந்தது. கபிலனை
விலக்கி வைக்க சிரமப்படவே இல்லை.

"நான் மார்க்கெட்டில் இருந்து வந்து கொண்டு இருந்
தேன். உங்கள் மகன் என்னைப் பார்த்துக் காறி துப்பி
விட்டுப் போகிறான்... பக்கத்து வீட்டுச் செல்வி என்னை
இளக்காரமாய் பார்க்கிறாள்..."

அன்றுதான் கபிலன் சொக்கநாதனை அவரது நண்
பர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியிருப்பான்
அதைத் தெரிந்து கொண்டே இவளும் நீலிக் கண்ணீ
வடிப்பாள்.

"உங்களுக்கு நான்... எனக்கு நீங்கள்... நம் இரண்டு
பேருக்கும் நம்ம பிள்ளை சரண் மட்டும் தாங்க... நம்



மூன்று பேரும் தான் இனி ஒருவருக்கொருவர் ஆறுத
லாக இருந்து கொள்ள வேண்டும்..."

ஆளுக்கு ஒரு திசையில் சொக்கநாதனும் அவர் பெற்ற
இரு பிள்ளைகளும் பிரிந்து நிற்க... இவள் சொக்கநாத
ருடன் குடும்பம் என்ற வட்டத்தை பலப்படுத்தி அவரின்
பாசம் முழுவதையும் தன் மகனுக்குப் பெற்றுக் கொடுத்து
விட்டாள். தாயை இழந்த இரு பிள்ளைகளும் தகப்ப
னுடைய பாசத்தையும் இழந்து நின்றன... இதில் ஆறுதல்
பட வேண்டிய அம்சம் என்னவென்றால் தகப்பன் பாசத்
தைப் பொழிய முன் வந்தாலும் அவர் செய்த துரோ
கத்தை மன்னிக்கத் தயாராய் இல்லாத கபிலனும் கயல்
விழியும் அவரது பாசத்தை வேண்டவேயில்லை.

சரணுக்கும்... கயல்விழிக்கும் ஒன்று போல் பாசம்
காட்டுவதாக நடிப்பதில் கங்காவிற்கு சிரமமே ஏற்பட
வில்லை. ஏழு வயது கயல்விழிக்கு பிறந்த குழந்தை
யான சரணிடம் என்ன போட்டி உணர்வு வந்து விடப்
போகிறது... அதுவும் பிறந்த போதே...

"பார்... உன் அக்காவைப் பார்..." என்று உறவு கொண்
டாடி கங்கா காட்டிய குழந்தையிடம் பொறுமை
காட்ட முடியுமா?

"கயல்... தம்பியைப் பார்த்துக் கொள்ளம்மா..."

"கயல்... தம்பியை கொஞ்சம் தூக்கி வைத்துக் கொ

"கயல்... தம்பிக்கு விளையாட்டுக் காட்டு..."

"கயல்... தம்பி கூட விளையாடு..."

சரணை வளர்க்க... சம்பளமில்லாத வேலைக்
தன்னை பயன்படுத்திக் கொள்கிறாள் சிற்ற
என்பதை அறியாதவளாய் கயல்விழி குடும்

அமைப்பில் சித்தி தன்னை வேறுபடுத்திப் பார்க்க வில்லை என்ற நினைவுடன் வளர்ந்தாள்.

உடைகள் முதல்... உணவு வரை சரணுக்கு தனியாக சிறப்பாக செய்தாள் கங்கா.. அதை சரணுக்கேத் தெரியாமல் அவனை வளர்த்ததுதான் அவளுடைய கெட்டிக் காரத்தனம்.

ஓரளவு விவரம் தெரிந்தவனாக சரண் ஆனவுடன்,

''சரண்.... கயல்விழி என் வயிற்றில் பிறந்தவ ளில்லை... நீ மட்டுமே என் மகன்... இதை மற்றவர்கள் சொல்லி நீ தெரிந்து கொண்டு கயல்விழியிடம் எதை யாவது கேட்டு வைத்தால்.. பாவம் தாயில்லாத அவள் மனம் வருத்தப்படுவாள். அவளுக்கு நம்மை விட்டால் போக்கிடம் ஏது...'' என்று மகனிடம் தெளிவாக கயல் விழி அந்த வீட்டில் அண்டிப் பிழைப்பவள்... அவன்தான் உரிமையுள்ள மகன் என்பதை உணர்த்தி விட்டாள்.

மூத்தாள் குழந்தையை வித்தியாசமில்லாமல் வளர்க் கும் தியாகி தன் அன்னை என்று சரணையே நினைக்க வைத்து விட்டாள் கங்கா. ஆனால் அவள் எதிர்பாராதது கபிலனின் அசுர வேக பொருளாதார வளர்ச்சி... கண் சிமிட்டும் நேரத்திற்குள்.. சொந்தத் தொழிற்சாலை... பங் களா... கார் என்று தொழிலதிபனாக அவன் உருவெடுத்து விட கங்கா... கயல்விழியின் மேல் அளவுக்கு அதிகமான பாசத்தைப் பொழிய ஆரம்பித்தாள்.

ஆயிரம்தான் இருந்தாலும் கபிலன் கயல்விழியின் சொந்த அண்ணன்.. பணத்திலே மிதக்கும் அண்ணனின் தங்கையாக அவள் வீட்டை விட்டு விட்டு அண் ணனின் பங்களாவிற்கு குடி போய் விட்டால் அவளின் அந்தஸ்தே மாறி விடும். சரண்... சாதாரண சொக்கநாத



னின் மகனாகவே இருப்பான். கபிலன் ஒரு நாளும் சரணை தன் தம்பியாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தன் மகனுக்குக் கிடைக்காத பணக்கார வாழ்வு கயல் விழிக்கு கிடைத்து விடக் கூடாது என்பதில் கங்கா கவனமாக இருந்தாள்.

''கயல்... ஏண்டாம்மா லேட்டாக வருகிறாய். நான் எவ்வளவு பதறிப் போனேன் தெரியுமா? என் மகளுக்கு என்ன ஆனதோ ஏது ஆனதோ என்று தவித்துப் போய் விட்டேன்... இனிமேல் லேட்டாய் வராதேம்மா... நீ வரக் கொஞ்ச நேரம் ஆகி விட்டாலும் என் உயிர் தவித்துப் போய் விடுகிறது...''

இப்படிப்பட்ட அன்னையை விட்டு எப்படிப் பிரிந்து போவது என்ற குழப்பத்தில் கயல்விழியை ஆழ்த்தி பாத விலங்கிட்டு விட்டாள் கங்கா. அப்பேற்பட்ட கங்கா... இன்று சொக்கநாதன் ஏதாவது ஆத்திரப்பட்டு சொல்லி விட்டால்... மேஜரான கயல்விழி வீட்டை விட்டு வெளி யேறி விடுவாளே.... என்ற பதட்டத்தில் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

''வயதுப் பெண் செய்யும் காரியமா இது?'' உறுமி னார் சொக்கநாதன்.

''அம்மா.. வீட்டில் உள்ளவர்கள் தலை குனியும்படியான காரியத்தை நான் செய்யவில்லை என்று சொல்லுங்கள்...''

''யார் எப்படிப் போனால் நமக்கென்ன...''

''யார் எப்படிப் போனால் நமக்கென்ன...''

''எனக்கென்னவென்று என்னால் இருக்க முடியாது...''

''திருடனுக்கு பரிந்து பேச வெட்கமாயில்லை...''

''வெட்கப்பட வேண்டிய காரியத்தை செய்தவ

''வெட்கப்பட வேண்டிய காரியத்தை செய்தவ எல்லாம் தலை நிமிர்ந்து நிற்கும்போது அறி

சிறுவன் ஒருவனைக் காப்பாற்றியதற்காக நான் ஏன் வெட்கப்பட வேண்டும்..?''

''திமிரா...?''

''ஆமாம்... எனக்கும்.. என் அண்ணனுக்கும் திமிர் அதிகம்...''

கபிலனை அவள் இழுத்ததும் சொக்கநாதனின் வேகம் குறைந்தது.

''இந்த இருட்டு வேளையில் எங்கே போய் ஊர் சுற்றி விட்டு வருகிறாய்?'' கேள்வியின் திசையை மாற்றினார் சொக்கநாதன்.

''போகக்கூடாத இடத்திற்கு போகவில்லை... ஊரையும் சுற்றவில்லை. அந்த அநாதைப் பையனை என் அண்ணனிடம் ஒப்படைத்து விட்டு வரப் போயிருந்தேன்... இந்நேரம் வரை அங்கேதான் இருந்தேன்...''

சொக்கநாதன் சுத்தமாய் அடங்கிப் போனார். ஆனால் கங்காவிற்கு இந்தச் செய்தி உவப்பானதாக இருக்கவில்லை. அண்ணனும் தங்கையும் சேர்ந்து விடுவார்களோ என்ற கவலையில் ஆழ்ந்தாள் அவள்.

மறுநாள் கபிலனின் மெக்கானிக் ஷெட்டில் கருணாகரனின் கார் நுழைந்தது. கார் கதவைத் திறந்து கொண்டு கருணாகரனும் வானதியும் இறங்கினார்கள்.

கபிலனுக்கு தகவல் போக அவசரமாய் வந்து அவர்களை வரவேற்றான் அவன்.

இதற்கு முன்னால் கபிலனை ஓரிரு முறை பார்த்திருக்கிறார் கருணாகரன். ஆனால் சொக்கநாதன் தன் மூத்த மகனைப் பற்றி நல்ல விதமாய் சொல்லவில்லை.

''சின்ன வயதிலேயே.. சொன்ன பேச்சு கேட்க மாட்டான் சார்... வீட்டுக்கு அடங்க மாட்டான்... சகவாச



தோசம் வேறு சரியில்லை. கண்டித்தேன்... வீட்டை விட்டு ஓடி விட்டான்... எங்கேயோ அலைந்து திரிந்து எப்படியோ.. குறுக்கு வழியில் பணம் காசு சம்பாதித்துக் கொண்டு.. என் முன்னால் வந்து நின்றான்... வீட்டில் சேர்க்க மாட்டேன் என்று சொல்லி விட்டேன். எனக்குத் தெரியாமல் ஒளிந்து மறைந்து என் மகளிடம் மட்டும் பேசுவான்... தொலையுது என்று அதை கண்டும் காணாமல் விட்டு விட்டேன்...''

கங்கா கூறியதாக யசோதா கபிலனைப் பற்றிக் கூறியதும் சொக்கநாதனின் வார்த்தைகளை ஒத்தே இருந்தன.

''அந்தப் பையன் ஒரு மாதிரியாம்... வீட்டுக்கு அடங்காதவனாம்... அவனைப் போலவே இருக்கிறவர்களுடன் சேர்ந்து கொண்டு தறுதலையாய் அலைகிறானாம்... அவனை நம்பி கயல்விழியை எப்படி அனுப்புவது என்று கங்கா புலம்புது...''

ஆனால் வானதி விவரித்த கபிலனின் வடிவமோ வேறு மாதிரி இருந்தது.

''யோசியுங்கள் அப்பா... கயல்விழிக்கு ஆறு வயது... அவளுடைய அண்ணனுக்கோ பதினான்கு வயது... அவர்களுடைய அம்மா ஹார்ட் அட்டாக் வந்து திடீரென்று இறந்து விட்டார்கள்... மறு மாதமே கங்கா ஆன்ட்டியை கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து நிற்கிறாராம் சொக்கநாதன் அங்கிள்... ஏற்கனவே அவர்களுடைய அம்மா உயிருடன் இருந்தபோதே அவர்கள் இருவருக்கும் பழக்கமாம்... இதைத் தெரிந்த அதிர்ச்சியினால்தான் தன்னுடைய அம்மாவிற்கு ஹார்ட் அட்டாக் வந்தது என்ற உண்மையை அறிந்த கபிலன் அவருடைய அப்பாவுடன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை

விட்டு வெளியேறி விட்டார்... ஏதோ கிடைத்த வேலை களைச் செய்து கொண்டு மேலே படித்திருக்கிறார். அப் போது கற்றுக் கொண்டதுதான் மெக்கானிக் தொழில். அவருடைய சம்பளத்தை சேர்த்து வைத்து அந்த மெக் கானிக் ஷெட்டையே விலைக்கு வாங்கியிருக்கிறார். இரவு பகல் பாராமல் உழைத்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார். இதற்கு இடையில் மெக்கானிகல் இன்ஜினியரிங் படிப்பையும் முடித்திருக்கிறார். இப்போது வாழ்க்கையில் ஓர் உயர்ந்த நிலையில் இருக்கிறார் அப்பா. அவரை அவரே உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அவரிடம்தான் நானும் கயல்விழியும் கலையரசை ஒப்படைத்து விட்டு வந்தோம்...''

தன் முன் இரு கரம் கூப்பி நின்ற இளைஞனை தலையிலிருந்து கால் வரை பார்த்தார் கருணாகரன்... அவனிடம் கடுமை தென்பட்டது... கயமை தென்பட வில்லை. அவனது ஒவ்வொரு அசைவிலும் முரட்டுத் தனம் வெளிப்பட்டது... அயோக்கியத்தனம் வெளிப்பட வில்லை.

தன் முன் நிற்பவன் பண்பட்ட ஒரு நல்ல மனிதன். உழைத்து முன்னேறியவன். தன்னைப் போலுள்ள பலருக்கும் வேலை கொடுத்து வாழ வைப்பவன்... வானதி மனிதர்களை மதிக்கத் தெரிந்தவள். அவள் மதிக்கும் கபிலன் எப்படிப்பட்டவன் என்பதை கண் எதிரே அவர் கண்டார்.



## 10

''வணக்கம் சார்.. வாங்க...''

''வணக்கம் கபிலன்.. என் பெண் அழைத்துக் கொண்டு வந்த சிறுவ



னுக்கு நீங்கள் அடைக்கலம் கொடுத்தீர்களாம். அவனைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்...''

''தாராளமாய் பாருங்கள். சபா.. கலையரசை கூப்பிடு...'' கபிலன் சொன்னதும் கலையரசு வந்தான்.

புதிய ஆடையில் இருந்தான். வானதியைக் கண்டதும் முகம் மலர்ந்தான்.

''அக்கா...'' என்றபடி அவளருகே வந்தான்.

''எப்படிடா இருக்க?'' அவனது முகத்தை ஆராய்ந்து கொண்டே வானதி வினவினாள்.

''காயமெல்லாம் உடனே ஆறிவிடுமா? இரண்டு மூன்று நாளாகும். வீக்கம் வற்றி விட்டது...'' கலையரசு விற்கு பதில் கபிலன் பதில் கூறினான்.

வானதி வருத்தத்துடன் கருணாகரனைப் பார்த்தாள்.

'இவளுக்கு பூப்போன்ற மனது...' கபிலன் நினைத்தான்.

''காயம் வலிக்கலை அக்கா...''

''மாத்திரை சாப்பிட்டாயாடா...''

''ஓ... சாப்பிட்டேனே...''

''காலையில் என்ன சாப்பிட்டாய்...?''

''இட்லி.. தோசை.. அப்புறம் எனக்காக செய்த ரவா கேசரி.''

''உனக்காகச் செய்தார்களா...?'' வானதி கபிலனைப் பார்த்துக் கொண்டாள்.

''ஆமாங்க... கலையரசு வந்ததைக் கொண்டா கிறோம்...'' கபிலன் சிரித்துக் கொண்டே கூறினான்.

''அண்ணா.. எனக்கு புதுச்சட்டை. டிரவுசர் வாங் கொடுத்திருக்கிறாரு அக்கா...''

வானதி தன் தந்தையைப் பார்த்தாள். அவர் கபிலனிடம்

''கலையரசன் பற்றி வானதி கவலைப்படுகிறாள். அவனை ஏதாவது ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு படிக்க வைக்க முடிவு பண்ணியிருக்கிறேன்'' என்றார்.

''நல்ல காரியம்தான். ஆனால் அதை நான் செய்ய மாட்டேனா... நானும் அவனைப்போல் அநாதையாய் தெருவில் நின்றவன்தான்... இன்று நான் இந்த உயரத்தில் இருப்பதற்குக் காரணம் என் உழைப்பு. அவனும் உழைக்கக் கற்றுக் கொண்டே படிக்கட்டுமே...''

''ஆனால் படிக்கிற பையனை வேலை வாங்குவதா என்று...''

''சார்.. தொழிலும் ஒரு வகையில் படிப்புத்தான் சார். இத்தனை சொல்லியும் உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இல்லையென்றால் தாராளமாய் அவனை அழைத்துக் கொண்டு போகலாம்.''

வானதிக்கு அவனுடைய கோபம் கண்டு சங்கடமாய் இருந்தாலும் கலையரசின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டவளாய்,

''கலையரசு போகலாமாடா...'' என்று வினவினாள்.

''இல்லைக்கா... நான் வரவில்லை...''

''ஏண்டா... நாங்க உன்னைப் படிக்க வைக்கிறோம்டா...''

''அக்கா... இங்கே எனக்குன்னு நிறையப்பேர் இருக்கிறாங்க.. சபா அண்ணே.. மாரி அண்ணே.. ராமு அண்ணே.. அப்புறம் சமையல் பண்ணும் லட்சுமி பாட்டின்னு என் மேல் பிரியமா இருக்கிறாங்க... அக்கா.. நான் இவங்களை விட்டுட்டு வரமாட்டேன்.''

அவன் கபிலனின் பின்னால் ஒளிந்து கொண்டான். கபிலன் கடினமான குரலில் கூறினான்.



''அவன் சொல்லிய அத்தனை ஆட்களும் ஒரே ராத்திரியில் அவனுக்குப் பழக்கமானவர்கள். நீங்கள் அவனுக்கு படிப்பைக் கொடுக்கலாம். அவனுக்கென்று சொந்தத்தைக் கொடுக்க முடியாது. அன்பைத் தேடி அலைகிறவர்களுக்குத்தான் அந்த அன்பின் அருமை தெரியும்... உங்களுக்கு அது பிறந்ததிலிருந்து கிடைக்கிறதே... மகள் சொன்னதற்காக ஒரு அநாதை சிறுவனின் எதிர்காலத்தையே பொறுப்பில் எடுத்துக் கொள்ள நினைக்கும் அப்பா.. அன்பான அம்மா.. என்று கொடுத்து வைத்த வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு அன்பைத் தேடி அலைய வேண்டிய அவலம் இல்லை... இங்கே வேலை செய்கிறவர்கள் அப்படி இல்லை. இங்கே இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் அன்பை வழங்கிக் கொண்டு சொந்தத்துடன் வாழ்கிறார்கள். இவன் அதில் இணைய விரும்புகிறான்... நீங்கள் ஏன் அதைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்?''

வானதி கலையரசையே ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தாள். பின் ஒரு முடிவுக்கு வந்தவளாக...

''சரி... நீ இங்கயே இருடா...'' என்று கூறிவிட்டு கருணாகரனின் கரம் பிடித்துக் கொண்டாள்.

''போகலாம் அப்பா.. அவன் மனதுக்குப் பிடித்த இடத்திலேயே இருக்கட்டும்...''

''போவதற்கு முன் ஒரு கப் காபி சாப்பிட்டு விட்டுப் போனால் நான் ரொம்ப சந்தோசப்படுவேன்...'' என்று கேட்டுக் கொண்டான் கபிலன்.

''அக்கா... நான் பள்ளிக்கூடம் போயிட்டு வரவா...''

''இருடா.. நாங்கள் போகும் போது காரில் கொண்டு போய் விடுகிறோம்...''

''வேணாம்க்கா... அண்ணன் எனக்குப் புது சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்.''

அவன் புது சைக்கிளில் ஏறி உற்சாகமாக ஓட்டிக் கொண்டு போவதைப் பார்த்துக் கொண்டிருந்தவள் கருணாகரனைப் பார்த்து..

''நேற்று நடந்ததில் இருந்து முழுதாய் வெளியே வந்து விட்டான் அப்பா.. எனக்கு மனதுக்கு ரொம்பவும் ஆறுதலாக இருக்கிறது...'' என்று கூறினாள்.

''அதற்கு நாம் கபிலனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் வானதி... ஆமாம்.. மிஸ்டர் கபிலன்.. உங்கள் தொழிற்சாலையை விட இந்த மெக்கானிக் ஷெட்டை நீங்கள் மிகவும் நேசிக்கிறீர்கள் போல...'' என்று கபில னிடம் கேட்டார் கருணாகரன்.

''ஆமாம் சார்.. இதுதான் என் வாழ்க்கைக்கு வழி காட் டிய இடம். தொழிற்சாலையில் வேலை செய்ய தொழில் படிப்பு அவசியம் வேண்டும். இங்கே வேலை செய்ய.. வேலை தெரிந்திருந்தால் போதும்... அங்கே நான் முத லாளி... இங்கே இவர்களின் அண்ணன். கலையரசைப் போல இருப்பவர்களுக்கு இங்கே நான் அடைக்கலம் கொடுக்க முடியும்.. அங்கே முடியாது.. மொத்தத்தில் நான்.. நானாக இருப்பது இங்கேதான்..'' என்றான் கபிலன்.

கபிலன் பேசப் பேச கருணாகரனின் மனதில் அவனைப் பற்றிய மதிப்பீடு உயர்ந்து கொண்டே போனது.

விடைபெற்றுக் கொண்டபோது கபிலன் வானதியிடம் பேசுவதை தவிர்த்தான். கருணாகரனிடமே பேசிக் கொண் டிருந்தான். அதை உணர்ந்த வானதியின் மனம் கஷ்டப் பட்டது. கலையரசை அழைத்துக் கொண்டு போக முயன்ற தால் அவன் கோபமாய் இருப்பதை புரிந்து கொண்டாள்



வானதி. அன்று முழுவதும் அவளுக்கு வேலையிலேயே கவனம் செல்லவில்லை.

மாலையில் மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருந்த போது கயல்விழியிடம் கபிலனின் கோபத்தைப் பற்றிக் கூறினாள் வானதி.

''தப்பு செய்து விட்டிங்க அக்கா... உங்களுக்கு அண் ணனின் குணம் தெரியாது... அவனை நம்பாவிட்டால் அவனுக்கு அதிக கோபம் வரும்.. சந்தேகப்பட்டவர் களோடு முகம் கொடுத்தே பேச மாட்டான்...''

வானதிக்கு திக்கென்றது. இனி கபிலன் அவளோடு பேசவே மாட்டானா... அவளால் அதைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை... ஏன் என்று புரியாமல் தவித்தவள் மறு நாள் காலையில் அலுவலகம் போகும் வழியில் கபில னின் மெக்கானிக் ஷெட்டிற்கு சென்றாள். கலையரசு ஆர்வமாய் ஓடி வந்தான். வாங்கிக் கொண்டு போயிருந்த பிஸ்கெட் பொட்டலத்தை அவனிடம் நீட்டிவிட்டு பேசிக் கொண்டிருந்தாள்.

''என்னடா கலையரசு... உன் அக்கா.. நான் எப்படி உன்னை கவனித்துக் கொள்கிறேன் என்று செக் பண்ண வந்திருக்கிறார்களா?''

கபிலனின் குரல் கேட்டதும் ஆனந்தமாய் நிமிர்ந்தாள். அவனோ முகத்தில் முள்ளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

'ஏன் இப்படி இருக்கிறான்..?'

''செக் பண்ணத்தான் வர வேண்டுமா? பார்த்து விட்டுப் போக வரக்கூடாதா? அதற்கு எனக்கு பர்மிஷன் கிடை யாதா?''

''நான் யார் உங்களுக்கு பெர்மிஷன் கொடுக்க... அவன் உங்கள் தம்பி.. நீங்கள் எப்போது வேண் மானாலும் வந்து பார்த்து விட்டுப் போகலாம்...''

'அதைக் கொஞ்சம் சிரித்துக் கொண்டே சொல்லித் தொலையேன்..'

"தேங்க்ஸ் பார் யுவர் கைன்ட்நெஸ்.."

"நான் நானாக இருக்கிறேன்... உங்களுடைய ...ரியை எதிர்பார்த்து எதையும் செய்யவில்லை..."

'என்ன சொன்னாலும் நீ மலை இறங்கவே ...டாயா..?' அன்று மாலையில் கயல்விழியிடம் இதைக் கூறி புலம்பினாள்.

"அவன் பிடித்தால் ஒரே பிடிதான்.. மலை இறங்க மாட்டான் அக்கா. நீங்களும் அப்படி செய்திருக்க ...தான்.. நாம் முதல் நாளிரவு என்ன மாதிரியான ...யில் அண்ணனைத் தேடிப் போனோம் என்பதை மறந்து விட்டீர்களா? அண்ணன் மட்டும் கலையரசின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தால் நாம் என்ன பாடுபட்டிருப்போம்.. அவரிடம் முதல் நாளிரவு பொறுப்பை ஒப்படைத்து விட்டு.. மறுநாள் காலையில்.. நீ ஒன்றும் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டாம்... கலையரசை திருப்பி அனுப்பு என்று சொன்னால் அவன் கோபப்பட மாட்டானா..." கயல்விழி வானதியை கடிந்து கொண்டாள்.

"நடந்தது.. என்னவோ நடந்து விட்டது... இனி அதை சரி செய்ய வழி சொல்லு கயல்..."

"இது சரி பண்ண முடியாத கேஸ் அக்கா... ஊஸில் விட்டுவிடுங்கள்" கயல்விழி எளிதாகக் கூறினாள்.

'விட்டு விடுவதா.. கபிலனையா..?' வானதியின் மனம் முரண்டியது. அவளால் அது முடியாது போல் தோன்றியது... அதை கயல்விழியிடம் கூறினாள்.

"ஏன் அக்கா..." கயல்விழி வியப்புடன் கேட்டாள்.



"ச்ச்ச்... எனக்கே தெரியவில்லை கயல்.." வானதி முகம் வாடிப் போய் கூறினாள்.

அந்த வார இறுதியில் கபிலன் மொட்டை மாடியில் கயல்விழியுடன் பேசிக் கொண்டிருந்த போது வானதி கூறியதை அப்படியே அவனிடம் கூறினாள் கயல்விழி. கபிலனின் முகத்தில் ஓர் கணம் ஏதோ ஒன்று தோன்றி மறைந்தது... மறுகணம் அசட்டையான குரலில்,

"என் கோபத்தைக் கண்டு உன் அக்கா ஏன் வருந்த வேண்டும்" என்று கேட்டான்.

"அது அவங்களுக்கே தெரியவில்லையாமே..."

"தெரியாவிட்டால் ஏன் மண்டையைப் போட்டுக் குழப்பிக்க வேண்டும்? விட்டு விட வேண்டியது தானே..."

"விடவும் முடியவில்லையாமே..."

"அப்படியென்று யார் உனக்குச் சொன்னது?"

"அக்காதான்..."

"ம்ம்... அப்படியா..? அப்படியென்றால் உன் அக்காவிடம் போய் சொல்லு... மனமிருந்தால் மார்க்கம் இருக்கும் என்று..."

கயல்விழி சொன்னதைக் கேட்ட வானதி இன்னும் குழம்பினாள்.

'அவன் சொல்வதற்கு என்ன அர்த்தம்?'

புரியாமலே வாரம் இருமுறை கலையரசைக் காண சென்றாள். கபிலனைத்தான் அங்கு அவளால் காண முடியவில்லை.

"எப்படி இருக்கிறாய் கலையரசு...?"

"நன்றாக இருக்கிறேன் அக்கா..."

"எங்கேடா உன் அண்ணனைக் காணோம்.. கண்ணில் சிக்கவே மாட்டேன் என்கிறாரே..."

கேள்வி கேட்ட வானதி அதை மறந்துவிட்டாள்.. ஆனால் கயல்விழி திங்கள் கிழமை மாலை மொட்டை மாடியில் கூறினாள்.

"அக்கா.. அண்ணன் உங்களிடம் ஒன்றைச் சொல்லச் சொன்னார்..."

"என்ன..." பரபரத்த மனத்தை அடக்கிக் கொண்டு வானதி வினவினாள்.

"கண் விரிக்கும் வலையில் சிக்க நானென்ன மானா என்று சொல்லச் சொன்னார்... என்னக்கா அது.. விடு கதையா...?" ஆவலாய் கேட்டாள் கயல்விழி.

"ஒரு வகையில் இது விடுகதைதான் கயல்... இது தொடர்கதையாகுமா இல்லை சிறுகதையாகுமா? என்பதுதான் பிடிபட மாட்டேன் என்கிறது..." யோசனையுடன் கூறினாள் வானதி.

'ஸோ... அவள் கலையரசைப் பார்க்கப் போகும் போதெல்லாம் அவன் அங்கேதான் இருந்திருக்கிறான். அவளது கண் வீச்சில் அகப்படாமல் தப்பியிருக்கிறான்...' கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

கயல்விழி தன் அண்ணனிடம் வானதி கூறியதைச் சொன்னாள்.

"அவங்க சொன்னதற்கு என்ன அண்ணா அர்த்தம்?"

"ஆயிரம் அர்த்தங்கள் உண்டும்மா.. அதில் ஓர் அர்த்தம் கூட உன்னிடம் சொன்னால் உன்னால் அதை புரிந்து கொள்ள முடியாது..."

"இது என்ன அண்ணா.. நீ அவங்களுக்கு மேல் புதிர் பேசுகிறாய்..."



"உன் அண்ணனே.. ஒரு புரியாத புதிர்.. அவர் புதிர் போடுவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது.."

கபிலன் கூறியதை வழக்கம் போல்.. வானதியிடம் கூறியபோது அவள் இதைக் கூறினாள். கயல்விழி சண்டைக்கு வந்தாள்.

"அப்படியென்னக்கா.. என் அண்ணனிடம் புதிரை கண்டு விட்டீர்கள்."

"ஒன்று ஒட்டியிருக்க வேண்டும்.. இல்லாவிட்டால் வெட்டியிருக்க வேண்டும்.. இரண்டுமில்லாமல் இருப்பதை எப்படிச் சொல்வது..."

புதிரை விடுவிக்காமல் ஓய்வதாக இல்லை கயல்விழி... வானதி சொன்னதை கபிலனின் காதுகளில் ஓதினாள். அதற்கு அவன்..

"தாமரையிலைத் தண்ணீராய் இருப்பது..." என்று தங்கை மூலம் வானதிக்கு பதில் சொல்லிவிட்டான்.

"பட்டும் படாமல் இருக்கக் கூடத் தெரியுமா உன் அண்ணனுக்கு?" இவள் பதிலுக்கு கேட்டுவிட்டாள்.

"நம்பியும் நம்பாமல் இருப்பவர்கள் இதைக் கேப்பது தான் ஆச்சர்யமாக இருக்கிறது.." என்று அவன் சொல்லி விட்டான்.

"நம்பவில்லை என்று எப்படிச் சொல்லலாம்.." என் அவளின் கேள்விக்கு.

"நம்பினார்கள் என்று மட் எப்படிச் சொல்ல முடியும்..." பதில் வந்தது.



# 11

கேள்விக்கும் பதிலுக்கும் யில் தூது போய் அலுத்து

கயல்விழி. இந்த நிலையில் எதிர்பாராத விதமாக கயல்விழியும் வானதியும் பேசிக் கொண்டிருந்தபோது கபிலன் கயல்விழியைக் காண வந்தான். அவன் வருவது தெரியாமல் ஏதோ ஒரு பாடலை ஹம் செய்தபடியே கயல் விழியிடம் ஊடே ஊடே பேசிக் கொண்டு இருந்தாள் வானதி. தலைக்கு குளித்துவிட்டு முடியை விரித்து போட்டிருந்தாள். நீண்ட மூடி தோகை போல் தொங்கிக் கொண்டிருந்தது. சாதாரண பச்சை நிற காட்டன் நைட்டி யில் அவளது இயல்பான இயற்கை அழகு அவனை வசீகரித்தது.

''ஹை... அண்ணா...'' கயல்விழி துள்ளினாள்.

வானதி அவசரமாய் அங்கிருந்து நகரப் போனாள்.

''என்ன கயல்.. உன் அக்கா என்னைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறார்களே.. என்னிடம் பயமா?'' அவனது விழிகள் அவளைத் துளைத்தன.

'வம்புக்கு இழுக்கிறாயா?' வானதி பல் கடித்தாள்.

''எனக்கென்ன பயம் கயல்.. உன் அண்ணனுக்குத் தான் என்னைக் கண்டால் பயம்...'' அவளது விழிகள் அவன் விழிகளைச் சந்தித்தன.

''பயமா.. எனக்கா.. ஹா.. எதற்கு பயப்பட வேண்டும்?''

''எங்கே தாமரையிலைத் தண்ணீர் கதை மாறி நகமும் சதையும் கதை வந்து விடுமோ என்ற பயம் தான்..''

''எனக்கு என்னவோ... உன் அக்கா என் முன் பாட வேண்டி வந்து விடுமோ என்ற பயத்துடன் ஓடுவது போல் தோன்றுகிறது...''

''நான் ஒன்றும் பாடகியில்லை... நான் யார் முன் னாலும் பாட வேண்டிய அவசியமும் இல்லை...''



''நான் கேட்டுக் கொண்டால் கூட உன் அக்கா பாட மாட்டார்களா?''

கபிலனின் விழிகள் அவளை அள்ளிப் பருகுவது போல் பார்த்தன... எல்லையற்ற வனப்புடன் அன்று தான் மலர்ந்த பூப்போல் அவனை வசீகரித்தாள் வானதி.

'பாட மாட்டாயா..' அவனது விழிகள் கேட்டன.

'என்ன பாடுவது...' அவளது விழிகள் பதிலுக்கு கேட்டன.

'எதையாவது பாடு...' அவனது விழிகள் ஆணை பிறப்பித்தன.

வானதி கயல்விழியைப் பார்த்துப் பாடினாள்.

வானதி கயல்விழியைப் பார்த்துப் பாடினாள்.

''கண்ணன் மனநிலையை தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்...
எண்ணம் உரைத்து விடில் தங்கமே தங்கம்
பின்னர் ஏதேனிலும் செய்குவோமடி தங்கமே தங்கம்...''

கயல்விழி புன்னகையுடன் கபிலனைப் பார்த்தாள். அவன் அவளது தலையைப் பிடித்து விளையாட்டாய் ஆட்டினான்.

''சொன்ன மொழி தவறு மன்னவனுக்கே
எங்கும் தோழமை இல்லையடி தங்கமே தங்கம்
என்ன தவறுகளிங்கு கண்டிருக்கிறான்
அவை யாவும் தெளிவு பெறக் கேட்டுவிடடி...''

பாரதியாரின் பாடலை மனமுறுகப் பாடிய வானதியின் விழிகள் 'நான் செய்த தவறை மன்னித்து விடு...' என்று கபிலனிடம் இறைஞ்சின. அவள் பாடுவதின் அர்த்தம் புரிந்து கொண்டவனின் விழிகள் மின்னின... அவளோ அவனது மனக்கதவை திறந்தாள்.

"நேரம் முழுவதும் அப்பாவித்தன்னையே – நெஞ்சம்
நினைந்து உருகுதடி தங்கமே தங்கம்...
தீர ஒரு சொல் இன்று கேட்டு வந்திட்டால்
அந்த தெய்வம் இருக்குதடி தங்கமே தங்கம்..."

வானதி பாடி முடித்து விட்டு மேகங்கள் இல்லாமல் நிர்மலமாய் காட்சி அளித்த வானத்தைப் பார்த்தாள். மாலை நேரத்தின் இதமான காற்று அவர்களது மேனியைத் தொட்டு விளையாடியது. மூவரையும் இணைத்த பந்தத்தில் அவர்கள் மனம் திளைத்தது.

'எவ்வளவு அழகாக தன் மனதைக் கூறிவிட்டாள்...' கபிலனின் உள்ளம் மயக்கத்தில் இருந்தது. இதை விடவும் அழகாக காதல் சொல்ல முடியுமோ.. அவனது கடுமை நிறைந்த விழிகளில் காதல் வந்தது. அந்த முரடன் பேச வார்த்தையின்றி ஊமையாகிவிட்டான். பேச வேண்டிய தேவைதான் என்ன? பாறையைக் கண்டு இங்கு ஒரு பூ மயங்கும்போது பாறை உருகுமா? இல்லை இறுகுமா...? அவன் உருகிப் போனான். பேச்சுக்களற்ற ஓர் மௌனம் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்தது. மௌனத்தின் போர்வையில் ஒருவரை ஒருவர் புரிந்த கொண்ட இருவரும்... அந்த இருவரைப் புரிந்து கொண்ட மற்றொருவரும் மனதிற்குள் புதிய சொந்தம் கொண்டனர்.

'ஓர் நாளின் இருபத்தி நான்கு மணிநேரமும் என்னையே நினைத்தாளா? இவள் மனதில் இத்தனை தவிப்பா? இந்தப் பூ என்னிடம் மயங்குமளவு என்னிடம் வசீகரம் இருக்கிறதா? எதைக் கண்டு என்னிடம் இவள் மயங்கினாள்...?'

கபிலனின் விழிகள் வானதியின் முகத்தில் தனது கேள்விகளுக்கான பதிலைத் தேடின... அவள் தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.



'பேசு.. எதையாவது பேசு...' கபிலன் மௌனத்தைக் கலைக்க விரும்பினான். அவன் மனதில் சில கேள்விகள் தோன்றின. அதற்கு விடை கிடைக்காமல் அவனால் விடை பெற இயலாது.

"கயல்.. உன் அக்..." கபிலன் பாதியில் பேச்சை நிறுத்தினான்.

'அக்கா என்று இனியும் எப்படி இவளைக் குறிப்பிடுவது..?'

கயல்விழி அதை உணர்ந்தவளாய் புன்னகை செய்தாள். புரிந்த கொண்ட வானதியும் முகம் சிவந்தாள்.

"சொல் அண்ணா.. ஏன் பாதியிலே நிறுத்திவிட்டாய். ஆயிரம் அர்த்தங்களில் ஒன்றுக்குக் கூட உனக்கு அர்த்தம் விளங்காது என்றாயே... இன்றைக்கு எனக்கு ஆயிரம் அர்த்தங்களும் விளங்கிவிட்டன.. நீ விடுகதை என் போட்டாய்... அதை தொடர்கதையா இல்லை சிறுகதையா என்று ஏன் இவங்க கேட்டாங்க... ஒட்டியிரு இல்லை வெட்டியிரு என்று ஏன் சொன்னார்கள் என்று எனக்கு இப்போது புரிகிறது. ஆனால் தாமரையிலைத் தண்ணீராய் இருப்பேன் என்று சொன்னவன்... இவங்க சொன்னது போல் நகமும் சதையுமாய் மாறிவிட்டதுதான் எனக்குப் புரியவில்லை..."

கயல்விழியைப் பார்த்து சிரித்துக் கொண்டே கபிலன் விளையாட்டாய் அடிக்கக் கை ஓங்கினான். அவள் தலை சாய்த்து சிரித்தாள். கபிலன் இப்போது தைரியம் பெற்றவனாய் வானதியைப் பார்த்துக் கொண்டே கயல்விழியிடம் கூறினான்.

"தப்பிக்க வழியில்லாமல் 'தீர ஒரு சொல் சொல் விட்டுப் போடா மடையா' என்று உன் அண் என்னைக் கார்னர் பண்ணி விட்டாளே..."

''அண்ணி...?'' கயல்விழி வானதியைப் பார்த்துச் சிரிக்க.. அவள் கீழ் உதட்டை பற்களால் அழுந்த கடித்துக் கொண்டாள்.

''அது எப்படி அண்ணா.. உன்னை அண்ணி பாவி என்று திட்டிய பின்னும் நீ இந்த வழி வழிகிறாய்...''

''திட்டியது யாரோ தெருவில் போகிறவள் இல்லையே.. உன் அண்ணி ஆயிற்றே.. அவள் திட்டினாலும் கேட்டுக் கொள்வேன்.. அடித்தாலும் வாங்கிக் கொள்வேன்...''

''தோடா... இப்படிக் காலில் விழுகிறாயே.. உன்னை என்னவோ பெரிய வீரன்.. நீ அவ்வளவு சீக்கிரமாய் மலை இறங்க மாட்டாய்... கோபம் வந்தால் அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாய்.. அது.. இது.. என்று பிலிம் காட்டிக் கொண்டிருந்தேன். நீயென்னவென்றால் ஒரே பாட்டில் இப்படிக் கவிழ்ந்து விட்டாயே.. ஷேம்.. ஷேம்..''

''இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது? என்னைப் பாட்டில் வீழ்த்தியது உன் அண்ணிதானே... அது வெறும் பாட்டு என்று சாதாரணமாய் நினைத்து விடாதே... பாரதியின் பாட்டு.. வெள்ளைக்காரனையே விரட்டியவர் பாடிய பாட்டு.. என்னை விரட்ட உன் அண்ணி அவரின் பாட்டை ஆயுதமாய் கையில் எடுத்திருக்கிறாள்.. நான் கவிழாமல் என்ன செய்வேன்?''

''பெரிய வீரத்திருமகன்தான் போ...''

''டில்லிக்கு ராஜான்னாலும்.. கயல்விழிக்கு அண்ணன்தானே...''

''எனக்கு நீ அண்ணன்.. அண்ணிக்கு..''

''எல்லாமும்...''



கபிலன் அளித்த பதில் கேட்டவள் சிலிர்த்து தலை நிமிர்ந்தாள். அவளது விழிகள்... 'உண்மையா..?' என்று வினவின... கபிலன் தன்னிரு இமைகளையும் மூடித் திறந்து.. 'உண்மைதான்..' என்று பதிலளித்தான்.

''கயல்... அவர் ஏதோ கேட்க வந்தாரே..''

''ஏன்... அண்ணன் உங்கள் எதிரில்தானே உட்கார்ந்து இருக்கிறான்... நீங்களே கேளுங்களேன்..''

''விடு கயல்... அவள் சங்கடப்படுவது போல் தெரிகிறது...''

''அக்கறையைப் பாருடா..''

''இருக்கக் கூடாதா?''

''கட்டாயம் இருக்க வேண்டும்.. நீ அண்ணியிடம் என்ன கேட்க நினைத்தாய்?''

''கயல்.. அவளுக்கு என் மேல் ஏனிந்த அன்பு தோன்றியது? அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? என் மேல் உள்ள பரிதாபமா? அவள் என் மேல் காட்டுவது கருணையா?''

கபிலனின் குரல் நடுங்கியது... அதை உணர்ந்த கயல்விழியின் கண்கள் கலங்கின.. அண்ணனின் சந்தேகம் உண்மையானதுதானே.. அவள் வானதியின் முகம் பார்த்தாள்.

''உன் அண்ணன் மேல் எனக்கு ஈர்ப்பு வந்ததற்கு அடிப்படைக் காரணம் பரிதாபமும்... கருணையும் தான்...''

கபிலனின் முகத்தில் அடிபட்ட வலி தெரிந்தது. வேதனையுடன் கண்ண மூடித் திறந்தவன்... 'கேட்டாயா..' என்ற கேள்வியுடன் தங்கையைப் பார்த்தான். அவனது முகத்தில் பழைய கடுமை மீண்டும் குடிகொண்டது.

"கயல்விழி.. உன் தோழியிடம் சொல்லி…
என்றுமே மற்றவர்களின் பரிதாபத்தையும்.. கருணை…
யும் விரும்பியதில்லை... எனக்கு அது தேவையுமில்லை…

"ஆனால் உன் அண்ணன் காட்டும் பரிதாப…
கருணையும் மற்றவர்களை வாழ வைக்கிறதே…
அவர்களுக்குத் தேவைப்படுகிறதே.. உன் அண்ணன்…
தூக்கிவிட்டதால் எத்தனை பேர் வாழ்கிறார்கள்..
யரசு யார்..? உன் அண்ணன் யார்? அவன் மேல்…
காட்டிய அன்பும்.. பரிவும்.. அவனை என்னிடமிருந்…
உன்னிடமிருந்தும் பிரித்து உன் அண்ணன் பக்…
இழுத்துவிட்டதே... ஒரே ஒரு இரவில் அவனது ம…
முழுவதும் மாறுகிறது என்றால் இவரிடம் அடைக்க…
பெறுபவர்கள் அனுபவிக்கும் கருணையின் தன்மை…
என்னவென்று சொல்ல? உழைப்பால் உயர்ந்தவர்கள்
நிறையப் பேர் இருக்கலாம். அவர்களில் உன் அண்
ணனைப் போன்ற கருணையும்.. பரிதாபமும் கொண்ட
வர்கள் எத்தனை பேர் இருப்பார்கள். விரல் விட்டு எண்ணி
விடலாம்... இவர் மற்றவர்களிடம் காட்டும் கருணையும்..
பரிதாபமும் என்னை இவர் பக்கம் ஆகர்ஷிக்கிறது
கயல்விழி..."

வானதி சொல்லச் சொல்ல கபிலனின் முகத்தில்
வெளிச்சம் பரவியது. திருப்தியான புன்முறுவல் பூத்தவன்…

"ஆகர்ஷிக்கிறேனா..? என் மீது இப்படியும் ஓர் பழியா?"

"பின்னே இல்லையா? அன்பைத் தேடியவர்கள்..
பிறரது அன்பைத்தான் நாடுவார்கள்... அவர்கள் பிறருக்கு
அன்பைக் கொடுப்பார்களா? அன்பை அள்ளித் தருவதில்
உன் அண்ணன் அட்சய பாத்திரம் கயல்... என்னை ஒன்று..
மற்றவர்களுக்கு அன்பை அள்ளி.. அள்ளிக் கொடுக்…



கிறார். எனக்கு ஒரு துளியளவு கொடுக்கக் கூட கணக்குப்
பார்க்கிறார் இதுதான் ஏன் என்று எனக்குப் புரியவில்லை..."

கபிலன் தலையை ஆட்டி அவள் பேசியதை கேட்டு
ரசித்து சிரித்தான். பின் தீவிரமான முகபாவத்துடன்
கூறினான்.

"மற்றவர்கள் எல்லோரும் என் வாழ்க்கையில் ஒரு
பகுதியில் வந்து வந்து போகிறவர்கள்.. உன் அண்ணி
என்னுடன் வாழ்க்கை முழுவதும் கடைசிவரை வந்து என்
வாழ்க்கையாகவே மாறிவிட நினைக்கிறாளே.. நான்
யோசிக்க வேண்டாமா?"

கயல்விழியின் முகம் மாறியது.. என்ன சொல்கிறான்
இவன்..?

"என்ன அண்ணா விளையாடுகிறாயா? இவ்வளவு
நேரமும்... 'உன் அண்ணி.. உன் அண்ணி' என்று பேசி
விட்டு இப்போது பிளேட்டைத் திருப்பிப் போடுகிறாயே..
இது உனக்கே நியாயமாய் இருக்கிறதா?"

"இல்லைதான்... ஆனால் நான் பல வழிகளிலும்
யோசிக்க வேண்டி இருக்கிறது கயல்... அவள் மனமறிந்த
பின்னால் உன் அக்கா என்று எப்படிச் சொல்வது?
அதனால் உன் அண்ணி என்று சொன்னேன்..."

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது..? உங்களைச்
சொல்ல வேண்டும் அண்ணி... போயும் போயும்.. இந்த
சிடுமூஞ்சியைப் போய் காதலித்தீர்களே..."

'காதல்' என்ற வார்த்தையை அந்த வினாடி வரை சொல்
லாத வானதி முகம் சிவந்தாள்... 'அன்பு' என்ற வார்
த்தையை மட்டும் உபயோகப்படுத்திய கபிலனும் த…
மனம் குளிர்ந்து போவதை உணர்ந்தான். இப்போ…
கயல்விழி இருக்கும் உணர்வே இல்லாமல் வானதி…

அவன் நேரடியாய்... ஆழமாய் பார்த்தான். இடை... இமைகள் விழிகள் மேல் கவிய பார்வையை தாழ்த்திக் கொண்டவள்.. ஓர் விநாடி விழி உயர்த்தி அவனைப் பார்த்துவிட்டு விழிகளை தாழ்த்திக் கொண்டாள்.

"அவள் ஓர் பார்வை பார்த்தாள் - நான் உயிர் காற்றை மீட்டேன்..."

என்றோ.. கல்லூரி காலத்தில் மேடையில் பேசிய கவிதை வரிகளின் நிஜத்தை இன்று உணர்ந்தான். வானதியின் பார்வையில் உயிர்த்தெழுந்தான்.

"கயல்விழி... உன் அண்ணியிடம் நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். என் கடுமையான முகத்தை அவள் எப்படிக் காதலித்தாள்..?"

"அதுவும் வெறும் முகமா..? தாடிக்குள் மறைந்திருக்கும் முகம்..." கயல்விழி சிரித்தாள். ஆனால் வானதி சிரிக்காமல் பதில் சொன்னாள்.

"அவருடைய கடுமையான முகம்தான் என்னைக் கவர்ந்தது கயல்.... அதில் பொய்யான சிரிப்பில்லை.. போலியான வேசமில்லை..." கபிலன் பேச்சிழந்தான். இந்த அன்பை என்னவென்று சொல்ல? இதற்கு அவன் எந்த அளவிற்கு தகுதியானவன்.

"வேண்டாம்.. வானதி.. என்னிடம் மயங்காதே..." என்றான் அவன் தீவிரமான குரலில்.

அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் வானதி.

"நான் யோசிக்க வேண்டும். அதுவரை அவசரப்படாதே... பொறுமையாய் இரு.. என்மேல் காதலை வளர்த்துக் கொள்ளாதே..."

"ஏன்..?"



"அதற்குப் பலகாரணங்கள் உண்டு. மெதுவாய் சொல்கிறேன்."

"இதைச் சொல்லவா... இத்தனை நேரமும் என்னுடன் பேசினீர்கள்..."

"இல்லை... நிச்சயமாய் இல்லை... மனதாரச் சொல்கிறேன் வானதி.. என் வாழ்வில் முழு மகிழ்வோடு நான் இருந்தது இன்று உன்னுடன் கழித்த இந்தச் சில நிமிடங்கள் தான்... அதில் உனக்கு எள்ளவும் சந்தேகம் வேண்டியதில்லை. நான் வருகிறேன்..."

அவன் விரைந்து சென்றுவிட்டான். வானதி உறைந்து அமர்ந்து விட்டாள். ஏன் இப்படிச் சொல்கிறான்..? அவளைப் பிடித்திருக்கிறது... ஆனால் அவளது காதலை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றால் இதை எப்படி எடுத்துக் கொள்வது?

வானதி உள்ளம் நடுங்க.. கயல்விழியின் கரம்பிடித்துக் கொண்டாள்.



## 12

வானதி கலையரசைப் பார்க்கப் போகும் போதெல்லாம் கபிலனைச் சந்தித்தாள்.. அவனும் அவளது கண்கள் வீசிய பார்வை வலையில் விரும்பிச் சிக்கிக் கொண்டான். அவனுடன் வார்த்தைகளால் காதல் பேசவில்லை... கண்களால் காதலை உணர்த்தினான். அவள் வரும் போதெல்லாம் அவனுடைய அலுவலக அறையில் அமர வைத்து... மெக்கானிக் ஷெட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு சமைத்துப் போடும் லட்சுமி பாட்டியிடம் சொல்லி டிப... செய்து சூடாய் பரிமாற வைத்து.. சாப்பிட...

வைத்துத்தான் அனுப்புவான்... ஓரிரு முறை வா
யுடன் வந்த கயல்விழி... கபிலனின் முன்னா
'அண்ணி' என்று அழைத்து வைக்க.. அதை ஆட்சே
காத கபிலனின் முகத்தில் பரவிய வெளிச்சம் உண
திய செய்தியை உணர்ந்த மெக்கானிக்குகள் அனை
வரும் 'அண்ணிடா' என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக்
கொண்டு அவர்களும் வானதியை 'அண்ணி' என்றே
அழைக்க ஆரம்பித்தனர்.

செய்தியை அறிந்த லட்சுமிபாட்டி ஏதோ... தன் மருமகளே வந்துவிட்டது போல் பூரித்துப் போனாள்.. கலையரசு கூட 'அக்கா' என்று அழைப்பதை மாற்றி 'அண்ணி..' என்று அழைக்க ஆரம்பித்திருந்தான்.

வானதி கபிலனிடம் எதையும் கேட்டுக் கொண்டதில்லை. இருவரும் பொதுவாகத்தான் பேசிக் கொண்டனர்.

"வா... வானதி... இப்போது தான் வந்தாயா?"

"ஆமாம்..."

"உன் அப்பா சௌக்கியமா?"

"சௌக்கியம்..."

"நீ..."

அவள் பதில் சொல்லமாட்டாள். அவனும் சற்று நேரம் மௌனமாக இருப்பான். அதன்பின் ஒரு பெருமூச்சோடு வேறு பேச்சிற்கு தாவி விடுவான். ஆனால் அவன் இல்லாத நேரங்களில் அவள் சென்றாலும் அடுத்த சில நிமிடங்களில் அவனது கார்.. மெக்கானிக்கல் செட்டில் நுழைந்து விடும். 'எப்படி..?' என்று அவள் புருவம் உயர்த்திய போது...

"போன் வந்தது.." அவன் ரத்தின சுருக்கமாய் பதில் சொன்னான்.



"நான் வந்தால் போன் பண்ணச் சொல்லி இருக்கிறீர்களா?" இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டான். அவள் மனதிற்குள் அவனைத் திட்டித் தீர்ப்பாள்.

'இம்சைடா... உன்னோடு.. உனக்குக் காதல் பிடிக்கும்... காதலிக்கப் படுவது பிடிக்கும்.. ஆனால் காதலிக்க மட்டும் பிடிக்காது... நீ என்னிடம் மயங்குவாய்.. ஆனால் நான் மட்டும் உன்னிடம் மயங்கக் கூடாது... எந்த ஊர் நியாயம்டா இது...'

கயல்விழியைக் காண கபிலன் வரும்போதெல்லாம் வானதியும் அங்கே இருக்குமாறு பார்த்துக் கொள்வான்.. அவன் வருவது அவளுக்கு தெரிவிக்கப்பட்டுவிடும்... கயல்விழி சமிக்ஞை செய்து விட்டுத்தான் மாடிக்குப் போவாள். உடனே வானதிக்கு மாடியில் வேலை வந்து விடும்.. எப்போதுமே உலர்ந்த துணிகளை எடுக்கத்தான் போவாள்... ஒருநாள் மழை வருவது போல் இருக்கவே யசோதா,

"வானதி.. மழை வருவது போல் இருக்கு.. உன் துணிகளை எடுத்துக் கொண்டுவாம்மா..." என்று உத்தரவிட்டு விட்டாள்.

அன்று எப்படியும் கபிலன் வருவான் என்பதை அறிந்திருந்த வானதி அரைமனதாய் துணிகளை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள். கபிலன் வந்தவுடன்.. கயல்விழி சமிக்ஞை செய்து விட்டுப் போக.. என்ன செய்வது என்று யோசித்த வானதி... சட்டென்று கையிலிருந்த சேலைகளை பக்கெட்டில் நனைத்து விட்டாள்.

"அம்மா... அம்மா.." என்று அழைத்தாள்.

"என்னடா.." என்றபடி பாத்ரூமிற்குள் வந்த யசோதா

"என்ன வானதி இது? துவைத்த [illegible] நனைத்தாய்?" என்று புரியாமல் கேட்டான்.

"துணிகளில் காக்கா எச்சம் போட்டு விட்டு [illegible]"

"அதற்காக... தண்ணீரில் நனைப்பாயா? நாளைக்கு வேலைக்காரி வரவும் துவைத்துக் கொள்ளலாமே..."

"அதுவரையில்... துணிகள் எச்சத்தோடு இருக்க [illegible] உவ்வே.."

"சரி.. சரி.. சீக்கிரமாய் அலசி விட்டு காயப் போட்டு எடுத்து வா..."

வானதி.. கீழே இந்த வேலையை பண்ணிக் கொண்டிருக்கும் போது மாடியில் கபிலன் இருப்புக் கொள்ளாமல் தவித்தபடி தங்கையுடன் பேசிக் கொண்டிருந்தாலும் அவனது கண்கள் வானதியைத் தேடின.. எப்போதும் உலர்ந்த துணிகளை எடுப்பது போல் வந்துவிடுவாளே.. இன்று உலர்ந்த துணிகளையும் காணோம். அவளையும் காணோம். வேண்டுமென்றே அவனை சந்திப்பதை தவிர்க்கிறாளா.. அவனது இதயம் உலர்ந்தது.

'என்ன இந்த அண்ணியை இன்னும் காணோம்...' கயல்விழியின் விழிகள் மாடிப்படிகளைத் துழாவின.

'இவன் வேறு இப்படி நெளிகிறானே... இதில் வேறு அவசரப்பட்டு என்னைக் காதலித்து விட்டு அவஸ்தைப் பட வேண்டாம் என்று அண்ணிக்கு அட்வைஸ் வேறு பண்ணுகிறான். இப்போது அவஸ்தைப்படுவது யார்... இவனா இல்லை அண்ணியா?'

"என்ன கயல்விழி.. மாடியில் யாரையுமே காணோமே.."



"இது என்ன அண்ணா... புதிதாய் கேள்வி கேட்கிறாய்... எப்போதும் நீயும்.. நானும் மட்டும்தானே பேசிக் கொண்டிருப்போம்..."

"இல்லை... துணிகளை இங்கே உலர வைத்திருப்பாளே.. இன்றைக்கு ஒரு துணியைக் கூடக் காணோமே..."

"அவரவர் துணிகளை.. அவரவர் எடுத்துக் கொண்டு போயிருப்பார்கள்..."

கபிலன் தூண்டித் துருவிக் கேள்விகள் கேட்க.. கயல்விழி நழுவுகிற மீனில் நழுவுகிற மீனாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். கபிலனுக்கு தங்கையின் சாமர்த்தியத்தைக் கண்டு கோபம் வந்தது.

'பிடிகொடுக்கிறாளா பார்..'

கயல்விழியோ கபிலனை மனதில் திட்டிக் கொண்டிருந்தாள்.

'என் வாயைத் திறந்து என் வானதி எங்கே... என்று கேட்க வேண்டியதுதானே... வாயில்லையா... காதல் சொல்லும்வரை சக்கரையாய் பேசி அவங்களை மயக்கிவிட்டு.. அவங்க மனதில் காதல் இருப்பது தெரிந்தவுடன்... என்னிடம் மயங்காதே என்று சொல்லி விட்டானே... இவன் ஏன் அவங்களைத் தேடுகிறான்.'

திடீரென்று கபிலனின் முகத்தில் ஆயிரம் கோடி சூரியனின் கதிர்கள் உதிப்பது போல் அற்புதமான வெளிச்சம் பரவியது... வானதிக்கு முதுகுகாட்டி அமர்ந்திருந்த கயல்விழி வானதி வருகிறாள் என்பதை யூகித்து விட்டாள்.

"என்ன அண்ணா... அண்ணி வந்திட்டாங்களா?" என்று கேட்டாள்.

"எப்படிக் கண்டுபிடித்தாய்?" அவன் ஆச்சர்யமா[illegible] வினவினான்.

"அதுதான் உன் முகத்தில் பல்ப் எரிகிறதே.. [illegible]
அவங்க கிட்ட இத்தனைக் காதலை வைத்துக் [illegible]
பொய்யாய் முகமூடி போட்டுக் கொண்டு [illegible]
அவங்க காதலை ஏற்றுக் கொள்ள என்ன [illegible]

"உஷ்.. அவள் அருகில் வந்துவிட்டாள்.. நாம [illegible]
பேசிக் கொள்ளலாம்."

வானதி.. அவன் வாயில் விரலை வைத்து கயல் விழியை எச்சரிப்பதை கவனித்தபடி துணிகளை எடுத்து உலர்த்தி கிளிப் மாட்டிக் கொண்டிருந்தாள். கயல்விழி எழுந்து வானதியின் அருகே வந்து உதவி செய்ய ஆரம்பித்தாள்.

"என்ன அண்ணி.. காலையில் துவைத்து காயப் போட்ட துணிகள் போலவே இருக்கின்றதே..." கயல் விழி கண்டுபிடித்து விட்டாள்.

"ஆமாம் கயல்... காக்கா எச்சம் போட்டுவிட்டது..."

"அது எப்படி சரியாய் உங்கள் சேலையைப் பார்த்து எச்சம் போட்டது."

"அதை அந்தக் காக்காவிடம் தான் கேட்க வேண்டும்.."

"ம்ம்... ஜாடிக்கேத்த மூடி..."

"யாரைச் சொல்கிறாய்?"

"உங்களைத்தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்."

"இது போல் தான் உன் அண்ணனிடமும் வாயடித்தாயா? அவர் உன்னைப் பார்த்து ஒரு விரலை வாயில் வைத்து 'உஷ்' என்றாரே.. அப்படி என்ன சொன்னாய்? அவர் எதற்கு அதட்டினார்?"

"அவ்னா.. நீங்கள் வருவதற்கு முன்.. நீங்கள் வரவில்லையா என்பதை ஜாடையாய் கேட்டு என்னைத்



துளைத்துக் கொண்டிருந்தான்... நீங்கள் வந்ததும் [illegible] ...என்று முப்பத்தி இரண்டு பற்களையும் காட்டிச் சிரித்துப் பேச ஆரம்பித்தான்.. அதுதான் ஏன் நடிக்கிறாய் என்று கேட்டேன். உங்களுக்கு, அது தெரியக் கூடாதாம்... 'தடா'ச் சட்டம் போட்டுக் கொண்டிருந்தான். நீங்கள் அதைக் கவனித்து விட்டீர்கள்...!"

"கயல்விழி... என்னுடன் பேசுவதை விட்டுவிட்டு அங்கேயென்ன கிசுகிசுவென்று பேசிக் கொண்டிருக்கிறாய்?" கபிலன் சத்தமாக அழைத்தான்.

"நாம் இப்போது அவனிடம் போக வேண்டுமாம்.." என்று சன்னமான குரலில் வானதியிடம் கூறிவிட்டு கபிலனிடம் சத்தமாக,

"கிசுகிசுதான் பேசிக் கொண்டிருக்கிறோம் அண்ணா... வெரி இன்ட்ரெஸ்ட்டிங் கிசுகிசு" என்று கூறியபடி அருகில் சென்று அமர்ந்து கொண்டாள் கயல்விழி.

"அப்படியென்ன கிசுகிசு..."

அருகில் வந்து நின்ற வானதியைப் பார்த்தவாறு கேட்டான் கபிலன்.

"நிற்கிறீர்களே.. உட்காருங்கள் அண்ணி. அதுவா அண்ணா.. வானத்தைக் கண்டு ஏங்கி நிற்கும் புலவர்..! உம்மணாம் மூஞ்சி ஒன்று காதல் வலையில் சிக்கி மானான கதை! மெக்கானிக் ஷெட் ஓனரின் மனதில் ஒளிந்திருக்கும் மர்மம்...!"

"போதும்... போதும்.. கேட்டது தப்புத்தான் நிறுத்தி விடு தாயே..." தலைக்கு மேல் கையைத் தூக்கிக் கும்பிட்டான் கபிலன்.

"கயல்... உன் அண்ணா இன்றைக்கு என்ன சீக்கிரம் வந்துவிட்டார்?"

''வேலையில் மனம் போகவில்லையாம்::''

''ஞாயிற்றுக் கிழமையும் என்ன வேலையாம்::'' தாம்?''

''அவனுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கு அண்ணி::: வேலை இல்லாவிட்டாலும்:: இருக்கிற... உருவாக்கிக் கொள்வான்..''

''அதிகமாய் உழைத்தால் உடம்பு என்ன ஆகும்... புதி... வேலையைக் குறைத்துக் கொள்ளச் சொல் கயல்விழி...''

கயல்விழியின் கண்கள் கலங்கிவிட்டன. அவள் மனதில் நினைத்ததை வானதி வாய் விட்டுக் கூறிவிட்டாளே:::

''ஏய்... கயல்.. ஏன் அழுகிறாய்...''

''நானே சொல்லணும்னு நினைத்தேன் அண்ணா... ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்.. எனக்கென்று உன்னைவிட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?''

அவளின் மனவேதனையைக் கண்ட வானதி அந்த வார்த்தைகளை கூறினாள்... அதைக் கேட்ட கயல்விழி யோசிக்க ஆரம்பித்தாள். அதனால்... விளைந்த விளைவுகளில் வானதி சந்திக்க நேர்ந்த இடைஞ்சல்களால் சுக்கு நூறாய் உடைந்தது அவளது இதயம்...



## 13

எப்போதுமே வானதி எது சொன்னாலும் கேள்வியே கேட்காமல் ஏற்றுக் கொள்வாள் கயல்விழி. வானதியின் ஆழ்ந்த அறிவில்.. நேர்மையில் அவள் கொண்டுள்ள மதிப்பே அதற்குக் காரணம். மற்றவரிடம் கூறாத சொந்த விசயங்களை வானதியிடம் அவள் கூற விழைந்ததற்கு அவளது



நேர்மையும்:: தவறைக் கண்டால் எதிர்த்து நிற்கும் துணிவுமே முக்கியக் காரணங்கள்.

''எதிர்வீட்டில் சண்டையாம்::'' கயல் சொன்னதை அன்று ஓர் நாள் கூறிக் கொண்டிருந்தாள்.

''என்னவாம்::: பணம் அதிகமிருக்குன்னு அலட்டிக் கொண்டு போவான் அந்தக் கருணாகரன்:: நம்மிடம் நின்று ஓர் வார்த்தை பேசினால் வாயிலிருக்கும் முத்து உதிர்ந்து விடும்போல் சின்னதாய் சிரிப்பான்.. லேசாய் தலை அசைப்பான்.. அவ்வளவுதான்.. அவன் வீட்டிலும் சண்டையா?''

''இப்படிப்பட்டவர்கள் வீட்டில்தான் ஆயிரம் பிரச்சனைகள் வரும்.. அவங்க வீட்டு மருமகள் கோகிலா... அந்தம்மா யசோதாவை இன்சல்ட் பண்ணிக் கொண்டே இருந்தது...''

''அதுதான் தினமும் அவங்க மகன் கோபிகிருஷ்ணன் கண்டிப்பானே...''

''அவன் கண்டிக்கிறானா? அதெல்லாம் சும்மா டிராமாங்க.. இந்தப் பெண் கோகிலாவே அதை என்னிடம் எத்தனையோ தடவை சொல்லிச் சிரித்திருக்கு.. அந்தம்மா... பாவம்.. மகன் கண்டித்தவுடன் மருமகள் திருந்தி விடுவாள்ன்னு நம்பிக்கிட்டு இருந்திருக்காங்க...''

''அடப்பாவமே.. அப்புறம்..?''

''இந்த விசயம் அவங்களோட பெண் வானதிக்கு தெரிந்துவிட்டது... அண்ணிகாரியுடன் நேரடியாய் மோதி விட்டது.. விஷயம் யசோதாம்மாவின் வீட்டுக்காரர் காது வரைக்கும் போய்விட்டது. அவர் மகனைக் கண்டித்து இஷ்டம் இருந்தால் சேர்ந்து இரு.. இல்லாவிட்டால்

தனிக்குடித்தனம் போன்று சொல்லிவிட்ட...
தாம்பூவின் கஷ்டமும் ஒரு முடிவுக்கு வந்து...

அதைக் கேட்டுக் கொண்டே உள்ளறையில் ... கொண்டிருந்த கயல்விழிக்கு வானதியை ... போனது.

'அண்ணனைப் போலவே இவங்களும் ... கண்டால் எதிர்த்து போராடுகிறவர்களாய் இருக்கிறா... களே..'

அதன் பின்னால் வானதியும் கயல்விழியும் சிநேகிதி களாய் ஆனதும்.. கலையரசிற்கு ஆதரவாய் வானதி மற்றவர்களின் முன்னிலையில் சொந்த அண்ணனையே எதிர்த்து நின்றதும் நடந்தபோது கயல்விழி வானதியின் ரசிகையாகவே மாறிப் போனாள்.

அதனால் தான் வானதி,

"கயல்.. நீ ஏன் உன் அண்ணனோடு போய் இருக்கக் கூடாது." என்று கேட்டதும் யோசிக்க ஆரம்பித்தாள்.

"ஆனால் அண்ணி... அம்மா..." என்று கயல்விழி தயங்கிய போது,

"அவள் நம் அம்மா இல்லை... நம் அம்மாவை சாகடித்தவள்..." என்று எரிந்து விழுந்தான் கபிலன்.

"கபிலன்... கொஞ்சம் பொறுமையாகப் பேசுங்கள்.." முதன்முதலாய் அவனைப் பெயர் சொல்லி அழைத்த வானதி கயல்விழியைப் பார்த்து,

"கயல்.. கங்கா ஆண்ட்டிக்கு ஒரு மகன் இருக்கிறான்... உன் அப்பா இருக்கிறார்.. உன் அண்ணனுக்கென்று இப்போது யார் இருக்கிறார்கள்? உன்னை விட்டால் அவருக்கு சொந்தம் ஏது?" என்று கேட்டாள்.



"நீங்கள் இல்லையா.. அண்ணி..." என்று கயல்விழி கேட்டதும் வானதியின் கண்ணில் கண்ணீர் தளும்பி விட்டது.

"இல்லை கயல்விழி... எனது சொந்தம் கற்பனை யானது.. உனது சொந்தம்தான் நிஜம்... கனவு... நன வாகும் என்று கனவு காண்பதை விட்டு விட்டு.. கண் முன் நிற்கும் நனவை எதிர்நோக்கக் கற்றுக் கொள்வோம். உன் அண்ணனின் மனதில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது..என் காதல் நிறைவேறுமா? என்ப தையும் அறியேன். அது நடக்கும்போது நடக்கட்டும். இப்போதைக்கு நீ உன் அண்ணனுடன் வெளியேறி விடு.."

"ஏன் அண்ணி.. இவ்வளவு தீவிரமாய் சொல்கிறீர்கள்.."

வானதி தயங்கினாள். பின் கபிலனைப் பார்த்து கை நீட்டினாள்.

"நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் உடனடியாய் கோபப்பட்டுக் குதித்து விடக்கூடாது. எனக்கு பிராமிஸ் பண்ணுங்கள்..."

"இதோ பார்.. நான் கோபப்படுவேன் என்று நீ நினைத் தால் அது நான் கோபப்படும்படியான மோசமான விசய மாகத்தான் இருக்கும்... கோபம் என்பது என் இயல்பான குணம்.. அதை அடக்க முடியாது.."

"நானும் கோபப்படுபவள்தான்.. இப்போது கோபித் துக் கொள்ள வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்.. கோபப்பட வேண்டிய நேரத்தில் கோபப்படுங்களேன் யார் வேண்டாம் என்றது?"

"ஓ.கே நான் கோபப்படவில்லை. ஆனால் பிரா மட்டும் கேட்காதே.. நான் உன் வார்த்தையை மாட்டேன்.. இப்போது மட்டுமில்லை.. எப்போது

"இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை.. இவன்
படித்தான் அண்ணி.. லவ் டயலாக் பேசி லவ்
வான்.. நெருங்கிப் பேசினால் யோசிக்கணும் என்
இவன் பேசுவதை எல்லாம் கணக்கில் வைத்துக் கொ
ளாமல் என்னிடம் என்ன விசயம் என்பதைச் சொல்
கள்.." எரிச்சலுடன் கூறினாள் கயல்விழி.

வானதியின் விழிகளும் கபிலனின் விழிகளும்
சந்தித்துக் கொண்டன. கபிலன் வானம் நோக்க... வானதி
பெருமூச்சுடன் கயல்விழியிடம் பேச ஆரம்பித்தாள்.

"எனக்கென்னவோ கங்கா ஆன்ட்டியிடம் நீ இருப்பது
சரியில்லையென்று தோன்றுகிறது கயல்... அவர்களிடம்
போலித்தனம் இருக்கிறது..."

"இதைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகை போட்
டாயா? அந்தம்மா சரியில்லை என்பதுதான் எனக்கு
எப்போதே தெரியுமே.. சரியான பெண்மணியாக அவள்
இருந்திருந்தால் என் அம்மா நெஞ்சைப் பிடித்துக்
கொண்டு உயிரை விட்டிருக்க மாட்டாங்களே..."

"சும்மாயிரு அண்ணா... ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்
அண்ணி..? நீங்கள் இப்படிச் சொல்வதாக இருந்தால்
அதற்கு பலமான காரணம் இருக்குமே.. காரணமில்
லாமல் யாரையும் குறை சொல்ல மாட்டீர்களே..."

"என்மேல் நீ வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நன்றி
ல்... என் அண்ணியின் குணம் பற்றி உனக்குத்
தெரியும்தானே..."

தெரியும்... தெரியும்.. இந்த குளிர்ந்த நேரத்தில் அவர்
ப் பற்றி எதற்குப் பேசுகிறீர்கள்?"

ன் அண்ணியும்... கங்கா ஆன்ட்டியும் சில நாள்
நெருங்கிப் பழகுகிறார்கள்.. சரியாகச் சொல்ல



தானால் நாம் கலையரசைக் காப்பாற்றி உன் அண்ண
னிடம் ஒப்படைத்தோமே அன்றிலிருந்து இவர்கள்
இருவருக்கும் இடையே ஓர் பிணைப்பு ஏற்பட்டிருக்
கிறது..."

கயல்விழியின் முகத்தில் சிந்தனை படிந்தது.. சற்று
முன் கூட கங்கா கோகிலாவை விமர்சனம் செய்தாளே...

"கயல்... உன் பிரண்ட் வானதி எவ்வளவு தங்கமான
பெண்.. அவளுடைய அண்ணியென்று இந்த ராட்ஸஸி
போய் வந்து சேர்ந்தாளே. கொஞ்சம் கூட பெருந்தன்
மையே இல்லாத குணமம்மா அவளுக்கு.."

கங்கா யாருடன் பழகினாலும் அதைப் பற்றி கயல்
விழிக்கு கவலையில்லை. ஆனால் அதை ஏன் தன்னிடம்
மறைக்க வேண்டும்?

"ஓ... இது எனக்குத் தெரியாதே அண்ணி..."

"எனக்கே... கொஞ்ச நாள்களுக்கு முன்னால்தான்
தெரியும். தலைவலியென்று பெர்மிஷன் போட்டுவிட்டு
வீட்டுக்கு வந்திருந்தேன்.. அம்மா.. கதவைத் திறந்து
விட்டு காபி போட்டுக் கொடுத்துவிட்டு மாடியில் உலர்ந்
திருந்த துணிகளை எடுத்து வருவதாய் சொல்லிவிட்டுப்
போய்விட்டாங்க.. கதவு திறந்திருந்தது. நான் பெட்ரூமில்
இருப்பது தெரியாமல் கங்கா ஆன்ட்டி வீட்டுக்குள் வந்து
'கோகிலா... கோகிலா..'ன்னு கூப்பிட்டாங்க... வெளியில்
வந்த என் அண்ணி.. கங்கா ஆன்ட்டியைப் பார்த்து
வாயில் விரலை வைத்து எச்சரித்தாங்க... அதற்கு கங்கா
ஆன்ட்டி... 'எல்லாம் உன் மாமியார் மாடிக்குப் போவதை
பார்த்து விட்டுத்தான் வருகிறேன். இது என்ன கோகிலா
உன் மாமியாருக்கு இந்தப் பயம் பயப்படறே.. மாமியாரை
அடக்கி கைக்குள்... வைத்திருக்கிறன்னு பார்த்தால்...

கடைசியில் இப்படி ஆகிவிட்டாயேன்னு' சொன்... அதற்கு என் அண்ணி... 'எல்லாம் இந்த வாய... கழுதையால் வந்ததுன்னு' சொன்னாங்க..''

''நீங்க கழுதையென்றால் உங்க அண்ணி யாரை...''

''அவர்கள் கோபத்தில் எதையோ சொல்லிவிட்டுப் போகிறார்கள். அது இப்போது முக்கியமான விசயமில்லை... முக்கியமான விசயமே வேறு.. கங்கா ஆன்ட்டி... 'ஆமாம்.. உன் நாத்தனார் பண்ணிவைத்த வேலையால் இந்தக் கயல்விழிக் கழுதையும் அந்தத் தடியனோடு ஒட்டி உறவாடுது.. நானே அவன் வாரத்தில் ஒரு நாள் அரை மணி நேரம் இவளை வந்து பார்ப்பதை கட் பண்ணி விட வேண்டும்ன்னு சமயம் பார்த்துக்கிட்டு இருக்கேன்.. உன் நாத்தனார் என்னவென்றால் அண்ணன் தங்கச்சி உறவுக்கு பாலம் போடுகிறா... இவள் மனதில் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கா? பெரிய மதர் தெரஸான்னு மனசுக்குள் நினைப்புன்னு' சொன்னாங்க...''

''அம்மாவா அப்படிச் சொன்னாங்க?''

''ம்ம்... கங்கா ஆன்ட்டிதான் சொன்னாங்க.. அது மட்டுமா சொன்னாங்க.. என் அண்ணி... 'அந்தக் கயல் விழி அவளுடைய அண்ணனோடு போனால் போய் விட்டுப் போகிறாள். இத்தனை நாள் அவளை வீட்டில் நீங்கள் வைத்திருப்பதே தப்பு.. அவளுக்கும் ஆக்கிக் கொட்டணும்னு உங்களுக்கு என்ன தலையெழுத் தான்னு' கேட்டாங்க...''

''அண்ணி... அம்மா இதற்கு என்ன பதில் சொன் னாங்க..?'' கயல்விழியின் குரல் நடுங்கியது.

வானதி உடனே பதில் சொல்லவில்லை... கபிலனை ஓர் முறை பார்த்து விட்டு... கயல்விழியையே இமைக் காமல் பார்த்தாள்... பின் ஒரு பெருமூச்சுடன் கூறினாள்.



''கயல்.. நான் உன் அம்மா சொன்னதை அப்படியே சொல்கிறேன். அதைக் கேட்டுவிட்டு... நீ அவர்களை 'அம்மா' என்று இனிமேலும் அழைக்க வேண்டுமா? என்ற முடிவிற்கு வா... இதுவரை நீ வாழ்ந்தது ஓர் கனவு உலகு கயல்.. உண்மை அதுவல்ல.. உண்மையை அறிந் தால் நீ மிகவும் வருத்தப்படுவாய்.. அதைத் தெரிந்தே தான்... சொல்கிறேன்... உண்மை சுடத்தான் செய்யும்... ஆனால் உண்மையை நீ அறிந்து கொள்ள வேண்டும்...''

வானதி சொன்னாள்... அவள் சொல்லச் சொல்ல கயல்விழியின் கண் முன் உலகம் இருண்டது... இதுவரை தமையனைப் பிரிந்து இருந்தது எவ்வளவு பெரிய தவறு என்று தெரிந்தது.



## 14

கயல்விழி தான் இதுவரை கண்டு வந்தது... கங்காவின் பொய் முகம் என்ற உண்மையை அறிந்ததும் உடைந்து போனாள்.

''கயல்... கங்கா ஆன்ட்டி என்ன சொன்னாங்க தெரியுமா? 'நான் என்ன இஷ்டப்பட்டா அவளுக்கும் சேர்த்து வடித்துக் கொட்டுகிறேன்...? எல்லாம் என் தலையெழுத்து கோகிலா.. என் வீட்டுக் காரரை கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்தபோதே அந்த தடியன் ஆறு வயசா இருக்கிற இவளையும் கூப்பிட்டுக் கொண்டு போவேன்னு ஒத்தைக் காலில் நின்னான்... இந்த மனுசன் மறு கல்யாணம் பண்ணிக்க ஒரு காரணம் வேண்டுமேன்னு இவளை நிப்பாட்டிக் கிட்டார்... நானும் அக்கம் பக்கம் கௌரவம் கிடைக் கணுமேன்னு இவளை அம்மான்னு கூப்பிட அனுமதிச்

சேன். இவளும் போட்டதைத் தின்னுட்டு... வேலைகளை தட்டாமல் செஞ்சுட்டு... ஓரமாய் நின்னாள்.. எனக்கும் இதுவரை பிரச்சனை இல்லை... சொன்னாங்க.. 'எங்க.. உங்க வீட்டுக்காரர்.. பிள்ளைகள் மேலே பாசம் வைத்துவிட்டால் உங்க கும்... உங்கள் மகனுக்கும் என்ன வழின்னு' என் அண்ணி கேட்டாங்க..''

கயல்விழி கபிலனின் தோள் மேல் சாய்ந்து வி... கபிலன் அவள் மூடி கோதியவாறு வானதியைப் பார்... தான். வானதி தொடர்ந்தாள்.

''வழி தேடுகிற நிலையில் எங்க கல்யாணத்துக்கு முன்னாலேயே நான் இல்லை... அப்போதே என்னை தனியாய் வீடு எடுத்து தங்க வைத்திருந்தார்... எனக்கு கொடுத்தது போக மீதிப் பணம்தான் இதுகளுக்கும் இதுகளைப் பெற்ற அம்மாவிற்கும் போகும்ன்னு சொன்னாங்க..''

''சின்ன வீடாக இருந்ததை எவ்வளவு பெருமையாகச் சொல்லிக்கொள்கிறாள் பார். இவளைப் போய் நீ அம்மான்னு கூப்பிட்டாயே.. உன்னை என்ன செய்வது?'' கபிலன் தங்கையை கடிந்து கொண்டான்.

''விடுங்கள்.. கபிலன்... அவள்தான் என்ன செய்வாள்... அவளுடைய குணத்திற்கு இதைப் போன்ற கீழ்த்தரமான சிந்தனைகளே தோன்றாது. கங்கா ஆன்ட்டி இன்னும் சொன்னாங்க... 'இந்த பிளாட் என்னுடைய பெயரில் இருக்கிறது.. அவருடைய பெண்டாட்டியின் நகைகளை அழித்து புது நகைகளாக செய்து வைத்து விட்டேன்... சம்பளப் பணம் முழுவதும் என்னிடம்தான் அவர் கொடுப்பார்... மீதம் பிடித்ததில்... என் பெயரில்



பேங்கில் டெபாசிட் பண்ணி வைத்திருக்கிறேன். எப்போதுமே இவளுக்கு என் வீட்டுக்காரர் எது வாங்கிக் கொடுத்தாலும் பிடிக்காது. அது எனக்கு வசதியாகப் போனது. சாணுக்கு எடுக்கும் துணிகளின் விலையில் நாலில் ஒரு பங்கு கூட இவளுக்கு எடுக்கும் துணி களுக்கு போட்டு எடுக்க மாட்டேன். இவளும் அது எதை யும் எதிர் பார்க்க மாட்டாள்ன்னு' சொன்னாங்க. 'எல்லாம் சரிதாங்க... உங்க பிள்ளைக்கு அள்ளி வைத்துவிட்டு இவளுக்கு கிள்ளி வைத்தாலும்.. அதுவும் உங்களுக்கு இழப்புத்தானேன்னு' என் அண்ணி கேட்டாங்க.. அதற்கு 'இவளை அவள் அண்ணனோடு அனுப்பிவிட்டால் என் தம்பிக்கில்ல இழப்பு வரும்ன்னு' கங்கா ஆன்ட்டி சொன்னாங்க கயல்..''

''என்னது..?'' கபிலனும் கயல்விழியும் ஒரே குரலில் ஆத்திரத்துடன் கேட்டனர். கங்காவின் தம்பி ஒரு கடைந்தெடுத்த அயோக்கியன். அதிகம் படிக்காதவன்... ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும் பொறுக்கி.. குடிப்பழக் கத்திலிருந்து சகலவிதமான பழக்கங்களும் அவனுக்கு அத்துபடி.

''ஆமாம் கயல்விழி... கங்கா ஆன்ட்டி இப்படித்தான் சொன்னாங்க. அதற்கு என் அண்ணி.. 'அப்படிப் போடு அருவாளை... நீங்க அந்த ரூட்டில் வருகிறீர்களா.. கங்கா அக்காவா.. கொக்கா.. நான் கூட என்னடா இவங்க பிழைக்கத் தெரியாதவங்களா இருக்காங்களேன்னு நினைத்தேன். இப்ப இல்ல.. எனக்கு எல்லாம் புரியு துன்னு' சொன்னாங்க.. கங்கா ஆன்ட்டி சிரித்துக் கொண்டே 'அப்புறம்.. என்னை என்னவென்று நினைத்தாய் இவளை சோறு போட்டு வளர்ப்பது என் தம்பிக் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கத்தான்.. ...

யாரு அவனுக்குப் பெண் கொடுப்பான்னு' சொன்ன... என் அண்ணி 'கயல்விழியின் அண்ணன் ... வானான்னு' கேட்டாங்க.. 'அவன் யாரு விடாமலிருக்... அம்மா.. அம்மான்னு சுற்றி வரவச்சிருக்கேன்... நான் ஒரு சொட்டு கண்ணீர் விட்டுக் கேட்டால் போதும் கயல்விழி சரியென்று தலையை ஆட்டி விடுவாள்.. அண்ணன் காரன் சொத்தையெல்லாம் எப்படி வாங்கிக்கணும்ன்னு அதுக்கப்புறம் என் தம்பிக்கு நல்லாவே தெரியும்'ன்னு கங்கா ஆன்ட்டி சொன்னாங்க.''

கயல்விழியின் இதயத்தில் ரத்தக் கீறல் விழுந்தது. இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? பொய்யாக வேசம் போட்டு பாசம் காட்டுவது போல் நடித்து மற்றவர்களின் வாழ்க்கையை பாழாக்குவார்களா? கங்கா சொல்வது நிஜம்தானே... அவள் கண்ணீர் விட்டு கை ஏந்தி நின்றால் கயல்விழி அவளுடைய தம்பிக்கு கழுத்தை நீட்டினாலும் நீட்டியிருப்பாளே...

''கயல்விழியின் அண்ணனுக்கு தங்கையின் மேல் உயிர்.. அவளை சித்ரவதை செய்தால் அவனுடைய சொத்துக்கள் எல்லாத்தையும் என் தம்பி பேருக்கு எழுதிக் கொடுத்துவிட்டு ஊரை விட்டே ஓடி விடுவான். என்னை அவமானப்படுத்திய அவனைப் பழிவாங்க இதைவிட நல்ல வழி இருக்க முடியாது கோகிலா... ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க எப்போதோ திட்டம் போட்டு விட்டேன். என் தம்பிக்கு பெண்ணும் கிடைக்கும். அவன் கனவிலும் நினைக்காத சொத்தும் கிடைக்கும். அந்தக் கபிலன் தன் கண் முன்னாலேயே தங்கச்சிகாரி வதைபடுவதைப் பார்த்து ரத்தக் கண்ணீர் விடுவானே... அந்தக் கண் கொள்ளாக் காட்சியும் காணக் கிடைக்கும்ன்னு' கங்கா ஆன்ட்டி சொன்னாங்க.. என்



அண்ணி 'சொத்து உங்களுடைய தம்பிக்குத்தானே கிடைக்கும்ன்னாங்க..' 'நான் ஏற்கனவே அவனிடம் வெற்றுப் பத்திரங்களில் கையெழுத்து வாங்கி வைத்து விட்டேனேன்னு' கங்கா ஆன்ட்டி சொன்னாங்க... 'உங்க தம்பி எப்படிக் கையெழுத்து போட்டார்ன்னு' அண்ணி கேட்டாங்க.. 'அவனுக்கு கயல்விழியின் மேல் ஆசை... அவளைக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்னு சொன்னதும் நீட்டின இடத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான்னு' கங்கா ஆன்ட்டி சொன்னாங்க.. 'ஆக பொண்ணு உங்க தம்பிக்கு.. சொத்து உங்களுக்கு... கிரேட் ஐடியான்னு' அண்ணி சிரிச்சாங்க...''

வானதி பேச்சை நிறுத்தி விட்டு கயல்விழியின் முகத்தை இரக்கத்துடன் பார்த்தாள். அவளால் கயல்விழியின் மனம் படும்பாட்டை புரிந்து கொள்ள முடிந்தது. தன் சிற்றன்னையை வாய் நிறைய 'அம்மா' என்று அழைத்தவள் அவள்... தன்னை பெற்ற தாய்க்கு அவள் போட்டியாக வந்தவள் என்று நினைக்காதவள்.. உடன் பிறந்தவன் ராஜா போல் வாழ்ந்த போதும்... 'அம்மா'வை விட்டுவிட்டு எப்படி அவன் பின்னால் போவது என்ற யோசனையுடன் தயங்கியவள்... இவள் கண்ட பாசம் எல்லாம் கானல் நீர் என்று தெரிந்த பின்னால்.. இவள் இத்தனை நாள் கட்டுண்டு இருந்தது அன்பு விலங்கில் இல்லை.. அடிமை விலங்கில் என்று புரிந்த பின்னால்.. அவள் தன்னைத்தானே நொந்து கொள்ளாமல் வேறு என்ன செய்வாள்.

கபிலனின் முகமோ மிக பயங்கரமாய் மாறியிருந்தது.

''இதற்குத்தான் நீ என்னிடம் சத்தியம் கேட்டாயா?'' என்று ஆக்ரோசமாய் கேட்டான்.

''ஆமாம்.. இது நீங்கள் பொறுமையாய் இ...
வேண்டிய நேரம்... கோபப்படாதீர்கள்...''

''என் தங்கையை அழிக்கத் திட்டம் போட்...
கிறார்கள்.. அதைச் சும்மா விடுவதா?''

''சும்மா விடாமல் என்ன செய்யப் போகிறீர்...
அவர்களிடம் மோதினால் என்ன நடக்கும்? நி...
நியாயம் கிடைக்காது. ஏற்கனவே உங்களைப் ப...
அவர்கள் நல்ல விதமாய் கூறவில்லை. கயல்விழி...
பற்றியும் அப்படிப் பேசி வைத்தால் என்ன செய்...''

''அதற்காக அவர்களை சும்மா விடச் சொல்கிறாயா?''

''ஒரு போதும் நான் அப்படிச் சொல்ல மாட்டே...
இவர்கள் பேசியது ஆறு நாள்களுக்கு முன்னால் ...
காதுகளில் விழுந்தது. அப்போதிருந்து நீங்கள் வரு...
நாளிற்காக காத்துக் கொண்டிருந்தேன். ஷெட்டிற்கு...
உங்களைத் தேடி வந்தால் நீங்கள் தொழில் விசயமாக...
டில்லி போய் விட்டதாகச் சொன்னார்கள். அதன்...
பின்னால்... கயல்விழியை கண்காணித்துக் கொண்டு...
நான் பொறுமையாய் உங்களிடம் சொல்வதற்காக காத்...
திருக்கவில்லையா? கபிலன்.. கயல்விழியிடம் இதை...
நான் சொல்லியிருந்தால் நீங்கள் பக்கத்தில் இல்லாத சூழ்...
நிலையில் உணர்ச்சி வசப்பட்டு அவர்களுடன் சண்டை...
போட்டிருப்பாள். வீட்டிற்குள் அவளை அவர்கள் ஏதாவது
செய்துவிட்டால் என்ன செய்வது? கலையரசு அநாதை..
என்னால் காப்பாற்ற முடிந்தது... ஆனால் இவள் குடும்பம்
என்ற அமைப்பிற்குள் சிக்கி இருக்கிறாள்.. இவளை
இருபத்தி நான்கு மணி நேரமும் கண்காணிப்பது என்பது
எனக்குச் சாத்தியம் ஆகாதே.. அதனால் நான் பொறுமை
யாய் இருக்க வேண்டியதாகிப் போனது.. அதே போல்



நீங்களும்.. கயல்விழியை அந்த வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு போகிறவரை பொறுமையாய் இருக்கத்தான் வேண்டும்.. கயல்விழியும் வீட்டை விட்டு வெளியேறும் வரை.. கங்கா ஆன்ட்டி பாசமான தாயாக நடிப்பது போல்... ஏமாளி மகளாக நடிக்க வேண்டும்...''

''அதன் பின்னால்..?''

''என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்... யார் உங்களை தடுத்தது? முதலில் கயல்விழியை உங்கள் வீட்டிற்கு பத்திரமாய் அழைத்துக் கொள்ளுங்கள்... அதன் பின்னால் இவர்களது உறவை வேரோடு வெட்டி எறியுங்கள்.. அதுதான் கயல்விழிக்கு நல்லது...''

கபிலனும்.. கயல்விழியும் கூடி விவாதித்தார்கள்.. வானதி இருவர் பேசுவதையும் கேட்டுக் கொண்டிருந்தாள். இடையே சில திருத்தங்களைக் கூறினாள். அடுத்த ஒரு மணி நேரத்தில் அவர்கள் போட்ட திட்டப்படி கயல்விழி வீட்டை விட்டு வெளியேறி தன் அண்ணனுடன் சென்றுவிட்டாள்.



15

''கயல்.. நீ இப்போதே என்னுடன் கிளம்பி வந்துவிடு...''

''நானும் அதைத்தான் நினைத்தேன் அண்ணா... அண்ணி சொல்வது போல் இதைக் கேட்டதும் எனக்கு ரத்தம் கொதிக்கிற கொதிப்பில் அவர்களோடு சண்டை போட்டு விடுவேன்.. அது எதற்கு? வேண்டாம்...'' என்ற கயல்விழி விசும்பி அழு...
தாள்.

''ஏய்.. கயல்விழி.. என்னம்மா இது..'' வானதி அ...
வாய் அணைத்துக் கொண்டாள்.

"இதற்கு என்னை அவர்கள் சித்தி கொடுமை... பண்ணியிருக்கலாமே அண்ணி.. என் அம்மா... துரோகம் செய்தவர்களின் கையால் சாப்பிட்ட பாவத்... குத்தான் இதையெல்லாம் நான் காதுகொடுத்துக் கேட்க வேண்டி வந்துவிட்டதோ..."

"சும்மா மனதைப் போட்டு உழப்பிக் கொள்ளாதே கயல்... தைரியமாய் இரு... எதையும் தெரிந்து கொ... டது போல் காட்டிக் கொள்ளாதே..."

கபிலன்.. அவனுடைய நண்பர் ஒருவருக்கு போன் போட்டான்.. வீட்டிற்கு போன் போட்டான். அதன்பின் கயல்விழியைப் பார்த்து,

"கீழே.. போய் உன்னுடைய பாடப் புத்தகங்களையும் சர்டிபிகேட்டுகளையும் மட்டும் எடுத்துக் கொண்டு சொல்லி விட்டு வா... வேறு எதையும் நீ எடுத்து வரக் கூடாது," என்றான்.

"சரி.. அண்ணா..." என்ற கயல்விழி எழுந்து கொண்டாள். அவள் முகத்தில் குழப்பம் நீங்கி.. கபிலனின் முகத்தில் படிந்திருந்த கடுமை வந்திருந்தது.. நடையில் ஓர் நிமிர்வு இருந்தது.

வானதியும் அவளும் கீழே இறங்கிச் சென்றார்கள். தாமதமானதற்கு காரணம் கூற வானதி உலர்ந்து விட்டிருந்த சேலைகளை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள். வீட்டிற்குள் நுழைந்த போது யசோதா,

"இதோ.. வானதியே வந்துவிட்டாளே..." என்று அங்கு அமர்ந்திருந்த கிரிஜாவைப் பார்த்துக் கூறினாள்.

"நீ எப்போதடி வந்தாய்...?" வானதி கையிலிருந்த சேலைகளை மடித்துக் கொண்டே கிரிஜாவிடம் வினவினாள்.



"இப்போதுதான் வந்தேன்.. நீ மாடிக்கு துணி காயப் போட போயிருப்பதாக உன் அம்மா சொன்னாங்க.. நீ என்னடாவென்றால் துணிகளை காய வைத்தே எடுத்துக் கொண்டு வந்துவிட்டாயே..."

"வேறு என்ன செய்வது... கையோடு அயர்ன் பண்ணி விடலாமே.." கிரிஜாவிடம் பேசியவாறு எதிர் வீட்டில் நடப்பதை கண்காணிக்க வசதியாய் சோபாவை வாசலுக்கு நேராய் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள் வானதி... பேச்சு பேச்சாய் இருக்க அவளது கவனம் எதிர் வீட்டில் இருந்தது.

கயல்விழி வீட்டிற்குள் போன போது சொக்கநாதன் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார். கங்கா சமையலறையில் இரவு சமையலுக்கான ஆயத்தங்களில் இருந்தாள். சரண் படித்துக் கொண்டு இருந்தான். ஒரு வினாடி.. இந்தக் குடும்பச் சூழ்நிலைக்கும் தனக்கும் சம்பந்தமில்லாமல் போனதே என்று நினைத்த கயல்விழிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. பேசாமல் சென்று பீரோவைத் திறந்து தன் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டவள்.. ஒரு பையில் கல்லூரி பாடப் புத்தகங்களையும் நோட்டுக்களையும் அடுக்கினாள்.

அவள் பீரோவைத் திறந்த சத்தத்தைக் கேட்டதும் கை வேலையை நிறுத்திக் கொண்டு கயல்விழியின் அறைக்கு வந்த கங்கா...

"என்ன கயல்விழி... உன்னுடைய புத்தகங்களை அடுக்குகிறாயா?"என்று வினவினாள்.

"ஆமாம்..." 'அம்மா' என்ற வார்த்தையை கவனமாய் தவிர்த்தபடி பதில் சொன்னாள் கயல்விழி.

"ஏன்.. அது பாட்டுக்கு டேபிளில் இருந்துவிட்டு போகிறது..."

''ஒரு காரணமாகத்தான் அடுக்குகிறேன்..''

பையைத் தூக்கிக் கொண்டு வாசலுக்கு ... கயல்விழி அதுவரை என்ன நடக்கிறது என்பது புரியாமல்... பேசிக் கொண்டிருந்த கங்காவைப் பார்த்து.

''போய்விட்டு வருகிறேன்...'' என்று கூறினாள்.

கங்காவின் மண்டைக்குள் மணியடித்தது. கலவரமாய் அவள் கயல்விழியின் அருகே வருவதற்குள் அவள் வீட்டை விட்டு வெளியே சென்று நின்று கொண்டாள்.

''கயல்விழி என்னம்மா இது? என்னங்க.. இவள் சொல்வதைக் கேட்டிங்களா? டிவியை அப்புறம் பார்க்கலாம்.. இங்கே வாங்க..'' கணவனை உதவிக்கு அழைத்தாள் கங்கா.

'இது என்ன இப்படி ஒரு பூதம் கிளம்புகிறது.. படித்து முடிக்கட்டும் என்று விட்டு வைத்தது தப்போ... முதலிலேயே தம்பிக்கு கண்ணைக் காட்டி விட்டிருந்தால் இவளுக்கும்.. தம்பிக்கும் காதல் என்ற புரளியை கிளப்பி விட்டிருப்பானே.. இவளும் அவனுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருப்பாளே... சாதுபோல் இருந்தவள் இப்போது வீட்டை விட்டுப் போகிறேன் என்று தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிறாளே..' என்று நினைத்தவள் அப்போதுதான் அங்கே நின்று கொண்டிருந்த கபிலனைக் கவனித்தாள்.

'அடக் கடவுளே... இவன் வேறு நிற்கிறானே... இவன் இங்கு இருப்பது முன்பே தெரிந்திருந்தால் இவளை வீட்டுக்குள்ளேயே மறித்திருப்பேனே.. இவன் தான் நம் வீட்டுக்குள் காலடி வைக்கமாட்டேன் என்று சபதம் போட்டிருக்கிறானே... இப்போது இவனை எதிர்த்துக் கொண்டு இவளை மறிப்பது எப்படி...' கவலையுடன்



கணவர் உதவிக்கு வருவாரா என்று திரும்பிப் பார்த்தாள் கங்கா..

அதற்குள் கங்கா போட்ட சத்தத்தைக் கேட்டு கிரிஜா ஆர்வமாய் எழுந்து வந்து வாசலில் நின்று கொள்ள அக்கம் பக்கத்து பிளாட் வாசிகளும் வாசலுக்கு வந்தனர்.

''என்னடி வானதி.. எதிர் வீட்டில் என்ன சண்டையாம்?''

''தெரியவில்லையே கிரிஜா...''

''உனக்கா தெரியாது? நீயும் அந்தப் பெண்ணும்தான் கூட்டாளிகள் ஆச்சே.. உனக்குத் தெரியாமல் இருக்காது... என்னிடம் சரடு விடாமல் உண்மையைச் சொல்லு...''

''உஷ்... அண்ணி வருகிறாங்க... நாளைக்கு ஆபிஸில் வந்து சொல்கிறேன்...''

ரகசியமாய் பேசிக் கொண்டிருந்த இருவரையும் விரோதமாய் பார்த்தபடி வாசலுக்கு வந்த கோகிலா கங்காவைப் பார்த்து...

''என்னக்கா.. வாசலில் நிற்கறீங்க.. என்ன விசயம்?'' என்று ஜாடையாய் பையும் கையுமாய் நின்ற கயல்விழியைப் பார்த்துக் கொண்டே வினவினாள்.

''என்னத்தை சொல்ல கோகிலா.. என் பொண்ணு திடீர்ன்னு வீட்டுக்குள் வந்து பெட்டியைத் தூக்கிட்டு போயிட்டு வரேன்னு சொல்கிறாள்.. எனக்கு என்ன பண்ணுவதுன்னு தெரியவில்லை...'' கங்கா கைகளைப் பிசைந்தாள்.

அதற்குள் சொக்கநாதரும்.. சரணும் எழுந்து வெளி... வந்து விட்டார்கள்.. கோபமாய் கயல்விழியை அணு... அவள் அருகில் நின்ற கபில... சொக்கநாதன்.. பார்த்ததும் வேகத்தைக் குறைத்தார்.

"எங்கே போகிறாய்...?"

"என் அண்ணனுடன்.. எங்கள் வீட்டிற்குப் போகிறேன்..."

சொக்கநாதன் 'என்ன சொல்வது' என்று புரியாமல் கங்காவைப் பார்த்தார். அதற்குள் கோகிலா...

"அடக் கொடுமையே... என்க்கா.. பெற்ற பெண்ணை போல் இந்தப் பெண்ணை உயிரைக் கொடுத்து வளர்த்தீர்களே.." என்று எடுத்துக் கொடுத்தாள்.

அதற்குள் கபிலன் அவளைப் பார்த்து முறைத்தான். கோகிலாவா அவனது முறைப்பிற்கு அஞ்சுவாள்? அலட்சியமாய் முதல் பார்வை பார்த்தாள்.

"உயிரைக் கொடுத்து வளர்த்தார்களா? அது உண்மை தான் மேடம். என் அம்மாவின் உயிரைக் கொடுத்து இவங்க வளர்த்தாங்க..." என்ற கபிலன் கயல்விழியைப் பார்த்து.

"வாம்மா... போகலாம்..." என்றான்.

"கயல்விழி.. என்னம்மா இது.. என்னை விட்டு விட்டுப் போகிறேன் என்கிறாயே.. இது நியாயமா? என்னை விட்டுப் போக உனக்கு எப்படிம்மா மனம் வந்தது? நீ இல்லாத வீட்டில் நான் எப்படி இருப்பேன்? ஐயோ.. எனக்கு நெஞ்சு வலிக்கிறதே..."

அவள் நெஞ்சைப் பிடித்துக் கொள்ள சொக்கநாதன் பதறிப் போனார்.

"கயல்விழி... வீட்டுக்குள் போ..."

"வீட்டுக்குத்தான் போகிறேன்.. எங்கள் வீட்டிற்கு..."

"அப்படிச் சொல்லாதேம்மா.. ஊரில் பார்ப்பவர்கள் என்ன சொல்வார்கள். கங்கா இத்தனை நாள் மகளை



வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி விட்டு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கும் நேரத்தில் வீட்டை விட்டு அனுப்பி விட்டாள் என்று சொல்லமாட்டார்களா?" கங்கா பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கெஞ்சினாள்.

"யாரு என் தங்கையை வளர்த்தது.. நீயா... நீ வேலைக்குப் போய் சம்பாதித்து வளர்த்தாயா? என் அம்மா உயிரோடு இருந்த போது உனக்கு கள்ளக் கணவனாகவும் அவங்களை சாகடித்த பின்னால் உனக்குத் தாலிகட்டி உனக்கு நல்ல கணவனாகவும் இருக்கிற இந்த ஆள் தானே சம்பாதித்தது? இந்த ஆள்தானே பெற்ற பிள்ளைக்கு செய்யக் கடமைப்பட்ட ஆள்? இதைப் போய் பெரிதாக பீற்றிக் கொள்கிறாயே..."

எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்கள் என்ற உணர்வில் சொக்கநாதன் கூசிப் போனார். சரண் கயல்விழியை விரோதமாகப் பார்த்தான்.

"எனக்கே என் அம்மா சொல்லித்தான் நீ என் கூடப் பிறக்கவில்லை என்பது தெரியும்... அப்பேர்பட்ட என் அம்மாவின் தியாகத்தையா நீயும் உன் அண்ணனும் கேவலமாகப் பேசுகிறீர்கள்?"

"தியாகி..." பலமாகச் சிரித்தான் கபிலன்.

அவனது பேச்சையும் சிரிப்பையும் லட்சியம் பண்ணாமல் எப்படியாவது கயல்விழியை தடுத்து நிறுத்தி விட வேண்டும் என்ற வெறியுடன் கங்கா கயல்விழியின் கையைப் பிடிக்கப் போனாள். அப்போது.

"ஹாய் கபிலன்..." என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தால் போலீஸ் உயரதிகாரி ஒருவன் கபிலனை நோக்கி வந்து கொண்டிருந்தார்.



## 16

''அட... அவர்கள் வீட்டில் இவ்வளவு கதை இருக்கிறதா?'' கிரிஜா சுவாரஸ்யமாய் வினவினாள்.

''ஆமாம்... கை காய்ந்து விட்டு போகிறது.. கை கழுவி விட்டு வா.'' வானதி எழுந்தாள்.

''இருடி... சாப்பாட்டு நேரத்தில் பேசினால்தான் சரிவரும்... வேலை நேரத்தில் பேச முடியுமா? அந்த கங்கா ஆடிய நாடகம் கடைசியில் பொலபொலத்து விட்டதே... கபிலனின் நண்பர் போலீஸ் கமிஷனர் என்று தெரிந்ததும் கங்காவிற்கு வந்த நெஞ்சுவலி மாயமாய் மறைந்து விட்ட அதிசயம்தான் என்ன? ஆப் பலே கில்லாடிதான் வானதி...''

''சும்மாவா... வருடக் கணக்கில் தாய் போல் நடித்து கயல்விழியை கைக்குள் போட்டுக் கொண்டிருப்பாங்க. கபிலன் போலீஸ் நண்பரைக் கூப்பிட்டது அவங்களை மறைமுகமாக எச்சரிக்கத்தான்...''

''என் வீட்டுப் பக்கம் கயல்விழியை பார்க்க வந்தால் நடப்பதே வேறு என்று கங்காவை எச்சரிக்கத்தானே...''

''ஆமாம்... இப்போது போட்ட திட்டம் தோற்றுவிட்ட கோபத்தில் இரண்டு நாள்களாக அம்மிணி பிளாட்டை விட்டு வெளியே வரவேயில்லை...''

''எப்படி வரும்..? அபார்ட்மெண்டில் இருந்தவர்கள் எல்லாம் அந்த அம்மா தங்கக் கம்பி என்று நினைத்துக் கொண்டு இருந்தார்கள்... இப்போது சாயம் வெளுத்து விட்டதே.. என்னவோ இந்த அம்மாள் தான் சொக்கநாதனுக்கு ஒரே மனைவி போலவும் கயல்விழியும்.. சரணும் பிள்ளைகள் எனவும்.. நாம் இருவர்.. நமக்கு இருவர் என்று பிலிம் காட்டிக் கொண்டிருந்ததே.. இப்போது இல்லை தெரிகிறது.. இந்த அம்மா இரண்டாம் தாரமென்று...''

''இரண்டாம் தாரமாக இருப்பதில் தவறில்லை கிரிஜா... புத்தியில் இரண்டாம் தரமாக இருக்கக் கூடாது. கயல்விழி அவளுடைய அண்ணனுக்கு வசதி வந்த பின்னாலும் அண்ணனிடம் போகவில்லை. இந்த அம்மாவை பெற்ற தாயாக அவள் நினைத்தாள்...''

''மனிதர்களில்தான் எத்தனை குணமாற்றங்கள்?''

''கபிலன்தான் சண்டை போட்டு விடுவாரோ என்று பயந்தேன்.. நல்லவேளை அதிகம் சத்தம் போடாமல் கயல்விழியை அழைத்துக் கொண்டு போய்விட்டார்...''

''நான் கொஞ்ச நாள்களாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன் வானதி.. நீ அந்தக் கபிலனிடம் அதிகம் உரிமை எடுத்துக்கொள்வது போல் எனக்குத் தோன்றுகிறதே.. என்ன விசயம்?''

கிரிஜா காக்காய் பார்வை பார்க்க வானதி முகம் சிவந்தாள். வெகு மும்முரமாய் கைவிரல் நகங்களை ஆராய்ந்தபடி,

''ஒன்றும் இல்லையே...'' என்றாள்.

''நீ இந்த லட்சணத்தில் ஒன்றும் இல்லையென்றால் ஏதோ இருக்கிறது என்று அர்த்தம்... என்னடி?''

''கிரிஜா... நீ நினைப்பது போல் இல்லையென்று சொல்ல மாட்டேன்... அதே சமயம் நிச்சயமாகவும் என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை...''

கிரிஜா மௌனமாக ஏதோ சிந்தனையுடன் இருந்தாள். பின்னர் வானதியின் முகம் பார்த்தாள்.

"வானதி... நீ கபிலனை காதலிக்கிறாயா?"

வானதி 'ஆமாம்' என்ற பாவனையில் தலை
மேலும்.. கீழுமாய் அசைத்தாள்... கிரிஜாவின் முகத்தி
இனம் புரியாத ஓர் உணர்வு தோன்றியது.

"கபிலன் உன்னைக் காதலிக்கிறாரா.."

"வாய்விட்டு இன்னும் அவர் காதலைச் சொல்லவில்லை."

கிரிஜாவின் முகம் இறுகியது.

"அது தானே பார்த்தேன்... அவர் எப்படி உன்னிடம் காதல் சொல்லுவார்?"

"நீ என்ன சொல்கிறாய் கிரிஜா..." திகைத்தாள் வானதி.

"நீ முட்டாள் வானதி.. பூப்போன்ற மனது உனக்கிருந்து என்ன பயன்? அதன் மதிப்புத் தெரியாதவனைப் போய் காதலிக்கிறாயே.. அவனிடம் மயங்காதே வானதி..."

"ஏன்.. ஏன் கிரிஜா?"

"வானதி.. இதைச் சொன்னால் உன்னால் தாங்கிக் கொள்ள முடியுமோ என்னவோ... கபிலனின் வீட்டில் ஒரு பெண் அவனுடன் வசிப்பது உனக்குத் தெரியுமா?"

"கிரிஜா.."

வானதியின் தலையில் ஓராயிரம் இடிகள் இறங்கின. அவள் கண்கள் இருண்டன... 'இருக்காது.. இருக்காது..' என்று மனதிற்குள் ஜெபித்தாள். அவளுடைய கபிலன் நல்லவன்.. அவனாவது இன்னொரு பெண்ணுடன் ஒரே வீட்டில் வசிப்பதாவது...

"கிரிஜா.. உனக்கு கபிலனைப் பற்றித் தெரியாது.." வானதி அவசரமாய் விளக்கம் சொல்ல ஆரம்பிக்க கிரிஜா அமர்த்தினாள்.



"எனக்குத் தெரியும் வானதி.. கபிலனை மட்டுமில்லை.. அவனுடன் இருக்கிறாளே.. அந்த சிலுப்பட்டையையும் தெரியும்.. அவள் ஏறக்குறைய ஏழெட்டு மாதங்களாய் கபிலனின் வீட்டில்தான் இருக்கிறாள்... எனக்கு கபிலனைத் தெரியும்.. அவன் கயல்விழியின் அண்ணன் என்பது சமீபகாலமாய்.. அதுவும் நீ கயல்விழியுடன் பழக ஆரம்பித்து விசயத்தை சொன்ன பின்னால் தான் தெரியும். அதற்கு முன்னால் அவன் கயல்விழியைப் பார்க்க வரும் போதெல்லாம்.. இவன் ஏன் இந்தப் பெண்ணை அடிக்கடி பார்க்க வருகிறான் என்று நினைப்பேன்..."

"நாங்கள் இந்த அபார்ட்மெண்டிற்கு குடி வந்து ஒரு வருடம் தானே இருக்கும் கிரிஜா..."

"நான் மட்டும் என்ன..? நீங்கள் வருவதற்கு முதல் மாதம் தானே அப்பா.... எனக்கு அந்த பிளாட்டை வாங்கிக் கொடுத்தார்..."

"அப்புறம் எப்படி முதலிலேயே கபிலனைத் தெரியும் என்கிறாய்..."

"வானதி... என் கணவர் ஒரு இன்ஜினியர் என்பதை நீ மறந்து விட்டாயா?"

"கிரிஜா.. நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"என் கணவரும்... கபிலனும்.. கபிலன் கூட இருக்கும் சிலுப்பட்டையின் அண்ணனும் ஒன்றாக படித்தவர்கள்.. நண்பர்கள்... எங்களது திருமணத்திற்கு அவர்கள் இருவருமே வந்திருந்தார்கள்.. அன்றே அவள் அவளுடைய அண்ணனை விட்டுவிட்டு கபிலனின் பின்னால்தான் அலைந்தாள்.. போட்டோ... வீடியோக்களுக்கு போஸ் கொடுக்கும் போதெல்லாம் அவள் கபிலனின் பக்கத்

தில்தான் நின்றிருந்தாள். கபிலன் இங்கே வரும்போது எங்கள் வீட்டுக்கு வருவதில்லை... எதிரில் பார்த்தால் பேசிக் கொள்வோம் என்பார் என் கணவர்.. இங்கே ஏன் வருகிறான் என்று என் கணவரிடம் கேட்ட போது அது அவனுடைய குடும்ப ரகசியம் என்றார்.. நானும் அதைப் பற்றித் துருவிக் கேட்கவில்லை.. கபிலனை எனக்குப் பிடிக்காது என்பதால் இவரும் அவனை வீட்டுக்கு வா என்று சொல்லமாட்டார்...''

வானதிக்கு துக்கம் துக்கமாக வந்தது. ஒரு குடும்பத்திற்குள் அனுமதிக்க கூடாத அளவிற்கு அவளுடைய கபிலன் மோசமானவனா?

''கிரிஜா.. நீ அவரைக் குறைவாய் பேசாதே...''

''என் மனதில் கபிலனைப் பற்றி இருக்கும் மதிப்பீட்டைத்தானே நான் பேச முடியும்? மனதை மறைத்துப் பேச என்னால் முடியாது..''

''அந்தப் பெண்ணின் அண்ணன் அவருடைய தங்கையை கண்டிக்கவில்லையா?'' மனம் படபடக்கக் கேட்டாள் வானதி.

''இல்லை வானதி.. அவளுடைய அண்ணன் இப்போது உயிரோடு இல்லை. இறந்து விட்டார்...'' கிரிஜா நிதானமாகக் கூறினாள்.

''எப்போது..?'' அதிர்ச்சியுடன் கேட்டாள் வானதி.

''எட்டு மாதங்களாகின்றன...''

''அவளுடைய அம்மா... அப்பா?''

''யாரும் இல்லை... அண்ணன் மட்டும்தான் அவளுக்கு...''

''நண்பனின் தங்கையின் மேலிருந்த பரிதாபத்தினால் கபிலன் அந்தப் பெண்ணிற்கு அடைக்கலம் கொடுத்திருக்கலாம் இல்லையா?''



''அப்படியும் இருக்கலாம்.. என் கணவரும் இதைத்தான் சொன்னார். அன்பழகன்.. அதுதான் அந்தச் சிலுப்பட்டையின் அண்ணன் பெயர்.. அவர் இறந்தபோது தங்கையின் கை பிடித்து கபிலனிடம் ஒப்படைத்துவிட்டு இறந்துவிட்டாராம். இதையும் அந்த சிலுப்பட்டைதான் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி அழுதாளாம். என்னிடமும்.. என் கணவரிடமும் மறக்காமல் இதைச் சொல்லித்தான் அழுதாள்.''

''அந்தச் சிலுப்பட்டைக்கு என்று பெயர் இல்லையா கிரிஜா...''

''இருக்கிறது... விளக்கு மாற்றுக்குப் பெயர் பட்டுக்குஞ்சலமாம்.. இவளுக்குப் பெயர் குணவதியாம்.''

''குணவதியா?''

''ஆமாம்.. அதுதான் அவளுடைய பெயர்.. ஆனால் குணத்திற்கும் அவளுக்கும் ரொம்ப தூரம் வானதி. எப்படித்தான் இப்படி ஒரு பெயர் வைத்தார்களோ..''

''உனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்காதா கிரிஜா..?''

''முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போய்விட்டது வானதி.. அவளது உடை அலங்காரத்திலிருந்து எல்லாவற்றிலும்.. ஓர் ஆளை இழுக்கும் கவர்ச்சி இருந்தது.. பேசுவதும் பெண்களுடன் பேசித் தொலைக்க மாட்டாள். ஆண்களுடன்தான் பேசுவாள்.. அதுவும் கண்ணைச் சுழற்றி இமைகளை படபடவென்று அடித்து ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தை போல் பாவனை காட்... வாள்.. நம்மிடம் பேசும்போது மட்டும் முறைத்... கொண்டு ஜாக்கிரதையாய் பேசுவாள். இவளைப் போ... பெண்களை எப்போதுமே எனக்குப் பிடிக்காது என்...

...னக்குத் தெரியும்தானே...''

இப்படி ஒரு பெண்ணுடன் ... வசிப்பவன் என் அதை தன்னிடம் ... எண்ணவிடும் போதே.. இது கயல்விழிக்குத் ... என்ற கேள்வி அவளுள் எழுந்தது. அவளது ... படித்தவள் போல கிரிஜா வினவினாள்.

"இது கயல்விழிக்குத் தெரியுமா?"

"தெரிந்திருந்தால் என்னிடம் சொல்லியிருப்பாளே..."

"இப்போதுதான் கபிலனுடைய வீட்டிற்கு ... விட்டாளே.. இப்போது கூடவா தெரியாது...?"

கிரிஜா வினவி வாய் மூடும் முன்னர் வானதியின் செல்போன் ஒலித்தது. எடுத்து எண்களைப் பார்த்தவள் கயல்விழிதான் அழைத்தாள். கிரிஜாவைப் பார்த்து,

"கயல்விழிதான் கூப்பிடுகிறாள்," என்றாள் வானதி.

"பேசு..."

வானதி பேசினாள்... மறுமுனையில் கயல்விழி துயரத்துடன்.

"அண்ணி...." என்று அழைத்துச் சொல்லிய விஷயங்களை செவிமடுத்த வானதியின் காதல் மாளிகை ஆட்டம் காண ஆரம்பித்தது... கிரிஜா இறக்கிய அதிர்ச்சிகள் போதாது என்று கயல்விழியும் போன் வழியே அணுகுண்டுகளை அள்ளி வீசினாள்.



# 17

கபிலனின் வீட்டிற்குள் கார் நுழைந்தபோது கபிலன் தங்கையைப் பார்த்து பாசமுடன் சிரித்தான்.

"என்ன அண்ணா..?"

"இத்தனை நாளாய் இது வெறும் கல்... மண்.. சிமிண்டால் கட்டப்பட்ட கட்டிடம்தான் கயல்விழி..



இன்று நீ அடியெடுத்து வைத்த பின்தான் இது வீடு. ... ஒவ்வொரு அங்குலத்தையும் உனக்காக என்று ... பார்த்துக் கட்டினேன் கயல்விழி... இன்றுதான் ... உடைமைக்காரியான நீ வீட்டிற்குள் ... வந்திருக்கிறாய்..."

கயல்விழியின் கண்களில் நீர் முத்துக்கள் தோன்றி ... 'அபிராமி இல்லம்' என்ற பெயர் பலகை ... பொறிக்கப்பட்டிருந்த வீட்டைப் பார்த்தவளின் கண்கள் ...

"அபிராமி...! நம் அம்மாவின் பெயர் அண்ணா..."

"ம்ம்... என் பேக்டரிக்கும் 'அபிராமி தொழிற்சாலை' என்று அம்மாவின் பெயரைத் தான் வைத்திருக்கிறேன்..."

கயல்விழி நெகிழ்ந்து போனாள்... இதுதான் அவளது தாய்வீடு... அண்ணனின் நிழல்தான் அவளுக்கு இனி தாயின் மடி. நிம்மதியுடன் காரை விட்டு இறங்கி வீட்டிற்குள் நுழையப் போனவளை... மஞ்சள் குங்குமத்துடன் களையாக இருந்த வயதான மாது ஒருத்தி புன்னகையுடன் நிறுத்தினாள்.

"நில்லுங்கம்மா... ஆரத்தி எடுக்கிறேன்..."

"யாருண்ணா இவங்க..."

"நம் வீட்டில் சமையல் வேலையை பார்த்துக்கிறாங்கம்மா. பெயர் அன்னபூரணி... எப்படி... பெயர் பொருத்தமாக இருக்கிறது இல்லையா?"

"ஆமாம்..." என்று தலையாட்டிச் சிரித்த கயல்விழிக்கு அன்னபூரணியை பிடித்து விட்டது.

"வாம்மா..." என்று அழைத்தபடி ஆரத்தி எடுத்து முடித்த அன்னபூரணியம்மாள் கயல்விழியின் கைபிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

விஸ்தீரமான ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தபடி கயல்விழி வீட்டைச் சுற்றிப் பார்வை இட்டாள்.

“எவ்வளவு பெரிய வீடுண்ணா... நம் வீடு...”

“உனக்குப் பிடித்திருக்கிறதா..?”

“ரொம்ப...”

கண் விழிகளை அகல விரித்து கயல்விழி கூறியதை கேட்டு கபிலனும் அன்னபூரணியும் சிரித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெண் குரல் கேட்டது.

“அன்னபூரணி.. சிரித்தது போதும்.. போய் சமையல் வேலையைப் பார்... வந்திருப்பவர்கள் பசியோடு இருப்பார்கள் என்ற எண்ணம் வேண்டாமா? இப்படி நடு வீட்டில் நின்று கொண்டு அரட்டையடித்துக் கொண்டு இருந்தால் வேலை எப்படி நடக்கும்?”

கயல்விழிக்கு தூக்கி வாரிப் போட்டது.

‘அண்ணன் வீட்டில் ஒரு பெண்ணின் குரலா...?’

கேள்வியுடன் கபிலனை நோக்கினாள். அவன் முகத்தில் சங்கடம் தெரிந்தது. அன்னபூரணியின் முகத்தில் இருள் படிந்தது. கயல்விழி அவசரமாய் தலையைத் திருப்பிப் பார்த்தாள். மாடிப்படிகளில் ஒரு பெண் ஒய்யாக இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

“யார் அண்ணா இது.. நம் வீட்டில் இருப்பது போல் தெரிகிறதே...”

“சொல்கிறேன் கயல்விழி.. இவங்க பெயர் குணவதி...”

அதற்குள் அருகில் வந்துவிட்ட அவள் கபிலனின் அருகில் இயல்பாய் அமர்ந்தபடி செல்லமாய் சிணுங்கினாள்.

“உங்கள் தங்கையை அழைத்துக் கொண்டு வர இவ்வளவு நேரமா? வழி பார்த்துப் பார்த்து என் கண்கள்



புகுந்து விட்டன தெரியுமா? இதுதான் உங்கள் தங்கை கயல்விழியா?”

கயல்விழியின் புருவங்கள் உயர்ந்தன. அவள் கபிலனின் அருகில் உட்காரும்போது.. கபிலன் இயல்பாக முகம் சுளித்து விலகி அமர்ந்ததை ஒரு நொடியில் கவனித்து விட்டாள் கயல்விழி.

‘இவள் வேண்டுமென்றே.. அண்ணனின் அருகில் உட்காருகிறாள்..’

அவளோ கபிலனின் விலகலைக் கவனிக்காதவள் போல கயல்விழியைப் பார்த்துக் கூறினாள்.

“வா.. கயல்விழி... உன் அண்ணன் எப்போது பார்த்தாலும் உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்.. அவருக்கு உன் மீது கொள்ளை அன்பு...”

“என் அண்ணனுக்கு என் மீது கொள்ளை அன்பு என்பது மற்றவர்கள் சொல்லாமலே எனக்குத் தெரியும்.. ஆமாம்... நீங்கள் யார்? என்று தெரியவில்லையே.. நீங்கள் யார்..? எங்கள் வீட்டில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?” கயல்விழி கண்டிப்பான குரலில் வினவினாள்.

அன்னபூரணியின் இதழ்களில் நமுட்டுச் சிரிப்பு தோன்றியதைக் கண்ட குணவதி மனதிற்குள் கொதித்துப் போனாள்.

‘இந்த சமையல்காரிக்கு எவ்வளவு திமிர் இருந்தால் இந்த வந்தட்டிக் கழுதை பேசுவதற்கு ஜாடையாய் சிரிப்பாள்..’

“அன்னபூரணி... உன்னை சமையல்கட்டுக்குப் போகச் சொன்னேன். வீட்டு மனிதர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்தில் உனக்கென்ன வேலை..?” அதிகாரமான குரலில் உத்தரவிட்டாள் குணவதி.

அன்னபூரணி முகம் சுருங்கி தகைப்போனாள்...

"அம்மா... நில்லுங்க..." கயல்விழி அன்னபூரணியை தடுத்து நிறுத்தினாள்.

'அம்மாவா?' அன்னபூரணியின் முகம் ... குணவதியின் முகம் விகாரமானது... 'சமையல்காரிக்கு போய் மரியாதை தருவதா...'

"கயல்விழி... இன்னும் உனக்கு மேல்தட்டு பழக்கங்கள் வரவில்லையென்று நினைக்கிறேன்.. உன் நிலையிலேயே இருந்து பேசுகிறாய்.. வேலைக்காரர்களை சரிசமமாய் வைத்துப் பேசுவது தவறு..." குத்தலாகக் கூறினாள் குணவதி.

இப்போது கபிலனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"மைண்ட் யுவர் வெர்ட்ஸ் குணவதி.. என் தங்கை வேறு.. நான் வேறு இல்லை... அப்படியானால் என்நிலை கம்மியானது என்று நினைக்கிறீர்களா?"

"நோ.. நோ கபிலன்.. கயல்விழி சின்னப் பெண்... அவளுக்கு நல்லது எது.. கெட்டது எது என்று நாம்தானே சொல்லிக் கொடுக்க வேண்டும்?"

"ஹலோ.... நாம் என்று அண்ணனுடன் கூட்டுச் சேரும் வேலையெல்லாம் வேண்டாம்.. எங்களுக்குள் நாங்கள் சொல்லிக் கொடுத்துக் கொள்ளுவோம்.. நீங்கள் வேறு யாருக்காவது டீச்சர் வேலை பாருங்க... யார் அண்ணா இது..? இப்படி இன்டீஸண்டாய் பிஹேவ் பண்ணிக் கொண்டிருக்கிறாங்களே..." கயல்விழி எரிச்சலுடன் வினவினாள்.

"அதுதான் சொன்னேனே.. குணவதி என்று.." கபிலன் சுவரைப் பார்த்தான்.



"வெறும் பெயர் மட்டும்தானா... அட்ரஸ் இல்லாத ஆளா..." கயல்விழி வேண்டுமென்றே கேட்டாள்.

அதைப் புரிந்து கொண்ட குணவதி குரோதமாய் கயல்விழியை பார்த்தாள்.

'என்னையாடி அட்ரஸ் இல்லாதவள் என்கிறாய்.. உன்னை முதலில் அட்ரஸ் இல்லாதவள் ஆக்குகிறேன்டி...' மனதிற்குள் கருவிய குணவதி.

"என்னுடைய அட்ரஸ் இந்த வீடும்.. உன் அண்ணனின் பேக்டரியும்தான் கயல்விழி... நீதான் இந்த வீட்டிற்கு புது ஆளாய்.. அட்ரஸ் தேடி வந்திருக்கிறாய்.." என்று கூறினாள்.

கயல்விழியின் புத்தி குணவதி கூறுவதன் அர்த்தத்தை கிரகித்துக் கொண்டது. அவள் சட்டென்று எழுந்து கொண்டாள்.

"அம்மா.. நீங்கள் சமைக்கப் போங்க.." என்று அன்னபூரணியிடம் கூறினாள்.

"அன்னபூரணி... இந்த சோபாவை சரியாக இழுத்துப் போட்டுவிட்டு வாசலில் யாரோ கூப்பிடுவது போல் இருக்கிறது... யார் என்று பார்..." குணவதி அன்னபூ ணிக்கு உத்தரவிட்டாள்.

கயல்விழி கூறுவதற்கு அன்னபூரணி கீழ்படி கூடாது... தன் சொல்லுக்குத்தான் கீழ்படிய வே மென்று அதிகாரக் கொடியை நாட்டுகிறாள் கு என்பது கயல்விழிக்குப் புரிந்து போனது.

இதுவரை எப்படியோ... இனிமேலும் இவளின் இந்த வீட்டில் தொடரக்கூடாது என்ற கண் முடிவை எடுத்த கயல்விழி தயங்கி நின்ற ணியைப் பார்த்துக் கூறினாள்.

"அம்மா... நீங்க கிச்சனுக்கு போங்க..!" [illegible] உத்தரவிட்டாள்.

"அன்னபூரணி..!" ஏறக்குறைய அலறினான் [illegible]

"இதோ பார் குணவதி... எனக்கு என்னவோ [illegible] வாங்க.. போங்க என்று கூப்பிடத் தோன்றவில்லை [illegible] போ என்று தான் கூப்பிட வருகிறது.. நான் [illegible] சொல்ல வருகிறேன் என்றால் உன்னுடைய [illegible] களை.. ஐ மீன்.. உனக்குத் தோன்றுகிற வேலை[illegible] நீயே செய்.. இந்த வீட்டில் இருப்பவர்களை ஏவாதே.. இது என் வீடு.. அன்டர்ஸ்டான்ட்..? அப்புறம் இன்னொரு விஷயம்.. பேக்டரியும் என்னுடையதுதான்.. [illegible] அட்ரஸ் இவை இரண்டும் இல்லை..." என்று குணவதியிடம் கூறிவிட்டு கயல்விழி அன்னபூரணியின் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

'அப்பாடா.. இவளின் அட்டகாசத்திற்கு ஒரு முடிவு வந்ததே..' என்ற நிம்மதியுடன் அன்னபூரணி சமையலறைக்கு விரைந்தாள்.

"கயல்விழி... என்ன இது.. வேலையாள்களின் முன்னிலையில் என்னை இன்ஸல்ட் பண்ணுகிறாயா? உன் அண்ணனே என்னைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னது கிடையாது தெரியுமா?"

"ஸ்ஸ்... அண்ணனுக்கு அடுத்த வீட்டுப் பெண்களை அதட்டும் பழக்கம் கிடையாது..."

"நான் அடுத்த வீட்டுப் பெண்ணில்லை..."

"ஆமாமில்லை... உனக்குத்தான் வீடு கிடையாதே.. அட்ரஸ் இல்லாத ஆள் ஆயிற்றே... உனக்கு வீடு இல்லை என்பதற்காக அடுத்தவர் வீட்டை சொந்தம்



[illegible] அண்ணா எழுந்திரு.. நான் உன் [illegible] கொண்டாடாதே... [illegible] பேச வேண்டும்..."

கயல்விழி கண்டிப்பான குரலில் அதட்ட கபிலன் சிறு பையன் போல் எழுந்து நின்றான். குணவதி வெகுண்டு எழுந்தாள்.

"அவர் இப்போதுதான் அலுத்துக் களைத்து வீடு திரும்பியிருக்கிறார். அவரை டிஸ்டர்ப் பண்ணாதே..."

கயல்விழியின் பொறுமை பறந்தோடியது.. அவள் கண்களில் அனல் பொறி பறக்க குணவதியை நோக்கினாள். எரிமலைகள் இரண்டு எதிரும் புதிருமாய் மோதத் தயாராகின.



18

கயல்விழிக்கு இவ்வளவு கோபம் வரும் என்று கபிலனே எதிர்பார்க்கவில்லை. அவள் தீப்பிழம்பாய் நின்றாள். குணவதியை பார்வையாலேயே சுட்டெரித்தாள். அவளோ.. அஞ்சாமல் அதை எதிர் நோக்கினாள்.

"என் அண்ணனைப் பற்றிக் கவலைப்பட நீ யார்?"

"அவரிடம் உரிமையுள்ளவள்..."

"அவரிடம் பெண்டாட்டியா..?"

"நீயென்ன அவனின் பெண்டாட்டியா..?"

இதைக் கேட்கும்போது கயல்விழியின் குரல் நடுங்கியது. குணவதியோ நடுக்கமில்லாமல் பதில் சொன்னாள்.

"அவரின் பெண்டாட்டி ஆகப் போகிறவள்.."

"என்ன..?"

கயல்விழி இப்போது கபிலனை முறைத்துப் பார்த்தாள். அவளின் உடலும் இப்போது சேர்ந்து நடுங்கியது.

கபிலனிடமிருந்து பார்வையை திருப்பி குணவதி...
பார்த்தவள் அவன் முன் நின்று

"கனவு காணாதே" என்றாள்.

"இது கனவில்லை... நடக்கப் போகும் நிஜம்..." என்றாள் குணவதி அலட்சியமாக.

"நான் நடக்க விட மாட்டேன்." தீர்மானமான குரலில் கூறினாள் கயல்விழி.

"உன்னை யார் அனுமதி கேட்டார்கள்?"

"என் அண்ணன் கேட்பான்... என் அனுமதி இல்லாமல் எவர் கழுத்திலும் தாலி கட்ட மாட்டான்."

"கயல்விழி..."

"சும்மா கத்தாதே... எனக்கென்று ஒரு கனவு இருக்கிறது. அந்தக் கனவில் என் அண்ணியாக நான் வரித்திருக்கும் பெண் நீயல்ல. ஒரு நாளும் நீ என் அண்ணனின் மனைவியாக முடியாது."

"கபிலன் என்னைக் கைவிட மாட்டார்."

"உன்னைக் கைபிடிக்கவும் மாட்டான்..."

"நான் அவரே எல்லாம் என்று நம்பி வந்தவள்..."

"அவனுக்கு நான்தான் எல்லாமும்... இதை முதலில் தெரிந்து கொள். என் வார்த்தையை அவன் மீற மாட்டான். நான் கிழித்த கோட்டை அவன் தாண்ட மாட்டான்."

"நீயே கல்யாணமாகி இன்னொருவன் வீட்டுக்கு போகப் போகிற பெண்.. உனக்கு எதற்கு எங்கள் விவகாரம்?"

"'எங்கள்' என்று யாரை உன்னுடன் இணை சேர்க்கிறாய்? என் அண்ணனையா? இந்த பசப்பல்



வார்த்தைகளை இத்துடன் நிறுத்திக் கொள். அவன் என் அண்ணன். எனக்கு மட்டுமே சொந்தமானவன். நான் பார்த்து விட்டுக் கொடுத்தால்தான் அவன் மனைவியே அவனிடம் சொந்தம் கொண்டாட முடியும்... உன்னை மாதிரி வெட்கமில்லாமல் அடுத்த வீட்டில் டேரா போட்டுக் கொண்டிருக்கும் பஜாரிக்கெல்லாம் என் அண்ணனை விட்டுக் கொடுக்க மாட்டேன்..."

"கபிலன்.. உங்கள் தங்கை என்னை பஜாரி என்கிறாள்.. கேட்டுக் கொண்டு சும்மா நிற்கிறீர்களே..."

கபிலன் மௌனம் சாதித்தான். கயல்விழியின் விழிகளில் வெற்றிக் குறி தென்பட்டது. குணவதி அவசரமாய் சுற்று முற்றும் பார்த்தாள். வீட்டில் உள்ள வேலையாட்கள் எல்லோருமே வேலை செய்வது போல் பாவனை செய்து கொண்டு அங்கு நடப்பதை கவனித்துக் கொண்டிருப்பது புரிந்தது. முதல் நாள் வரை அந்த வீட்டின் முடிசூடா ராணியாக இருந்தவள் கயல்விழி வந்த சில நிமிடங்களிலேயே தன்னை சிம்மாசனத்திலிருந்து கீழே பிடித்து தள்ளி விட்டதை உணர்ந்தாள்.

"அண்ணா... உன்னுடன் பேச வேண்டும் என்றேன்..."

கயல்விழி அதிகாரமான குரலில் கூறிவிட்டு மாடிப்படி ஏறினாள். கபிலன் பின் தொடர்ந்தான். குணவதியும் அவசரமாய் அவர்களைப் பின்தொடர கயல்விழி நின்று திரும்பிப் பார்த்தாள்.

"நீ எங்கே வருகிறாய்? நான் என் அண்ணனுடன் தனியாகப் பேச வேண்டும்."

"கபிலன்... நான் உங்களுடன் பேச வேண்டும்."

கயல்விழி கபிலனின் முகம் பார்த்தாள். அவளின் பார்வையின் வேகம் தாளாத கபிலன் குணவதியைப் பார்த்து

''டோன்ட் டிஸ்டர்ப் மீ குணவதி... உங்களுக்[illegible] இங்கிதம் தெரியாதா? நான் என் தங்கையுடன் பே[illegible] வேண்டி இருக்கிறது..'' என்றான்.

அப்போதும் குணவதி மாடிப்படியில் ஏறி வந்தாள்.

''ஏய்ய்... நில்லு... நான்தான் வராதே என்கிறேனே... அப்புறமும் ஏன் பின்னாலேயே வருகிறாய்...''

''ஷட் அப் கயல்விழி.. நான் என் ரூமிற்குப் போகிறேன்..''

''உன் ரூமிற்கா...? உன் ரூம் மாடியிலா இருக்கிறது?'' மீண்டும் கபிலனை முறைத்தாள். இம்முறை கபிலன்,

''என்னையே முறைக்காதே கயல்விழி.. நான் அவங்களுக்கு கீழேதான் ரூம் ஒதுக்கினேன். அவங்க தான் கடலைப் பார்த்தது போல ரூம் வேண்டும் என்று மாடிக்கு வந்து விட்டாங்க...'' என்றான்.

''உன் ரூம் எங்கே இருக்கிறது?''

''மாடியில்தான்...''

''இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா? அவள்தான் வெட்கம் கெட்டவள்.. உனக்கு எங்கே போனது அறிவு?''

''கயல்விழி.. என் முன்னால் அவரைத் திட்டாதே...''

''இப்போது நீ என்னிடம் அடி வாங்கப் போகிறாய் குணவதி.. நீ இனிமேல் மாடியில் தாங்க முடியாது.. இப்போது கீழே போய் ஹாலில் வெயிட் பண்ணு... உன் ரூமை கீழே மாற்றிய பின் உன் ரூமிற்கு போ...''

''முடியாது...''

''முடிய வேண்டும். அண்ணா.. இவள் நான் சொல்வதைக் கேட்காவிட்டால் நடப்பதே வேறு.. சொல்லிவிட்டேன்.''



''குணவதி. நீங்கள் ஹாலுக்குப் போங்க. உங்க திங்களை கீழ் ரூமிற்கு மாற்றி விடுகிறேன். இனி கீழேயே நீங்கள் தங்கிக் கொள்ளுங்கள். மாடிப் பக்கம் வர வேண்டாம்.''

கபிலன் உத்தரவிட்டான். குணவதி திக்பிரமை பிடித்தவளாய் நின்று விட்டாள். அவள் கண் முன்னே உலகம் தட்டாமாலை சுற்றியது. அவளின் தடுமாற்றத்தை லட்சியம் செய்யாமல் கயல்விழியும் கபிலனும் மாடிக்குச் சென்று விட்டனர். அவள் அப்படியே படியில் அமர்ந்து விட்டாள்.

கபிலனின் அறைக்குள் போனதும் கதவை மூடித் தாழ் போட்ட கயல்விழி கபிலனைப் பார்த்துக் கனல் வீசக் கேட்டாள்.

''யார் அவள்..?''

''என் நண்பன் அன்பழகனின் தங்கை.''

''அவள் ஏன் இந்த வீட்டில் இருக்கிறாள்?''

''அவளுக்கென்று யாரும் இல்லை கயல்விழி. என் நண்பனும் இறந்து விட்டான். அவள் எங்கே போவாள்?''

''அறிவில்லாமல் பேசாதே... அடைக்கலம் இல்லாத அநாதைவங்களுக்கு அடைக்கலம் கொடுக்க நீ என்ன அநாதை விடுதியா நடத்துகிறாய்? இது வீடு.. இங்கு போய் ஒரு பெண்ணைத் தங்க வைத்திருக்கிறாயே... இதை ஏன் என்னிடம் நீ மறைத்தாய்...?''

''தெரிந்தால் நீ திட்டுவாய் என்று நினைத்தேன் கயல்.''

''திட்டுவேன் என்று தெரிந்தும் இதை நீ செய்திருக்கிறாய்... அவள் ஏன் தன்னை உன் பெண்டாட்டியாகப் போகிறவள் என்று சொல்கிறாள்?''

''ச்ச்.. அது ஒரு பெரிய கதை கயல்.. அன்பழகனுக்கு ப்ளட் கேன்ஸர்... அவனுக்கு ட்ரீட்மென்ட் எடுத்தும் அவனை என்னால் காப்பாற்ற முடியவில்லை. அவனுடைய கடைசி நேரத்தில் என் தங்கைக்கென்று யாரும் இல்லை. நீதான் அவளைக் காப்பாற்ற வேண்டும்.. அவளைக் கைவிட்டு விடாதே என்று சொல்லிவிட்டு செத்து விட்டான். எனக்கு அவனது வார்த்தைகளை கேட்டதும் மனம் தாங்கவில்லை கயல்விழி. எனக்கென்னவோ.. அவனையும் அவனது தங்கையையும் பார்க்கும்போது உன்னையும்.. என்னையும் பார்ப்பது போலவே இருந்தது.''

கபிலன் சொல்லச் சொல்ல 'கடவுளே...' என்று இருந்தது கயல்விழிக்கு.

'இவன் என்னை நினைத்து அந்தப் பரிதவிப்பில் அவளுடைய அண்ணனுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறான். அந்த பஜாரி இவனின் பரிதாபத்தை தனக்குச் சாதகமாய் பயன்படுத்திக் கொண்டிருக்கிறாள்...'

''நீ என்ன செய்தாய் அண்ணா..?''

''நான் என்னம்மா செய்வேன்? உன் தங்கையைப் பற்றிக் கவலைப்படாதே.. அவளை நான் பார்த்துக் கொள்கிறேன். அவளுக்கு நல்லதாக ஓர் வாழ்க்கையை அமைத்துத் தருகிறேன் என்று அவனிடம் சொன்னேன். ஆனால் அதன் பின்னால்தான் தெரிந்தது. குணவதி இறுதிக் காரியங்களில் கலந்து கொண்டு துக்கம் விசாரிக்க வந்தவர்களிடமெல்லாம் என் அண்ணன் கபிலனின் கையில் என் கையைப் பிடித்து என்னை அவரிடம் ஒப்படைத்து விட்டார் என்று சொல்லியிருக்கிறாள் என்பது...''



''அவள் திடீரென்று இப்படி சாவு வீட்டில் சொல்லியிருக்கிறாள் என்றால் அவளது மனதில் ஏதோ திட்டம் இருந்திருக்க வேண்டும்... ம்ம்... அவள் உன்னுடன் எப்படிப் பழகுவாள்?''

''அது... அது.. வந்து...''

''இந்த வந்து.. போயெல்லாம் வேண்டாம்.. சும்மா சொல்லு...''

''கொஞ்சம் வழிவாள் கயல்... இரண்டு பொருள் படப் பேசுவாள். அவளுக்கு என் மேல் காதல் என்பது போல் உளருவாள்.''

''நீ அதை மைண்ட் பண்ணிக் கொண்டதில்லையா?''

''ச்ச்... என் டேஸ்டை ஏன் இவ்வளவு மட்டமாக எடை போடுகிறாய்?''

''பின் ஏன் இவளின் சுமையை சுமக்கிறாய்?''

''நான் என்ன விரும்பியா சுமக்கிறேன்? இந்த ஏழெட்டு மாதங்களில் நூற்றுக் கணக்கில் அவள் முன் மாப்பிள்ளைகளைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டேன்... கல்யாணத்திற்கு சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாள். நீங்கள்தானே என் அண்ணனிடம் உன் தங்கையை நான் வாழ வைக்கிறேன் என்றீர்கள்... உங்களையே என் கணவனாக நினைத்துத்தானே என் அண்ணன் நிம்மதியாகச் செத்தான். இப்போது வார்த்தை தவறுகிறீர்களே.. நியாயமா.. என்று கேட்கிறாள்..''

''அடக்கடவுளே...''

கயல்விழிக்கு தன் அண்ணன் குணவதி என்ற சிலந்தியின் வலையில் சிக்கியிருப்பது புரிந்தது. நல்லவன இருந்ததற்கு இப்படி ஓர் தண்டனையா?



# 19

தாயில்லா குழந்தைகள் என்... என் சொல்கிறார்கள் என்று இப்போ... கயல்விழிக்குப் புரிந்தது. காக்க... தாயில்லாமல் தங்கையின் துணை... இல்லாமல் தனித்து நின்றதால்தானோ... தன் அண்ணனுக்கு இப்படி ஓர் நிலைமை வந்து விட்டது என்று நினைத்தாள் அவள். கபிலனின் மேல் அவளுக்குள் இரக்கம் சுரந்தது.

''நீ என்ன பதில் சொன்னாய் அண்ணா?''

''என்னவென்று சொல்ல... அருகில் உட்கார வைத்து இதமாய் எடுத்துச் சொல்லி விட்டேன். கோபமாய் கத்தி விட்டேன். எதற்கும் அவள் மசியவில்லை. இப்போது புதிதாய் ஒரு கதை சொல்கிறாள்...''

''என்னவென்று...''

''என்னுடன் ஒரே வீட்டில் ஏழெட்டு மாதங்களாய் இருந்து வருவதால் அவளை எல்லோரும் என்னுடைய தாலி கட்டாத மனைவி என்றே சொல்கிறார்களாம். இந்த நிலையில் நான் எப்படி இன்னொருவனை மணப்பேன் என்று கேட்கிறாள். நாளை என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவன் என்னைச் சந்தேகிக்க மாட்டானா? என்று அழுகிறாள். அதனால் ஒரு தடவை தூக்க மாத்திரையை வேறு சாப்பிட்டு விட்டாள்...''

''நீ டாக்டரிடம் தூக்கிப் போய் காப்பாற்றி இருப்பாய். டாக்டரும் தூக்க மருந்து சிறிதளவுதான் உடம்பில் கலந்திருக்கிறது. அதனால் காப்பாற்றி விட்டோம். என்று சொல்லியிருப்பார்...''

''அட... ஆமாம் கயல்விழி. எப்படிச் சரியாகச் சொல்லி விட்டாய்...''



''அட மக்கு அண்ணனே.. அவள் இரண்டு மூன்று மாத்திரைகளை விழுங்கி விட்டு நாடகமாடி இருக்கிறாள். அவளா சாகப் போகிறவள்?''

''என்னவோ... போ.. எனக்கும் அந்த சந்தேகம் இருக்கிறது.''

''பரவாயில்லை. உன் மூளை வேலை செய்து கொண்டுதான் இருக்கிறது. சுத்தமாய் மழுங்கவில்லை... நல்லவேளை... நான் பிழைத்தேன்...''

''ஆனால் பாரு கயல்விழி. இவள் என்னை மிரட்டுவதற்காக எதாவது செய்யப் போய் அது உண்மையாகி விட்டால்... அன்பழகனுக்கு நான் கொடுத்த வாக்கு என்னாவது?''

'கபிலனை எப்படி மிரட்டிக் கொண்டிருக்கிறாள் இந்த நயவஞ்சகி' மனதிற்குள் ஆத்திரப்பட்டாள் கயல்விழி. பின் மெதுவாகக் கேட்டாள்.

''இவளை மனதில் வைத்துக் கொண்டுதான் நீ அண்ணியின் காதலை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கிறாயா?''

''என்னை வேறு என்ன செய்யச் சொல்கிறாய் கயல்விழி? வானதி பூப்போன்றவள். அவளை குணவதி போன்ற குணம் கெட்டவளுடன் மோத விடச் சொல்கிறாயா? பார்த்தாயில்லை.. உன்னிடமே இவள் என்ன போடு போடுகிறாள் என்று.. வானதியை நா... கல்யாணம் பண்ணிக் கொள்ள இவள் விட்டு வி... வாளா?''

''இவள் விட மாட்டாள் என்பதால் நீ அண்ணி... விட்டு விடப் போகிறாயா?''

கயல் விழியின் கேள்விக்கு பதில் [illegible] மௌனம் சாதித்தான் [illegible].

"அண்ணா... நான் ஒன்று கேட்கிறேன். நீ [illegible] பதில் சொல்லு..."

"என்னம்மா..."

"ஒருவேளை... நீ குணவதியை மணக்க [illegible] வந்தால் என்ன செய்வாய்?"

"விளையாட்டுக்குக் கூட அப்படி ஓர் வார்த்தையை சொல்லாதே கயல்விழி. அப்படி ஓர் நிலைமை வந்தால் சொல்லாமல் எங்கேயாவது சென்று விடுவேன். அவள் என் நண்பனின் தங்கை. அதனால்தான் வீட்டை விட்டு விரட்டாமல் விட்டு வைத்திருக்கிறேன். குணவதி ஆயிரம் கங்காவிற்கு சமம். நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அம்மாவைப் போன்ற ஓர் பெண்ணைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன். 'அபிராமியின் மருமகள்' என்ற வார்த்தைக்கு குணவதி தகுதியானவள் கிடையாது."

கயல்விழிக்கு போன உயிர் மீண்டு வந்தது. 'அம்மாடி...' என்றிருந்தது. ஆசுவாசப் பெருமூச்சு விட்டவள் தமையனைப் பார்த்து,

"இவ்வளவுதானே... நீ ஏன் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டு ஓட வேண்டும்... அவளை எவனாவது ஒருவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து ஊரை விட்டு ஓட்டலாம். கவலைப்படாதே. ஆமாம்.. இவளுக்கு நூற்றுக் கணக்கில் மாப்பிள்ளை பார்த்தாயே... எல்லாமே உள்ளூரா... இல்லை வெளியூரா?"

"உள்ளூர் மாப்பிள்ளைகள்தான்..."



"இவளை உள்ளூரில் வைத்துக் கொண்டு நீ நிம்மதி[illegible] வாழ முடியுமா? தேவையில்லாத உரிமையைக் [illegible] கொண்டு அவள் கணவனுடன் உன் [illegible] மேல் ஏறிக் கொள்வாள்... அதனால் தொலை[illegible]... டில்லி போன்ற இடங்களில் மாப்பிள்ளை [illegible]... முடிந்தால் வெளிநாட்டு மாப்பிள்ளையைப் பார்..."

"அவள் கல்யாணத்திற்கு சம்மதிக்க வேண்டுமே..."

"எல்லாம் சம்மதிப்பாள். அதற்கு நானாச்சு. முதலில் அவளது ரூமைக் காலி பண்ணி கீழ் ரூமிற்கு அனுப்பி வை... இரண்டாவதாக நாளையிலிருந்து பேக்டரிக்கு நானும் உன்னுடன் வருவேன்."

"நீ படித்துக் கொண்டிருக்கிறாய் கயல்விழி..."

"வேலை நேரம் போக மற்ற நேரங்களில் நான் பேக்டரியில் இருப்பேன்.. எனக்கு உனக்குச் சமமான அதிகாரம் வேண்டும்..."

"பேக்டரியே உன்னுடையதுதானேம்மா..."

"அப்படியானால் பேக்டரியின் பவரை எனக்குக் கொடு..."

"செய்து விட்டால் போயிற்று... இப்போது நீ வா.. உனக்கு எந்த ரூம் வேண்டும்?"

சற்று நேரத்தில் குணவதியின் அறை வீட்டின் கீழ் பகுதிக்கு மாற்றப்பட்டது. மாடியில் அவளிருந்த அறையை பூட்டிச் சாவியை கயல்விழி வைத்துக் கொண்டாள். இன்னொரு அறையில் கயல்விழி தங்கிக் கொண்டாள். குணவதி அறைக்குள்ளே போய் அடைந்[illegible] படி திட்டம் போட ஆரம்பித்தாள். அதைப் பற்றி[illegible]

கவலைப்படாமல் கயல்விழியும்... கபிலனும் சாப்பிட அமர்ந்தனர்.

''என்ன சமைத்திருக்கீங்கம்மா...'' கயல்விழி கேட்டாள்.

''உங்களுக்கு என்ன பிடிக்கும்ன்னு தெரியாததால் இட்லி... தோசை.. பூரி.. இடியாப்பம்ன்னு எல்லா டிபனும் செய்திருக்கேன்ம்மா.. கொஞ்சம் இருங்க.. முதலில் இந்த அல்வாவைச் சாப்பிடுங்க. முதன் முதலில் இந்த வீட்டுக்கு சொந்தக்காரங்க மகாலட்சுமி போல் அடியெடுத்து வைத்திருக்கிறீங்க... இனிப்பைச் சாப்பிடுங்க...'' பரிவுடன் பரிமாறினாள் அன்னபூரணி.

''இந்த வீட்டில் வாழ வரும் மகாலட்சுமி இனிமேல் வருவாங்க... அவங்க வரும்போதும் நீங்க இதைப் போலவே ஸ்வீட் செய்ய வேண்டியிருக்கும்..'' கயல்விழி கபிலனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

''வருகிறவங்க மகாலட்சுமியென்றால் நீங்கள் இந்த வீட்டின் கிரஹலட்சுமியம்மா.. உங்கள் அண்ணன் தினமும் உங்களைப் பற்றித்தான் பேசுவார். நாங்க நினைத்தது போலவே நீங்களும் இருக்கீங்க...'' வந்தவுடனே குணவதியை அடக்கிவிட்ட கயல்விழியின் செயலை மெச்சியவாறு அன்னபூரணி கூறினாள்.

''கபிலன்...'' என்ற அதட்டல் ஒலி கேட்டது.

அது 'குணவதிதான்' என்பதை உணர்ந்த கயல்விழியும்.. கபிலனும் நிதானமாக ஏறிட்டுப் பார்த்தனர்.

''நான் ஒருத்தி இந்த வீட்டில் இருக்கிறேன் என்பதை மறந்து விட்டீர்களா?''

''என்ன விஷயம்?''



''நான் உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்.''

''ஏய்ய்.. நிறுத்து. உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? என் அண்ணனுடன் தனியாகப் பேச என்ன இருக்கிறது? எதுவாக இருந்தாலும் இனி என்னிடம் சொல்... அண்ணனிடம் பேசும் வேலையை வைத்துக் கொள்ளாதே...''

''நான் உன் அண்ணனுடன் இந்த வீட்டில் வாழ்கிறவள்.''

கபிலன் 'பார்த்தாயா...' என்பது போல் கயல்விழியைப் பார்க்க... அவளோ கண்களால் தமையனுக்கு சமிக்ஞை செய்தவாறு குணவதியிடம் கூறினாள்.

''என் அண்ணன் இருக்கும் வீட்டில் ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டு கிடக்கிறாய் என்று சொல்லு... அதை விட்டு வாழ்கிறேன் அது இதுவென்று பினாத்தினால் பல்லை உடைத்துக் கையில் கொடுத்து விடுவேன்.''

''கபிலன்... நான் தற்கொலை பண்ணிக் கொண்டால் என் அண்ணனுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது...''

கபிலன் எழப்போக கயல்விழி அதட்டினாள்.

''அண்ணா.. அடங்கி உட்கார்... அவள் இந்த வீட்டின் ஒரு மூலையில் கிடப்பதானால் நான் இங்கே இருக்கிறேன். இல்லாவிட்டால்.. நான் தூக்க மாத்திரை சாப்பிட்டு விடுகிறேன்... இது என் வீடு.. இங்கு முடிவு எடுக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே இருக்க வேண்டும் அண்ணா.. ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள். நான் இவளைப் போல மூன்று மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டு நாடகமாட மாட்டேன். விழுங்கினால்... முழு பாட்டில்தான்.''

"கயல்விழி..." பதறினான் கபிலன்.

"என்ன வார்த்தை சொல்லி விட்டாயம்மா. என் உடம்பில் உயிர் இருப்பது உனக்காக... நீயில்லாமல் நான் வாழ மாட்டேன். குணவதி... நீங்கள் என் நண்பனின் தங்கைதான். என்ன நீங்கள் செத்துப் போனால் கொஞ்ச நாள் என் மனதில் குற்ற உணர்ச்சி இருக்கும். அதன் பின் போய் விடும். என் இல்லை இப்போதுதான் என்னுடன் சேர்ந்திருக்கிறாள். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள். நீங்கள் இந்த வீட்டில் இருப்பதில் எனக்கு எப்போதுமே விருப்பம் கிடையாது. நான் உங்களுக்கு லேடீஸ் ஹாஸ்டல் ஒன்றில்தான் இடம் பார்த்துக் கொடுத்தேன். நீங்கள்தான் போக மறுத்து விட்டீர்கள்..."

'சாகிறாயா.. செத்துப்போ...' என்று சொல்லாமல் கபிலன் சொல்வது புரிய குணவதி செய்வதறியாது தவித்தாள். கபிலனை பயமுறுத்திக் கொண்டிருந்த அஸ்திரம் வீணாகிப் போனதை உணர்ந்தவள் அதற்குக் காரணமான கயல்விழியை முறைத்தாள். அவளோ,

"என்ன பார்க்கிறாய்? அல்வா வேண்டுமா?" என்று தன் தட்டிலிருந்து ஒரு விள்ளலை எடுத்து குணவதியிடம் நீட்டினாள்.



## 20

கயல்விழியின் கண்களில் தெரிந்த ஏளனத்தைக் கண்டு குணவதியின் ரத்தம் கொதித்தது. அன்னபூரணி ஜாடையாய் தன்னைக் கவனிப்பது புரிய பல்லைக் கடித்துக் கொண்டாள்.



'எனக்கே அல்வா கொடுக்கிறாயாடி... ஒதுக்கி வைப்பாயா?.. நான் ஒதுங்கிப் போனால்தானே நீ ஒதுக்கி வைப்பாய்...'

சட்டமாய் கபிலனின் அருகே அமர்ந்து தட்டைப் போட்டுக் கொண்டவள் அன்னபூரணியைப் பார்த்து அதிகாரமாய் அதட்டினாள்.

"அன்னபூரணி.. எனக்கு ஸ்வீட் பிடிக்காது.. பூரி கிழங்கு எடுத்து வை."

"அண்ணா.. நீயும் நானும் மட்டுமே சாப்பிடுவதாக இருந்தால் மட்டுமே நான் சாப்பிடுகிறேன். இல்லாவிட்டால் எனக்கு சாப்பாடே வேண்டாம்."

"பொறு கயல்விழி.. ஏன் எழுந்து போகப் பார்க்கிறாய்? குணவதி.. நீங்க உங்க ரூமிற்குப் போங்க. நாங்க சாப்பிட்டு விட்டுப் போனவுடன் வந்து சாப்பிடுங்க.. எழுந்து போங்க..."

"நான் போக மாட்டேனென்று சொன்னால்.. என்ன செய்வீர்கள்?"

கபிலன் கயல்விழியைப் பார்க்க.. அவள் தயங்காமல் பதில் சொன்னாள்.

"நீ அத்து மீறி என் வீட்டிற்குள் நுழைந்து கொண்டு அடாவடி செய்கிறாய் என்று போலீஸில் கம்ப்ளெயின்ட் கொடுப்பேன்..."

"என்ன... என்னையா போலீஸில் புகார் கொடுப்பாய்?"

"உன்னைத்தான் போலீஸில் புகார் கொடுத்து வீட்டை விட்டு வெளியே தள்ளுவேன். இது என் வீடு. இ... நான் பார்த்துக் கொண்டு வரும் அண்ணிக்குத்தான் இ...

வீட்டில் இடம் உண்டு. உனக்குக் கிடையாது. எழுந்து போகிறாயா.. இல்லை...?"

கயல்விழி செல்போனை கையில் எடுத்தாள். குண வதி அவசரமாய் எழுந்து அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

"அப்பாடா... இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது.. எப்படியண்ணா இவளுடன் உட்கார்ந்து சாப்பிட்டாய்?"

"தம்பி.. வீட்டில் சாப்பிட மாட்டாரம்மா.." அன்னபூரணி வேதனையுடன் கூறினாள்.

"என்னது... நீ வீட்டில் சாப்பிட மாட்டாயா?"

"ஆமாம் அம்மா.. என்றைக்கு இந்தப் பெண் பெட்டியும் கையுமாக வீட்டிற்குள் நுழைந்ததோ அப்போதிருந்து தம்பி வீட்டிலும் சாப்பிட மாட்டார் வீட்டில் தூங்கவும் மாட்டார். இரவு நேரங்களில் மெக்கானிக் ஷெட்டிலேயே படுத்துக் கொள்வார். சாப்பாடும் அங்கேதான்... காலையில் குளித்து உடை மாற்ற மட்டும் வீட்டுக்கு வந்து போவார். அதைத்தான் இந்தப் பெண் தம்பிகூட வாழ்கிறேன்னு பேசிக்கிட்டு அலையுது" அன்னபூரணி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"இது என்ன அண்ணா கொடுமையாக இருக்கிறது. கடல் போல் வீட்டைக் கட்டிப் போட்டுவிட்டு அநாதை போல் நீ ஷெட்டில் படுத்துக் கிடக்கிறாயா? இதற்காகவா சம்பாதித்தாய்?"

மறுநாள் பேக்டரிக்கு போய் பார்த்தபோது அங்கேயும் குணவதி கால் பதித்திருப்பது கயல்விழிக்குத் தெரிய வந்தது. ஒரு தனி அறையில் அமர்ந்து கொண்டு நிர்வாகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தாள்.



"இவளுக்கு இங்கே என்ன வேலை?"

"எனக்கொரு வேலை போட்டுக் கொடுங்கள் என்று கேட்டாள்."

"அதற்காக பேக்டரியையே அவளிடம் கொடுத்தாயா?"

"இல்லை கயல்விழி. அடி மட்டத்திலிருந்து வேலையைக் கற்றுக் கொள் என்று ஆபிஸ் கிளார்க்காகத்தான் அப்பாயின்ட்மென்ட் பண்ணினேன். அவள் அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரையே கிழித்துப் போட்டு விட்டாள்..."

"நல்ல வேளை.. தப்பித்தாய்.. இப்ப மேடத்திற்கு எந்த போஸ்டும் இல்லையே.. கன்பர்மாகச் சொல்லு.."

"இல்லை..."

"வெரிகுட்... எனக்கு பேக்டரியில் எந்த ஒரு முடிவையும் ஏற்படுத்தும் பவரைக் கொடு. முக்கியமான போஸ்ட் ஒன்றை எனக்காக உருவாக்கு.. உடனடியாக பேக்டரியில் மீட்டிங் அரேன்ஜ் பண்ணி என்னை அறிமுகப்படுத்து."

அடுத்த சில நிமிடங்களில் பேக்டரியின் லாயர் குணசேகரன் வந்து சேர்ந்தார். கயல்விழியின் கோரிக்கைகளைக் கேட்டதும்,

"குட்..." என்று மெச்சிக் கொண்டார்.. சற்று நேரத்தில் பேக்டரியில் அவசர மீட்டிங் கூடியது.

எல்லோரும் அவரவர் வேலையை விட்டு விட்டு பொது அரங்கிற்கு செல்வதைப் பார்த்த குணவதி அறையை விட்டு வெளியே வந்தாள். அதற்குள் மேடையில் கபிலனும் கயல்விழியும் ஏறியிருந்தனர். கபிலன் மைக்கில் அறிவித்தான்.

''என் பேக்டரியின் அனைத்து மட்ட பணியாளர்களுக்கும் இதை அறிவிக்கிறேன். இது எனது தங்கை கயல்விழி.. இன்றிலிருந்து இந்த பேக்டரியின் ஜெனரல் மேனேஜிங் டைக்டராக பொறுப்பேற்கிறாள். இனி பேக்டரியின் அனைத்து முடிவுகளையும் எடுக்கும் அதிகாரம் அவளுக்கு மட்டுமே உண்டு. எனக்குக் கூட கிடையாது. முறைப்படி சட்ட ரீதியாய் பவர் எழுதி அவளிடம் கொடுத்திருக்கிறேன். எனக்குக் கொடுத்த அனைத்து மரியாதைகளையும் அவளுக்கு இனி நீங்கள் கொடுக்க வேண்டும்...''

அனைவரும் பேசியபடி கலைந்து செல்ல குணவதி உறைந்து நின்றாள். முதல் முறையாக கயல்விழியின் புயல்வேக நடவடிக்கை அவளை அச்சுறுத்தியது.

'எத்தனை வருடங்களாக போட்ட திட்டம்... இப்படி பிசுபிசுத்து விட்டதே.

அன்பழகன் தன் நண்பர்களைப் பற்றிக் கூறும்போது ஆர்வமாகக் கேட்டுக் கொள்ளும் குணவதி.. கபிலனைப் பற்றிய பேச்சு வரும்போது மட்டும் முகம் சுளிப்பாள்.

''அவனைப் பற்றிய பேச்சை விடு அண்ணா.. அவன் ஆளும்.. அழுக்குப் பேண்ட்டும்.. சட்டையும்.. தாடி வைத்த மூஞ்சியும் பார்க்க சகிக்கவில்லை.''

சாதாரண மெக்கானிக் வேலை செய்து கொண்டு படித்தவனின் சகிக்க முடியாத அந்த மூஞ்சி. அவன் அந்த மெக்கானிக் ஷெட்டிற்கே உரிமையாளனாக மாறியதும் சகிக்கக் கூடியதாக மாறிப் போனது. பின்னாளில் அவன் சொந்தமாய் தொழிற்சாலை ஆரம்பித்து மடமடவென்று அவனது வாழ்க்கை தரம் உயர்ந்தபோது



கபிலனின் முகத்தைத் தவிர வேறு எந்த முகமும் அவளுக்குப் பார்க்கச் சகிக்கக் கூடியதாகத் தோன்றவில்லை.

அன்பழகன் கூட அதை அடிக்கடிக் குறிப்பிடுவான்.

''என்னம்மா.. கபிலன் பணக்காரனாக ஆன பின் அவனைப் பற்றி நிறைய விசாரிக்கிறாயே... என்ன விஷயம்?''

''போ.. அண்ணா.. உனக்கு எல்லாமே கேலிதான்...''

அந்த அன்பழகனின் சாவைத்தான் மிக புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டு கபிலனின் வீட்டிற்குள்ளேயே நுழைந்து விட்டாள் குணவதி. அன்பழகன் என்னவோ இறக்கும் தருவாயில் தங்கைக்கு உதவி செய்யக் கோரித்தான் வாக்குக் கேட்டான். கபிலனின் நல்ல குணம் அவனுக்குத் தெரியும். கபிலனும் நண்பனின் தங்கைக்கு பாதுகாப்பும்.. உதவியும் கொடுப்பதாகத்தான் வாக்களித்தான். ஆனால் அதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வீட்டிலேயே தங்க துக்க வீட்டிலேயே தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவள் குணவதி.

'அத்தனையும் எதற்காக... இந்த வீட்டையும்.. இதன் முடிசூடா பேக்டரியையும் அடைவதற்காக... இன்று அத்தனை மகாராணியாகத் திகழ்வதற்காக... இன்று அத்தனை முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகப் போவதா..'

ஒரே நாளில் கபிலனின் வீட்டையும் பேக்டரியையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து விட்டாள் கயல்விழி. வீட்டிற்குள் நுழைந்ததும் எப்படிக் குணவதியை ஒதுக்கி வைத்தாளோ.. அதே போல் பேக்டரியின் பொறுப்பில் அமர்ந்ததும் குணவதியை பேக்டரியை விட்டே வெளியேற்றினாள்.

தன் அறையில் தலையைப் பிடித்துக் கொண்டு யோசனையில் இருந்த குணவதியிடம்,

''மேடம் கூப்பிடுகிறார்கள்..'' என்ற தகவலுடன் வந்து நின்றாள் சியாமளா... கபிலனின் செக்ரட்டரி.

''மேடமா? யார் அது?'' வேண்டுமென்றே வினவினாள் குணவதி.

''ஜே.எம்.டி. மேடம்தான்...''

''ஜே.எம்.டி.யா.. அப்படியென்றால்...?''

''ஜாயின்ட் மேனேஜிங் டைரக்டர்...''

''வர முடியாது என்று போய் சொல்லு...''

குணவதி பேக்டரிக்குள் கயல்விழியை எதிர்த்து கலகம் பண்ணத் திட்டமிட்டாள். நான்கு பேர் புருவம் உயர்த்தி கபிலனைப் பற்றிப் பேச வேண்டும்.. அதைச் செய்யாமல் அடங்கியிருக்க அவள் தயாராக இல்லை.

''நீங்கள் வராவிட்டால் உங்களைக் குண்டுக் கட்டாய்த் தூக்கி வெளியே அனுப்ப எங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். லேடி செக்யூரிட்டிஸ் வாசலில் நிற்கிறார்கள். இந்த ரூமை செக்ரட்டரி ரூமாக மேடம் மாற்றியிருக்கிறார்கள். நீங்களாக எழுந்து கொண்டால் நான் உட்கார்ந்து வேலையைப் பார்க்க ஆரம்பிப்பேன்... இல்லையென்றால்... எப்படி வசதி குணவதி...?''

நேற்று வரை 'மேடம்' என்று அழைத்த சியாமளா இன்று பெயர் சொல்லி அழைத்ததும் குணவதி தன் ஆட்டம் முடிந்தது என்பதைப் புரிந்து கொண்டாள். இனி அவள் கலாட்டா பண்ண முடியாது... அவள் அவமானப்பட்டு வெளியேறுவதை மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பதற்கு முன் வெளியேறி விட வேண்டும்.



''கபிலன் எங்கே...'' போவதற்கு முன் கடைசி முயற்சியாய் தனது உரிமையை நிலை நாட்டு முயன்றவளாய் கேட்டாள்.

''கபிலனா.. நீ என்ன என் அண்ணனுக்கு பெயர் வைத்தாயா?'' என்று கேட்டவாறு உள்ளே வந்தாள் கயல்விழி.

சியாமளா நடப்பதை வேடிக்கை பார்க்க ஆரம்பிப்பதை உணர்ந்த குணவதி,

''அதை உன் அண்ணன் சொல்லட்டும்...'' என்றாள்.

''சொன்னானே... இப்போதும் தான் கூட்டம் போட்டுச் சொன்னான். இந்த பேக்டரியில் நான் எடுப்பதுதான் முடிவு என்று சொன்னான்.. இதன் சொந்தக்காரி இனி நான்தான். நீ என் அண்ணனின் பெயரைச் சொல்லக் கூடாது என்று நான் சொல்லுகிறேன். இந்த பேக்டரியை இனி நீ மிதிக்கக் கூடாது என்று நான் சொல்லுகிறேன்... போனால் போகிறது. தாய் தகப்பனில்லாத அநாதையென்று உன் அண்ணன் கூடப் படித்த பாவத்திற்காக ஒரு மனிதன் கருணை காட்டினால் நீ அவரையே பெயர் சொல்லி அழைப்பாயா? நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும்.. அது லொள் என்று தான் குரைக்குமாம்... உன் புத்தி உன்னை விட்டு எங்கு போகும்? நன்றி காட்டுவதை விட்டு விட்டு நீ தரமில்லாமல் ஆடுகிறாயா?''

''நான் இங்கே வேலை பார்க்கிறேன்...''

''என்ன வேலை? உன் அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் எங்கே?''

குணவதி விழித்தாள். ஆதாரமில்லாமல் செய்து விட்ட தன் அவசர புத்தியை நொந்து கொண்டே அவள்

பேக்டரியை விட்டு வெளியேறினாள். குணவதியின் கண் முன்னாலேயே அவளது சீட்டில் சியாமளா உட்கார்ந்து கொண்டாள்.

மின்னல் வேகத்தில் கயல்விழி தன் அண்ணனின் சொத்துக்களை காப்பாற்றி விட்டாள்.



## 21

“இதுதான் நடந்தது அண்ணி. நேற்று மாலையில் அண்ணனின் வீட்டிற்குள் நான் நுழைந்ததில் இருந்து இப்போது வரை நடந்தவற்றை நான் சொல்லிவிட்டேன். இனி என்ன செய்யலாம் என்பதை நீங்கள் யோசித்துச் சொல்லுங்கள்..” போனில் கயல்விழி வானதியிடம் கூறினாள்.

வானதி தலையைப் பிடித்துக் கொண்டாள். ஒரே நாளில் இத்தனை அதிர்ச்சிகளா?

“என்ன அண்ணி. எதுவும் பேச மாட்டேன் என்கிறீர்கள்?”

“என்னத்தைப் பேசச் சொல்லுகிறாய்.. இனிப் பேச என்ன இருக்கிறது?”

“எதுவுமே இல்லையா?” கயல்விழி ஆழ்ந்த குரலில் வினவினாள்.

“கயல்... உன் அண்ணனின் வீட்டில் ஒரு பெண் ஏழெட்டு மாதங்களாய் தங்கி இருந்தது சாதாரண விஷயமில்லையே...”

“அண்ணி.. நீங்கள் ஏன் கலையரசிற்கு ஆதரவு காட்டினீர்கள்? அவன் யாருமில்லாத அநாதை என்றுதானே... அதே போல் தானே என் அண்ணனும் அவள்



மேல் கருணை காட்டினான்? உங்கள் வீடு உங்களது கன்ட்ரோலில் இருந்திருந்தால் நீங்கள் கலையரசை உங்கள் வீட்டிற்குக் கூப்பிட்டுக் கொண்டு போயிருப்பீர்கள்தானே... இல்லையென்று உங்களால் சொல்ல முடியுமா? அண்ணனும் அதைத்தானே செய்தான்?”

“கயல்.. அதை என்னிடம் ஏன் மறைத்தார்?”

“மறைக்க நினைத்திருக்க மாட்டான். சொல்ல சங்கடப்பட்டிருப்பான்...”

“என் காதலை ஏன் ஏற்க மறுத்தார்? அவளுக்கு ஒரு வேளை வாழ்க்கை கொடுக்க வேண்டி வந்து விடுமோ என்றுதானே...”

“அண்ணி.. அண்ணன் சந்நியாசம் வாங்கிக் கொண்டு ஊரை விட்டு ஓடினாலும் ஓடுவானேயொழிய அவள் கழுத்தில் தாலி கட்ட மாட்டான்.”

“உண்மையாகவா சொல்கிறாய்?”

“உண்மையாகச் சொல்கிறேன்...”

“உறுதியாகச் சொல்கிறேன்...”? 

“எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்?”

“நானாகச் சொல்லவில்லை அண்ணி... நீங்கள் என்னிடம் கேட்ட கேள்வியை உங்களுக்கு முன் அவனிடம் கேட்டு விட்டேன்... அவன் எனக்குச் சொன்ன பதில்தான் இது...”

வானதியின் மனதில் பாரம் கொஞ்சம் குறைந்தது.

“ஆனாலும் அவர் என்னிடமிருந்து விலகித்தானே போனார்?”

“அவன் விலகிய லட்சணம் எனக்கும் தெரியும்... உங்களுக்கும் தெரியும். அண்ணி... உங்களை என்

அண்ணியென்று அவன் வாயால்தானே சொன்னான். அவளை அவளுடைய பெயரைச் சொல்லித்தான் அறிமுகப்படுத்தினான். வா... போவென்று அவனை அந்தக் கிழிகிழித்துக் கொண்டிருக்கிறேன்... பேசாமல் இருக்கிறான். இதிலிருந்தே உங்களது உரிமையின் அளவுகோல் தெரியவில்லையா? அவன் நல்ல மனதுடன் உதவி செய்யப்போக அதுவே அவனுக்கு வினையாக முடிந்து விட்டது அண்ணி.

அவன் பாவம்.. மாட்டிக் கொண்டு விழிக்கிறான்.. தெரியாமல்தான் கேட்கிறேன்... இதுவே என் அண்ணன் உங்களுடைய கணவனாக ஆன பின் இப்படி ஒர் சிக்கலில் மாட்டியிருந்தால் நீங்கள் கைகழுவி விடுவீர்களா? காப்பாற்ற மாட்டீர்களா?''

வானதி தவித்துப் போனாள். கயல்விழி கூறுவதில் உள்ள நியாயம் பிடிபட்டது.

''என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்...?''

''அண்ணனிடம் மனம் விட்டுப் பேசுங்கள். இரண்டு பேரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவை எடுங்கள்...''

''யோசிக்கிறேன்...'' வானதி போனைத் துண்டித்தாள்.

''என்னடி?'' ஆவலாய் வினவினாள் கிரிஜா.

வானதி சொல்லச் சொல்ல கிரிஜாவின் முகத்தில் ஆச்சர்யம் அப்பியது.

''அப்படியா விஷயம்? குணவதி இப்படி ஒரு கிரிமினலாய் பிளான் போட்டிருக்கிறாளா? நான்கூட கபிலனைத் தவறாக நினைத்து விட்டேன்.''

''இப்போது என்ன செய்வது கிரிஜா?''



''கபிலனிடம் பேசிப் பார்.''

''எங்கே சந்திப்பது... இது வரை தனியாக வெளியில் சந்தித்துப் பழக்கம் இல்லை... கயல்விழியைப் பார்க்க வரும் போது மொட்டை மாடியில் சந்தித்து இருக்கிறேன். கலையரசைப் பார்க்கப் போகும்போது மெக்கானிக் ஷெட்டில் சந்தித்து இருக்கிறேன்.''

''எப்போதும் கூட ஒரு ஆளை வைத்துக் கொண்டு பேசினாயா? இதுதான் நீ காதல் செய்த லட்சணமா?''

''அவர்தான் காதலைச் சொல்லவே இல்லையே...''

''சொல்ல வைப்போம்.''

''ச்ச்... நான் அவரிடம் காதலை வற்புறுத்த மாட்டேன் கிரிஜா...''

''போடி.. இவளே.. முதலில் கபிலனைப் பார்த்துப் பேசு... அதன் பின் ஒரு முடிவிற்கு வா...''

''இதற்கு முன்னாலாவது கயல்விழியை பார்க்க வருவார். மொட்டை மாடியில் பார்த்துக் கொள்வோம். இப்போது என்ன செய்வது?''

''என் வீட்டில் வைத்து பார்த்து பேசிக் கொள்வது...''

''என்னடி சொல்கிறாய்?''

வானதி கண்களில் ஒளி வீச நிமிர்ந்தாள். கிரிஜா சிரித்தாள்.

''என் கணவருக்கு என் மேல் ரொம்ப நாளாக வருத்தம். நான் கபிலனுக்கு ஒரு கப் டீ போட்டுக் கொடுத்ததில்லையென்று... நாளைக்கு வீட்டுக்கு டீ சாப்பிட வரச் சொல்லி விட்டால் சரியாகப் போயிற்று.''

மறுநாள் மாலையில் அலுவலகம் முடிந்து வீடு திரும்பிய வானதி உடை மாற்றாமல் தன் அறைக்குள்

அமர்ந்திருந்தாள். செல்போன் ஒலித்தது. அவசரமாக பேசினாள். கிரிஜாதான்.

"அம்மா.. கிரிஜா வீட்டிற்குப் போய் விட்டு வந்து விடுகிறேன்" யசோதாவிடம் கூறிவிட்டு கிரிஜாவின் வீட்டிற்குள் நுழைந்தாள். வாசல் கதவை அடைத்தாள் கிரிஜா.

"கெஸ்ட் ரூமில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள் வா" என்று அழைத்துக் கொண்டு போனாள்.

கிரிஜாவின் கணவன் சரவணனுடன் பேசிக் கொண்டிருந்த கபிலன் வானதியைப் பார்த்ததும் கண்கள் மின்ன தலையை அசைத்தான்.

"ஹலோ..." என்றபடி எழுந்து கொண்ட சரவணன்,

"பேசிக் கொண்டிருங்கள்..." என்றபடி அறையை விட்டு வெளியேறி விட்டான்.

போகும்போது சும்மாவும் போகாமல் அவன் கதவை அடைத்து விட்டுப் போக வானதி தர்ம சங்கடம் அடைந்தாள்... கபிலனோ அவளது முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இதற்கு முன் இப்படிப்பட்ட தனிமை கிடைத்ததில்லை என்பதை அவன் மனம் உணர்ந்தது.

கபிலனின் பார்வையை உணர்ந்த வானதி முகம் சிவக்க ஜன்னலின் அருகே சென்றாள்... தூரத்தில் கடல் தெரிந்தது.. அதைப் பார்த்துக் கொண்டிருந்தவளின் காதருகே,

"கடலை ரசிக்கத்தான் இங்கு வந்தாயா?" என்ற கபிலனின் குரல் கேட்டது.. பதறித் திரும்பியவள் அவன் மிக அருகே நின்று கொண்டிருப்பதை உணர்ந்தாள்.



விலக மனமில்லாமல் அப்படியே நின்று அவன் முகம் பார்த்தாள். அவளது கண்களில் கலக்கம் இருந்தது... அதையும் மீறி எல்லையற்ற தாபம் இருந்தது. எதையோ சொல்லத் துடித்த இதழ்களுடன் அவளிடம் எதையோ நாடி இறைஞ்சின கண்களுடன்.. தெரியாமல் தவறு செய்து விட்ட சிறுவன் அன்னையின் முன் அஞ்சி நிற்பவன் போல் அவள் முன்னால் நின்று கொண்டிருந்தான் அவன். அவள் மனம் உருகி விட்டது.

'என் அண்ணன் உங்களுடைய கணவனாக ஆன பின்னால் இப்படி ஓர் சிக்கலில் மாட்டியிருந்தால் நீங்கள் கை கழுவி விடுவீர்களா? காப்பாற்ற மாட்டீர்களா?'

கயல்விழியின் கேள்வி மனதில் ஒலித்தது. கபிலனின் கண்களில் தெரிந்த தவிப்பு புரிந்தது. தன்னையும் அறியாமல் அவனை நோக்கி இரு கைகளையும் நீட்டினாள் வானதி.

அடுத்த விநாடி அவளது இரு கரங்களையும் பற்றி இழுத்த கபிலனின் கரங்கள் அவளை ஆரத் தழுவிக் கொண்டன. யாரிடம் யார் தஞ்சமடைந்திருந்தார்கள் என்று சொல்ல முடியாமல் இருவருமே ஒருவரிடம் ஒருவர் தஞ்சமடைந்திருந்தனர்.

தன் மார்பில் முகம் புதைந்திருந்த வானதியின் முகம் நிமிர்த்திப் பார்க்க முயன்றான் கபிலன். அவள் கண் இமைகளை நடுக்கத்துடன் மூடிக் கொண்டு அவனது தோள் வளைவில் முகம் புதைத்தாள். அவளது கூந்தலில் முகம் புதைத்த கபிலனின் மனம் சொல்லில் வடிக்க முடியாத அளவிற்கு எல்லையற்ற உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருந்தது.

'இவள் எனக்கே எனக்கா...' அவனது நெஞ்சம் பெருமிதத்தில் விம்மியது. மீண்டும் அவளது முகத்தை உயர்த்த முயன்றான். அவள் இமை மூடி கண்களை சுருக்கிக் கொள்ள... அவளது வெட்கத்தினால் கவரப் பட்டவன் புன்னகையோடு அவளது இமைகளின் மீது முத்தங்களைப் பதித்தான். அதைத் தாங்க முடியாமல் உணர்ச்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட வானதி இதழ் கடித்து உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள். அவளது முயற்சியைக் கண்டு கபிலனின் புன்னகை மேலும் விரிந்தது. அவளது துடிக்கும் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்தான் அவன். வானதி தொய்ந்து அவன் மேல் சரிந்தாள். அவளைத் தாங்கிக் கொண்டவன் அணைவாய் நடத்திச் சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்து அருகில் அவளை அமர வைத்துக் கொண்டான்.

முகம் நிமிர்ந்து பார்க்க முடியாதவளாய் அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டவளின் காதருகே குனிந்து,

''வானதி...'' என்று மெதுவாக அழைத்தான் கபிலன்.

''ம்ம்...'' அவள் பேச முடியாதவளாய் முணுமுணுத்தாள்.

''என்னைப் பார்க்க மாட்டாயா?...''

''.........''

''என்னுடன் பேச மாட்டாயா?''

''..........''

''ஐ லவ் யூ... வானதி...''



அவள் சட்டென்று தலை உயர்த்தி அவனையே பார்த்தாள். அவளது வெட்கத்தை மீறி கண்கள் கலங்க இமைக்காமல் அவனைப் பார்த்தவள்,

''இதைச் சொல்ல இத்தனை நாட்களா?'' என்று உதடு துடிக்கக் கேட்டாள்.

அவன் குற்ற உணர்வுடன் அவளை விட்டு விலகி அமர்ந்தான்.

'விலகுகிறானே...' என்று மனம் துடித்தாலும் வானதி அசையாமல் கை விரல்களை ஆராய்ந்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

இருவருக்குமே ஒருவரிடம் ஒருவர் கேட்க ஆயிரம் கேள்விகள் இருந்தன. ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள ஆயிரம் விளக்கங்கள் இருந்தன.



## 22

ஜன்னல் வழியாக வீசிய கடல் காற்று அவர்களது மேனியைத் தொட்டுத் தழுவிச் சென்றது. வானதியின் மேனி சிலிர்த்தது. அவளது மனதில் ஓர் இனிமையான பழைய பாடல் ஒலித்தது.

'உன்னைத் தொட்டக் காற்று வந்து என்னைத் தொட்டது..'

அவளது மனத்தை முகத்தில் படித்த கபிலனின் இமைகள் கேள்வியாய் மேலே எழும்பின. அவள் 'ஒன்றுமில்லை'யென்று தலையை ஆட்டினாள்.

''நான் நம்ப மாட்டேன்..'' என்றான் அவன்.

''இல்லை... சும்மா.. ஓர் பழைய பாடல் நினைவுக்கு வந்தது...''

"என்ன பாட்டு?"

"அவள் முதலிரண்டு வரிகளை மெல்லிய குரலில் பாடிக் காட்டினாள்.

"அவ்வளவு தானா... முழுதாய் பாடு..." அவன் விழிகள் மயங்கக் கேட்டான்.

"அது சரி... இங்கே பேச வந்தோமா.. இல்லை நான் பாட நீங்கள் கேட்க வென்று பாட்டுக் கச்சேரி நடத்த வந்தோமா?"

"இரண்டும் தான்... முதலில் என் செவி குளிர நீ பாடு..."

"கிரிஜா என்ன நினைத்துக் கொள்வாள்...?"

"ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டாங்க... ஆனா சரவணனை மயக்க இப்படி ஒரு வழி இருக்கிறதா என்று உன்னிடம் பாட்டு டியூசன் எடுத்துக் கொள்ள வரப் போகிறாங்க பாரேன்."

"போதும்... ரொம்பத்தான் என்னை கிண்டலடிக்காதீர்கள்."

"ச்ச்.. பாடு வானதி.. ப்ளீஸ் எனக்காக..."

அவன் அவள் அருகில் நெருங்கி அமர்ந்து தோள் மீது கை போட்டு லேசாய் அணைத்துக் கொண்டான். வானதி மயங்கினாள்... மயங்கும் மனம் தூண்ட மெல்லிய குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி பாடினாள்.

'உன்னைத் தொட்டக் காற்று வந்து
என்னைத் தொட்டது...
அதுவே போதுமென்று பெண்மையுன்னைக்
கேட்டுக் கொண்டது...



வரலாம்... தொடலாம்... மணநாள் வரும்போது...
தருபவன்.. எனைநான்..
பக்கம் நீ வரும்போது...'

அவள் பாடி முடித்ததும் கிறங்கிப் போன கபிலன் அவளது விரலோடு விரல் கோர்த்துக் கொண்டு அவளது காதோரம் குனிந்து கேட்டான்.

"அப்போ.. மணநாள் வந்தால்தான் உன்னருகில் வர முடியுமா? தொட முடியுமா? இல்லாவிட்டால் நெருங்க விட மாட்டாயா..."

'என்னவோ ஏழு மைல் தள்ளி அமர்ந்திருப்பதுபோல கதை விடுவதைப் பாரேன்... கள்ளன்... பக்கத்தில் அமர்ந்து என் தோள் தொட்டு கேட்கும் கேள்வியா இது...' வானதி மனதிற்குள் நகைத்துக் கொண்டாள்.

"என்ன வானதி பதில் சொல்ல மாட்டாயா?"

"இப்படிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல?"

"இப்படி என்றால் எப்படி?" அவன் புரியாதவன் போல் வினவினான்.

'உனக்கு இவ்வளவு கள்ளத்தனம் தெரியுமா...?' அவனது கள்ளத்தனத்திலும் அவள் மயங்கினாள். அவளது மயக்கத்தை அவளது விழி உணர்த்த அவன் விழிகளில் காதல் வந்தது.

"கேள்... வானதி."

"எதைக் கேட்க..."

"நீ என்ன கேட்கவென்று நினைத்து என்னை வரவழைத்தாயோ... அவற்றைக் கேள். நான் பதில் சொல்கிறேன். நான் உனக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டவன்... உனக்கு மட்டுமே கடமைப்பட்டவன்."

''இது என்ன புதுக்கதையாய் இருக்கிறது. நான் உங்களை வரவழைத்தேன். இது என்ன என் வீடா?''

''என் நண்பனின் வீடுதான். அத்தோடு உன் தோழியின் வீடும் இதுதானே... இத்தனை நாட்களாய் இல்லாமல் இன்று மட்டும் டீ சாப்பிட வரும்படி சரவணன் வேலை மெனக்கெட்டு எனக்குப் போன் பண்ணி என்னை இங்கு வரவழைப்பானேன்? நான் வந்த சில நிமிடங்களில் நீயும் வந்து நிற்பானேன்?''

இப்போது அவனது கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவள் அவனது மார்பில் செல்லமாய் குத்தினாள். அவன் சிரித்தான்.

''இதையெல்லாம் யூகம் பண்ணுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை... சும்மா இருந்தவளை மயக்கி காதல் சொல்ல வைத்துவிட்டு... எனக்கென்ன என்று விலகிப் போனவர்தானே நீங்கள்...''

''விலகிப் போனேனென்று சொல்லாதே.. அடித்து விடுவேன்...''

''அடிப்பீர்களோ... நான் கருணாகரனின் மகளாக்கும்...''

''அது நேற்றோடு...''

''இன்று என்னவாம்...''

''எல்லாமே மாறிப் போய்விட்டது...''

''எனக்கொன்றும் அப்படித் தோன்றவில்லையே...'' அவள் குறும்பாக நகைக்க... சட்டென்று குனிந்து அவளது கன்னத்தில் இதழ் பதித்தான் கபிலன்.. அவள் பேச்சிழந்தாள்.



''இப்போது சொல்... நீ யார்? கபிலனின் காதலியா... இல்லையா?''

அவள் பதில் சொல்லாமல் அவனது சட்டையின் பித்தானைத் திருகினாள்.

''இப்போது என் என் முகம் பார்க்காமல் சட்டைப் பொத்தானை பிய்த்துக் கொண்டிருக்கிறாய்? தொட்டதற்கெல்லாம் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தால் நான் என்ன செய்வது...''

அவள் பதில் சொல்லாமல் உண்மையிலேயே அவனது சட்டைப் பொத்தானை பிய்த்து எடுக்கும் உத்தேசமுள்ளவள் போல இன்னும் பலமாய் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க... கபிலன் அவளது கைகளைப் பிடித்து அவளது வேலையை நிறுத்தினான்.

''சொல் வானதி... உனக்கு என்ன தெரிய வேண்டும்?''

''ஏன் என்னிடமிருந்து மறைத்தீர்கள்...?''

எந்த விதமான முஸ்தீபும் இல்லாமல் நேரடியாய் கேள்வி கேட்டாள் அவள். கபிலன் அவள் முகம் பார்த்துப் பதில் சொன்னான்.

''உன்னிடம் ஏன் சொல்லவில்லையென்று கேள். பதில் சொல்கிறேன். மறைத்தேன் என்று நினைக்காதே... கேட்காதே... இதில் மறைக்க என்ன இருக்கிறது...? அன்பழகன் என்னுடைய நண்பன்.. சரவணனுடனும் என்னுடனும் ஒன்றாகப் படித்தவன்.. என்னைப் போல் தாய் தகப்பனில்லாதவன்... சாகக் கிடந்த கடைசி வினாடியில் தங்கையை நினைத்து கலங்கும்போது அவனிடம் நான் என்ன சொல்லியிருக்க வேண்டும்

என்று நீ நினைக்கிறாய்.. சொல்லு.. நீ அந்த நிலைமையில் என்ன சொல்லியிருப்பாய்..''

வானதி யோசித்தாள். 'அவள் என்ன சொல்லியிருப்பாள்?'

''நீ கவலைப்படாதே.. உன் தங்கையின் எதிர்காலத்திற்கு நான் பொறுப்பு என்று சொல்லியிருப்பேன்..''

''அதைத்தானே நானும் சொன்னேன்...?''

''ஆனால் அவளை உங்கள் வீட்டில் வைத்துத்தான் காப்பாற்ற வேண்டுமா? வெளியில் பார்ப்பவர்கள் உங்களைத்தானே தவறாகப் பேசுவார்கள்..?''

''நான்தான் அவளை வீட்டிற்கு வரும்படி அழைத்தேனென்று நீயாய் முடிவு பண்ணிக் கொள்வதா? நான் அவளை லேடீஸ் ஹாஸ்டலில் தான் சேர்க்க எண்ணினேன். அவளுக்கு ஹாஸ்டலில் இடம் பார்த்து விட்டு அன்பழகனின் வீட்டிற்கு அவளைத் தேடிப் போனால் அவள் வீட்டைக் காலி பண்ணி விட்டு என் வீட்டிற்கு போவதாக தெரு பூராவும் சொல்லிவிட்டு என் வீட்டிற்கு வந்து சட்டமாக உட்கார்ந்திருக்கிறாள். லேடீஸ் ஹாஸ்டலுக்கு நான் ஏன் போக வேண்டும்? நானென்ன அநாதையா? எனக்குத்தான் நீங்கள் இருக்கிறீர்களே என்று சொல்கிறாள்...''

''அப்போதே கயல்விழியிடம் சொல்லியிருக்கலாமில்லையா?''

''கயல்விழிதான் கங்காவின் மேல் பாசமாய் இருந்து கொண்டு என்னுடன் வர மறுத்தாளே... நான் கதை சொல்கிறேன் என்றுதானே அவள் நினைத்திருப்பாள்?''

''எல்லாவற்றிற்கும் நீங்களாகவே ஒரு காரணம் ...ற்பித்துக் கொண்டு இருந்தால் எப்படி கபிலன்?



அட்லீஸ்ட் என்னிடமாவது சொல்லி யோசனை கேட்டிருக்கலாமில்லையா?''

''நீ என்னைத் தவறாக நினைத்து விட்டால் என்ன செய்வது? தவிரவும் நீ எனக்கு அறிமுகம் ஆகும்போதே அவள் என் வீட்டில்தான் இருந்தாள் வானதி... உன்னைப் பார்த்த பின்... உன்னிடம் என் மனம் மயங்க ஆரம்பித்த பின்.. நான் விலகித்தான் போனேன்.. ஏன் தெரியுமா? அவளுக்கு ஒரு வழி செய்து வீட்டை விட்டு அனுப்பாமல் உன்னிடம் காதல் சொல்வது தவறு என்று எனக்குத் தோன்றியதால்...''

''இப்போது ஊர் உங்களைத் தவறாக நினைக்கிறதே கபிலன். அவளுடன் ஒரே வீட்டில் தங்குவதை நீங்கள் தவிர்த்திருக்க வேண்டும்.''

''நான் தவிர்க்கவில்லையென்று உனக்குத் தெரியுமா? அவள்தான் என்னுடைய வீட்டில் இருக்கிறாள். நான் மெக்கானிக் ஷெட்டில் தான் இருக்கிறேன். அவள் வந்த பின்னால் வீட்டில் நான் தங்குவதும் இல்லை. சாப்பிடுவதும் இல்லை...''

''இதை ஊரில் உள்ள ஒவ்வொருவரிடமும் சொல்ல முடியுமா? ஊர் இதை நம்புமா?''

''ஊர் என்னை நம்ப வேண்டுமென்ற அவசியம் எனக்கில்லை. நீ என்னை நம்புகிறாயா. இல்லையா...?''

''கபிலன்... உங்களை நம்பாமல் யாரை நம்பப் போகிறேன்?''

''அப்புறம் ஏன் கேள்வி மேல் கேள்வி கேட்கிறாய்? சிக்கலில் மாட்டி இருக்கிறேன். காப்பாற்ற முடிந்தால் காப்பாற்று...''

கபிலன் பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்கவும் கயல்விழிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"ஏன் சிரிக்கிறாய்...?"

"இல்லை... வழக்கமாய் வில்லனிடம் மாட்டிக் கொள்ளும் ஹீரோயினை ஹீரோ வந்து காப்பாற்றுவான். இங்கு கதை மாறுகிறதே..."

"வில்லியிடம் ஹீரோ மாட்டிக் கொண்டு ஹீரோயினிடம் காப்பாற்றச் சொல்லிக் கெஞ்சுகிறாரா..." கபிலன் ரசித்துச் சிரித்தான்.



23

வானதியும், கபிலனும் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டனர். வானதியின் விழியின் மனக் கண்ணில் கற்பனை விரிந்தது. கபிலன் தப்பி ஓடுகிறான். ஒரு குதிரையின் மீது ஏறி முகம் தெரியாத யுவதி ஒருத்தி அவனைத் தூக்குகிறாள்.

"என்ன ஆச்சு.. கற்பனை பண்ணிப் பார்த்தாயிற்றா?"

"எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

"அதற்கு ஏன் கண்களை அகல விரிக்கிறாய்? இதைக் கண்டு பிடிக்க முடியாதா? முகத்தில் அப்படியே ஜொலிப்பு தெரிகிறதே... என்னை ஓட விட்டு அவளைத் தூக்க கற்பனை செய்ததில் அவ்வளவு சந்தோசம் உனக்கு... ம்...?"

அறைக் கதவு நாசுக்காய் தட்டப்பட வானதி அவசரமாய் எழுந்து அவனுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள். அறைக்கதவைத் திறந்து கொண்டு சரவணன். கிரிஜா பின் தொடர உள்ளே வந்தான்.



கிரிஜாவின் கையில் ஜூஸ் நிரம்பிய தம்ளர்கள் கொண்ட ட்ரே இருந்தது.

"பேசி விட்டீர்களா?" புன்னகையுடன் கேட்டபடி கபிலனுக்கும் வானதிக்கும் ஜூஸ் தம்ளர்களை கொடுத்து விட்டு... வானதியின் அருகே அமர்ந்து கொண்ட கிரிஜா கேட்டாள்.

"பேசி விட்டோம் கிரிஜா."

"என்ன முடிவு செய்தீர்கள்?"

"என்ன முடிவு எடுப்பது? இவர் அவளிடம் இருந்து என்னைக் காப்பாற்று என்று கேட்கிறார்."

கிரிஜா கபிலனை விட்டு விட்டு சரவணனை முறைத்தாள். அவன் திகைத்தான். 'இவள் ஏன் இப்படிப் பார்க்கிறாள்?'

"என்னை ஏண்டி முறைக்கிறாய்? நான் அன்பழகன் கூடவே அளவோடுதான் பழகுவேன். அந்தப் பெண்ணிடம் பேசக்கூட மாட்டேன். நான் கெடுத்தினை விரதன் கிரிஜா... என்னைச் சந்தேகப்படாதே" அவன் கெஞ்சிய விதத்தில் வானதியே வாய்விட்டுச் சிரித்து விட்டாள்.

"ஏண்டி அவரை இந்த மிரட்டு மிரட்டி வைத்திருக்கிறாய்?"

"அப்புறம் உன்னைப் போல் லூசில் விட்டு விட்டு பிடிக்க முடியாமல் அலையச் சொல்கிறாயா? நான் ஒன்றும் இவரை தேவையில்லாமல் முறைக்கவில்லை. உள்ளவரை நான் எப்படி முறைக்க முடியும்? அதனால் இவரை முறைத்தேன்."

சரவணன் தெளிய கபிலன் வியப்பாக கிரிஜாவைப் பார்த்தான்.

"எங்க... திட்டுவதாக இருந்தால் [illegible] திட்டுங்க... உங்களுக்கு அந்த உரிமை உண்டு... [illegible] சரவணன். தான் உண்டு.. தன் வேலையுண்டு [illegible] இருக்கிறவன்... அவனைப் போய் திட்டாதீர்கள்... [illegible] மாட்டான்..." கபிலன் கிரிஜாவைப் பார்த்துக் [illegible]

"போதும்... போதும்.. அவரைப் பார்த்தாவது [illegible] கற்றுக் கொள்ள வேண்டாமா? வம்பை யாராவது [illegible] கொடுத்து வாங்குவார்களா?" கிரிஜா நேரடியாக [illegible] கபிலனை கடிந்து கொண்டாள்.

"மாட்டார்கள்தான்... நான் வம்பு என்று நினை[illegible] வில்லையே... உதவி என்றுதானே நினைத்தேன்..."

"கேளுடி உன் வருங்காலக் கணவர் சொல்வதை... அந்தக் குணவதி சம்பந்தப்பட்ட எதுவுமே வம்புதான்... ஒரு ஆண் பிள்ளைக்கு முன் யோசனை வேண்டாமா?"

"விடு கிரிஜா... இவர் முகத்தைப் பார்த்தால் ஏமாந்த சோணகிரி என்று எழுதி ஒட்டியிருக்கிறதே... சும்மாவா அவள் இவர் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இவரை வீட்டை விட்டு துரத்தியிருக்கிறாள்."

"அதைச் சொல்லுடி.. ஒரு ஆண் பிள்ளைக்கு தைரியம் வேண்டாமா? இப்படியா ஒரு பெண்ணுக்குப் பயந்து கொண்டு சொந்த வீட்டை விட்டு வெளியேறுவது... நல்ல ஆளைக் காதலித்தாய் வானதி..."

"அதை ஏண்டி.. கிரிஜா கேட்கிறாய்.. இந்த லட்சணத்தில் அவளிடமிருந்து இவரை நான் காப்பாற்ற வேண்டுமாம்."

சரவணனும் கபிலனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



"என்னடா சரவணா.. இதற்குத்தான் என்னை வரச் சொன்னாயா?"

"எனக்கென்னடா தெரியும். இப்படி பெண்கள் கூட்டணி போட்டுக் கொண்டு உன்னை காய்ச்சி எடுப்பார்கள் என்று."

"ஒரு திட்டத்தோடுதான் இவர்கள் இருந்திருக்கிறார்கள்டா."

"அதிலும் என்னைப் பகடைக்காயாய் யூஸ் பண்ணி உன்னை இங்கே வரவழைத்திருக்கிறார்களே..."

"மாஸ்டர் மைண்ட் யார்... உன் மனைவியா?"

"சேச்சே... அவளுக்கு இப்படியெல்லாம் யோசிக்கக் கூடத் தெரியாது. அவள் குழந்தைடா... மாஸ்டர் மைண்ட்.. உன் ஆளாக இருக்கும்."

"அவளா.... அவள் பச்சைக் குழந்தைடா.. உன் மனைவிக்கு யோசிக்கத்தான் தெரியாது.. அவளுக்கு இப்படியென்று சொல்லிக் கொடுத்தால் கூட கேட்டுக் கொள்ளத் தெரியாது."

"என் கிரிஜா இன்னொஸெண்ட்..."

"என் வானதி... இன்னொஸெண்டிலும் இன்னொஸெண்ட்."

கிரிஜாவும் வானதியும் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தார்கள். சண்டையை நிறுத்திய சரவணனும் கபிலனும் மீண்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஏண்டா இப்படிச் சிரிக்கிறாங்க?"

"பின்னே சிரிக்க மாட்டாங்களா... இவர்கள் எப்படி ஒற்றுமையாய் உன்னை வாரு வாரென்று வாரினார்கள்

அதைக் கேட்பதை விட்டு விட்டு... நீ வானதிக்காக... நான் கிரிஜாவுக்காகவும் பரிந்து கொண்டு என்ன... போட்டுக் கொண்டிருந்தால் இவர்கள் சிரிக்கத்தான் செய்வார்கள். சிரித்தது போதும் கிரிஜா.. அவன்தான் மாட்டிக் கொண்டு விட்டான்... தெரியாமல் மாட்டிக் கொண்டதாக அவனே சொல்கிறான். மீள வழி என்ன?''

''வழி நம்மிடம்தான் இருக்கிறது.''

''புரியவில்லையே.''

''அந்த குணவதிக்கு கபிலன் மேல் நோக்கம் இல்லைங்க. அவரின் சொத்தின் மேல் தான் நோக்கம். அதற்கு காவலாகத்தான் கயல்விழி போய் சேர்ந்திருக்கிறாளே. இனி அவளின் ஆட்டம் குறைந்து விடும். முழுவதும் அடக்குவதற்கு, நம் வானதி அங்கே அடிக்கடி போய் வர வேண்டும்.''

''வேண்டாம்.. வேண்டாம்..'' கபிலன் அவசரமாய் கூறினான்.

''ஏன்...?'' கிரிஜா புரியாமல் வினவினாள்.

''அவள் கீழ்த்தரமாக இறங்கிப் பேசுவாள். வானதி அவள் தரத்திற்கு இறங்கிப் பேச வேண்டியிருக்கும். அது வேண்டாம்.''

''ஓஹோ... அப்படியா...'' யோசித்த கிரிஜா முகத்தில் வெளிச்சம் பரவ நிமிர்ந்து,

''ஐடியா...'' என்று கூறினாள்.

''என்னடி...''

''நீ மட்டும் தனியாகப் போனால் தானே வம்பு... நானும் வருகிறேன். நீ... நான்... கயல்விழி... மூன்று



பேரும் முப்படை வீராங்கனைகளாய் அவளைத் தாக்குவோம்.. அதன் பின்னால் அவள் க்ளீன் போல்டாகி விடுவாள்.''

''ஐடியா சூப்பர்தான்... ஆனால் கிரிஜா.. நீ இதில் இந்த அளவுக்கு இறங்கித்தான் ஆகவேண்டுமா?'' சரவணன் தயங்கினான்.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?''

''கபிலனுக்காக.. நாம் அவளிடம் மோதப் போய்.. அவள் உன்னையும் ஏதேனும் பேசி வைத்தால் என்ன செய்வது?''

''கபிலனுக்காக யார் இதில் இறங்குகிறார்கள்? நான் என் பிரண்ட் வானதிக்காக இதில் இறங்குகிறேன். இல்லாவிட்டால் இவர் விசயத்தில் நான் ஏன் தலையிடப் போகிறேன்?'' கிரிஜா பொரிந்தாள்.

''ஏங்க... என் மேல் உங்களுக்கு இத்தனை காட்டம்?'' கபிலன் கேட்டான்.

''பின்னே.. உங்களைப் பார்த்தால் குளுகுளுவென்று இருக்குமாக்கும்.''

''அதை உன் பிரண்டிடம் கேட்டு விட்டுச் சொல்லு...'' சரவணன் சிரித்தான். வானதி முகம் சிவந்தாள்.

''இவள்தான் இவர் மேல் பித்தாக இருக்கிறாளே... இவளது முகத்திற்காக பார்க்கிறேன்... இல்லாவிட்டால் குணவதிக்கு இடம் கொடுத்து விட்டு இவர் படும் பாட்டிற்கு இன்னும் லோல் படட்டும் என்று சாபம் கொடுத்து விட்டு என் வேலையைப் பார்த்துக் கொண் போயிருப்பேன்.''

''நான் என்னங்க செய்தேன்?''

"அவள்தான் உங்கள் பின்னால் பல்லைக் காட்டிக் கொண்டு அலைகிறாள் என்று தெரிகிறதே... அப்படியும் ஏன் அவளிடம் போய் வலிய மாட்டிக்கிறீர்கள்... அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டு வானதியை வந்து பெண் கேட்காமல்... அவளை விரட்ட என்ன வழி என்று வானதியிடமே வந்து கேட்கிறீர்களே... உங்களை என்ன செய்தால் தகும்?"

"நாலு அடி வேண்டுமானாலும் அடித்து விடுங்கள்..."

"என்னது.. அடிப்பதா.. ஏண்டி.. இவரை நீ அடிப்பாயா?"

"ஏண்டா.. இவர்கள் இருவரும் நல்ல தோழிகள்.. இவர்களுக்குள் ஏன் சண்டை மூட்டி விடுகிறாய்..." சரவணன் சிரிக்க கபிலன் எழுந்து கொண்டான்.

"நான் கிளம்புகிறேங்க... நீங்களும் எனக்கு கயல்விழி போல் தான். உரிமையாக என்னைக் கண்டிக்கலாம்... திட்டலாம்.. உரிமை பாராட்ட ஆளில்லாமல் அநாதையாய் கிடந்தவன் நான்... உங்களது அக்கறை என்னை நெகிழ வைக்கிறது..."

"ஐஸ் வைத்தது போதும். போய் குணவதியை விரட்ட ஏதாவது வழியை யோசியுங்கள்..."

கிரிஜா கறாராய் கூற சரவணன் சிரித்தான்.

"இவளிடமெல்லாம் உன் ஐஸ் வைக்கும் வேலை செல்லாதுடா கபிலா.. பார்ட்டி படு உஷார் பேர்வழி."

"பார்ட்டியா...?" கிரிஜா உக்கிரமாக.

"ஐயோ.. கபிலா.. நீ தப்பித்தாய்.. நான் மாட்டிக் கொண்டேன்" என்று பயப்படுவது போல் நடித்தான் சரவணன்.





24

கபிலன் விடைபெற்றுப் போன சற்று நேரத்தில் வானதி கிரிஜாவின் வீட்டை விட்டு வெளியேற... அது நேரம் வரை மாடிப்படி வளைவில் பதுங்கிக் கொண்டு கிரிஜாவின் வீட்டைக் கண்காணித்த கங்காவும்.. கோகிலாவும் வெளியில் வந்தனர். இருவரின் முகத்திலும் ஆனந்தக் குறி.

"நான் சொன்னேனா இல்லையா.. இந்த கங்காவின் கணக்கு என்றுமே பிசகியதில்லை கோகிலா. கொஞ்ச நாட்களாகவே இதுகள் மேல் எனக்கு சந்தேகம்... அது இன்று சரியாகிப் போனதா இல்லையா?"

"சந்தேகம் தட்டும்போதே என்னிடம் சொல்லுவதற்கென்ன அக்கா... இவள் என்னவோ ஒழுக்க சீலியென்று என் மாமனார் இவளை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார். இவளது வேசத்தைக் கிழித்து உண்மையை வெட்ட வெளிச்சமாக்கி இருப்பேனே..."

"நான் என்ன செய்வது கோகிலா. அந்தக் கபிலனைக் கண்டாலே எனக்குப் பயம்.. சான்ஸ் கிடைத்தால் போதும்.. என்னைக் கிழித்து நார் நாராகத் தொங்க விட்டு விடுவான். கயல்விழியோ என் மேல் மதிப்பு வைத்திருந்தான்.. அவள் பின்னாலேயே போய் அவர்க[illegible] நான் கண்காணிப்பது தெரிந்தால் என்[illegible] [illegible] மதிக்க மாட்டான் என்று அடக்கி வாசித்தே[illegible] இல்லையென்றால் உன்னிடம் சொல்லியிருக்க [illegible]டேனா?"

"[illegible] இவர்கள் மேல் சந்தேகப்பட[illegible]

''கொஞ்ச நாட்களாக கயல்விழியும்.. உன் நாத்தனாரும் ஈருடல் ஒருயிர் போல் பின்னிப் பிணைந்து கொண்டு இருந்தார்கள். இதில் வேறு கயல்விழி உன் நாத்தனாரை 'அண்ணி' என்று கூப்பிட்டதாக ஞாபகம்..''

''இது வேறா..? இந்தக் கதை எப்போது நடந்தது?''

''சரியாய் நினைவில்லை. அப்புறம் கபிலன் வந்து கயல்விழியைக் கூப்பிட்டதும் கயல்விழி நேராக மொட்டை மாடிக்குப் போகாமல் உன் வீட்டிற்கு வந்து உன் நாத்தனாருக்கு ஜாடை காட்டுவாள். கொஞ்ச நேரத்தில் உன் நாத்தனார் வந்து மாடிக்கு காய வைத்த துணிகளை எடுக்கப் போவது போல் போய் விடுவாள்.''

''அட ஆமாம். இதை எப்படி நான் கவனிக்காமல் விட்டேன்.''

''காய வைத்த துணிகளை எடுத்தவள் உடனே வர வேண்டியதுதானே.. கபிலன் போன பின்னால்... கயல் விழியுடன் பேசிக் கொண்டே இறங்கி வருவாள்.''

''அதுகள் என்ன பேசியிருக்கும்கள்?''

''யாருக்குத் தெரியும்..?''

''போங்கக்கா... என்னிடம் சொல்லியிருந்தால் நான் கேட்டிருப்பேனே.''

''விட்டு விட்டேன் கோகிலா.''

''போகிறது விடுங்கள்.. இனி நடப்பதைப் பார்ப்போம்.''

''என்னத்தைப் பார்க்க? உன் நாத்தனாரும்.. கபிலனும் கல்யாணம் பண்ணிக் கொள்வதை பார்க்கச் சொல்கிறாயா?''



''அதை ஏன் நாம் பார்க்க வேண்டும்? கல்யாணத்தை நடக்க விடுவதற்கா நாம் இருக்கிறோம்? நடக்க விடாமல் தடுப்பதற்காகத்தானே. நாம் இருக்கிறோம்.''

''எப்படித் தடுப்பது?''

''அந்தக் கபிலனைப் பற்றி ஏதாவது மைனஸ் பாயின்ட். தவறான தகவல் இப்படி ஏதாவது இருக்கிறதா?''

''ஊம்'' என்றவாறு தலையை ஒரு விரலால் தட்டி யோசித்தாள் கங்கா. முகம் பிரகாசமாக நிமிர்ந்தாள்.

''ஒரு தகவல் இருக்கிறது கோகிலா.. என் தம்பி ஒரு முறை சொன்னான். அந்தக் கபிலனுடன் ஒரே வீட்டில் ஒரு பெண் தங்கியிருக்கிறாளாம். தெரிந்தவர்களிடம் எல்லாம் தான் கபிலனின் தாலி கட்டாத மனைவியென்று சொல்லிக் கொண்டிருக்கிறாளாம்.''

''இது போதுமே...''

உற்சாகத்துடன் கை சொடுக்கினாள் கோகிலா. அன்று இரவில்.. விடி விளக்கின் ஒளியில் கோபிகிருஷ்ணன் அவளை நெருங்கியபோது,

''ச்ச்..'' என்றாள்.

''என்ன கோகி...'' கொஞ்சலாய் வினவினான் கோபி கிருஷ்ணன்.

''வீட்டில் உங்கள் தங்கை... உங்கள் வீட்டாரின் மானத்தைக் காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறாள். நீங்கள் என்னவென்றால் எதையும் கண்டு கொள்ளாமல் தேமேயென்று இருக்கிறீர்கள்.''

கோபிகிருஷ்ணனின் மனதிலிருந்த உல்லாசம் மறந்து போக மனைவியை முறைத்தான்.

''என்ன முறைக்கிறீர்கள்?''

''கோகிலா... வார்த்தைகளை அளந்து பேசு... வானதியைப் பற்றி நீ குறை கூறினால் கேட்டுக் கொண்டிருக்க... தவறாகப் பேசினால் கேட்டுக் கொள்ள மாட்டேன். ஜாக்கிரதை.''

''என் வாயை மூடலாம்.. ஊர் வாயை மூட முடியுமா?''

''ஏய்.. நான் சொல்லச் சொல்ல பேசிக் கொண்டிருக்கிறாயே.. பேச்சை நிறுத்துடி.. வானதியைப் பற்றி நேற்று வந்த உனக்கு என்ன தெரியும்? அவள் தங்கம்.''

''அவள் தங்கமாகவே இருக்கட்டும். எதிர் வீட்டு கயல்விழியின் அண்ணன்காரன் கபிலன் யார்.. தங்கமா.. இல்லை தகரமா? ஏன் கேட்கிறேன் என்றால் அவன் வீட்டோடு ஒருத்தியை வைத்துக் கொண்டு இருக்கிறானாமே...?''

''அவன் எப்படி இருந்தால் எனக்கென்ன? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''அவனுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லைதான். ஆனால் அவனுக்கும் உங்கள் தங்கைக்கும் சம்பந்தம் இருக்கிறதே.''

கோபிகிருஷ்ணன் மனைவியை விட்டு முற்றிலுமாக விலகி அமர்ந்து அவளைப் பார்த்தான். விடி விளக்கின் மெல்லிய ஒளியில் தலையில் மல்லிகைப் பூவின் வாசனையோடு ஒரு தேவதையைப் போல் அவள் இருந்தாள். எப்போதும் மயக்கும் அவளது இந்தத் தோற்றம் இப்போது அவனை மயக்கவில்லை. மாறாக அவளை குரோதத்துடன் உற்றுப் பார்த்தான்.



''கோகிலா... என்னைக் கொலைகாரனாக மாற்றாதே...''

''அட எங்க... நீங்க இந்த டயலாக்கை என்னிடம் சொல்கிறீங்க. போய் உங்கள் தங்கையிடம் சொல்லுங்கள்.''

கோகிலா வெகு அலட்சியமாய் கூற கோபிகிருஷ்ணனுக்கு 'திக்' என்றது.

'இவள் இவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாள் என்றால் நிச்சயம் ஏதோ விஷயம் இருக்கும்.'

''உனக்கு எப்படிடீ தெரியும்?''

''எதிர் வீட்டு கங்கா அக்கா சொன்னார்கள்.''

''ஏண்டி.. அந்தப் பொம்பளையைப் பற்றித்தான் இந்த அபார்ட்மென்ட்டிற்கே தெரியுமே.. போயும் போயும் அவள் பேச்சையா நம்புகிறாய்.''

''அப்படியெல்லாம் அவங்க பேச்சை மட்டும் கேட்டு விட்டு நான் சொல்லவில்லை. நானே கண்ணால் பார்த்தேன்.''

''என்ன பார்த்தாய்?''

''கயல்விழியே போய் விட்டாளே... அதற்கப்புறம் கபிலனுக்கு இங்கு என்ன வேலை? யாரைப் பார்க்க இந்த அபார்ட்மென்டிற்கு வந்தான்?''

''ஆனால்.. வானதியைத்தான் பார்க்க வந்தான் என்றும் சொல்ல முடியாதே.''

''அப்படியா? அவன் கிரிஜாவின் வீட்டுக்குத்தா... வந்தான். அவன் வந்த அடுத்த நிமிடம் வானதி... கிரிஜாவின் வீட்டிற்குள் போய் விட்டாள். ... அடைக்கப்பட்டு விட்டது. இரண்டு மணி நேரம் க...

கதவு திறந்தது. கபிலன் டாடா சொல்லிவிட்டு ... விறங்கிப் போக.. இவள் நம் வீட்டிற்கு வருகிறாள்...

"கிரிஜா வீட்டில் யாருமில்லையா?"

"நான் இப்போது உங்கள் தங்கை தவறு செய்து விட்டாளென்று சொல்லவில்லையே... கிரிஜா வீட்டில் கிரிஜாவும் அவளுடைய [illegible] இருந்தார்கள். ஆனால் வானதிக்கும்.. அந்தக் [illegible] ளுக்கும் தொடர்பு இருக்கிறது. இதை நிச்சயமாய் சொல்கிறேன். ஏனென்றால் இதற்கு முன்னமேயே வானதி.. கபிலனுடன் மொட்டை மாடியில் பல தடவை ரகசியமாய் பேசிக் கொண்டு நின்றதை.. நான் என் கண்ணால் பார்த்தேன்."

"இதை முன்னாடியே ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"சொன்னால் மட்டும் நம்பி விடவா போகிறீர்கள்?"

கோபிகிருஷ்ணன் சிந்தனையில் ஆழ்ந்தான். [illegible] யாரை அடித்த அன்று வானதி கயல்விழியுடன் கபிலனின் வீட்டிற்குத்தான் சென்றாள் என்பது இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

"கோகி.. அப்பாவிடம் நான் இது பற்றி மெதுவாகப் பேசிக் கொள்கிறேன்... இப்போது வேண்டாம். நீ யாரிடமும் இதைப் பற்றிப் பேசாதே."

"எனக்கு இதுதானா வேலை? எனக்குத் தெரிந்ததை உங்கள் காதில் போட்டு விட்டேன். நீங்கள் உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கினாலும் சரி... இல்லை.. உங்கள் தங்கை மாலையும் கழுத்துமாக வந்து நின்றவுடன் அட்சதை போட்டு வாழ்த்தினாலும் சரி.. எனக்கென்ன வந்தது?"



அவன் ஒயிலாகப் புரண்டு படுத்தான். அதை ரசிக்கும் நிலையில் இல்லாத கோபிகிருஷ்ணன். பேசாமல் படுத்து விட்டான். அவனுக்கு உறக்கம் வர வெகு நேரம் ஆகியது.

இதை அறியாத வானதி.. கபிலன் தொட்டு அணைத்த நிமிடங்களை நினைத்துப் பார்த்தாள். இனித்தது. அந்த இனிப்பான நினைவுகளுடனே தூங்கி விட்டாள்.

மறுநாள் என்றுமில்லாமல் சீக்கிரமாகவே அவன் அலுவலகம் கிளம்பிச் சென்று விட... காலையில் தங்கையுடன் பேசிப் பார்த்துவிட முடிவு செய்திருந்த கோபிகிருஷ்ணன் புருவம் உயர்த்தினான்.

"எட்டுமணிக்கே ஆபீஸ் போய் விட்டானா?"



## 25

கிரிஜாவும்.. வானதியும் கபிலன் வீட்டிற்குள் சென்றபோது.. வாசலில் தோட்டத்துப் பக்கம் நின்று கொண்டிருந்தாள் குணவதி. வீட்டுக்குள் இருக்கத்தான் அவளுக்கு சகிக்கவில்லையே.. கயல்விழி அவளை இருக்கும் இடம் தெரியாமல் ஆக்கி வைத்திருக்கிறாளே. முதலில் செய்தது போல் வேலைக்காரர்களை அதிகாரம் செய்வதும் முடியாத செயலாகி விட்டது. ஒரு வேலையாள் கூட இவளது பேச்சை மதிப்பதுமில்லை. கீழ் படிவதுமில்லை.

வேலையாட்களும் மனிதர்கள்தான் என்ற எண்ணம் குணவதிக்கு இருந்திருக்க வேண்டும். அவளிடம் அது இல்லாமல் போனது. அதன் பலனாக... வேலையாட்கள் அவளை மதிக்காமல் போனார்கள். அவளது ஆட்டம்

அடங்கியதை மனப்பூர்வமாக வரவேற்றார்கள். சாப்பிடப் போகும்போது மேஜையில் உணவுப் பாத்திரங்கள் மட்டுமே இருக்கும்.

"அன்னபூரணி... பரிமாற வா.." என்று குரல் கொடுத்தால்,

"போட்டுச் சாப்பிடுங்கம்மா.. எனக்கு வேலையிருக்கிறது" என்ற பதில் வருகிறது.

கயல்விழியின் குறிக்கோள் என்ன என்பது குணவதிக்குத் தெளிவாகத் தெரிந்தது. குணவதியை வீட்டை விட்டு விரட்ட வேண்டும். ஆனால் குணவதியா நகருவாள்?

'நீ பேக்டரிக்குள் காலடி வைக்கக் கூடாது என்றுதானே சொல்வாய்? வீட்டை விட்டு எப்படி வெளியேற்றுகிறாய் என்று நானும் பார்க்கிறேன்.'

கயல்விழி அதைச் செய்யவில்லை. அவள் என்ன முட்டாளா? அவள் நன்கு அறிவாள். குணவதியை வீட்டை விட்டு வெளியேற்றினால் அவள் தெருவில் நின்று ரகளை பண்ணுவாள் என்பதை... எனவே அவள் அமைதியானாள். அதே சமயம்.. குணவதியை வீட்டில் உள்ள வேண்டாத பொருள் போல நடத்தினாள்.

இப்போதெல்லாம் குணவதி.. வாசல் பக்கம் போய் நின்று கொள்கிறாள். வீட்டுக்குள் வருகிறவர்கள் போகிறவர்கள்.. தெருவில் நடமாடுகிறவர்கள்.. அக்கம் பக்கத்து வீட்டில் இருக்கிறவர்கள் கண்களில் வேண்டுமென்றே படுகிறாள். வீட்டுக்குள் யார் வந்தாலும் விசாரிக்காமல் வீட்டுக்குள் அனுப்புவதில்லை.



"நீயென்ன வாட்ச் வுமனா?" என்று கயல்விழி கேட்டும் விட்டாள். குணவதி சட்டை பண்ணிக் கொள்ளவில்லை.

அன்றும் அதே போல் எழுந்தவுடன் சமையல் கட்டுக்குப் போய் அன்னபூரணியிடம் காபியை வாங்கிக் குடித்து விட்டு வாசல் பக்கம் வந்து நின்றாள்.

'இப்போதெல்லாம் நம் ரூமுக்கு பெட் காபி தேடி வருவதில்லை.' என்ற யோசனையுடன் நின்று கொண்டிருந்தவளின் கண்களில் வாசல் கேட் திறக்கப்பட்டு வாட்ச்மேன் இரு பெண்களை உள்ளே அனுமதிப்பது பட்டு விட்டது.

'இதுகள் யாராக இருக்கும்.. ரூ வீலரில் வருகிறதுகளே..' என்று ஆராய்ச்சியாய் பார்தவளின் முகம் கிரிஜாவைப் பார்த்ததும் இருண்டு விட்டது.

'இவள் எங்கே இங்கே வந்தாள்? என்னைக் கண்டாலே முகம் சுளிப்பாளே..' என்ற நினைவுடன் கூட வந்தவளைப் பார்த்தவளின் முகம் இன்னும் இருண்டது.

உயரமாய்.. ஒல்லியாய்.. நீண்ட தலைப்பின்னலுடன் அமைதியான முகபாவத்துடன் வெகு அழகாய் இருந்த அந்தப் பெண்.. வெகு சுவாதீனமாய் வண்டியை நிறுத்தி விட்டு வீட்டுப் படியேறப் போனாள்.

கபிலனின் வீட்டிற்குள் அழகான பெண் ஒருத்தி நுழைவதா?

"நில்லுங்கள்.. யார் நீங்கள்.. உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று அதட்டியபடி அவர்களின் அருகே சென்றாள் குணவதி.

திரும்பிப் பார்த்த கிரிஜா அலட்சியமாய்..

"நீயா..?" என்றவள் வானதியிடம்,

''நல்லவேளை... நாய் ஜாக்கிரதை என்ற போர்டைக் காணோமே என்று நினைத்தேன்... நினைத்தது தப்பாகி விட்டது..'' என்றாள்.

தன்னைத்தான் அவள் சொல்கிறாள் என்பது குணவதிக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால் 'என்னையா சொல்கிறாய்..?' என்று எப்படிக் கேட்க முடியும்? அவள் ஆமாம் என்று பதில் சொல்லி விட்டால் என்ன செய்வது? அதனால் அவள் கிரிஜாவின் வார்த்தைகளைக் கண்டு கொள்ளாமல்,

''அட.. நீங்களா..? நீங்கள் கபிலனின் பிரண்ட் சரவணனின் வொய்ப் இல்லை? நான் யாரோவென்று நினைத்தேன். வாங்க.. வாங்க... வீட்டுக்குள் வாங்க.. என்ன காலங்கார்த்தாலேயே எங்கள் வீட்டுப் பக்கம் வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

அவளது கேள்விக்கு பதில் சொல்லாமல் குணவதியை ஏற இறங்கப் பார்த்த கிரிஜா.. வானதியைப் பார்த்துக் கூறினாள்.

''இவள்தான் குணவதி.. என் கணவரின் நண்பர் அன்பழகனின் தங்கை.. கபிலன் ஒரு அநாதைப் பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார் என்று கயல்விழி சொன்னாளென்று சொன்னாயே.. அந்த அநாதைப் பெண் இவள்தான்.''

குணவதி அசைவற்று நின்று விட்டாள். கபிலனின் வீட்டிற்குள் அவளிருப்பதை அநாதை ஒருத்தி இருக்கிறாள் என்றுதான் இந்த ஊரும் உலகமும் நினைக்கிறதா?

அதற்குள் வாசலுக்கு வந்த கயல்விழி உற்சாகமாய் ஓடி வந்து வானதியை கட்டிப் பிடித்து முத்தமிட்டாள்.



''அண்ணி.. இப்போது வர வழி தெரிந்ததா? என்னைப் பார்க்க வரவேண்டும் என்ற நினைவே இல்லாமல் எப்படி நீங்கள் இருக்கலாம்? போங்க.. நான் உங்களோடு டூ...''

''அதுதான் வந்து விட்டேனில்லை? அப்புறமும் எதற்கு டூ? பழம் விடு.''

அவர்கள் பேசிக் கொண்டே வீட்டிற்குள் போய்விட குணவதியின் காலடியில் பூமி ஆடுவது போல் இருந்தது.

'அண்ணியா.. இவளை பெயர் சொல்லி வா போவென்று அழைப்பவள் மரியாதையுடன் அண்ணியென்று அவளை அழைக்கக் காரணம் என்ன?'

அவசரமாய் அவள் வீட்டிற்குள் ஓடியபோது காரணம் அவளுக்குப் புரிந்தது.

கபிலன் வானதியின் அருகே அமர்ந்து ஆர்வமாய் பேசிக் கொண்டிருந்தான். கயல்விழியும் கிரிஜாவும் எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க.. வாயெல்லாம் பல்லாக அன்னபூரணி வந்தவர்களுக்கு காபி கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா.. இவங்கதான் என் அண்ணி. எப்படியிருக்காங்க?''

''நீங்கள் சொன்னது போலவே மகாலட்சுமி மாதிரியே இருக்காங்கம்மா.''

குணவதியின் உடம்பெல்லாம் எரிந்தது.

''மகாலட்சுமியை நீ நேரில் பார்த்திருக்கிறாய

அன்னபூரணி?'' என்று வினவியபடி வானதியி

அருகே அமர்ந்திருந்த கபிலனின் பக்கத்தில் ... அமர்ந்து கொண்டாள்.

கபிலன் நடுவே அமர்ந்திருக்க... அவனை ... பக்கமும் வானதியும் குணவதியும் அமர்ந்திரு... போல் தோற்றமளிக்க... கிரிஜாவுக்கு ... கொண்டு வந்தது. கயல்விழி 'வானதி என்ன நினைத்து... கொள்வாளோ..' என்ற நினைவில் பயந்து போனாள்... கபிலனுக்கு கோபத்தில் உடல் கொதித்தது. சட்டென்று எழுந்தவன் வானதியைப் பார்த்து,

"நீ இந்தப் பக்கம் வா வானதி..." என்றான்.

புன் முறுவல் மாறாமல் வானதி எழுந்து குணவதியின் அருகே அமர்ந்து கொள்ள கபிலன் வானதியின் பக்கத்தில் அமர்ந்தான். இப்போது வானதி நடுவில் அமர்ந்திருக்க அவளின் ஒரு பக்கத்தில் கபிலனும் மறு பக்கத்தில் குணவதியும் அமர்ந்திருந்தார்கள்.

"ஜென்மங்கள்..." கிரிஜா சத்தமாகவே கூறினாள். குணவதியின் முகம் அவமானத்தில் விகாரமாக மாறியது. வானதியோ எதுவுமே நடக்காதது போல் தன் போக்கில் கபிலனுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"வீடு ரொம்பவும் அழகாய் இருக்கிறது கபிலன்."

"உனக்குப் பிடித்திருக்கிறதா?"

"ரொம்ப... ரொம்ப.. பிடித்திருக்கிறது."

அவள் சொல்லிய விதத்தை ரசித்துச் சிரித்தான் ...பிலன்.

"ஹலோ.. மிஸ்டர் கபிலன். வீட்டுக்கு அவள் மட்டும் ...வில்லை. நானும் வந்திருக்கிறேன்" என்று குறும் ...க் கூறினாள் கிரிஜா.



"நீங்களாவது வீட்டுக்கு வந்த விருந்தாளி.. நான் அவளின் ஒரே உடன் பிறந்த தங்கை. பாசமலர். என்னைக் கவனிக்கிறானா? அண்ணி வந்தவுடன் தங்கையின் பாசமெல்லாம் அம்பேல்.." கயல்விழி குறை கூறுவது போல் கேலி செய்தாள்.

"எய்ய்.. வாலு.. வா.. அண்ணிக்கும் அவங்க பிரண்டிற்கும் வீட்டைச் சுற்றிக் காட்டலாம்."

அவர்கள் நால்வரும் சிரித்துக் கொண்டே மாடியேறி விட குணவதி பேயறைந்தது போல் ஹாலில் தனிமையாக அமர்ந்திருந்தாள். வந்திருப்பவள் யார் என்பதை அவளது மனம் உணர்ந்து கொண்டது.

'பூனை போல் இருக்கும் இந்தக் கபிலனுக்கு காதலி இருக்கிறாளா? அதுவும் அழகான காதலி...!'

அன்னபூரணி குணவதியை ஜாடையாகப் பார்த்து விட்டு சமையலறைக்குள் சென்றுவிட வீட்டிலிருந்த மற்ற வேலையாட்கள் தங்களுக்குள் கிசுகிசுவென்று பேசிக் கொண்டனர்.

அதற்கு மேல் அங்கு அமர முடியாத குணவதி அவளது அறைக்குள் போய் கதவை அடைத்துக் கொண்டாள்.

மாடியில் கயல்விழியின் அறையில் கிரிஜா பேசிக் கொண்டே தேங்கி நின்று விட அதை கவனிக்காமல் கபிலனுடன் அவனுடைய அறைக்குள் பிரவேசித்தாள் வானதி.

"இதுதான் நம்முடைய பெட்ரூம் பிடித்திருக்கிறதா."

அந்த வார்த்தைகளில் வசீகரிக்கப்பட்டவள் அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையை

எதிர்கொண்ட அவனது பார்வையில் அழைப்பு இருந்தது. அவனது கைகள் அவளை நோக்கி நீண்டன. இரு கைகளையும் விரித்து பார்வையில் 'வா' வென அவன் அழைத்தான். அவனது கைகளுக்குள் அவள் கடலைச் சேரும் நதி போல் புகுந்து கொண்டாள். வேகத்துடன் அவளை கட்டியணைத்து முத்தமிட்ட வனின் தோளில் முகம் சாய்த்து.

''நேற்று மாலை தானே சந்தித்துக் கொண்டோம்'' என்றாள் அவள்.

''நேற்ற்ற்று... மாலை தான் சந்தித்துக் கொண்டோம்'' என்றான் அவன்.



26

காதலில் காதலர்கள் இருவரும் அருகில் இருந்தால் வருடங்கள் கூட விநாடிகள் போலத் தோன்றும். அதுவே அவர்கள் பிரிந்து இருந்தால் விநாடிகள் கூட வருடங்கள் போலத் தோன்றும்.

கபிலனுக்கும்.. வானதிக்கும் அப்படித்தான் தோன்றியது. எத்தனையோ யுகங்கள் கடந்து சந்தித்துக் கொண்டவர்கள் போல்.. இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். இறுதியில் ஒரு முத்தத்துடன் அவளை விடுவித்த கபிலன் தாபத்துடன் அவள் முகம் பார்த்தான்.

''எப்போது நீ என் மனைவியாவாய் வானதி..?''

''அதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.''

''எனக்கு நீ வேண்டும்...''



வானதி இதழ் கடித்து மௌனித்தாள். அணைக்குள் கட்டுப்பட்ட வெள்ளம் ஆர்ப்பரித்தது. அணையை உடைக்கத் துடித்தது. அந்த நிலையில் இருந்து இருவரையும் விடுவிப்பது போல் கலகலவென்று சிரித்த வண்ணம் கயல்விழியும் கிரிஜாவும் உள்ளே வந்தனர்.

''வானதி.. கேட்டாயா இந்தக் கதையை? அந்த குணவதியை அட்ரஸ் இல்லாத ஆள் தானே நீயென்று நம் கயல்விழி கேட்டிருக்கிறாள்.''

''ஈஸிட்...'' வானதி வலுக்கட்டாயமாக ஓர் சிரிப்பை சிரித்து வைத்தபடி கேட்டு வைத்தாள்.

''ஆமாம்.. அண்ணி.. அப்போது அந்த குணவதியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே. இஞ்சி தின்ற குரங்கு போல் இருந்தது.. ஹா.. ஹா.''

''சரியாகச் சொன்னாய் கயல்விழி. அவள் முகம் குரங்கு முகம் தானே.''

''நீங்களானால் இப்படிச் சொல்கிறீர்கள். அவள் என்னவோ தேவலோக மாது தரையிறங்கி வந்து விட்டதைப் போல் இப்படி ஓர் லுக் விட்டுக் கொண்டு... இப்படி யல்லவா நடக்கிறாள்...''

கயல்விழி குணவதி பார்ப்பது போல் பார்த்தபடி அவளைப் போல் நடந்து காட்ட... இப்போது கிரிஜா ''ஹா.. ஹா'' வென்று சிரித்தாள்.

''அவள் முகத்தில் வழித்து எடுத்தால் ஒரு குடம் நிறைய மேக்கப் சாயம் வரும்...'' அருவெறுப்புடன் கூறினாள் கயல்விழி.

''குடமா... குறைத்துச் சொல்கிறாயே.. அண்டா நிறைய வரும்..'' கிரிஜா எரிச்சலுடன் கூறினாள்.

அவர்கள் பேசியதற்கு தலையை மட்டும் [illegible] ஆட்டிக் கொண்டே கபிலனும்... வானதியும் [illegible] யொருவர் பார்வையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கபிலனின் பார்வை வானதியின் முகத்திலேயே நிலைத்திருக்க... வானதியோ கயல்விழியை [illegible] பதும்... கிரிஜாவுடன் பேசுவதுமாக பாவனை செய்து கொண்டு நொடிக்கு ஒரு தடவை அவனது பார் வையைச் சந்தித்துக் கொண்டிருந்தாள்.

'இந்த நாள்.. இனிய நாள்..'' என்று இருவருக்குமே தோன்றியது. ஒரு வழியாக கிரிஜாவும் கயல்விழியும் குணவதியை திட்டி முடித்துவிட்டு, ''போகலாமா...'' என்று வானதியிடம் வினவினர்.

'போக வேண்டுமா?' வானதி திடுக்கிட்டவள் கபிலனைப் பார்த்தாள். அவன் முகத்திலும் அதே உணர்வு.

''நேரமாகி விட்டதா?'' என்று வினவினான் அவன்.

''சரியாப் போச்சு போங்க. இப்போதே நேரமாகி விட்டது. வாடி வானதி..'' கிரிஜா அறையை விட்டு வெளியேறியவாறு கூறினாள்.

வானதியின் மனநிலை புரிந்தவளாய் கயல்விழியும் கிரிஜாவைத் தொடர்ந்து கீழே இறங்கிப் போக... வானதி தயங்கி கபிலனின் முகம் பார்த்தாள்.

சில மாதங்கள் முன்னால் அவனைச் சந்தித்தாள். சில கழ்ச்சிகளால் அவனையே சிந்தித்தாள்... இதமான ஓர் லைப் பொழுதில் பாரதியின் பாடல் வரிகள் மூலம் ன் மனதை உணர்த்தினாள். பதிலுக்கு அவன் காதல் ல்ல மாட்டானா என்று ஏங்கித் தவித்தாள். முதல்



நாள் மாலை அவளைக் கட்டியணைத்துக் காதோரம் காதல் சொன்னான் அவன்... இன்றோ அவளோடு வாழத் துடிக்கிறான். தவிப்பையும் துடிப்பையும் ஒருவரிட மிருந்து மற்றொருவருக்கு இடம் மாற்றுவதற்கு பெயர் தான் காதலோ...?

''போய் வரட்டுமா?''

''எப்போது வருவாய்?''

''முடிந்தபோது...''

''முடிய வேண்டும்...''

''முடிய சொன்னால் எப்படி?''

''இப்படிச் சொன்னால் எப்படி?''

''இப்படித்தான் நான் சொல்வேன்.''

''முயற்சி செய்கிறேன்...''

''முயற்சி செய்கிறாயா? சாயந்திரம் டிபன் காபி சாப்பிட இங்குதான் வருகிறாய்...''

''கபிலன் ப்ளீஸ்...''

''என்னைப் புரிந்து கொள் வானதி...''

அவளைப் போக விடாமல் சுற்றி வளைத்தன அவனது கரங்கள். அவளது காதோரம் அவனது வெப்ப மூச்சு சுட்டது. அவளது கன்னத்தில் முத்தம் பதித்த அவனது இதழ்கள் சுட்டது. இது வானதிக்குப் புதிது... அவள் நேசிக்கும் ஆண்... அவளை நாடித் தவிப்பது... இதழ் தேடித் துடிப்பது.

வானதி விலக முயன்றாள்.. அவனது கரங்கள் ஆக் டோபஸாய் அவளைச் சுற்றி வளைத்தன.. விடுப விருப்பமில்லாமல் விடுபட முயன்றாள்.

''போதும் கபிலன்...'' அவளது குரலின் பலவீனத்தை அவளே உணர்ந்தாள்.

அவனும் அதை உணர்ந்து விட்டதால் வாய் விட்டு சிரித்தான். அவளை இன்னும் இறுக்கிக் கொண்டான்.

''கிரிஜாவும்.. கயல்விழியும் கீழே போய் விட்டார்கள்.''

''இங்கிதம் தெரிந்தவர்கள்...''

''நமக்குப் பொறுப்பு தெரிய வேண்டாமா?''

''பொறுப்பில்லாமல் நான் என்ன செய்தேன்?''

அந்தப் பொறுப்பானவன் அவளது கழுத்து வளைவில் இதழ் பதித்தபடி கேட்டான்... 'கள்ளன்...' வழக்கம் போல அவனை மனதில் திட்டிக் கொண்ட வானதியின் இதழ்களில் புன்முறுவல் உதித்தது. தானாக அவன் விட மாட்டான் என்பது புரிய.. மெல்ல அவனது கரம் விலக்கி அவனிடமிருந்து விடுபட்டாள் வானதி. மீண்டும் அவளை நாடிய அவனது கரங்களுக்குள் சிக்காமல் அறையை விட்டு வெளியேற வேறு வழி யின்றி கபிலன் தொடர்ந்தான்.

கயல்விழியும்.. கிரிஜாவும் வந்த பின்னரும்.. வான தியும் கபிலனும் வராததைக் கண்ட குணவதி நகத்தை கடித்துக் கொண்டே இருப்புக் கொள்ளாமல் மாடிப்படி களை பார்த்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் இறங்கி வந்த கபிலனின் முகத்தி லிருந்த கிறக்கச் சிரிப்பும்.. வானதியின் முகச் சிவப்பும் குணவதிக்கு நடந்ததை உணர்த்த அவளுக்கு வெறி யேறியது.



''போகலாமா வானதி...'' கிரிஜா கிளம்ப யத்தனிக்க,

''அம்மா.. சாப்பிடாமல் போகிறீங்களே.. உங்களுக்காக இனிப்பு செய்திருக்கிறேனே...'' என்றபடி அன்னபூரணி ஓடி வந்தாள்.

'இவள் ஒருத்தி... கயல்விழி வந்தாலும் இனிப்புச் செய்கிறாள். வானதி வந்தாலும் இனிப்பு செய்கிறாள். என்னைப் பார்த்தால் மட்டும் பாகற்காய் குழம்பு.. பாகற் காய் வறுவல்.. என்று கசப்பாய் செய்து தள்ளுகிறாள்..' பொறுமினாள் குணவதி.

''நேரமாகி விட்டதே... ஈவினிங் வந்து சாப்பிட்டுப் போகிறோம்...'' வானதி கபிலனின் முகத்தைப் பார்த்த படி கூற அவனது முகம் பிரகாசித்தது.

''ஏண்டி நீ பாட்டுக்கு புரோக்ராம் போடுகிறாயே.. எனக்கும் வீடு என்று ஒன்று இருக்கிறது.. என்னை நம்பி ஒரு மனிதர் என் கை பிடித்து என் பின்னால் வந்திருக்கிறார். அவரை நான் கவனிக்க வேண்டாமா? உன்னையே பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா..'' கிரிஜா படபடத்தாள்.

''இன்று ஒரு நாள் தானேடி...'' வானதி கிரிஜாவின் மோவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

''இன்று ஓர் நாள் தானா?'' கபிலன் பதட்டமாக வினவினான்.

''அ...து.. சரி.. ஏன் மிஸ்டர் கபிலன். இப்படியே காலத்தை ஓட்டி விடலாமென்று முடிவே பண்ணி விட்டீர்களா? இவளைப் பிரிந்திருக்க முடியாதென்றால் நேராய்.. இவளுடைய அப்பா.. தி கிரேட் வெர்டினரி

டாக்டர் கருணாகரனிடம் போய்.. மாமா.. மாமா.. உ... பெண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுங்... மாமா. என்று பெண் கேட்டு ஊர் அறிய கல்யாணம் பண்ணிக் கொண்டு விட வேண்டியதுதானே. அதை விட்டு விட்டு காதல் பண்ணுவதிலேயே குறியாக இருக்கிறீர்களே...''

''அப்படியா சொல்கிறீர்கள் கிரிஜா? நீங்கள் இப்படி சொல்வதால் நாளைக்கே நான் போய் வானதியின் அப்பாவிடம் பெண் கேட்டு விடுகிறேன்.''

''ஏன் இன்று நாள் நன்றாக இல்லையா?''

''இன்று தான் வானதியும் நீங்களும் இங்கு டிபன் சாப்பிட வந்து விடுவீர்களே.''

''நீங்கள் அதிலேயே குறியாக இருங்கள்.''

கிரிஜா வானதியின் கை பிடித்துக் கொண்டு வாசலுக்குச் சென்றாள். வானதி தன் வண்டியில் ஏறிக் கிளம்பிக் கொண்டே கபிலனைப் பார்த்து தலை அசைத்தாள். கபிலன் கண்கள் மின்ன பதிலுக்கு கையை அசைத்தான்.

அவர்கள் கிளம்பிப் போனதும் கபிலனுடன் பேசிக் கொண்டே வீட்டுக்குள் வந்தாள் கயல்விழி.

''அண்ணி இருந்தவரை வீடே நிறைந்தது போல் ருந்தது.. அவங்க கிளம்பிப் போனதும் வீடே வெறிச் ன்னு ஆகிப் போச்சு... இல்லையா அண்ணா.''

''அதுதான் சாயந்திரம் வந்து விடுவாளே... அன்ன ணியம்மா.. சமையலில் தூள் பரத்தனும்.'' நீங்க சொல்லனுமா ஐயா?''



ராவில் நடந்த பேச்சு வார்த்தைகளை செவி மடுத்துக் கொண்டிருந்த குணவதிக்கு உடம்பெல்லாம் மிளகாயை அரைத்துப் பூசியது போல் இருந்தது.




கருணாகரனின் அறைக்குள் வந்த அவரது உதவியாளன் பாபு ''சார்... உங்களைப் பார்க்க குணவதி என்ற பெண் ஒருத்தங்க வந்திருக்காங்க சார்..'' என்றான்.

''என்ன விஷயமாம்?''

''குடும்ப விஷயம்ங்கிறாங்க.''

''அதைப் பேச கிளினிக்கிற்கு எதற்கு வர வேண்டும்? வீட்டுக்கு வரச் சொல்.''

''அவங்க உங்களிடம் தான் பேச வேண்டுமாம்.''

''என்னிடமா.. என்னவாக இருக்கும்..'' என்று யோசித்தவர்,

''சரி வரச்சொல்...'' என்றார்.

குணவதி உள்ளே வந்தாள். வெகு அடக்கமாக கைகூப்பி..

''வணக்கம் சார்...'' என்றாள். முகத்தை சோகமாக வைத்துக் கொண்டாள். சேலை கட்டியிருந்தவள் முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அடிக்கடி முந்தானையால் கண்களை நாசுக்காய் துடைத்துக் கொண்டிருந்தாள்.

தடித்த தங்க பிரேமிட்ட கண்ணாடி வழியே குணவதியை ஊடுருவிப் பார்த்த கருணாகரனுக்கு 'இந்தப்

பெண் எதற்கு வந்திருக்கிறாள்' என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

"என்னம்மா விஷயம்?"

"சார்.. நான் உங்களிடம் வாழ்க்கைப் பிச்சை கேட்க வந்திருக்கிறேன்."

கருணாகரனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

'என்னடா இது.. இந்தப் பெண் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாள்? காலம் போன கடைசியில் எனக்கு இது தேவைதானா..?' என்று அரண்டு போனவராய்..

"ஏம்மா.. உனக்கு என்ன பிரச்னை? ஏன் என்னவெல்லாமோ பேசுகிறாய்... நீ யாரம்மா?" என்று விசாரித்தார்.

"சார்.. என் பெயர் குணவதி."

"இருக்கட்டும்..."

"எனக்கு அப்பா அம்மா இல்லை..."

"ஐயோ... பாவம்..."

"எனக்கென்று இருந்தது என் அண்ணன் மட்டும் தான்."

"இருந்தது என்றால்...?"

"அவரும் இப்போது உயிருடன் இல்லை..."

"நல்ல வரம் வாங்கிப் பிறந்திருக்கிறாய் அம்மா."

"என் அண்ணன் இறக்கும்போது என் கையைப் பிடித்து நான் விரும்பியவரின் கையில் கொடுத்து.. என்னை அவரிடம் ஒப்படைத்தார்."



'என்னடா.. இது.. இந்தப் பெண் சினிமாக் கதை போல் சொல்கிறாளே?' சுவாரஸ்யமாய் கதை கேட்க ஆரம்பித்து விட்டார் கருணாகரன்.

கன்னத்தில் கையை வைத்துத் தாங்கிக் கொண்டு, "அப்புறம்.. என்ன ஆனது?" என்று வினவினார்.

"அவர் என்னை அவருடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார். அவரும் நானும் ஒரே வீட்டில் இந்த ஒரு வருடமாய் சேர்ந்து வாழ்கிறோம்."

'சுத்த அசிங்கம் பிடித்த பெண்ணாக இருப்பாள் போல இருக்கே..' கருணாகரன் கதை கேட்பதை நிறுத்தி விட்டார்.

"ஏம்மா.. உன் கதையைச் சொல்லவா.. என்னைத் தேடி வந்தாய்?"

"இல்லைங்க.. என் கதையுடன் உங்கள் பெண்ணின் கதையும் கலந்து வந்து விட்டதே.. அதனால் தான் உங்களிடம் நியாயம் கேட்க வந்தேன்."

"என் பெண்ணின் கதையா?" கருணாகரனின் பார்வை கூர்மையானது.

"ஆமாம்.. வானதி உங்கள் மகள்தானே."

"அவளை உனக்கு எப்படித் தெரியும்.." கருணாகரன் முகம் சுளித்தார். இப்படிப்பட்ட பெண்ணோடு வானதிக்கு பழக்கம் இருக்காதே.

"அவளைத் தேடி நான் போகலைங்க. என்னைத் தேடித்தான் நான் வாழும் வீட்டிற்கு உங்கள் பெண் வந்திருக்கிறாள்."

கருணாகரன் அதிர்ந்து நிமிர்ந்தார்.

''என்னது..? என் பெண் நீயிருக்கும் வீட்டிற்கு வந்தாளா?''

''ஆமாம்.. இந்நேரம் வரை அங்குதான் இருந்தாள். திரும்பவும் சாயந்திரம் வந்துவிடுவதாக என்னைவிட்டுச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள்.''

''உன்னவர்..? ஓ.. உன்னுடன் ஒரே வீட்டில் வாழும் அந்த அயோக்கிய சிகாமணியா? அவனிடம் எதற்கு என் பெண் சொல்லிக் கொண்டு போனாள்?''

''என்னைக் கேட்டால்...? உங்கள் பெண்ணைக் கேளுங்கள். நான்தான் தாய் தகப்பனில்லாத அநாதை. கூடப்பிறந்த பிறப்பை பறிகொடுத்த துரதிர்ஷ்டசாலி. அதனால் அவரை நம்பிக் கெட்டேன். உங்கள் பெண்ணைத் தட்டிக் கேட்க பெற்றவர் நீங்கள் இல்லையா? கூடப் பிறந்த அண்ணன் இல்லையா? உங்கள் வீட்டுப் பெண்ணின் மேல் தண்ணீர் தெளித்து விட்டு விட்டீர்களா?''

கருணாகரனுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

'இந்தப் பெண்ணிற்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்னிடம் வந்து இப்படிப் பேசுவாள்?'

''எழுந்திரும்மா.. அட எழுந்திருன்னு சொல்கிறேனில்லை.. யாரிடம் வந்து என்ன பேச்சுப் பேசுகிறாய்? என் பெண்ணைப் பற்றி எனக்குத் தெரியும். நீ என்னிடமே வந்து அவளைப் பற்றி அபாண்டமாய் பேசுகிறாயா? நீ சொல்லியெல்லாம்.. என் பெண்ணை நான் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.. முதலில் இடத்தைக் காலி பண்ணு...''

குணவதி கோபமாய் நகைத்தாள்.

''அதுதானே பார்த்தேன். உங்கள் சப்போர்ட் இல்லாமல் உங்கள் பெண் ஆடுவாளா? கபிலனின் பணத்தில் மயங்கி அவரை என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கிறாள் உங்கள் பெண்.. இதை நான் சும்மா விட மாட்டேன்.''

''என்ன பெயர் சொன்னாய் கபிலனா..?''

''ஆமாம்..''

''கபிலனா.. நீ சொல்லிய உன்னவர்?''

''ஆமாம்..''

கருணாகரன் யோசனையோடு தாடையைத் தடவி னார்.. கபிலன் மேல் மகளுக்கு இருந்த மதிப்பு அவருக் குத் தெரியும்.

'வானதிக்கு கபிலனின் மேல் நாட்டம் இருக்கிறதா

கருணாகரன் மௌனத்தில் தைரியம் வரப் பெ குணவதி எழுந்து நாடக பாணியில் அவர் முன் கை நின்றாள்.

''ஐயா.. உங்களை கையெடுத்துக் கும்பிட்டுக் கிறேன்.. உங்கள் பெண்ணிற்கு ஆயிரம் மாப்பிள் கிடைப்பார்கள். ஆனால் எனக்கு..? கபிலன்தா வாழ்க்கை. நான் அவருடன் வாழ்ந்து கொ கிறேன். தயவு செய்து என் வாழ்க்கையில் உங் குறுக்கே வரவேண்டாம் என்று சொல்லுங்க வாழ்க்கை பிச்சை கொடுங்கள்.''

உள்ளே பலத்த பேச்சுக் குரல் கேட்டு எ பாபு குணவதி பேசிய கடைசி வார் கேட்டதும்..

''எம்மா.. பிச்சையெடுக்கத்தான் நீ டாக்டரைப் பார்க்கனும்னு உள்ள வந்தாயா? நல்ல கதையாய் இருக்கே வெளியே போம்மா..'' என்று சத்தம் போட்டான்.

''நீ நினைக்கிறது மாதிரி பிச்சை இல்லைப்பா இது வேறு மாதிரியான பிச்சை..'' என்றாள் குணவதி அவசரமாக.

''பிச்சை எடுப்பதில் கூட மாடல் இருக்கிறதா.. வெளியே போம்மா.''

பாபு எகிற.. கருணாகரன் 'வெளியே போ..' என்ற பாவனையில் கையை அசைத்தார். குணவதி தயங்கி நின்றாள்.

''ஐயா.. நான் சொன்னது...''

''என் மகள் யார் வாழ்க்கையையும் கெடுக்க மாட்
...ாள்.''

''எனக்கு இது போதும்ங்க...''

குணவதி சந்தோசமாக வெளியேறினாள். அன்று
...லை கபிலனும்.. கயல்விழியும் சீக்கிரமே வீடு வந்து
...ட்டனர்.

''அம்மா.. டிபன் பண்ணிட்டிங்களா? என்ன டிபன்''
...வாறே சமையலறைக்கு வந்த கயல்விழி. காலியாக
...த பாத்திரங்களைப் பார்த்து விட்டு,

...ன்னங்கம்மா... ஒன்றும் தயார் பண்ணவில்லையா?''
... ஆச்சர்யமாய் வினவினாள்.

...ல்லைங்கம்மா...''

...?''



''அது வந்து.. அது வந்து...'' அன்னபூரணி தயங்க..

''அதை நான் சொல்கிறேன்..'' என்றபடி குணவதி அங்கு வந்து நின்றாள்.

''நீ என்ன சொல்லப் போகிறாய்?''

''வராத விருந்தாளிக்கு எதற்கு வீணாய் விருந்து சமைக்கிறாய் என்று நான்தான் அன்னபூரணியிடம் சொன்னேன்.''

''வராத விருந்தாளியா?''

கயல்விழியின் பார்வை கபிலனின் மேல் விழுந்தது. அவன் அவசரமாய் அவளருகே வந்தான்.

''அண்ணா.. இவள் என்ன தேவையில்லாமல் பேசுகிறாள்.''

''எல்லாம் தேவையோடுதான் பேசுகிறேன். இன்று உன் அண்ணி வரமாட்டாள். இன்று மட்டுமில்லை... என்றுமே...''

''என்ன உளருகிறாய்..?''

''உளறல் இல்லை இது... உண்மை.''

கபிலனின் விழிகள் யோசனைக்குப் போயின. குணவதியை கூர்ந்து கவனித்தான். அவள் முகத்தில் வெற்றியின் சாயல் தென்பட்டது.

''என்ன உண்மையைக் கண்டு விட்டாய்...?'' என்று கேட்டான்.

''கருணாகரன் அவரது மகளை கண்டித்து வைப்பார் என்ற உண்மையைக் கண்டு விட்டேன்...''

கபிலனின் முகம் மாறியது.



அறுவகைம் [illegible] வந்த வானதியும் கிரிஜாவும் [illegible] கொண்டே வாகனங்கள் நிறுத்தப் பட்டிருந்த பகுதிக்குச் சென்று கொண் டிருந்தபோது.

"வானதி..." என்ற குரல் கேட்டது.

வானதி நின்று திரும்பிப் பார்த்தாள்.. கருணாகரன்!

"அப்பா.." என்றபடி அவசரமாய் அவரருகே சென்றாள் அவள்.

"என்னங்கப்பா...?"

"வீட்டுக்குத்தானே போக வேண்டும்? காரில் ஏறு..."

"ஆனால் அப்பா.. என் வண்டி இருக்கிறதே..."

"பாபு ஓட்டிக் கொண்டு வருவான்..."

கருணாகரனின் உதவியாள் பாபு அவரருகே நின்று கொண்டிருந்ததை அப்போதுதான் கவனித்தாள்.

"ஏன் அப்பா? எனி திங் ராங்?"

"யெஸ்.. சம்திங் ராங்.. வீட்டில் போய் பேசிக் கொள்ள லாம்."

செய்வதறியாது அவளுடன் வந்து நின்றிருந்த கிரிஜாவைப் பார்த்தாள் வானதி. அவள் விழிகள் 'என்ன செய்ய?' என்று வினவின. கிரிஜா 'போ..' என்பதாக தலை அசைத்தாள். 'கபிலன் வீட்டிற்கு..' என்ற வினா வானதியின் கண்களில் எழுந்தது. நடுவிரல்கள் மூன்றையும் மடித்து பெருவிரல்.. சுண்டு விரல் இரண்டையும் நீட்டி காதருகே வைத்து போன் பண்ணுவதாக ஜாடையிலேயே பதில் கொடுத்தாள் கிரிஜா.

இவர்களது நயன பாஷையையும்.. சங்கேத மொழி களையும் கண்டும் காணாதவர் போல நின்று கொண் டிருந்தார் கருணாகரன். மௌனத்துடன் வண்டிச் சாவியை பாபுவிடம் கொடுத்துவிட்டு கருணாகரனின் காரில் ஏறினாள் வானதி. முகத்தில் எந்தவித உணர்வு களையும் பிரதிபலிக்காமல் சாலையில் கவனமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தார் கருணாகரன். வானதியும் அவருடன் பேச முயலவில்லை. அவள் மனம் பூராவும் கபிலனே வியாபித்திருந்தான்.

'சாயந்திரம் வந்துவிடு.. என்று எவ்வளவு ஆவலாகக் கூறினான்...' என்று எண்ணும்போதே,

'அவனுக்கு மட்டும்தான் ஆவலா? உனக்கு இல் லையா?' என்று அவளது மனம் நகைத்தது.

கபிலனைக் காணப் போகிறோமென்ற ஆவலுடன் விழுந்து விழுந்து வேலை செய்தவள்.. இப்போது உற்சாகம் வடிந்தவளாய் உட்கார்ந்திருந்தாள். அவர்களது அபார்ட்மெண்ட் வந்து விட்டது. பார்க்கிங் ஏரியாவில் காரை நிறுத்திப் பூட்டிய கருணாகரன் முன்னால் செல்ல வானதி பின் தொடர்ந்தாள். வீட்டுக்குள் நுழையும் வரை இருவரும் அவரவர் சிந்தனையிலேயே இருந்தனர். ஒருவரின் மௌனத்தை அடுத்தவர் கலைக்க முற்பட வில்லை. வீட்டுக்குள் நுழைந்ததும் யசோதா கதவை அடைக்கும் வரை பொறுமையாய் இருந்த கருணாகரன் பேச வாய் திறந்தபோது கோபிகிருஷ்ணன் அவனது அறையை விட்டு வெளியே வந்தான். அவனது கண்கள் சிவந்திருந்தன. வானதியை உறுத்துப் பார்த்து விழி சிவந்திருந்தன. வானதியின் புருவங்கள் மேலேறின...

"காலையில் எங்கே போயிருந்தாய்...?"

"இது என்ன அண்ணா புதிதாய் கேட்கிறீங்க, ஆபிஸிற்கு தான் போயிருந்தேன்."

"பொய் சொல்லாதே..."

வானதி துடித்து நிமிர்ந்தாள். இது என்ன அண்ணன் இப்படி ஓர் வார்த்தையை அவளைப் பார்த்துக் கேட்டு விட்டார்.

"நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? பொய் சொல்லி எனக்குப் பழக்கம் இல்லை..."

"நானும் அப்படித்தான் இது நாள் வரை நம்பி யிருந்தேன். என் தங்கை பொய் பேச மாட்டாள். வீட் டிற்குத் தெரியாமல் எதையும் மறைக்க மாட்டாள் என்று... என் நம்பிக்கை பொய்த்து விட்டதே..."

"எதைச் சொல்வதாக இருந்தாலும் நேரடியாய் சொல் லுங்கள்... இந்த மறைமுக வார்த்தைகள் வேண்டாம்."

"நீ மட்டும் மறைமுகமாய் செயல்படலாமா? புதுப் புது பழக்கங்கள் பழகிக் கொண்டிருக்கிறாய் வானதி... இது நன்மைக்கு இல்லை."

வானதி நிதானித்தாள். கோகிலாவின் முகத்தில் இருந்த எள்ளலைக் கவனித்தாள். இவளது எள்ளலின் ட்பொருள் என்னவாக இருக்கும் என்பதை அவளால் ண்டு கொள்ள முடிந்தது. இவள்தான் அண்ணனைத் ண்டி விட்டிருக்க வேண்டும். அப்பாவுக்கும் ஏதோ ரிந்திருக்க வேண்டும். அதனால்தான் அண்ணன் சப்பேச அமைதியாக நிற்கிறார்.



யசோதா கோபிகிருஷ்ணனை கண்டிக்க வாய் திறந் தாள்.

"உஷ்.." என்று கருணாகரன் மனைவியை அடக்கி னார்.

"இல்லைங்க.. இவன் நம் வானதியைப் பார்த்து ஏதேதோ கேட்கிறான்."

"கேட்கட்டும்.. அண்ணன்காரன் கேட்கத்தான் செய் வான்... உன் மகளைக் கண்டிக்க அப்பனும்... அண்ண னும் இல்லையா என்று குணம் கெட்ட குணவதி ஒருத்தி வந்து என்னைக் கேட்டு விட்டுப் போயிருக் கிறாள். கோபிக்கு விஷயம் தெரியாது என்று நினைத் தேன்... அவனுக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் ஏன் என்னிடம் சொல்லாமல் மறைத்தான் என்று தான் தெரிய வில்லை."

"மறைக்க வேண்டும் என்று நினைக்கவில்லை அப்பா.. எதையும் கன்பார்ம் பண்ணிக் கொள்ளாமல் காதில் விழுந்த செய்தியை மட்டும் வைத்து வானதியை சந்தேகப் படக்கூடாது என்று நினைத்தேன்."

"கன்பார்ம் பண்ணிவிட்டாயா?"

"ம்ம்.. இவள் காலையில் நேராக ஆபிஸ் போக வில்லை..."

வானதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'ஸோ... அப்பாவிற்கும்.. அண்ணனுக்கும் தெரிந் விட்டது...' கண்களில் கூர்மையுடன் தமையனை ஏற் டாள்.

"இதை என்னிடம் நேரடியாய் நீங்கள் கேட்டி அண்ணா? காலையில் ஆபிஸ் போனாயா

தானே நீங்கள் கேட்பீர்கள்? ஆயிஷ் போனதற்கு... எங்கே போனாய் என்று நீங்கள் கேட்கவில்லை... அப்படிக் கேட்டிருந்தால்... கபிலனின் வீட்டிற்குப் போனேன் என்று சொல்லி இருப்பேனே...''

யசோதா விழியகல மகளைப் பார்த்தாள்.

''வானதி... நீ என்ன சொல்கிறாய்? கபிலன் என்பது யார்?''

''நான் சொல்கிறேன் அத்தை... எதிர் வீட்டு ... விழி இருந்தானே... அவனுடைய அண்ணன்... சின்ன வயதில் வீட்டை விட்டு ஓடிப் போய் தறுதலையாய் அலைந்தான் என்று சொல்வார்களே... அவன்தான் கபிலன்'' கோகிலா எகத்தாளப் புன்னகையுடன் கூறினாள்.

''அண்ணி... நாவை அடக்கிப் பேசுங்கள். கபிலனைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' வானதி சீறினாள்.

''அதுதானே... எனக்கு எப்படி அவனைப் பற்றித் தெரியும்? உனக்குத் தானே அவனைப் பற்றி நன்றாகத் தெரியும்'' கோகிலா குத்தலாகக் கூறினாள்.

கருணாகரனின் மனம் வேதனைப்பட்டது. எப்போதும் போல் இப்போது கோகிலாவின் வாயை அடக்க அவரால் முடியவில்லை. கோபிகிருஷ்ணனின் நிலையும் அது தான். தகப்பனும், மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்பா.. நான் உங்களிடம் பேச வேண்டும்.''

''பேச.. ஆனால் ஏன் காலம் தாழ்த்திப் பேசுகிறாய்?''



காரணம் இருக்கிறது அப்பா... கபிலனின் வீட்டில் ... சரியில்லை.''

''என்றால் அவன் ஒரு பெண்ணோடு குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறான்...'' என்றாள் கோகிலா.

கேட்கத் தயங்கும் கேள்வியை தயங்காமல் கேட்கும் கோகிலாவின் குணம் இப்போது தகப்பன் மகன் இருவருக்குமே ஆறுதலை அளித்தது.

வானதி கண்மூடி தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வீட்டுக்குள் இருக்கும் கோகிலா பற்றி இல்லை. ஊரில் நிறையப் பேரை அப்படித்தானே நினைக்க வைத்திருக்கிறாள் அந்த குணவதி. அவளை விட்டு விட்டு இவர்களுடன் சண்டை போடுவதால் என்ன லாபம் வந்து விடப் போகிறது?

''அப்பா... எனக்கு அண்ணி சொன்னது போல கபிலனை மிகவும் நன்றாகத் தெரியும். அவர் மேல் எந்தவிதக் குற்றமும் இல்லை... அதே போல் அவர் வீட்டில் ஒரு பெண் இருப்பதும் உண்மைதான். அவள் அவரிடம் அடைக்கலமாய் வந்தவள்... அவருடைய வீட்டில்... அவருடைய பாதுகாப்பில் இருக்கிறாள்...'' பொறுமையாய் விளக்கம் கூறினாள் வானதி.

''இதை ஊரில் அடைக்கலமாய் இருப்பது என்று நாகரிகமாய் பூசி மெழுகி கூற மாட்டார்கள். அசிங்கமாய்ப் பேசுவார்கள்'' கோகிலா நமட்டுச் சிரிப்புடன் பேசினாள்.

''அண்ணி...'' அலறினாள் வானதி.

''உன் அண்ணியை ஏன் அதட்டுகிறாய்... நா
கபிலனும் ஒன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறே
உங்கள் மகள் என் வாழ்க்கையை கெடுக்கிறாள். எ

வாழ்க்கைப் பிச்சை கொடுங்கள் என்று அந்தப் பெண் குணவதியே என்னைத் தேடி வந்து கையெடுத்துக் கும்பிட்டாள்.'' கருணாகரனின் முகத்தில் எரிச்சலும் கோபம் இருந்தது.

''அப்பா.. அந்தப் பெண் நல்லவள் இல்லை அப்பா..''

''அப்படிப்பட்ட பெண்ணிற்கு அடைக்கலம் கொடுத்து வீட்டில் சேர்த்திருக்கும் கபிலன் மட்டும் நல்லவனா?''

''அநாதையாய் அந்தப் பெண் நின்றபோது கபிலன் அவளுடைய அண்ணனுக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக வீட்டில் சேர்த்திருக்கிறார்.''

''ஊரில் எத்தனையோ லேடீஸ் ஹாஸ்டல்கள் இருக்கின்றன. கபிலனின் வீட்டிற்கு இப்போதுதான் கயல்விழி போயிருக்கிறாள். பெண் துணை இல்லாத வீட்டில் ஓர் ஆண் தனியே இருக்கும்போது ஒரு பெண்ணும் அவனுடன் அந்த வீட்டில் இருந்தால் ஊர்.. உலகம் என்ன சொல்லும் வானதி.''

''அவளை லேடிஸ் ஹாஸ்டலுக்குத்தான் கபிலன் போகச் சொல்லி இருக்கிறார். ஆனால் அவள் போக மறுத்து விட்டாளாம் அப்பா...''

''காரியம் முடிந்த பின்னால் போகச் சொன்னால் எந்தப் பெண் தான் போவாள்?''

கோகிலா பேசிய வார்த்தைகள் அநாகரிகமானவை... ஆனால் அதை நிரூபிக்க ஆதாரமில்லையே... சம்பந்தப்பட்ட குணவதியே விரும்பிப் பழியை ஏற்றுக் கொள்ளும்போது வானதி என்ன செய்வாள்?





## 29

கபிலன் யோசனையுடன் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். கயல்விழி கோபத்துடன் பொரிந்து கொண்டிருந்தாள்.

''இவள்தான் என்னவோ செய்திருக்கிறாள் அண்ணா.. இப்போது பார்.. உன்னால்... அண்ணிக்கு கெட்ட பெயர் வந்து விட்டது.. அவங்க அப்பா அண்ணி மேல் எவ்வளவு மதிப்பும் அன்பும் வைத்திருந்தார் தெரியுமா? பாதகி.. இவள் போய் உளறிக் கொட்டியதில் அவர் என்ன நினைத்திருப்பாரோ.. அண்ணியை என்ன சொல்வாரோ..? நீ அண்ணிக்கு போன் போட்டுப் பேசு அண்ணா.''

''வேண்டாம் கயல்விழி. வானதி பிரச்னையில் மாட்டியிருக்கும் இந்நேரத்தில் நான் வேறு போன் பண்ணி அவளது பிரச்னைகளை அதிகப்படுத்தக் கூடாது. பொறு.''

''அண்ணிக்கு என்ன பிரச்சனை என்று நமக்குத் தெரிய வேண்டாமா?''

''நான் அதற்கு வழி கண்டு பிடிக்கிறேன்.'' கபிலன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே.. அவன செல் போன் ஒலித்தது.

''யார் அண்ணா?'' கயல்விழி அவசரமாய் எழு அவனருகில் வந்தாள்.

''கிரிஜாம்மா..'' என்று கூறிய கபிலன் செல்பே எடுத்துப் பேச ஆரம்பித்தான்.

''சொல்லுங்கள் மேடம்...''

''கபிலன்... என்னவென்று தெரியவில்லை [illegible] யின் அப்பா திடீரென்று வந்து வானதியை [illegible] அழைத்துக் கொண்டு போய் விட்டார்.''

''ஏதாவது திட்டினாரா?''

''இல்லை.. ஆனால் அவர் முகம் இறுக்கமாக இருந்தது.''

''இங்கே போனைக் கொடு அண்ணா...'' என்று போனைப் பிடுங்கிக் கொண்ட கயல்விழி கிரிஜாவிடம் பேச ஆரம்பித்தாள்.

''அக்கா.. நான் கயல்விழி பேசுகிறேன்.''

''சொல்லு கயல்விழி...''

''இங்கே இந்த ராட்சஸி அண்ணியுடைய அப்பாவைப் போய் பார்த்திருப்பாள் என்று தோன்றுகிறது...''

''அப்படியா சொல்கிறாய்?''

''ஆமாம் அக்கா.. இவள் அன்னபூரணியம்மாவிடம் டிபன் பண்ண வேண்டாமென்று சொல்லியிருக்கிறாள். நாங்கள் வந்து ஏன் என்று கேட்டபோது வானதி வரமாட்டாள். இன்று மட்டுமில்லை. என்றுமே.. என்று சொல்கிறாள். ஏனென்று கேட்டால்.. கருணாகரன் அவரது மகளை கண்டித்து வைத்திருப்பார் என்று சொல்கிறாள்...''

''ஓ.. இப்போது எனக்கு எல்லாமே புரிகிறது... நீ போனை கபிலனிடம் கொடு...''

போன் கை மாறியது.

''கபிலன்... வானதியின் வீட்டிற்கு உங்கள் காதல் விவகாரமும் தெரிந்து விட்டது.. நீங்கள் அடைக்கலம்



சேர்ந்த லட்சணமும் தெரிந்து விட்டது. இப்போது என்ன செய்யலாம்?''

''எனக்கு வானதி என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பது தெரிய வேண்டும்.''

''கொஞ்ச நேரத்தில் சொல்கிறேன்...''

கிரிஜா வானதியின் வீட்டிற்கு போனபோது கதவு அடைத்திருந்தது. காலிங்பெல்லை அழுத்தினாள். யசோதா கதவைத் திறந்தாள்.

''கிரிஜாவா.. உள்ளே வாம்மா..'' என்றாள் சுரத்தில்லாமல்.

''என் ஆன்ட்டி என்னவோ போல் இருக்கிறீங்க?'' என்று வினவியபடி உள்ளே சென்றாள் கிரிஜா.

''ஏனென்று உங்களுக்குத் தெரியாதா? நீங்களும் தானே காலையில் வானதியுடன் கபிலன் வீட்டிற்குப் போனீர்கள்?'' என்று கேட்டான் கோபிகிருஷ்ணன்.

''நேற்று சாயங்காலம் இவங்க வீட்டில் வைத்துத் தானே திருட்டுத் தனமாய் கபிலனும்.. வானதியும் சந்தித்துக் கொண்டார்கள். இவங்களுக்குத் தெரியாமல் என்ன இருக்கப் போகிறது?'' என்றாள் கோகிலா.

''மெதுவாய் பேசித் தொலைங்கடா.. அக்கம் பக்கத்[illegible]தில் காதில் விழுந்து விடப் போகிறது..'' அவசரமா[illegible] கதவை அடைத்தாள் யசோதா.

கிரிஜா கோகிலாவை முறைத்துக் கொண்டே [illegible] நிலையைக் கவனித்தாள். சோபாவில் கால் மேல் [illegible] போட்டுக் கொண்டு கடுமையான முகபாவத்து[illegible] கருணாகரன் அமர்ந்திருந்தார். அவர் முன்னால் [illegible]

வாளிபோல் தலை குனிந்தபடி சுவரோடு சாய்ந்து நின்று கொண்டிருந்தாள் வானதி. யசோதா கைகளை பிசைந்தபடி கிரிஜாவைப் பார்த்தாள். ஹாலில் மையத்தில் நின்று கொண்டு தங்கையை வெட்டவா.. குத்தவா என்பது போல் முறைத்துக் கொண்டிருந்தான் கோபிகிருஷ்ணன். நீண்ட நாள் கனவு நிறைவேறிய ஆனந்தத்துடன் நாத்தனாரின் துன்பத்தை ஆசை தீரப் பார்த்தபடி அவளது அறை வாசலில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள் கோகிலா.

''அக்கம் பக்கம் கேட்டு விடுவார்களா? அபார்ட் மென்டே சிரிக்கிறது அத்தை. கங்கா அக்கா வீடு வீடாகப் போய் சொல்லியிருக்கிறார்கள். நமக்குத்தான் லேட் டாகத் தெரிந்திருக்கின்றது. நமக்கு முன்னால் எல் லோருக்கும் தெரிந்திருக்கிறது.''

கிரிஜா ஆத்திரமடைந்தாள். இவள் வானதியின் மேல் சேற்றை வாரிப் பூச நேரம் பார்த்துக் கொண்டிருந்தவள்.. அவள் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிடைத்து விட்டதால் ஆடுகிறாள்.

''தெரிந்து விட்டது.. தெரிந்து விட்டது என்கிறீர்களே.. என்ன தெரிந்து விட்டது? நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?''

''உங்களுக்கு ஏன் கிரிஜா கோபம் வருகின்றது? ஓ.. நீங்களும் உள் கூட்டுத்தானே... இவளுக்கு உள் கைதானே.''

''உள்கூட்டா? நாங்கள் என்ன கூட்டுக் களவாணி களா?''

''பின்னே இல்லையா?''



''கோகிலா. மைன்ட் யுவர் வொர்ட்ஸ்.''

''சும்மா துள்ளாதீங்க கிரிஜா. இவள் மொட்டை மாடியில் அந்த கபிலனைச் சந்தித்தது... உங்கள் வீட்டில் சந்தித்தது... அவனைத் தேடி அவன் வீட்டிற்கு இவள் போனது... துணைக்கு நீங்களும் போனது. எல்லாம் பொய்யா?''

''மெய்தான்... இதில் களவாணித்தனம் எங்கேயிருந்து வந்தது?''

''வீட்டுக்குத் தெரியாமல் கண்டவனோடு கூடிக் குழாவினால் அது களவாணித்தனம் இல்லையா?''

''உங்கள் கண்ணுக்கு அது களவாணித் தனமாகத்தான் தெரியும். ஏனென்றால் உங்களுக்கு வானதியை எப் போதுமே பிடிக்காது.. நான் உங்களிடம் பேச விரும்ப வில்லை. அங்கிள்.. நீங்கள் எனக்கு பதில் சொல்லுங்கள். வானதி என்ன தவறு செய்தாள்? கபிலனை காதலிக் கிறாள். கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறாள். அது ஒரு தவறா?''

கருணாகரன் கிரிஜாவிற்கு எதிர் சோபாவை கைகாட்டி ''உட்காரும்மா..'' என்றார். அவள் அமர்ந்ததும்,

''நீ உன் தோழிக்காக பரிந்து கொண்டு வருகிறாய் ... முறையில் ... சந்தோசம். ஆனால் ஒரு தகப்பன் என்ற முறையில் ... கபிலன் ந... மனம் படும் வேதனை உனக்குப் புரியாது. கபிலன் ந... மனிதன். அதில் எனக்கு சந்தேகம் இல்லை. அவனு... தாராளமாய் பேசலாம்.. பழகலாம்.. ஆனால் ... விப்பது... கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்... என்றால் என் மகளுக்கு கபிலன் சரியான ச... கிடையாது...''

''என்ன அங்கிள் இப்படிச் சொல்கிறீர்கள்? கபிலனுக்கு என்ன குறை? அவனுக்கு அழகில்லையா.. படிப்பில்லையா.. பணமில்லையா?''

''சொஸைட்டியில் நல்ல பெயர் இல்லை. யாரோ ஒரு பெண்ணுடன் அவன் ஏழெட்டு மாதங்களாக ஒரே வீட்டில் வாழ்ந்து வருகிறான். இதை அந்தப் பெண்ணே என்னிடம் வந்து சொல்லி அழுகிறாள். வானதியும் இதை மறுக்கவில்லை.''

''அங்கிள்... அவள் நல்லவளல்ல.. அவள் யாரென்றால்...''

''அவளுடைய கதை எனக்கு எதற்கம்மா? அவளே அவனைப் பற்றி மட்டமாகச் சொல்லிக் கொள்வதிலேயே அவளது குணம் தெரிகிறது. ஆனால்... அவள் சொல்வதில் உண்மை இருக்கிறதே...''

''கபிலனுடைய வீட்டில் அவள் தங்க ஆரம்பித்ததில் இருந்து கபிலன் அவருடைய வீட்டில் தங்குவது இல்லை அங்கிள்.''

''இதை ஊரெல்லாம் போய் நான் சொல்லி வர முடியுமா?.. சரி.. இதை விடும்மா. நான் கபிலனுக்கு வானதியைத் தர சம்மதிக்கிறேன் என்றே வைத்துக் கொள். முறைப்படி பெண் கேட்டு வர அவனுக்கென்று யார் இருக்கிறார்கள்?''

வானதி சட்டென்று தலைநிமிர்ந்தாள். மனிதர்கள் இல்லாதது ஒரு குறையா? அதில் கபிலனின் குற்றம் என்ன இருக்கிறது.

''அப்பா...''



''நீ எதுவும் சொல்லவேண்டாம் வானதி.. சமுகத்தைப் பற்றிய உன் கண்ணோட்டம் வேறு. என் கண்ணோட்டம் வேறு. கபிலனைப் பெற்ற தகப்பனே என் மகன் ஒரு தறுதலை.... சின்ன வயதில் வீட்டை விட்டு ஓடிப் போனவன் என்கிறார்.. இப்படிப்பட்ட பின்புலம் உள்ள ஒருவனுக்கு என் மகளைத் தர முடியுமா?''

கிரிஜா மேற்கொண்டு எதுவும் பேசாமல் வீட்டை விட்டு வெளியில் வந்தாள். கபிலனுக்கு போன் பண்ணினாள். நடந்தவற்றைத் தெரிவித்தாள்.

''வானதியை தனிமைப்படுத்தி விட்டாள் அவளுடைய அண்ணி.. அவள் சொல் அவளுடைய அப்பாவிடமே எடுபடவில்லை. வானதியின் அப்பா சொஸைட்டியில் அவருடைய கௌரவம் என்ன ஆவது என்று கவலைப்படுகிறார். இந்நிலையில் உங்களுடைய காதல் என்ன ஆகப் போகிறதோ...''




கருணாகரனின் அறைக்குள் பாபு எட்டிப் பார்த்தான். ஒரு மார்க்கமாய் விழிக்க வேறு செய்தான்.

''ஏண்டா இப்படி ஆடு திருடினவன் போல் விழிக்கிறாய்?'' என்று அதட்டினார் கருணாகரன்.

''இல்லைங்க டாக்டர் சார். இன்றைக்கும் உங்களைப் பார்க்க...''

''என்னது? அந்தப் பெண் வந்திருக்கிறாளா.. திரு அனுப்பு...''

''பொம்பளை இல்லை சார்.. ஆம்பளை..''

"யாருடா அது..? சரி அனுப்பு..."

கபிலன் உள்ளே நுழைந்தான். கருணாகரனைப் பார்த்து கரம் குவித்தான். கருணாகரன் யோசனை யானார்.

"வணக்கம் சார்.."

"வாங்க கபிலன் உட்காருங்கள்."

"தேங்க்யூ சார்."

"அப்புறம்.. என்ன இந்தப் பக்கம்?"

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்..."

"என்னைப் பார்க்கவா? என்ன விஷயம்?"

எதுவுமே தெரியாதது போன்று கேள்விகள் வர.. பொறுமையாய் ஆனால் நேரடியாய் பதில் சொன்னான் கபிலன்.

"என்ன சாப்பிடுகிறீர்கள் கபிலன்."

"நோ.. தேங்க்ஸ் சார்."

"இப்படிச் சொன்னால் எப்படி? பாபு.. ஒரு கூல்டிரிங்க் வாங்கிக் கொண்டு வா. சொல்லுங்கள் கபிலன்..."

கருணாகரன் சேரில் சாய்ந்து அமர்ந்து கொண்டார். கபிலன் நிதானமாய் அவர் முகம் பார்த்தவாறே வார்த்தைகளைக் கோர்த்தான்.

"சார்.. நான் வானதியைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்."

நெற்றியடியான கேள்வி. கருணாகரன் யோசித்தார்.

'எப்படி இவன் மனம் வருந்தாமல் மறுப்பது...''

"என்ன சார் யோசிக்கிறீர்கள்?"



"கபிலன்.. எனக்கு உங்கள் மேல் மதிப்பு.. மரியாதை எல்லாமே இருக்கிறது.. அது வேறு... ஆனால் என் பெண்ணின் திருமணம் என்பது வேறு... என் பெண்ணை உங்களுக்கு திருமணம் செய்து கொடுக்க என்னால் முடியாது.. ஐ ஆம் வெரி ஸாரி டு ஸே திஸ்."

"என்னிடம் என்ன குறையென்று நான் கேட்க மாட்டேன் சார்.... நீங்கள் நல்லவர்.... மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர். எடைபோடக் கூடியவர். என்னைப் பற்றிய உங்களது மதிப்பீடு குறைவானதாக இருக்காது. இருந்தாலும் பெண்ணைக் கொடுக்கத் தயங்குகிறீர்கள். உங்கள் மேல் தவறு இல்லை சார். என்னுடைய தலைவிதி கோணலாக இருக்கும்போது நான் யாரை நொந்து கொள்ள முடியும்? என் அப்பா இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதைக் கேட்டதும் என் அம்மா ஹார்ட் அட்டாக் வந்து துடிதுடித்து இறந்து போயிட்டாங்க... அவர்களின் சாம்பலின் தணல் ஆறுவதற்குள் என்னைப் பெற்றவன் தொடர்பு வைத்திருந்தவளை ஊரறிய மனைவியாக்கிக் கொண்டு மாலையும் கழுத்துமாக வீட்டில் வந்து நின்றான்... அவனுடைய வீட்டில் இருக்கப் பிடிக்காமல்... அவனுடைய பணத்தில் வாழப் பிடிக்காமல்,... அவனை அப்பா என்று கூப்பிடப் பிடிக்காமல் வீட்டை விட்டு வெளியேறினேன். இது தவறா?"

தவறென்று சொல்ல முடியாத கருணாகரன் மௌனித்தார்.

"அன்பழகன் என் கூடப் படித்தவன்.. அவனையும் அவனது தங்கையையும் பார்க்கும் போதெல்லாம் எனக்கு.. என்னையும் கயல்விழியையும் பார்ப்ப

[illegible]

"[illegible] நாடைன் இடம் பார்த்துக் கொடுத்தான்... [illegible] அங்கு போக மறுத்து விட்டு என் வீட்டிலேயே இருப்பேனென்று அடம் பிடித்தாள்... நான் மறுத்தேன்... நான் இல்லாதபோது அவளுடைய வீட்டை [illegible] பண்ணிவிட்டு பெட்டியோடு என் வீட்டிற்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள். சமையலுக்கு.. மேல் வேலைக்கு என்று இரண்டு பெண்களை வேலைக்கு அமர்த்தி அவளுக்கு துணையாய் வைத்து விட்டு... வீட்டுக்கு வாட்ச்மேன் ஒருவரையும் காவலுக்கு வைத்து விட்டு... வீட்டை விட்டு நான் வெளியேறி விட்டேன். சாப்பிடுவது தூங்குவது எல்லாம் என் மெக்கானிக் ஷெட்டில்தான்..."

'இதற்காகவா.. இவன் இவ்வளவு பாடுபட்டு சொந்த வீடு கட்டினான். இருக்க வீடு இருந்தும்.. வீடில்லாத அநாதை போல் ஷெட்டில் படுத்து எழுந்திருக்கிறானே...!'

கருணாகரனின் மனம் இளக ஆரம்பித்தது.

"அவளுக்காக மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தேன். சீர்வரிசை நகை என்று கயல்விழிக்கு செய்வது போல் செய்யத் தயாராக இருந்தேன். ஆனால் வந்த மாப்

[illegible]

[illegible] என்று நினைத்தேன்... அவள் [illegible] செய்தாளா?"

"ஆமாம் சார். வானதியை நான் மனதார விரும்பினேன். ஆனால் அந்தப் பெண் என்னை மாட்டி வைத்திருக்கும் இக்கட்டான சூழலில் வானதியையும் மாட்டிவிட விருப்பமின்றி என் காதலை சொல்லாமல் மறைத்துத்தான் வந்தேன். நானும் மனிதன்தானே சார். கல் இல்லையே... என் மனதை அடக்க முடியவில்லை. வானதியிடம் என் காதலைச் சொல்லி விட்டேன். அவள் கயல்விழியைப் பார்க்கத்தான் என் வீட்டிற்கு வந்தாள். அதுவும் கிரிஜாவின் துணையோடு வந்தாள். என் வீட்டிலிருந்த பிடாரியின் கண்ணில் பட்டு விட்டாள். அவள் வந்து உங்களைப் பார்த்து போட்டுக் கொடுத்து விட்டாள்."

"அவள் போட்டுக் கொடுக்க வந்தாலும் அ[illegible] பொய்யில்லையே கபிலன்... குணவதி மட்டுமில்ல[illegible] கோகிலாவும் வானதியைப் பற்றிப் புகார் கூறுகிறா[illegible]

"நான் என் நண்பன் சரவணனின் வீட்டில் [illegible] தியைச் சந்தித்தது உண்மைதான்... சார்.. நா[illegible] இரண்டு பேரும் ஒருவரையொருவர் காதலிக்கி[illegible]

எங்கள் எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் சந்தித்துப் பேசிக் கொள்ளக் கூடாதா?"

"என் மகனின் எதிர்காலத்தில் எனக்குப் பங்கு இல்லையா?"

"உங்களிடம் பெண் கேட்காமல் அவனைத் திருமணம் செய்து கொள்வேனா?"

"பெண் கேட்க வருவது நீங்களாகத்தான் இருக்கிறீர்கள்... உங்கள் சார்பாய் பெண் கேட்டு வர உங்களைப் பெற்றவரே மறுப்பாரே...?"

"அந்த ஆள் சரியென்றாலும் நான் அவனை என் தகப்பன் ஸ்தானத்தில் வைப்பேனா சார்? எனக்கு தாயும் இல்லை.. தகப்பனும் இல்லை.. ஆனால் உற்ற நண்பர்கள் பலர் இருக்கிறார்கள்... என் சார்பாய் சரவணனும் கிரிஜாவும் பெண் கேட்டு வருவார்கள்.. போதுமா?"

"போதாது கபிலன். உங்கள் வீட்டிலிருக்கும் பெண் என்னைத் தேடி என் வீட்டிற்கே வருவாள். வாசலில் நின்று சத்தம் போடுவாள். இது எங்களுக்குத் தேவையா?"

"சார்.. அவள் சொல்வது பொய்."

"எனக்கும் அது தெரிகிறது கபிலன். ஆனால் அவளை உங்களது வாழ்விலிருந்து விலக்கி வைத்துவிட்டு வந்து பெண் கேளுங்கள். நான் யோசிக்கிறேன்..."

"அப்போதும் யோசிக்கத்தான் செய்வீர்களா?"

"நான் பெண்ணைப் பெற்றவன் கபிலன். நான் [illegible] யோசிக்க வேண்டும்."

"அந்த நாளில் ஒன்று [illegible] தெரிந்து கொள்ளலாமா?"

"கபிலன்... உங்களுடைய சொத்து வீடும் [illegible] யும் தான்... இவை இரண்டும் கயல்விழியின் பெயரில் இருக்கின்றனவே...!"

"மெக்கானிக் ஷெட் என் பெயரில் இருக்கிறது சார்!"

"அது போதாது கபிலன். உங்களுடைய இத்தனை குறைபாடுகளையும் நான் தூக்கி எறிந்து விட்டுப் பெண் கொடுப்பதாக இருந்தால் உங்களுக்கு பணபலம் சொத்து இருக்க வேண்டும். அது இப்போது உங்களிடம் இல்லை...!"

கபிலன் சொன்னதைக் கேட்ட கிரிஜாவும் சரவணனும் தங்களுக்குள் விவாதித்தனர்.

"தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்."

"இல்லை கிரிஜா.. அவர் வாதத்திலும் நியாயம் உள்ளது."

"இதற்கு என்ன வழி இருக்கிறது?"

கிரிஜாவின் கேள்விக்கு 'இருக்கிறது' என்று பதில் கொடுத்தாள் கயல்விழி.

"என் மேல் உள்ள சொத்தை... அண்ணி பெயருக்கு மாற்றி எழுது. எனக்கு சொத்து நீதான்.. வேறு எதுவும் வேண்டாம்."

தங்கை அல்ல. தான் கபிலனின் தாய் என்று அந்த கணத்தில் நிரூபித்தாள் கயல்விழி. கபிலனின் கண்கள் கலங்கி விட்டன.

"என்ன தவம் செய்தேன். இவளுடன் நான் பிற[illegible]




வானதி 'முடியாது' என்பது போல் தலையை அசைத்தாள். ஆறு நாட்கள் தொடர்ந்து விடுமுறையில் இருந்து விட்டு அன்றுதான் அலுவலகம் வந்திருந்தாள். வீட்டில் இருக்கும் போது முடிந்த வரை தனிமையிலேயே இருந்தாள். பெற்றோரிடமோ.. கோபிகிருஷ்ணனிடமோ பேசுவதை தவிர்த்தாள். கோகிலாவை ஒரு மனித ஜீவனாகவே அவள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

கபிலன் வந்து பேசிப் போன பின் கருணாகரன் மகளின் அறைக்குள் வந்தார். கட்டிலில் சோர்வாக அமர்ந்து முழங்கால்களை கட்டிக் கொண்டு அதில் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்த வானதியின் தோற்றம் அவரது மனதை என்னவோ செய்தது. அருகில் அமர்ந்து மகளின் தலையைத் தடவிக் கொடுத்தார். தந்தையின் ஸ்பரிசம் உணர்ந்து தலை தூக்கிப் பார்த்தாள்.

''அப்பா...''

''ஏனம்மா உன்னை நீயே தனிமைப் படுத்திக் கொண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அப்பா.''

''ஏன் ஆபிஸ் போகவில்லை?''

''நான் ரெஸ்ட்லெஸ்ஸாய் பீல் பண்ணுகிறேன் ப்பா. மைன்ட் ப்ரீயானதும் போய் விடுவேன்.''

''மனது சரியில்லையென்றால் லீவ் போட்டு விடு ா? லீவில் இருந்தால் மனம் சரியாகி விடுமா?''

மனம் அலை பாய்ந்து கொண்டிருக்கும்போது வேலை கவனம் போகாது அப்பா. முழு மனதாய் வேலை க வேண்டும்.''



''அலை பாயும் மனத்தை அடக்க முடியவில்லை என்கிறாயே.. உன்னால் அது முடிய வேண்டும் வானதி.''

''பெரிய.. பெரிய ஞானிகளாலேயே முடியாதது என்னால் முடியுமா?''

''அப்பா.. உன் நல்லதிற்காகத்தான் சொல்கிறேன் வானதி.''

''எனக்கு உங்கள் மேல் கோபமோ.. வருத்தமோ இல்லை அப்பா. அதே சமயம் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். என்னால் கபிலனைத் தவிர வேறு ஒருவரை மனதாலும் நினைத்துப் பார்க்க முடியாது...''

கருணாகரன் திகைத்தார். மகளின் தீர்க்கமான பேச்சு அவரை அச்சுறுத்தியது. மனம் எதை. எதையோ நினைத்துக் கலங்கியது.

''எங்களை எதிர்த்து அவனை நீ கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?''

''அப்பா.. உங்களை மீறி... நான் இந்த வீட்டை விட்டு வெளியேற மாட்டேன். ஆனால் கபிலனைத் தவிர வேறு யாரையும் மணக்கவும் மாட்டேன்.''

கருணாகரனின் மனம் நிம்மதியடைய முடியாமல் தவித்தது.

'என்ன இது... இவள் இப்படிச் சொல்கிறாள்..'

''கபிலன் இன்று என்னைப் பார்க்க வந்திருந்தா வானதி...''

வானதி அவரை நிமிர்ந்து பார்த்தாள். வேறு எது பேசவில்லை.

''என்ன பேசினான் என்று நீ கேட்கவில்லையே

"என்ன பேசியிருக்கப் போகிறார்? தன்னி... விளக்கம் கொடுத்திருப்பார். அவர் துர்பாக்கியசா... அப்பா. நல்லவராக இருப்பதே சில சமயம் ஒருவருக்கு கெடுதலாக முடிகிறது... அவர் என்ன பாவம் செய்தார் அப்பா? இளமையிலேயே தாயை பறி கொடுத்தார். தந்தையை வெறுத்து ஒதுங்கினார். தங்கை இருந்தும் கூட வசிக்க முடியாமல் தனித்து நின்றார். அவர் தானாக வளர்ந்தார் அப்பா..

யார் அவரை படிக்க வைத்தார்கள்? இந்த அவையத்து யார் அவரை ஆளாக்கினார்கள்? இத்தனை நாள் அவருடைய நடத்தையில் சிறு யாக கூடப் படியாமல் இருந்து விட்டு இப்போது மட்டும் அவர் தலையில் அவரே மண்ணை வாரி இறைத்துக் கொள்வாரா?"

"நீ சொல்வது சரியாக இருக்கலாம் வானதி... ஆனால் நாம் இந்த சமுதாயத்தில் தான் வசிக்கிறோம். சமுதாயம் பார்த்துக் குறை கூறும் ஒருவனை எப்படி நான் என் னுடைய மருமகனாய் ஏற்றுக் கொள்ள முடியும்?"

"அப்பா.. நீங்கள் கண்ணதாசனின் பாடல்களை ரசிப்பவர். உங்களுக்கு நான் சொல்லியா தெரிய வேண் டும்? கண்ணதாசனின் பாடல்களில் ஒன்றை அடிக்கடி நீங்கள் ரசித்துச் சொல்வீர்கள். நினைவிருக்கிறதா...

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே...

உனக்கு நீதான் நீதிபதி...

மனிதன் எதையோ பேசட்டுமே...

மனசை பார்த்துக்க நல்லபடி...

கறைகட்ட சிலபேர் இருந்துவிட்டால்

கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு.



களப்பற்ற சில பேர் இருந்துவிட்டால்

கள்வர்கள் வாழ்விலும் நியாயமுண்டு.

கோர்ட்டுக்கு தேவை சிலசாட்சி..

குணத்துக்கு தேவை மனச்சாட்சி...

இந்தப் பாடலை எத்தனையோ முறை நீங்கள் ரசித்து எனக்கு விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள் அப்பா... பாடலை ரசிக்க முடிந்த உங்களால் வாழ்க்கையில் அதை கடைபிடிக்க முடியவில்லையே.. மற்றவர்களுக்குத்தான் இந்தப் பாடலா? உங்களுக்கு என்று வரும்போது எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விடுவீர்கள். அப்போது உலகம் சொல்வதுதான் உங்களுக்கு முக்கியமாய் படும். அப்படித்தானே...?"

மகளின் புத்திசாலித்தனமான பேச்சில் வைரப்பட்டார் கருணாகரன். வீட்டின் கடைசிக் குழந்தை. பெண் குழந்தை... கடைக்குட்டி என்பதால் செல்லம் அதிகம் கிடைத்தும் அதை பயன்படுத்திக் கொள்ளாமல் புத்தி சாலித்தனமாய் வளர்ந்த கடைசி மகளிடம் அவருக்கு எப்போதும் பிரியம் அதிகம் உண்டு.

இன்று அந்த மகள் விரும்பும் காதலனுக்கு திருமண பண்ணிக் கொடுக்க முடியாமல் போனதில் கரு... காரனுக்கும் வருத்தம் உண்டு. கபிலனும் நல்ல... சூழ்நிலை அவனுக்கு எதிராக சதி செய்கிறதே ஒ... அவன் கெட்டவன் அல்ல. குணவதியின் குறி... னுடைய பணத்தின் மேல்தான் என்பதில் எள் அ... அவருக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் தற்க... கொள்ளத் தெரியாதவனை நம்பி எப்படிப் ... கொடுப்பது?

''பார் வானதி.. கபிலன் நல்லவனாக இருந்து படும் சிரமங்கள் போதும். ஒரு நல்லவனையே இந்த ஊரால் தாங்க முடியவில்லை. இதில் நான் நல்லவனாக இருந்தால் அவ்வளவுதான். ஊர் தாங்காது. விட்டுவிடு. எனக்கு உன் எதிர்காலம் தான் முக்கியம்.''

''அவருடைய தன்னிலை விளக்கத்தை நீங்கள் நம்பவில்லை. அப்படித்தானே.''

''பார் வானதி.. இதில் இன்னொரு விஷயமும் உண்டு. கொதிக்கும் நீரில் இருந்து தப்ப கொதிக்கும் எண்ணெயில் விழுந்த கதையாய்.. சொத்துக்களை அந்தப் பெண்ணிடமிருந்து காப்பாற்ற கபிலன் தன் தங்கையின் பெயரில் சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறான்.''

''அது நியாயம் தானே அப்பா. அவருக்கென்று இருக்கும் ஒரே உறவு கயல்விழி தானே?''

''அப்படியானால் உனக்கு என்ன மிஞ்சும்?''

''அப்பா...''

''நான் பெற்றவன் அம்மா. நான்கையும் யோசிக்க வேண்டும். கபிலனின் உழைப்பினால் வந்த சொத்திற்கு சொந்தக்காரி அவனது தங்கை மட்டும்தானா.. மனைவி இல்லையா?''

''கயல்விழிக்கு சொத்தின் மேல் ஆசை இல்லை அப்பா.''

''அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவனுக்கு சை இருக்காதா? எல்லோரும் உன்னைப் போல் துறவு ப்பான்மையுடன் இருப்பார்களா?''



''அப்பா.. முதலில் அவருக்கு குணமில்லை என்று சொன்னீர்கள்.. இப்போது பணம் இல்லை என்று சொல்கிறீர்கள்... உங்களுக்கு அவரைக் கழித்துக் கட்ட காரணம் தேவை. அதுதான் விஷயம்.''

''அப்படி நீயாக நினைத்துக் கொண்டால் நான் அதற்கு பொறுப்பில்லை...''

''அப்பா.. இப்போதும் சொல்கிறேன். என் கபிலன் மிகவும் நல்லவர்.''

''நானும் இல்லையென்று சொல்லவில்லையே... அவரது சிக்கல்கள் தீரட்டும். சொத்தை திரும்பப் பெறட்டும். அப்புறம் உங்கள் கல்யாணத்தை நானே முன்னால் நின்று நடத்துகிறேன்.''

வேலைக்குத் திரும்பிய பின்னர் கிரிஜாவிடம் குமுறினாள் வானதி.

''போகாத ஊருக்கு வழி சொல்கிறார் அப்பா.''

''கபிலன் இதை வீட்டில் சொன்னதும் கயல்விழி சொத்தையெல்லாம் உன் பெயரில் எழுதி வைக்கச் சொல்லி விட்டாளாம் வானதி...''

வானதி 'முடியாது..' என்பது போல் தலையை அசைத்தாள்.

''அவருக்கு என் மேல் பாசம் அதிகம் கிரிஜா.. பாசத்தை பயன்படுத்தி அவருடைய உரிமையை நான் பறிக்க மாட்டேன்.''

''நீ உன் வாழ்க்கையையும் கொஞ்சம் நினைத்துப் பா வானதி...''

''இதில் நினைத்துப் பார்க்க என்ன இருக்கிறது கிரிஜ எனக்குக் கல்யாணம் என்று ஒன்று நடந்தால்

கபிலனோடுதான். இதை அப்பாவிடம் சொல்லிவிட்டேன்...''

கிரிஜா... கபிலனுடன் அமர்ந்து மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்தாள். இவர்கள் அனைவரையும் ஆளுக்கொரு பக்கம் அலைய விட்டுக் கொண்டிருந்த குணவதி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

''நான் போலீஸில் புகார் கொடுக்கப் போகிறேன்.''

கல்லூரிக்கு கிளம்பிக் கொண்டிருந்த கயல்விழி அவளை முறைத்தாள்.

''என்னவென்று புகார் கொடுப்பாய்.''

''என் கணவனிடமிருந்து என்னை பிரிக்கப் பார்க்கிறார்கள் என்று புகார் கொடுப்பேன்...''

அலட்சியப்படுத்திவிட்டு கல்லூரிக்குச் சென்றாலும் கயல்விழியால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. கபிலனுடனும் கிரிஜாவுடனும் ஆலோசித்தாள்.

''என்ன அண்ணா இவள் இப்படிச் சொல்கிறாள். இவள் பாட்டுக்கு கிறுக்குத்தனமாய் எதையாவது செய்து வைத்து விட்டால் என்ன செய்வது?''

''பொய் புகார் ஜெயிக்காது கயல்.''

''நான் அவள் ஜெயித்து விடுவாளென்று கவலைப் படவில்லை. அண்ணியின் அப்பா காதிற்கு விஷயம் போய் விட்டால் அவர் இன்னும் மலையேறி விடுவாரே.''

''அட... ஆமாம். அப்படி ஒன்று இருக்கிறதே...'' ...வன் கவலையில் ஆழ்ந்தான்.



கிரிஜா வானதியிடம் விஷயத்தைச் சொன்னாள். வானதியின் முகமும் கவலையைக் காட்டியது. கிரிஜா தீர்மானமாய் கூறினாள்.

''பார் வானதி... எதையாவது அவசர நடவடிக்கை போல செய்தாக வேண்டும். நீயும் கொஞ்சம் இறங்கி வா.. அப்போதுதான் உன் அப்பாவை சமாதானப் படுத்த முடியும்.''

''என்னடி செய்யச் சொல்கிறாய்.''

''அதை நாளைக்கு பீச்சில் உட்கார்ந்து மீட்டிங் போட்டு முடிவு பண்ணலாம்.''

''பண்ணலாமா... யார்.. யார்..?''

''நான்.. நீ... என் கணவர்... கபிலன்... கயல்விழி...''

''கிரிஜா.. கபிலனை நான் சந்திப்பதில்லை என்று தீர்மானமாய் இருக்கிறேன்.''

''அவரைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்வதில்லையென்றும் தீர்மானமாய் இருக்கிறாயல்லவா? அது நிறைவேற வேண்டாமா?''

வானதி அடங்கிப் போனாள். கடற்கரையில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் கபிலனைப் பார்த்தபோது அவள் மனம் தவித்துப் போனது... கண்கள் சிவந்து.. தலை முடி கலைந்து.. தாடி அதிகம் வளர்ந்து... பித்தனைப் போல் காட்சி அளித்தான்.

வானதியின் கண்கள் கலங்கி விட்டன. அவனையே விழிகளை அகற்றாமல் அவள் பார்க்க... அவனோ அவளைத் தவிர வேறு யாரும் அங்கில்லை என்பது போல் அவளையே விழுங்கி விடுவது போல் பார்த்து...

கொண்டு நிற்க... உடனிருந்த மற்றவர்கள் நெகிழ்ந்து போனார்கள்.



## 32

கிரிஜா கூறிய திட்டத்திற்கு வானதி சம்மதம் கொடுத்தாள். கபிலனை அந்த மாதிரியான கோலத்தில் பார்த்த பின்னால் அவளால் மறுத்துப் பேச முடியவில்லை.

“வானதி... கயல்விழியிடமிருந்து முழுச் சொத்தையும் நீ வாங்கிக் கொள்ள வேண்டாம். வீட்டையும், பேக்டரியையும் உங்கள் இருவரின் பெயருக்கும் மாற்றி எழுதித் தருவதாகக் கபிலன் கூறுகிறார்.”

“கிரிஜா இது சரி வருமா?”

“ஏன் வராது? எப்படியும் சொத்தில் அண்ணன் தங்கை இரண்டு பேருக்கும் உரிமை இருக்கிறதா இல்லையா? கபிலன் சொத்தைத்தானே உனக்குக் கொடுக்கிறார். கயல்விழியின் பங்கு அவனிடம் தானே இருக்கிறது?”

“நாளை கயல்விழிக்கு திருமணம் ஆனால்?”

“சேர்ந்தே இருக்கப் போகிறீர்கள்.. கடல் போல கபிலனின் வீடு.. உன் குடும்பமும் கயல்விழியின் குடும்பமும் கூட்டுக் குடித்தனமாக இருக்க முடியாதா?”

“பேக்டரி...?”

“அதே கதைதான் பேக்டரிக்கும்..வரும் வருமானம் இரண்டு குடும்பத்திற்கும் சரிதானே.”



வானதி கபிலனைப் பார்த்தாள். அவன் விழிகள் இறைஞ்சின. கயல்விழியோ அவளைக் கட்டிக் கொண்டு கெஞ்சினாள்.

“சரி...” என்றாள் வானதி.

“குட். ரெஜிஸ்ட்ரார் ஆபிஸிற்கு பத்திரத்தை பதிவு பண்ண மட்டும் நாம் போகவில்லை.”

“பின்னே...?”

“உனக்கும் கபிலனுக்கும் திருமணத்தை பதிவு பண்ண போகிறோம்.”

“கிரிஜா...” வானதி பதறினாள்.

“வேறு வழியில்லை வானதி.. குணவதி எந்த நேரம் எதைச் செய்வாள் என்று தெரியவில்லை. சட்ட ரீதியாய் அவளது வழியை அடைக்க இதைத் தவிர வேறு வழி யில்லை. திருமணத்தை பதிவுதான் பண்ணுகிறோம். மற்றபடி நீ உன் வீட்டிலேயே இருக்கலாம். முறைப்படி உன் அப்பா கல்யாணம் பண்ணி வைக்கும் வரை வெயிட் பண்ணலாம்.”

வானதிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கபிலன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது. முடிவெடுத்து விட்டாள்.

“ஓ.கே. கிரிஜா...”

கபிலனின் முகத்தில் வெளிச்சம் பரவியது. மறுநா காலையில் நினைத்ததை முடித்தனர். அவர்க அனைவரும் ரெஜிஸ்ட்ரார் ஆபிஸில் நிற்க பதிவேட் கையெழுத்திட்டு திருமணப் பதிவு பத்திரத் கையில் வாங்கிக் கொண்டபோது வானதியின் உ புல்லரித்தது.

'இனி அவன் கபிலனின் சொத்து...'

அவனைப் பார்த்தபோது அவனும் அப்போது அவ ளையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது. அவன் கண்களில் புதிய சொந்தம் தெரிந்தது.

வீட்டிற்குத் திரும்பியதும் கருணாகரனின் அறைக்குள் நுழைந்தாள் வானதி. சொத்துப் பத்திரத்தையும் திருமண பதிவு பத்திரத்தையும் நீட்டினாள்.

"என்னம்மா இது..."

"ஒன்று நீங்கள் கேட்டது... சொத்து.. கபிலனின் பெயரில் இல்லை. என் பெயரிலேயே சொத்தை எழுதித் தந்து விட்டார்கள்... எனக்கும் கயல்விழிக்கும் சரிபாதி. இன்னொன்று நீங்கள் கேட்காதது.. என்னுடைய திருமணப் பதிவு பத்திரம்."

"வானதி..."

"பதற வேண்டாம் அப்பா. இது ஒரு பாதுகாப்பு ஏற்பாடு மட்டும்தான். நான் சொன்னது போல நீங்களாக என்னை திருமணம் பண்ணி அனுப்பாமல் நான் வீட்டை விட்டுப் போக மாட்டேன்" வானதி அமைதியாக தன் அறைக்குப் போய் விட்டாள். கருணாகரன் அசைவற்று அமர்ந்திருந்தார்.

குணவதியின் முன்னால் இரண்டு பத்திரங்களின் கல்களை வீசினாள் கயல்விழி.

"பார்த்துக் கொள். என் அண்ணனின் திருமணம் டிந்து விட்டது. அதற்கான பதிவுச் சான்றிதழ் இது. ாத்து என் பெயரிலும்.. என் அண்ணி பெயரிலும் வாகி விட்டது. இப்போது நாங்கள்தான் போலீஸிற்கு

போக வேண்டும். சட்டப்படி திருமணமான என் அண்ணியை வந்து வாழ விடாமல் நீ வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் என்று நான் கம்ப்ளெயிண்ட் பண்ணவா?"

குணவதி அடங்கிப் போனாள். கபிலனிடம் பேச அவளால் முடியவில்லை. வேறு வழியின்றி கயல்விழியிடமே பேசினாள்.

"என் வாழ்க்கைக்கு என்ன வழி?"

"அதைத்தான் நீயே கெடுத்துக் கொண்டாயே... உன்னைப் பற்றி நீயே தப்புத் தப்பாய் ஊரெல்லாம் சொல்லி வைத்து விட்டு.. இப்போது வாழ்க்கைக்கு என்ன வழியென்று என்னிடம் வந்து கேட்டால் நான் என்ன வழி சொல்ல? நன்றாக யோசித்துப் பார் நீயென்ன எங்களுக்கு சொந்தமா.. பந்தமா? உ அண்ணன் கூடப் படித்தவர்கள் எத்தனையோ பே இருக்கிறார்கள். என் அண்ணனை விட உன் அண் ளுக்கு நெருங்கிய நண்பர்கள் நிறைய பேர் இ கிறார்கள். என் கிரிஜா அக்காவின் கணவர் சரவ கூட உன் அண்ணனுக்கு நண்பர் தானே... இவர்க யாராவது ஒருவர் உன் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வந்தார்களா? உன் அண்ணனின் மருத்துவத் உதவி பண்ணி... உனக்கும் இத்தனை மாதங் இருக்க இடம்.. சாப்பிட சாப்பாடு செலவழிக்க இவற்றையெல்லாம் கொடுத்து நீ பண்ணிய டூழியங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டிரு அண்ணனுக்கு நீ காட்டிய நன்றியையும் வி தையும் நினைத்துப் பார்..."

"போனது எல்லாம் போகட்டும் கயல்விழி... இனி யாவது எனக்கு ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுங்கள்."

"வாழ்க்கையை ஒழுங்காக வாழத் தெரியாதவள் நீ. இனிமேல் வாழ்ந்து என்ன கிழிக்கப் போகிறாய்?"

"ஏதோ ஆசையினால் மதியிழந்து விட்டேன் கயல் விழி."

"எந்த ஆசையினால் குணவதி? என் அண்ணன் மேல் உனக்கிருந்த ஆசையினாலா?"

குணவதி மௌனம் சாதித்தாள். அவள் மனம் உறுத் தியது. கயல்விழி அவளது விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தாள்.

"உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல் கயல்விழி. உனக்கு என் அண்ணன் மேல் உண்மையிலேயே பிரியம் இருந்ததா? இல்லை குணவதி... உன் நோக்கமெல்லாம் ...ன் அண்ணனின் சொத்தின் மீதுதான்... இப்போது ...சாத்து என் அண்ணன் வசம் இல்லையென்றதும் என் ...ாழ்க்கைக்கு என்ன வழியென்று கேட்கிறாய் உன் மேல் ...ன் அண்ணனுக்கு துளியளவு கூடப் பிரியம் இல்லை. ...து தெரிந்தும் அவரை நீ தொல்லை செய்தாய். என் ...ண்ணன் அவரது மனதுக்குப் பிடித்த பெண்ணைக் ...யாணம் செய்து கொள்ள முடியாமல் இடைஞ்சல் ...தாய்.. இன்று சட்டப்படி அவர் அவருக்குப் பிடித்த ...ண்ணை மணந்து கொண்டு விட்டார். இனி ...னால் என்ன செய்ய முடியும்?"

...ன் அண்ணனுக்கு உன் அண்ணன் வாக்குறுதி ...த்திருக்கிறார் கயல்விழி. அதனால் என்னை நல்ல



முறையில் கல்யாணம் செய்து வைத்து அனுப்பி வைக்கும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது."

"சும்மா.. பொறுப்பு.. பருப்பு என்று தலையில் ஏறி உட்காரப் பார்க்காதே... தன்னாலே ரத்த பாசம் கொண்டவர்களிடமே எல்லோரும் உதார் காட்டிவிட்டு கழன்று கொள்கிறார்கள். நீயெல்லாம் ஜுஜுபி.. உனக்கு செய்ய வேண்டுமென்று எங்களுக்கு என்ன அவசியம் இருக்கிறது. இதுவரை நாங்கள் சொன்னதை நீ காதில் வாங்கியிருக்கிறாயா? இப்போது மட்டும் நீ சொல்வதை நாங்கள் கேட்க வேண்டுமா?"

கயல்விழி குணவதியை நன்றாகக் கலங்கடித்துக் காலில் விழுக வைத்தாள். அதன் பின் கபிலனிடம் கூறினாள்.

"வழிக்கு வந்து விட்டாள் அண்ணா.. நீ பார்த்து வைத்திருக்கும் அமெரிக்கா மாப்பிள்ளை எப்படிப்பட்டவன் அண்ணா? இவளை கடைசி வரைக்கும் வைத்துக் காப்பாற்றுவானா? குணவதி கெட்டவள்தான். ஆனால் அவளும் ஒரு பெண்... உன்னை நம்பித்தான் அவளுடைய அண்ணன் நிம்மதியாய் கண் மூடினார். நாம் அவளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும் அண்ணா.. இவள் வேறு ஊருக்குள் அவள் பெயரை அவளாகவே கெடுத்து வைத்திருக்கிறாள். பெண் கேட்டு வருகிறவன் அதை நம்பி இவளை கைவிட்டு விட்டால் என்ன செய்வது?"

கயல்விழியின் கவலையைக் கண்டதும் கபிலனுக் குப் பெருமையாக இருந்தது. 'இவள் என் தங்கை...' என்று நினைக்கும் போதே நெஞ்சம் நிமிர்ந்தது. பகை வருக்கும் இரங்கும் கருணை உள்ளம் கொண்டவளான

தங்கையைப் பார்க்கப்.. பார்க்க அவனுக்கு தெவி...
வில்லை.

குணவதியிடம் மாட்டிக் கொண்டு கபிலன் விடு... வழி தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தபோது அதிர... நடவடிக்கைகளில் இறங்கி குணவதியை அடக்கிய வளும் கயல்விழி தான். இன்று அதே குணவதியின் எதிர்கால வாழ்க்கை நன்றாக அமைய வேண்டுமே... என்று கவலைப்படுபவளும் இதே கயல்விழிதான்...

தவறு செய்தால் காளியாக அவதாரம் எடுத்து துஷ்டத் தனத்தை அடக்கி... சாந்தம் கொண்டால் கருணையே வடிவாய் சிரித்து... அன்னையாய் அர வணைத்துக் கொள்ளும் சக்தியின் வடிவம் தான் பெண்களோ...!

''கவலைப் படாதேம்மா. இவனும் எங்கள் நண்பன் தான்... என்னைவிட அன்பழகனுக்கு இவன் நெருங்கிய நண்பன். அவன் இறந்து விட்ட செய்தி கேட்டதும் துடித்து விட்டான்... அன்பழகனின் தங்கை என்பதற் காகவே.. குணவதியை மணம் செய்துகொள்ள சம்மதித்து விட்டான். அன்பழகன் இறந்தவுடன் குணவதி பாது காப்பில்லாமல் இருந்தாள்டா. அதனால் என் வீட்டில் தங்க வைத்தேன். அதை மற்றவர்கள் தவறாகப் பேசு கிறார்கள் என்று நான் சொன்னதும்.. சேச்சே.. உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதாடா என்று கூறி விட்டான். அவனுடைய பேரண்ட்ஸ் தான் சீர்வரிசை... நகையென்று அதிகம் எதிர்பார்க்கிறார்கள்...''

''செய்துவிடு அண்ணா.. அவர்கள் எவ்வளவு கேட் டாலும் செய்துவிடு. உன்னைச் சந்தேகிக்காத மகனைப்



பெற்றவர்கள் அவர்கள். அத்தோடு குணவதிக்குச் செய்ய வேண்டிய கடமையும் நமக்கிருக்கிறது.''

இந்தியா வந்து இறங்கிய அந்த சம்பத் ஒரு நல்ல நாளில் குணவதியை பெண் பார்க்க பெற்றோருடன் வந்து இறங்கினான். ஏற்கனவே பார்த்திருந்தாலும் வெளிநாட்டு வாசத்தில் வெள்ளை வெளேரென்று நிறம் பெற்று கோட்டும் சூட்டுமாய் ராஜ கம்பீரத்தோடு அவன் வந்து அமர்ந்தபோது குணவதி மயங்கிப் போனாள்.

'அமெரிக்க மாப்பிள்ளை... ஆளும் ஜம்மென்று இருக்கிறான். வெளிநாட்டில் குடித்தனம் பண்ணலாம். இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் காத்திருக்கும்போது இதை விட்டு விட்டு இந்த முசுட்டு தாடி கபிலனின் பின்னால் போக நினைத்தேனே... நல்லவேளை பிழைத்தேன்.'

குணவதிக்கு உயர்ந்த ரக பட்டு உடுத்தி வைர நகைகளை பூட்டி சபையில் நிறுத்தியதும் சம்பத்தின் பெற்றோர் வாய் கொள்ளா சிரிப்புடன் சம்மதம் சொல்லி விட்டனர்.

குணவதியின் திருமணப் பத்திரிகையை கொடுக்க கபிலனும்.. கயல்விழியும்.. குணவதியும் வானதியின் வீட்டிற்குச் சென்றனர்.. கருணாகரனிடம் தனது திருமணப் பத்திரிகை நீட்டிய குணவதி.

''என் கல்யாணத்திற்கு கட்டாயம் நீங்கள் வ... வேண்டும் அங்கிள். உங்களைப் போன்ற பெரியவ... களின் ஆசீர்வாதம் எனக்கு வேண்டும்.'' என்று கூறினா...

வியப்பில் விழி தெறிக்க பத்திரிகையை வாங்கி... கொண்ட கருணாகரன் மனதிற்குள் வானதியின் ெ... கையை மெச்சிக் கொண்டார்.

வானதி மட்டும் கபிலனை பதிவுத் திருமணம் பண்ணிக் கொண்டிருக்காவிட்டால் குணவதியை இவ்வளவு எளிதாக கபிலனின் பாதையை விட்டு அகற்றியிருக்க முடியாது.

குணவதி திருமணம் முடிந்து கணவனுடன் வெளி நாட்டிற்கு பறந்து விட்டாள். கபிலனும் கயல்விழியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.




பாண்டிச்சேரியிலேயே மிகப் பெரிய திருமண மண்டபம் அது. கார் பார்க்கிங் ஏரியாவில் கார்கள் அணி வகுத்து நின்றன. திருமண மண்டப வாசலில் தழையத் தழைய பட்டு உடுத்தி கயல்விழி நின்று வரவேற்றுக் கொண்டிருந் தாள். அவளது ஒவ்வொரு அசைவிற்கும்... அவள் அணிந்திருந்த வைர நகைகள் டாலடித்தன. கிரிஜா.. விருந்தினரை உபசரிக்க இங்கும் அங்கும் அலைந்த கொண்டிருந்தாள். சரவணன். சிநேகிதர்களுடன் வாசல் பக்கம் நின்று பேசிக் கொண்டிருந்தான். கோபிகிருஷ் ணன் மண்டபத்தின் வாசலுக்கும் உள்ளுக்குமாக ஓடிக் கொண்டிருந்தான். கோகிலா கையில் செல்போனுடன் ஓரம் கட்டி திருமண மண்டபத்தின் நிகழ்வுகளை உடனுக்குடன் கங்காவுக்குத் தெரிவித்துக் கொண்டிருந் தாள்.

''ஆமாம்க்கா... வயிறு எரியுது.. எள் விழுக இட மில்லை. அப்படி ஒரு கூட்டம்... பணத்தை தண்ணீராய் செலவழித்துக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறான் இந்தக் கபிலன். கயல்விழிக்கு எடுத்தது போல் வைர



நகைகள் வானதிக்கும் வாங்கிக் கொடுத்திருக்கிறான்.
வைரத்தில் ஜொலிக்கிறாள். எனக்கு மனமே தாங்க
வில்லை... இவளுக்கு இப்படி ஓர் வாழ்வா? வீட்டை
விட்டு ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக் கொள்வாள்
என்று பார்த்தால் இப்படி ஊர் மெச்சக் கல்யாணம் பண்
ணிக் கொள்கிறாளே.. என் மாமியாருக்கும் மாமனாருக்
கும் பெருமை பிடிபடவில்லை. கால் தரையில் பாவாமல்
அலையுதுகள்.''

கெட்டி மேளம் முழங்க.. நாதஸ்வரம் ஒலிக்க கபிலன்
தாலியை எடுத்து வானதியின் கழுத்தில் கட்டினான்
நாத்தனார் முடிச்சைப் போட்ட கயல்விழி அன்புட
வானதியின் கன்னத்தில் முத்தமிட்டதை வீடியோ கே
ராக்கள் பதிவு பண்ணிக் கொண்டன.

கடல் காற்று தாலாட்டிய கபிலனின் அறை அ
கரிக்கப்பட்டிருந்தது. அதில் காலடி எடுத்து வைத்
வானதி... அறைக்கதவு மூடப்படும் சத்தம் கே
அதிர்ந்து திரும்பிப் பார்த்தாள். கபிலன் கத
தாழிட்டுக் கொண்டிருந்தான்.

''கதவோரமாய் காத்திருந்தேன்...'' அவளது அ
நெருங்கி அவளது காதருகே குனிந்து கூறினான்

வானதி மயங்கிப் போனாள். அவனது
தொய்ந்து சரிந்தாள். அவளைத் தாங்கிக் கைகள்
யவன். கட்டிலில் அமர வைத்து தானும்
கொண்டான்.

''நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்
இப்படி ஒரு நாள் என் வாழ்வில் வருமா என்
போயிருந்தேன்.''

வானதி மெல்லிய குரலில் கூறினாள். அவன் மடிமீது தலை வைத்துப் படுத்துக் கொண்ட கபிலன்...

"எனக்கு அந்த பயமே இல்லை... எப்படியும் உன்னை நான் அடைவேன் என்று எனக்குத் தெரியும்..." என்றான்.

அவனது பார்வையில் மயங்கிய வானதி அவனது முடி கோதியபடி "எப்படித் தெரியுமாம்?" என்று வினவினாள்.

"என்னிடம் மயங்கியவள் நீ... என்னிடம் வந்துதான் சேருவாய்.. அந்த நம்பிக்கை இருக்கும்போது பிரிவைப் பற்றிய பயம் எப்படி வரும்?"

"அடேங்கப்பா.. இவர் பெரிய மன்மதன். இவரிடம் நான் மயங்கினேனாம். கதை விடுகிறார்."

"கதையா.." துள்ளி எழுந்தான் கபிலன். வானதி புரண்டு படுத்து தலையை ஒரு கையால் தாங்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள். கபிலன் அவளருகில் படுத்து அவள் புறமாய் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான்.

"நீ மயங்கினாய் என்று இல்லைடி... இப்போதும் என்னிடம் மயங்கிக் கொண்டுதான் இருக்கிறாய்..."

"அதெல்லாம் இல்லை..."

"நிரூபிக்கவா?"

"ம்ம்... நிரூபியுங்கள்..."

"சவால்டி.... என் கண்களையே நீ ஒரு நிமிடம் மட்டும் பார்க்க வேண்டும். உன்னால் முடியுமா?"

"ஹா... ஒரு நிமிடம் என்ன... ஒரு நாள் முழுவதும் பார்ப்பேன்..."

"முதலில் பாருடி."

கபிலன் கண்கள் வானதியை எல்லையற்ற தாபத்துடன் நோக்கின. அவனது விழிகளை நோக்கிய அந்த



விநாடியில் வானதி தடுமாறினாள். அவனது விழியோடு விழி கலக்க... மயங்கிப் போனாள். ஓர் விநாடிக்கு மேல் அவன் முகம் பார்க்க முடியாமல் முகம் சிவந்து வெட்கினாள். அவனது மார்பில் முகம் புதைத்துக் கொண்டவளை ஆரத் தழுவிக் கொண்டவன் அவளது காதோரம் குனிந்து..

"இதுதான் ஓர் நாள் முழுவதும் என்னைப் பார்க்கும் லட்சணமா?" என்று ஆண்மை ததும்பும் குரலில் வினவினான்.

"என்னால் முடியவில்லை..."

"ஏன்...?"

"முடியவில்லையென்றால் முடியவில்லை..."

கபிலன் அவளை அணைத்துக் கொண்டான். காலையில் கண் விழித்தவள் தூங்கிக் கொண்டிருந்த கபிலனை மன நிறைவுடன் பார்த்தாள். அன்று கடற்கரையில் திருவிழாவில் தொலைந்த சிறுவனைப் போல் நின்று கொண்டிருந்தவன் இன்று ஓர் அரசனைப் போன்ற கம்பீரத்துடன் உறங்கிக் கொண்டிருந்தான். மெலிதா அவனது நெற்றியில் இதழ் பதித்தவள் விலகி கட்டிலை விட்டு இறங்க முற்பட்டபோது கை பற்றி அவளை தடுத்தான் கபிலன். அவன் முகத்தில் கள்ளச் சிரிப்பு.

"நீங்கள் தூங்கிக் கொண்டு இருந்தீர்களே..."

"இல்லையே..."

"அப்புறம் ஏன் நடித்தீர்களாம்?"

"அப்போதுதானே நீயாய் வந்து முத்தம் கொடுப்ப

அவள் முகம் சிவக்க ஓடி விட்டாள். கயல்விழி யும் அழைத்துக் கொண்டு மறு வீட்டு விருந் கருணாகரன் வீட்டிற்குச் சென்றனர்.

''வாங்க மாப்பிள்ளை... உட்காருங்க. யசோதா.. மாப்பிள்ளையின் ரூம் ரெடியாகி விட்டதா என்று பார்..

கருணாகரன் மாப்பிள்ளை மரியாதையை குறைவறக் கொடுத்தார். எதிர் வீட்டில் இருப்பவர்களை சம்பந்தமில் லாதவர்கள் போல் பார்த்துக் கொண்டு அங்கே மூன்று நாட்கள் அவர்கள் தங்கியிருந்தனர்.

''மாமா.. நாளைக்கு நாங்கள் சுவிட்சர்லாந்த் கிளம்பு கிறோம்.''

''ஹனிமூனுக்கா மாப்பிள்ளை...?''

''ஹனிமூனுக்கும் சேர்த்துத்தான்.''

''விளங்கவில்லையே...''

''அங்கே உள்ள கம்பெனியுடன் தொழில் ஒப்பந்தம் போடப் போகிறோம். அதற்காக நாங்கள் கயல் விழியையும் அழைத்துக் கொண்டு கிளம்புகிறோம்.''

கருணாகரன் மனம் நிறைந்தார். தாயில்லாப் பெண் ணான கயல்விழி வானதியை தன் அண்ணியென்று அழைத்தாள். நேசித்தாள்... அவளை தனது அண்ணி யாக்கிக் கொள்ள குணவதியுடன் போராட்டமே நடத்தி னாள். நினைத்தபடி வானதியை தன் அண்ணியாக்கிக் கொண்டாள். திருமணம் முடிந்தவுடன் அவளைத் தனிமைப்படுத்தி விடாமல் வானதி தன்னுடனேயே எல்லா இடங்களுக்கும் அழைத்துப் போவதை நினைத் துப் பெருமை கொண்டார். வானதி தன்னை மயக்கியவ னுடன் வாழ்க்கையைத் தொடங்கினாள்.

"வாங்க மாப்பிள்ளை... உட்காருங்க. [illegible] மாப்பிள்ளையின் ரூம் ரெடியாகி விட்டதா என்று [illegible]

கருணாகரன் மாப்பிள்ளை மரியாதையை [illegible] கொடுத்தார். எதிர் வீட்டில் இருப்பவர்களை [illegible] ாதவர்கள் போல் பார்த்துக் கொண்டு அங்கே [illegible] நாட்கள் அவர்கள் தங்கியிருந்தனர்.

"மாமா... நாளைக்கு நாங்கள் சுவிட்சர்லாந்த் கிளம்பு கிறோம்."

"ஹனிமூனுக்கா மாப்பிள்ளை...?"

"ஹனிமூனுக்கும் சேர்த்துத்தான்."

"விளங்கவில்லையே..."

"அங்கே உள்ள கம்பெனியுடன் தொழில் ஒப்பந்தம் போடப் போகிறோம். அதற்காக நாங்கள் கயல் விழியையும் அழைத்துக் கொண்டு கிளம்புகிறோம்."

கருணாகரன் மனம் நிறைந்தார். தாயில்லாப் பெண் ணான கயல்விழி வானதியை தன் அண்ணியென்று அழைத்தாள். நேசித்தாள்... அவளை தனது அண்ணி யாக்கிக் கொள்ள குணவதியுடன் போராட்டமே நடத்தி னாள். நினைத்தபடி வானதியை தன் அண்ணியாக்கிக் கொண்டாள். திருமணம் முடிந்தவுடன் அவளைத் தனிமைப்படுத்தி விடாமல் வானதி தன்னுடனேயே எல்லா இடங்களுக்கும் அழைத்துப் போவதை நினைத் துப் பெருமை கொண்டார். வானதி தன்னை மயக்கியவ னுடன் வாழ்க்கையைத் தொடங்கினாள்.

★